Koviloor Digital Library

A.No. 15869
Q:212

நாலாயிரத்தில் அக மரபுகள்

பேராசிரியர் முக்கூர் பு.பா. இராஜ இராஜேஸ்வரி
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.

Koviloor Digital Library

Koviloor Digital Library

நாலாயிரத்தில் அக மரபுகள்

(நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில்
அகப்பொருள் மரபுகள்)

பேராசிரியர் டாக்டர் பு.பா. இராஜ இராஜேஸ்வரி,
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.
முன்னாள் முதல்வர், இராணி மேரி கல்லூரி, சென்னை 600 004.

அருண்மொழி பதிப்பகம்
"ஸ்ரீஇராகவேந்திரா" எம். 21/2, 27 ஆவது குறுக்குத் தெரு,
பெசண்ட் நகர், சென்னை – 600 090.

Koviloor Digital Library

முதற் பதிப்பு : மே, 2001
உரிமை : ஆசிரியருக்கு



சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டத்திற்கு ஏற்புடைத்து என 1985 இல், பட்டமளித்த "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் அகப்பொருள் மரபுகள்" என்ற இவ்வாய்வேடு, பெயர்ச் சுருக்கத் தின் காரணமாக "நாலாயிரத்தில் அக மரபுகள்" என்ற பெயரில், **தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் நிதியுதவியோடு 2001இல்** நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

விலை ரூ.100/-

அச்சிட்டோர் :
கவிக்குயில் அச்சகம்,
47, நல்லதம்பி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005.

Koviloor Digital Library

காணிக்கை

'சண்டே அப்சர்வர்'
பி. பாலசுப்பிரமணியம்

திருமதி பி. பா. பட்டம்மாள்

நூறாண்டு நிறைவு பெற்ற என் அருமைத் தந்தையார்
"சண்டே அப்சர்வர்" பி. பாலசுப்பிரமணியம் அவர்கள்
(15–1–1900 – 22.5.1958)
என் அருமை அன்னையார்
திருமதி பி.பா. பட்டம்மாள் அவர்கள்
திருவடித் தாமரைகட்கு
இம்மலரைச் சூட்டுகிறேன்.

–டாக்டர் பு.பா. இராஜ இராஜேஸ்வரி

Koviloor Digital Library

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	நாலாயிரத்தில் அகமரபுகள்
Author	:	Dr. P. B. Raja Rajeswari
Language	:	Tamil
Edition	:	First Edition
Date of Publication	:	May 2001
Copy Right Holder	:	Author
Size of the Book	:	Demy 1/8
Paper used	:	14 kg - Shesheay Paper
Printing Type used	:	11 pt
Number of pages	:	296
Number of copies	:	1000 copies
Printed at	:	Kavikuyil Achagam Chennai - 600 005.
Laser Printed at	:	Welkin Computer Centre, 5, 1st Street, Journalist Colony, Thiruvanmiyur, Chennai - 600 041.
Binding	:	Card Board
Price	:	Rs.100/-
Publisher	:	Author, 'Sri Ragavendra', M21/2. 27th Cross Street, Besant Nagar. Chennai - 600 090.
Subject	:	Research : Naalayira Thivya Prabandathil Agaporul Marabugal

Koviloor Digital Library

2-5-2

பொருளடக்கம்

	பக்கம்
வாழ்த்துரை	**6**
அணிந்துரை	**9**
நன்றியுரை	**13**

இயல்

1.	முன்னுரை	17
2.	ஆழ்வார் பாடல்கள் – நுழைமுகம்	21
3.	அக இலக்கண மரபுகள்	33
4.	அகப்பாடல்கள் – வகைமைப்பாடு	69
5.	நாயகன்–நாயகி பாவம் – ஒரு விளக்கம்	93
6.	நம்மாழ்வார் பாடல்களில் அகப்பொருள்	115
7.	திருமங்கை ஆழ்வார் பாடல்களில் அகப்பொருள்	157
8.	குலசேகராழ்வார், பெரியாழ்வார் பாடல்களில் அகப்பொருள்	195
9.	ஆண்டாள் பாடல்களில் அகப்பொருள்	219
10.	ஆழ்வார்கள் சிலர் பாடல்களில் அகப்பொருள் நுணுக்கம்	239
11.	நிறைவுரை	253
12.	பின்னிணைப்புகள்	258
13.	துணை நூற் பட்டியல்	291

Koviloor Digital Library

வாழ்த்துரை

"நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில்
அகப் பொருள் மரபுகள்"

பேராசிரியர் டாக்டர் கா.மீனாட்சி சுந்தரம்,
எம்.ஏ.,எம்.லிட்., பி.எச்.டி.
கல்லூரிக் கல்வித் துறை முன்னாள் இயக்குநர்

நூல்கள் என்பன எவ்வாறு எழுதப்பட்டன, வெளியாயின என்பன தெளிவாகத் திட்டவட்டமாகத் தெரியாமல் ஆய்வு நிலையில் சில செய்திகள் தெரிய வருகின்றன. ஆங்காங்கு பலரால் பாடப்பட்டும் எழுதப்பட்டும் வந்தனவற்றை ஒரு கால எல்லையில் ஒரு மனம் கொண்டவர் கூடி அவையாக அமர்ந்து தக்கனவற்றைக் காப்பாற்றும் பொருட்டுச் சுவைத்துப் பார்த்துப் பயனுடையன கண்டு தொகுத்துத் தொகுப்பு நூல்களாகப் பாதுகாத்தனர். காலப்போக்கில் நூல்களை வடிவமைத்தல் அவ்வக்கால எழுதுபொருள்களையொட்டி ஏற்பட்டது. இக்காலம் போல எழுது பொருள்கள் வசதியோ அச்சேற்றும் கருவியோ கிடையா.

கிறித்து பிறப்பதற்கு முன்னும் பிறந்த முதலிரண்டு நூற்றாண்டுகளிலும் வடநாட்டில் வேதங்கள், உப நிடதங்கள் ஆட்சியால் இந்து சமயம் மேலோங்கி இருந்த நிலையில் புத்தமும், சமணமும் தாக்குதல் தந்தன. வடமொழி (சமஸ்கிருதம்) எழுத்து மொழியாக நின்று விட்டது. பேச்சு மொழி–மக்களறிந்த–பரிமாறிக் கொண்ட மொழி–கற்றோரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதனால் அந்தப் பரிமாற்ற மொழியில் புத்தமும், சமணமும் புலமை கொண்டு மக்களைத் தம் பக்கம் ஈர்த்தன. எனவே இந்துசமயம் ஈடு கொடுக்க முடியாமல் சிக்கித் தவித்தது. இக்கால நிலையில் தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் சைவமும், வைணவமும் என இருகூறாகப் பிரிவுபடாமல் ஒன்றாகப் பக்தி அடிப்படையில் ஒருமைப்பட்டுச் சமணத்திற்கும், பௌத்தத்திற்கும் மாறாகத் தம் கருத்துக்களைப் பரப்பி அம்மதங்களை மேலோங்காமல் தடுத்து இந்துக் கொள்கைகளைப் புதுப்பித்தன. தமிழ்ப்பக்தர்கள் வடநாட்டுக்கும் சென்று அம்மதங்களைத் தம் இசைவெள்ளத்தால் மூழ்கடித்து இந்துக் கொள்கைகளை வேரூன்றச் செய்தனர். வடநாட்டிலும் பக்தி இயக்கம் கால் கொண்டது தமிழர்களால்.

பக்தி இயக்கத்தைப் பரப்பிய தமிழர்கள் இரு மொழிகளை நன்கு அறிந்திருந்தனர். வடமொழியும், தென்மொழியும் (தமிழ் மொழியும்) தலையோங்கி

Koviloor Digital Library

நின்றன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குமுன் தென்னகத்திலிருந்த தமிழ்மொழி கட்டுப்பட்ட சில இசைவகைகளைக் கொண்டு செறிவாய் இறுக்கமாய் இருந்தது. வடமொழிச் செல்வாக்கால் தமிழ் நாட்டிலும் இருமொழிகளையும் கற்றோர் கலந்து பேசவும் பாடவும் செய்தனர். வேதங்களையும் உபநிடதங்களையும் கற்ற தமிழ்ப்புலவர்கள் அவற்றைத் தமிழ் எண்ணங்களோடு நிரவி மக்கள் விரும்பும் புதுப்புது ஓசைகளில் பாடல்களைப் பாடி மக்களை ஈர்த்தனர். கட்டுத்திட்டங்கள் வலுவிகவுடைய பௌத்த, சமண மதங்கள் உணர்ச்சி பூர்வமாக இல்லாமையாலும் அறிவு பூர்வமாகவே சென்றதாலும் மக்கள் பக்தி நெறியை விரும்பி மேற்கொண்டனர். தமிழ்ச் சான்றோர்கள் – கற்ற இசைவல்லவர்கள் இருமொழியையும் கலந்து ஆங்காங்கு போய்ப் பாடல்களைப் பாடி மக்களைக் கவர்ந்தனர். அவ்வாறு பாடிய பாடல்கள் பிற்காலத்தில் திருமுறைகளாகவும், பிரபந்தங்களாகவும் தொகுக்கப்பட்டுக் கட்டுக் கோப்பாக வாழத் தொடங்கின. தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனத் தொகுப்புகளைப் பிரித்தும் இணைத்தும் தொகுத்து தம் எதிர்கால சந்ததிக்கும் தந்து போயின. இருபதாம் நூற்றாண்டிலும் புதுக்கவிதைகளில் நல்ல தமிழ்ச் சொற்கள் மட்டுமின்றி காலத்தை வென்று தமிழில் வழங்கி வரும் வடசொற்களும் ஐரோப்பியச் சொற்களும் (ஆங்கிலம், போர்ச்சுகல், பிரெஞ்சு போன்ற பிற தமிழ்ச் சொற்களும்) கலந்து வழங்கப்பட்டுப் பாராட்டப்படுவதைப் போல அப்பக்திப் பாடல்களும் சிறப்பாக வாழத் தொடங்கின.

இன்னிசையால் – எளிய நடையால் – கவர்ந்த பாடல்கள் இரு கூறாக நின்றன. ஒன்று சைவ சமயமாகவும் மற்றொன்று வைணவமாகவும் அமையுமாறு பிரித்து, பாடல்களைத் தொகுத்தோர், கருத்தடிப்படையையும் கண்டு செயல் பட்டனர். அவ்வாறு பிரிவு பட்ட வைணவம் பற்றிய பாடல்கள் நாலாயிரம் கண்டனர். அவற்றில் ஆழ்ந்த பன்னிரண்டு பக்தர்களை பன்னிரண்டு ஆழ்வார்கள் என இணைத்தனர். பெண்பாலாரையும் இணைக்க ஆண்டாள் எனும் பெண்மணியின் இசைப்பாடல்களைச் சேர்த்து நாலாயிரம் பாடல்களை மட்டுமே மொத்தமாக எடுத்துக் கொண்டு "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" எனத் தொகுத்தோர் பெயரிட்டனர். இத்தலைப்பு, பாடியவர்கள் இட்டதன்று. கற்ற, காப்பாற்ற நினைத்த தொகுத்தோர் அவையே இட்ட பெயராம். அது இன்று வரை வாழ்கிறது. தொகுக்கப்பட்ட அவை பற்றியோ நபரின் பெயர் பற்றியோ காலம் பற்றியோ திட்ட வட்டமாக வரையறுக்க இயலாது. சில பல காரணங்களைக் காட்டி நாம் வேண்டு மானால் அவைகளைச் சொல்லி மகிழ்ந்து கொள்ளலாம். பொருத்தமாய் இருக்க லாம், ஏற்கலாம். ஆனாலும் அவைகளை உண்மைகள் எனச் சொல்ல முடியாது.

Koviloor Digital Library

பக்திப் பாடல்களுக்கு முன்பிருந்த பாடல்களின் வடிவமும் கருத்தும் நேரடியாக இந்தப் பாடல்களில், அமையவில்லை. வடிவமும் பெருகியது, கருத்தும் மாறியிருந்தது. சுவைத்த தமிழறிஞர் பேராசிரியர் திருமதி. பு. பா. இராஜ இராஜேஸ்வரி இருகாலப் பாடல்களையும் அறிவு கொண்டு இக்காலப் பகுப்பாய்வு நெறிமுறைக்கேற்ப எண்ணி அசை போட்டுப் போட்டுத் தன் பட்டறிவோடு பயிற்றிய அறிவோடு உணர்ந்ததைச் சமுதாயமும் தமிழுலகமும் அறியட்டும் என ஆய்வு நூலாகப் பட்டம் பெற்றதோடு அமையாது மக்கட்கும் பயன்படட்டும் என்ற நல்நோக்கோடு நூலாக வெளியிட முன் வந்துள்ளமை அவருக்குரிய சமூக உணர்வையும் 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என முன்னோர் மொழியைப் போற்றும் பான்மையையும் வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றன.

நெஞ்சம் ஆழ்ந்து, இறை எண்ணத்தில் மூழ்கி நிறைந்து, காதல் கசிய உருகி, பக்தி ஆழங்கால்பட்டதால், மக்கள் மொழியில் மழையாகக் கொட்டின பண் நிறைந்த பாசுரங்கள். மக்களும் திளைத்தனர். ஊர் ஊராகப் போய் ஆழ்வார்கள் மக்களை ஈர்த்தனர். அவ்வகைப் பாடல்களில் கிடைத்த நாலாயிரம் பாடல்களைத் தொகுத்து அவற்றிற்குப் பழைய இலக்கியங்களின் (வேதம், உபநிடதம், தமிழ் மறைகள்) ஆழத்தில் உலக அறிவும் ஆன்மீகக் கொள்கைகளும் பொதுள இருப்பதைக் கண்டு ஈடு என்ற பெயரில் உரைநடையில் – மணிப்பிரவாள நடையில் வியாக்யானம் – விரிவுரை வழங்கினர் சான்றோர். அத்திறனாய்வைச் சென்னைப் பல்கலைக் கழகம் திரு.புருடோத்தம நாயுடுவைக் கொண்டு நற்றமிழில் வெளியிட்டு உதவியுள்ளது. அவற்றில் ஆழ்ந்த அம்மையார் இராஜஇராஜேஸ்வரி "நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அகப்பொருள் மரபுகள்" எனப் பகுப்பாய்வு செய்து இந்நூலைத் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளார். அவருடைய கூர்த்த மதியும் இலக்கியப் பயிற்சியும் தாம் வகுத்துக் கூறும் திறனும் கட்டுரையைப் படிப்போர் ஆங்காங்கு காணுமாறு உள்ளன. எல்லாக் கருத்துக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லையாம். காரணம் கருத்துக்கள் சில, காலத்திற்கேற்ற கோலம் கொள்ளும். இந்த நூல் தமிழ் மக்கள் கையில் தவழ்ந்து இன்பமும் அறிவும் நல்குவதாக என வாழ்த்துகிறேன். "பச்சை மாமலை போல் மேனி, பவள வாய்க் கமலச் செங்கண், அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே, என்னும் இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என நிற்கும் திருமதி. பு.பா. இராஜஇராஜேஸ்வரிக்கு என் பாராட்டும் வாழ்த்தும் என்றும் உரிய.

டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம்
கல்லூரிக் கல்வித் துறை முன்னாள் இயக்குநர்

Koviloor Digital Library

25-2

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் இரா. கு. நாகு
சென்னை, மாநிலக் கல்லூரித் தமிழ்த்
துறைத் தலைவர் (ஒய்வு)

"நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அகப்பொருள் மரபுகள்" என்னும் இந்த நூல் பேராசிரியர் திருமதி பு.பா. இராஜ இராஜேஸ்வரி அம்மையார் அவர்களால் எழுதப்பெற்று வெளி வந்துள்ளது. இது அம்மையார் அவர்களின் பி.எச்.டி. பட்டத்திற்கான ஆய்வேடாக உருவாக்கப்பெற்று, இப்பொழுது நூலாக மலர்ந்துள்ளது. மலர் நறுமணத்தைப் பரப்பிக் கவர்ச்சியூட்டுவதுபோல், இந்நூல் அருங்கருத்துகளை அள்ளி வீசி நம்மைக் கவர்கின்றது.

இந்த நூலின் தலைப்பு எனக்கு ஒருவகை நிறைவையும் இன்பத்தையும் தருகின்றது. அதற்கான காரணமும் உண்டு. நான் 1966ல் பிஎச்.டி. பட்டம் பெற்றுப் பின்னரும் ஆய்வாளராகச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் ஆய்வைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் போது, ஆழ்வார்களின் பண்ணிறைந்த பாசுரங்களில் ஆழங்கால்பட்டேன். அப்பொழுது ஆழ்வார் தமிழில் அகச்சுவை எனத் தொடர்ந்து எழுதலாம் என எண்ணினேன். எண்ணியவாறு ஒரு கட்டுரை எழுதி 'ஆழ்வார் தமிழில் அகச்சுவை' என்னும் தலைப்பில், ஓர் இதழில் வெளியிட்டேன். அத்தலைப்பில் தொடர்ந்து செய்ய முடியாதவாறு வாழ்க்கைப் போக்கு அமைந்தது. அந்த ஆசை நிறைவேறாமல் போயிற்று. நிறைவேறாத அந்த நாள்பட்ட என் ஆசை, அம்மையாரால் நிறைவு செய்யப் பெற்று ஓர் அழகிய நூலாக இன்று வெளிவந்திருப்பது கண்டு நிறைவும் இன்பமும் கொள்கிறேன்.

சங்ககால அக இலக்கிய மரபுகள் பக்திக்கால இலக்கியத்துள் பெரிதும் இடம் பெற்றுள்ளன; எனினும் மரபு மீறல்களும் நிகழ்ந்துள்ளன. பாட்டுள் இடம் பெறும் காதல் தலைவன் தலைவியருடைய பெயர் சுட்டிப் பாடாத சங்க மரபு, பக்திக்கால இலக்கியத்துள் பெயர் சுட்டிப்பாடும் நிலைக்கு மாறிவிட்டது; ஒத்த கிழவனும் கிழத்தியும் பாட்டுள் இடம் பெறுவது சங்க மரபாகும்; ஆனால் பக்திக்கால அகச்சுவைப் பாடல்களுள் இடம் பெறும் தலைவி, தலைவனோடு ஒத்த நிலையில் கருதத் தக்கவள் அல்லள்; தலைவன் ஒப்புயர்வற்றவனாகக் கற்பிக்கப்படும் நிலையையே காண்கிறோம். தலைவியை விடத் தலைவன் ஓரளவு 'மிக்கோனாய்' இருக்கலாம் என்பதனைத் தொல்காப்பியம் 'மிக்கோன் ஆயினும்

Koviloor Digital Library

கடிவரை இன்றே' எனக் கூறினாலும் பக்திக்கால அகச்சுவைப் பாடல்களுள் இடம் பெறுபவன் தொல்காப்பியம் சுட்டும் மரபுக்குட்பட்டவனல்லன், மிக்குயர்ந் தோனாவான். மேலும் சங்க கால அகத்திணைப் பாடல்களில் பெண்பாற் கைக்கிளையோ பெண்மடலேறப் போவதாகக் கூறுவதோ இடம் பெறாது. ஆனால் பக்திக் காலத்தில் பெண்பாற் கைக்கிளையும் பெண் மடலேறுவேன் என்று கூறுவது போலவும் பாடல்கள் செய்யப் பெற்றுள்ளன. இவ்வாறான மரபு மீறல்களை ஆழ்வார் பாடல்களுள் கண்டு அழகுபட அம்மையார் இந்நூலுள் காட்டியிருக்கிறார்கள். இவ்வாறான மரபு மீறல்களுக்கான காரணத்தை அம்மையார் அவர்கள் ஆராய்ந்து வெளிப்படுத்தியிருப்பது மிகவும் சிறப்பாக உள்ளது. மரபு மீறலால் உருவாகும் புதிய காதல் இலக்கியக் கோட்பாடு "உலகளாவிய பொதுமை" கொண்டது என அவர்கள் அமைதி கூறுவது மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது.

இந்த நூலுள் தமிழ் அக இலக்கிய மரபின் படிநிலை வளர்ச்சியை நன்கு ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்கள். சங்க கால மரபையும் திருக்குறள் காமத்துப்பால் மரபையும் ஆழ்வார்களின் அக மரபையும் தனித்தனியாக எடுத்துக் காட்டுவதுடன், அவற்றிற்குள்ள தொடர்புகளையும் சுட்டிக்காட்டி அவற்றின் வழியாகத் தமிழ் அக இலக்கிய மரபில் ஏற்பட்டுள்ள படிநிலை வளர்ச்சியை எழுதிக் காட்டியிருக்கும் பாங்கு மிகச் சிறப்பாக உள்ளது. சங்ககாலக் காதல் நெறியை முதல்நிலை என்றும், திருவள்ளுவரின் காமத்துப்பால் நெறியை இரண்டாம் படி நிலை என்றும் பக்திப்பனுவல்களில் இடம் பெற்றுள்ள காதல் நெறி மூன்றாம் படி நிலை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மூன்றாம் நிலை உலகப் பொதுநிலையே எனச் சான்றாதாரங்களுடன் தெளிவுபடுத்தியிருப்பதும் மிகச் சிறப்பாக உள்ளது.

என் போன்றவர்களுக்குத் திருவள்ளுவரின் காமத்துப்பால் சங்ககால நிலையை ஒத்தே காட்சியளிக்கின்றது. களவு, கற்பு என்று திருவள்ளுவர் இரண்டாகப் பிரித்து வழங்கியிருப்பதே சங்ககால நிலையைச் சுட்டுவதாக உள்ளது. காமத்துப்பாலில் அலர் அறிவுறுத்தலிலும் ஊடலிலும் திருவள்ளுவர் சங்க மரபினின்றும் விலகிச் செல்வது போல் தோன்றலாம். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது இரண்டாம் படி நிலைக்குத் திருவள்ளுவர் அகப் பாடல்களைக் கொண்டு சென்றிருக்கிறார் எனச் சொல்ல எம் போன்றோருக்குத் துணிவு வர வில்லை. எனினும் அம்மையார் அவர்களின் ஆய்வு பாராட்டுதலுக்குரியதே எனலாம்.

இவ்வாய்வு நூலுள் பதினோர் இயல்கள் உள்ளன. முன்னுரையையும் ஓர் இயலாக அவர்கள் வடிவமைத்துள்ளார்கள். பத்தாவது இயலுள் ஆழ்வார்கள்

Koviloor Digital Library

பாட்டியலுள் ஆழ்வாரல்லாத திருவரங்கத்தமுதனாரையும் அவர்கள் சேர்த்துள்ளார்கள். அவர்களுடைய ஆய்வுத் தலைப்பு 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' என இருப்பதால், நாலாயிரத்துள் திருவரங்கத் தமுதனாரின் இராமாநுச நூற்றந்தாதியைச் சேர்த்துக் கணக்கிடும் 'ஒர் மரபு' இருப்பதால், அம்மையார் அவர்கள் பத்தாவது இயலுள் திருவரங்கத்தமுதனாரையும் சேர்த்துள்ளார்கள் எனக் கொள்ள வேண்டியுள்ளது. அதனால் ஆழ்வார் அல்லாத திருவரங்கத் தமுதனாரும் இடம் பெற்றுள்ளமை காண்கிறோம்.

'அக இலக்கண மரபுகள்' என்னுந் தலைப்பில் அமைந்த இயலுள், தொல் காப்பியம், இறையனாரகப்பொருள், நம்பியகப்பொருள் முதலான நூல்களில் காணப் பெறும் அக இலக்கிய மரபுகளை வரையறை செய்துள்ள அம்மையார் அவர்கள், அம்மரபுகளின் அடிப்படையில் ஆழ்வார்களின் பாசுரங்களில் பயின்று வரும் காதல் இலக்கியக் கூறுகளை நேரிய முறையில் அணுகி, வகை தொகை செய்து, பின்வரும் இயல்களில் பொருத்திப் பார்த்து, ஆய்வு செய்துள்ளார்கள். பொருந்தி வருவனவற்றை மரபு சார்ந்தன என்றும் பொருந்தாது வருவனவற்றை மரபு மீறல்கள் என்றும் தெளிவாக்கிக் காட்டியுள்ளார்கள்.

இந்த நூலுள் சிறந்த ஆய்வால் பெற்ற சீரிய கருத்துகள் இயல்கள் தோறும் இடம் பெற்றுள்ளன. பத்தாவது இயலுள் இராமநுச நூற்றந்தாதியைப் பற்றி ஆராய்ந்து கூறியிருப்பதிலுள்ள புதுமை கவர்ச்சியூட்டுகிறது. அதாவது, இராமாநுசரை ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றான அறிவரோடு பொருத்திப் பார்த்திருப்பது மிகவும் சிறப்பாக உள்ளது. 'சேதநர்களை' இறைவனோடு சேர்க்கும் திருப்பணியைச் செய்யும் 'எம்பெருமானாரை' 'அறிவரோடு' எண்ணிப் பார்த்துக் கூறியிருப்பது, இதுகாறும் யாரும் கூறாத செய்தியே யாகும். புதியது; எனினும் சீரிய ஆய்வுச் செய்தி இது.

'நிறைவுரை' என்ற பதினோராம் இயலுள் அம்மையார் அவர்கள் பின்வரும் ஆய்வாளர்களுக்கான ஆய்வுக் களங்களைக் காட்டியுள்ளார்கள். பல்வேறு ஆய்வு கள் தொடர்ந்து வளர்வதற்கு ஆகும் வழிகாட்டிகளாய் அவை உள்ளன எனலாம்.

பின்னிணைப்புகளில் அம்மையார் தந்திருக்கும் தகவல்கள் மிக்க பயனுடையன. தமிழ்த்தாத்தா உ..வே.சா. அவர்களின் பதிப்புகளைப் பார்ப்போருக்கு ஏற்படும் உணர்வு அம்மையார் அவர்கள் பின்னிணைப்புகளைப் பார்ப்போருக்கு ஏற்படும் என்பது உறுதி; உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

இந்த நூலைப் படிக்கும்பொழுது, அம்மையார் அவர்களின் பன்னூற் புலமை பளிச்சிடுகிறது; ஆழ்ந்து நூல்களைக் கற்றுணரும் அம்மையாரின் அறிவுக்

Koviloor Digital Library

கூர்மை ஒளி வீசுகிறது. பிழையற்ற தமிழ்நடை அம்மையாரின் எழுத்துத் திறனை எடுத்தியம்புகிறது. மொத்தத்தில் இது மிகச் சிறந்த நூல்; நவில்தொறும் நல்லின்பம் பிலிற்றும் நன்னூல். இதுபோன்று மேலும் பல நூல்களை எழுதித் தமிழுக்கு வளஞ் சேர்க்க அம்மையாரை வேண்டிக் கொள்கின்றேன்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்களுரைத் தவைகள் தாம்வாழி
செய்ய மறைதன் னுடனே சேர்ந்து.

"திருவேங்கடம்"
மனை எண் 169, சிரீதரன் தெரு
அய்யாவு குடியிருப்பு, சென்னை – 29.

இரா.கு.நாகு

Koviloor Digital Library

நன்றியுரை

பு.பா. இராஜஇராஜேஸ்வரி

இராணி மேரி கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய போழ்து, 'அக இலக்கியக் கொள்கைகள்' என்ற சிறப்புப் பாடத்தினை முதுகலை மாணவர்கட்குப் பயிற்றுவிக்கும் பேறு கிட்டியது. அப்போழ்து சங்ககால இலக்கியம் முதலாகப் பாரதிதாசன் கவிதைகள் வரை காலந்தோறும் அக இலக்கியம் வளர்ச்சி பெற்ற பாங்கினைக் காண முடிந்தது. அகத்துறைப் பாடல்களைப் பாடுகின்ற நெறி பற்றியும் அகவுணர்வுகளில் பாடு பொருளாதற்குரிய உணர்வுகள் பற்றியும் அக இலக்கணம் கண்ட மொழி தமிழ்மொழி ஒன்றே என்பது வரலாறு கண்ட உண்மை.

"The indescribable here it is done
The woman soul leadeth us upward and on"

என்றார் மேனாட்டுப் புலவர் 'கதே' (Goethe) என்பாரும்.

"பாட்டைத் திறப்பது பண்ணாலே – இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே"

என்றார் நம் பாரதியும். அகவுணர்வுகளின் மேம்பாடே பேரின்பத்தின் திறவுகோல். உள்ளம் பண்பட்ட நிலையில் உயிர் ஆக்கம் பெற்றது; அதுவே ஆன்மாவின் தேடலாகியது. இத்தேடல் ஆன்மாவினைப் பெண்மையாக்கியது. இறை பக்தியில் ஆழங்கால்பட்ட ஆழ்வார்கள் பெண்மை நிலையினை எய்தினார்கள். அப்பெண்மை ஆன்ம நாயகனைத் தேடியது. அத் தேடலின் முயற்சியே – உணர்ச்சிகளின் வெளிப்பாடே – நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அகப் பொருள் பாடல்களாயின.

"காமப்பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்"

என்று தொல்காப்பியமும் இலக்கணம் வகுத்தது. இறைவனின் திருக்குணங்களில் ஆழங்கால்பட்டுத் தம்மையே 'அவனில்' இழந்த ஆழ்வார்கள் பாடிய அகப் பாடல்கள் அக இலக்கிய மரபின் வளர்ச்சியின் காரணமாக, மரபு ஏற்பு, மரபு மீறல், புது மரபு ஆக்கங்கள் பெற்று விளங்குவதாயிற்று. இப் பொருளில் ஈடுபட்ட மனத்தின் உந்துதலால் "ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு, பூசை முற்றவு

Koviloor Digital Library

நக்குபு புக்கென ஆசைபற்றி" "நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அகப்பொருள் மரபுகள்" என்ற தலைப்பில் ஆராய நேர்ந்தது. 1983–இல் ஆய்வுப் பட்டத்திறகு அளிக்கப் பெற்ற இவ் வாய்வேடு பெயர்ச் சுருக்கத்தின் காரணமாக "நாலாயிரத்தில் அக மரபுகள்" என்னும் நூலாக வெளி வருகின்றது.

சங்ககாலக் காதல் நெறி, திருவள்ளுவரின் காமத்துப் பால் காதல் நெறி, பக்திப் பனுவல்களில் காதல் நெறி என மூவகைப் படிநிலை வளர்ச்சியாக அக இலக்கியம் காலந்தோறும் வளர்ச்சி பெற்றது. இவ்வுண்மையினையே கருவாகக் கொண்டு ஆழ்வார்களின் அகப்பாடல்களின் ஆய்வு பதினொரு இயல்களாக இந்நூலில் அமைகின்றது. நாலாயிரத்துள் திருவரங்கத்தமுதனாரின் இராமாநுச நூற்றந்தாதியைச் சேர்த்துக் கணக்கிடும் ஓர் மரபு இருத்தலால் ஆழ்வாரல்லாத அவரையும் இவ்வாய்வுள் சேர்க்க வேண்டுவதாயிற்று.

ஆய்வேட்டில் உள்ள விரிவான பின்னிணைப்பு இந்நூலில் சுருக்கி அளிக்கப்பட்டுள்ளது.

இனி,

இந்நூலினை வெளியிட அனுமதி வழங்கிய சென்னைப் பல்கலைக் கழகத்தார்க்கும்,

நூல் வெளியிட உறுபொருள் கொடுத்துதவிய தமிழக அரசிற்கும் – தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கும் – என் நெஞ்சார்ந்த நன்றி உரித்து.

மேலும் அறநெறி பிறழா நேரியர் – சீரிய பண்பாளர் – ஆய்வின் போது தொல்லையினைப் பொருட்படுத்தாது நன்னெறிப்படுத்தியவர் – இந்நூலிற்குச் சிறந்ததொரு வாழ்த்துரை வழங்கிய பெருமகனார் – கல்லூரிக் கல்வி முன்னாள் இயக்குநர் **டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம்** அவர்கள் –

ஆய்வின் போது அயர்ச்சி ஏற்பட்ட போதெல்லாம் என்னைப் பெரிதும் ஊக்குவித்து ஆய்வு முற்றுப் பெற பல்லாற்றானும் உறுதுணையாக விளங்கியவர் வள்ளுவர் கூறும் அந்தணர்க்கு இலக்கணமாகத் திகழும் சான்றோர் – வைணவக் கடல், **பேராசிரியர் சி. ஜகந்நாதாச்சாரியார்** அவர்கள் –

ஆய்வு நிறைவு பெறுவதற்கான முயற்சியில் அயர்வின்றி எனக்குப் பெரும் துணையாக நின்று உதவிய என் துறைப்பேராசிரிய நண்பர்கள் **டாக்டர் வெ. கனகசுந்தரம், செல்வி ம. கலாமணி** ஆகியோர் –

ஆய்வுரையை ஆழ்ந்து படித்து நூல் வடிவம் பெறுமாறு திருத்தங்கள் செய்து செம்மையாக்கித் தந்ததோடு அமையாது, நூலுக்கு நல்லதோர்

Koviloor Digital Library

அணிந்துரையை அழகுற நல்கிய **பேராசிரியர் டாக்டர் இரா. கு. நாகு** அவர்கள் –

இந்நூல் வெளியிடுதற்கே தூண்டுகோலாய் அமைந்து முழுப் பொறுப்பினை ஏற்றவர் – தன்னலம் பாராத தொண்டுள்ளம் கொண்ட நல்லர் – அடக்கமும் அமைதியும் ஒருங்கிணைந்த பண்பாளர் – காட்சிக் கெளியர் – **திரு. தி.வ. மெய்கண்டார்** அவர்கள்–

குறித்த காலத்தில் சிறப்புற அச்சிட்டு அளித்த கவிக்குயில் அச்சக உரிமையாளர் திரு. **பெ. தேசிக விநாயகம்** அவர்கள் – அட்டைப் படத்தை அழகுற வரைந்தளித்த **ஓவியர் கலைமதி** அவர்கள் – அச்சுப்படிகளைத் திருத்தம் செய்த **பேராசிரியர் மு.ச. சிவம், எம்.ஏ.,** அவர்கள் – **'திருக்குறள் செல்வர்' புலவர் ச. சீனிவாசனார்,எம்.ஏ.,** அவர்கள் – செம்மையாக ஒளியச்சு செய்த **'வெல்கின் கணினி மையம்'** உரிமையாளர் **திருமதி கு.தேன்மொழி** அவர்கள் – ஆகிய அனைவருக்கும் நன்றி கூற சொற்களில்லை. உணர்ச்சியால் உள்ளம் நிறைகின்றது; கைம்மாறு என் செய்ய வல்லேன்? ஒல்லும் வகையான் செயலாற்ற வாய்ப்பினை நோக்குகின்றேன்.

யாவற்றிற்கும் மேலாக இடருற்ற போழ்தெல்லாம் "ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய்" – தோன்றாத் துணையாய் என் மனத்தகத்திருந்து எனைத் தாங்கிக் காத்து, வழி நடத்தியருளும் எம்பெருமான் திருவடிகளைச் சிரம் தாழ்த்தி வணங்கி நன்றி கூறும்,

அவன் அடைக்கலப் பொருள்

பு.பா. இராஜஇராஜேஸ்வரி

Koviloor Digital Library

கடவுள் வாழ்த்து

தழைசெவி சிறுகட் டாழ்கைத் தந்தசிந் துரமுத் தாரை
மழைமதத் தறுகட் சித்ரவாரண முகத்து வாழ்வை
இழையிடைக் கலசக் கொங்கை யிமகிரி மடந்தை யீன்ற
குழவியைத் தொழுவ னென்பாற் குறைவற நிறைக வென்றே.

அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
யஞ்சிலே யொன்றா றாக வாரியற் காக வேகி
யஞ்சிலே யொன்று பெற்ற வணங்குகண் டயலா ரூரி
லஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக் காப்பான்.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலு
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
வலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

★

Koviloor Digital Library

இயல் ஒன்று

(முன்னுரை)

ஆகாயத்திலிருந்து மேகங்கள் சொரியும் மழை நீரெல்லாம் எப்படி சாகரத்தைத் தேடிச் செல்கின்றதோ அவ்வாறே பக்தர்கள் எந்தப் பெயர் வைத்து எந்தத் தெய்வத்தைப் பக்தியோடு வணங்கினாலும் அந்த வணக்கம் கேசவன் என்று பெயரிட்டு நாம் நமஸ்கரிக்கும் சர்வேஸ்வரனைச் சேரும் என்று நம்முடைய சாஸ்திரம் வியக்தமாகச் சொல்லுகிறது.

– ராஜாஜி – தோழமையோகம்

Koviloor Digital Library

முன்னுரை

''இறைவனைப் பாடுதல் இரண்டு வகை. ஒன்று உலகியல் வட்டத்திலிருந்து பாடுதல்; பிறிதொன்று இறை வட்டத்திலிருந்து பாடுதல்; இறைவனைப் பாடும் பாடலும் இறைவட்டத்தில் இருந்து பாடும் போதே ஞானப் பாடல், மெய்யுணர்வுப் பாடல் ஆகிறது. உலகியல் வட்டத்திலிருந்து பாடும் போது தெய்வத்தைப் பாடினாலும் உலகியற் பாடலே''.[1] இறை வட்டத்தில் நின்று கொண்டு இறைவனைக் கண்டதாக மகிழ்ந்து கூறும் அடியார்கள் அநுபவங்கள் எல்லாம் ஞானக் கண்ணால் கண்டுணர்ந்த 'மானச அநுபவங்கள்' ஆகின்றன. இவை இறைவன் மீது கொண்ட அன்பால் பிறக்கின்ற இன்ப அநுபவங்கள். பொறி உணர்ச்சியால் ஆயவை அல்ல இவை. பொறியுணர்ச்சியைக் கடந்து உயிரின்கண் உண்டாகிய இன்பம்.

தேனும் பாலும் கன்னலும் அமுது மாகித் தித்திப்ப
யானும் எம்பிரானையே ஏத்தி னேன்யான் உய்வானே

என்பார் நம்மாழ்வார். இங்ஙனம் அடியார்கள் 'உள்ளம் குளிர்ந்த போதெல்லாம் உகந்து, உகந்து' பாடிய சொன்மாலைகள் அவர்க்கு அழிா இன்பம் நல்குவதோடு கூட ஏனையோர்க்கும் செவிநுகர் அமுதமாகின்றன. எனவே பக்திப் பனுவல்கள் கற்பார்க்கு இன்ப வெள்ளமாய் இருத்தலால், 'ஆறா அமுதக் கவியாயிரம்' எனக் கம்பர் நம்மாழ்வார் தம் திருமொழியைப் பாராட்டுவது போலப் படிப்பார்க்கு இடையறா இன்பம் தரும் பண்சுமந்த இன்கவிகளாய் இவை அமைகின்றன. பாடி, அவற்றின் இன்பப் பொருளை அநுபவிப்பது ஒரு நிலை. பாடல் தரும் இனிமைக்கப்பால், அதன் உட்பொருள் திறம் காணும் போக்கு மற்றொரு நிலை. முன்னது உணர்வின் பாற்படும். பின்னது அறிவின் பாற்படும். உணர்வு வழியிலும், அறிவு வழியிலும் இறைப் பற்றிலக்கியங்களை அணுகுதல் கூடும் என்பது இதனால் பெறப்படுகின்றது. இங்குப் பத்திமை இலக்கியங்களுள், ஒன்றான நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் திருமொழிகள் அறிவுவழிப்பட்ட ஆய்வு நெறிக்குட்படுத்தப்படுகின்றன. அத் திருமொழிகள் அருட்பாடல்கள், அகப் பாடல்கள் என இருவகைப்படும். அவற்றுள் அகப்பாடல்கள் வழி பெறப்படும் அக மரபுகளை மட்டும் ஈண்டு ஆய்வுக்குரிய பொருளாக எடுத்துக் கொண்டு ஆய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது.

முன் ஆய்வுகள்

ஆழ்வார்கள் அருட்பாடல்கள் தனிநிலையிலும், பொது நிலையிலும் ஆராயப் பட்டுள்ளன. 'நம்மாழ்வார் பாடல்கள்' பற்றி டாக்டர் ந. சுப்புரெட்டியார், 'வைணவ உரைகள்' பற்றி டாக்டர் தெ. ஞானசுந்தரம் பி.எச்.டி. ஆய்வேடுகள் அளித்துள்ளனர். ஆழ்வார்கள் பாடல்கள் பற்றி ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் அப்போதைக்கப்போது வெளிவந்துள்ளன.

ஆய்வுப் போக்கு

இங்கு, ஆழ்வார்கள் பாடிய அகப்பாடல்களில் காணலாகும் அக மரபுகள் என்ற ஒரு குறிப்பிட்ட போக்கிலேயே ஆய்வு மேற்கொள்ளப் பெறுகிறது. வழிவழி வந்த சங்க மரபுகளைப் பெரிதும் போற்றிய பிற்காலப் புலவர்கள் இறைப் பற்றிலக்கியங்களிலும், இவற்றைப் பேணிக் காத்துப் பேரின்ப நிலை கூட்டக் கையாண்ட பான்மையினைக்

1 பக்தி இலக்கியம், 'வாழ்க்கை அநுபவம்', ப. அருணாசலம், ப.90.

Koviloor Digital Library

காணுகின்றோம். எனவே ஓர் ஒப்பீட்டுப் பார்வையில், மரபுகள் ஏற்பு, மரபு மீறல்கள், புது மரபு ஆக்கங்கள் என்ற வகைமையில் ஆழ்வார்தம் திருமொழிகளில் காணலாகும் அகமரபுகளை எடுத்துரைத்தல் வழியாகத் தமிழ் அக இலக்கிய வளர்ச்சியில், நாலாயிரம் பெறும் இடத்தினை மதிப்பிட முடியும் என்பதே ஆய்வின் போக்கு ஆகும்.

ஆய்வு எல்லை

நாலாயிரத்தில் அகப்பாடல்களைப் பெரிதும் எடுத்துப் பாடிய பெரியாழ்வார், குலசேகரர், ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர் பின்பற்றிய அகமரபுகள் இங்குச் சிறப்புநிலை ஆய்வுக்குரியன. ஆயினும் மதுரகவி ஆழ்வார் தவிர ஏனைய ஆழ்வார்கள் பாடல்கள் முழுமையான ஆய்வுப் பார்வைக்குட்படுகின்றன. ஆங்காங்குக் காணப்படும் அக நுணுக்கங்களும் குறிக்கப் பெறுகின்றன.

ஆய்வு அணுகுமுறை

திருமொழிகளில் அமைந்துள்ள அகப்பாடல்களைப் பாகுபாடு செய்து, வகைப்படுத்தி, அவற்றின்வழி மரபுகளைக் காணும் பகுப்பாய்வு அணுகு முறையே (Analytical Study) இங்குப் பெரிதும் பின்பற்றப் பெறுகிறது.

நாலாயிர அகமரபுகளுக்கு முன் எழுந்த அக இலக்கண நூல்களில் காணலாகும் அகப்பொருள் மரபுகளை ஒப்பீட்டு நோக்கில் எடுத்துரைக்கின்றது. தொல்காப்பியம், இறையனார் களவியல் உரை. நம்பியகப் பொருள், இவற்றின் பின்னர்த் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய இலக்கண நூல்களில் வழிவழி அமைகின்ற அகமரபுகளின் ஒற்றுமைக் கூறுகள், வேற்றுமை நிலைகள் ஆகியன ஒப்பீட்டு நோக்கில் இங்குப் பெறப்படுகின்றன. இவற்றின் பாதிப்புகளும் (influence) தாக்கங்களும் (impact) ஆழ்வார் திருமொழிகளில் அமைந்துள்ள நிலை சுட்டிக் காட்டப் பெறுகின்றது.

இயல் ஒன்று

இயல் ஒன்று முன்னுரையாக அமைந்து ஆய்வின் உட்பொருளை விளக்குகிறது.

இயல் இரண்டு

தமிழின் அக இலக்கிய வளர்ச்சிப் போக்கு ஆழ்வார்கள்தம் பாடல்களில் அமையும் பாங்கினை ஆய்வதற்கு நுழைமுகமாக அமைகின்றது.

இயல் மூன்று

அக இலக்கண மரபுகள் வழி, நாலாயிரத்தில் வரும் அகப்பாடல்களை வகைப்படுத்தி மூன்றாம் இயலில், பட்டியல் அமைக்கப் பெறுகின்றது. ஆழ்வார்கள் வாரியாக, கூற்றுநிலை, துறை அமைப்பு என்ற போக்கில் இவ்வகைமைப்பாடு அமைகிறது.

அகமரபுகள்வழி உணர்த்தப் பெறும் இறைமைக் காதல் வெளிப்பாடாகிய நாயகன் – நாயகி பாவத்தின் அடிப்படைத் தத்துவம் ஆராயப் பெறுகின்றது. தமிழ் மரபு வழி இக்கோட்பாடு அமைந்துள்ள பான்மையினைச் சங்க அகப்பாக்கள் தொடங்கி எடுத்துக்காட்டப் பெற்று, திருமொழிகளில் அவை அமைந்துள்ள பாங்கு சுட்டப் பெறும். இவ்வியலில் இம்மரபானது உலகளாவியது என்ற பொருண்மை,சான்றுகளால் நிறுவப் பெறுகிறது. அன்றியும் சிறப்பாய்வுப் பார்வையில் நாலாயிர திவ்வியப் பிரபந்த காதற் பாடல்கள் பெரும்பாலும் கைக்கிளை, பெருந்திணை மரபுகளாகாமல் அன்பின் ஐந்திணை நெறி பற்றியன என்பது பெறப்படுகின்றது.

Koviloor Digital Library

இயல் நான்கு

அகப்பாடல்களின் வகைமைப்பாடு, தொடர்ந்து வரும் இயல்களில் விளக்கம் பெறும் அக இலக்கியக் கூறுகளை விளக்கிக் காட்டுவதற்கு நுழை வாயிலாக அமைகிறது.

இயல் ஐந்து

நாயகன் நாயகி பாவத்தின் பொருள் விளக்கமே இவ்வியலின் உட்பொருளாக அமைகிறது.

இயல் ஆறு

ஆழ்வார்கள் பாடல்களில் அகப்பொருள் பற்றிய சிறப்பு நிலை விளக்கம் காணும் போது பாடல்களின் அளவினைக் கொண்டும், அவர்கள் கொண்ட பாவனைகளின் ஏற்றத்தையும், ஊற்றத்தினையும் கணக்கிட்டும் பொருட் சிறப்பு நோக்கி அந்த வரிசையிலேயே உரைப்பது பொருந்தும். ஆகலின் ஈண்டுக் கால வரிசையைக் கடைப்பிடிக்கவில்லை. அந்த வகையில் இவ்வியலில் நம்மாழ்வார் திருமொழிகளில் காணலாகும் அகப்பொருட் சிறப்புக் கூறுகள் விளக்கப்படு கின்றது.

இயல் ஏழு

திருமங்கையாழ்வார் தம் திருமொழிகள் வழி அகமரபுகள் விரித்துரைக்கப் படுகின்றன.

இயல் எட்டு

குலசேகராழ்வாரும், பெரியாழ்வாரும் இருபடி நிலைகளில் நின்று விளக்கம் பெறுகின்றனர்.

இயல் ஒன்பது

ஆண்டாளின் காதல் பள்ளமடைக் காதல் ஆகவே, பிராட்டியாகவே நின்று பாடும் அவர்தம் தனிநிலை மாண்பு கருதி – சிறப்பாக அவர் திருமொழிகளில் காணலாகும் அகக் கூறுகள் – தனி இயலில் எடுத்துரைக்கப்படுகின்றன.

இயல் பத்து

குறிப்பிட்ட தனிநிலை ஆய்விற்குரிய ஆழ்வார்கள் அல்லாமல், ஆழ்வார்கள் சிலர் – முதல் மூவர், திருமழிசை ஆழ்வார், திருப்பாணாழ்வார் – திருமொழிகளில் குறிப்பாக அகப்பொருள் நுணுக்கங்கள் ஆங்காங்கே மின்னிப் பொலிகின்றமையின் அவையும் ஆழ்வார் அல்லாத திருவரங்கத்தமுதனாரின் அகப்பொருள் பாடல்களும் இறுதி நிலையில் எடுத்துக் காட்டப்படுகின்றன.

இயல் பதினொன்று

பகுப்பாய்வுப் பான்மையில் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் ஆய்வினை மேற்கொண்டு பெறப்பட்ட முடிவுகள் நிரல்படுத்தி எடுத்துரைக்கப் பெற்று, இனித் தொடர்நிலை ஆய்வுகளாக மேற்கொள்ளத் தகும் சில சிறப்பாய்வுப் புலன்கள் பற்றிச் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன.

ஆய்வு மெய்ம்மைகள் வலிவும் பொலிவும் பெறுதற்கும், முடிவுகள் செம்மை நலம் கொண்டனவாக அமையவும், வேண்டும் இடங்களில் பொருந்துகின்ற விளக்கமுறைப் பொருண்மை நெறிக்கு உட்பட்ட அட்டவணைகள் உருவாக்கப் பெற்றுப் பின் இணைப்புகளாகத் தொடுக்கப் பெற்றுள்ளன.

Koviloor Digital Library

இயல் இரண்டு

ஆழ்வார் பாடல்கள் – நுழைமுகம்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு.

– பெரியாழ்வார் திருமொழி

Koviloor Digital Library

ஆழ்வார் பாடல்கள் - நுழைமுகம்

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும் இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையின் ஒன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்த தன்றே[1]

உலகில் கடவுள்நெறி பல்லோரால் போற்றப்படுகின்றது. வழிபடுமுறையும் வாழ்த்தும் நெறியும் எத்தனையோ வகையில் மாறுபடுகின்றன. என்றாலும் முடிவில் அனைத்தும் ஒன்றாகவே முடியும் என்பர் சமயப் பொது நெறியாளர். பல்வேறு சமயங்களை நதிகளாகவும், அவையெலாம் இறுதியில் சென்று சேரும் கடலாகவும் கடவுளைக் காட்டுவர் பெரியோர்.

இன்பம் இருவகையாகப் பேசப்படுகின்றது. ஒன்று, சிற்றின்பம்; மற்றது பேரின்பம். இரண்டும் முறைப்படி மேற்கொள்ளும் இன்ப நெறிகளேயாகும். காதல் இருவர் கருத்தொருமித்து வாழ்ந்து பெறுவது சிற்றின்பமாகும். 'நீயும் நானுமாய் ஏகபோகமாய் இயைந்து வாழ்வோம்' என்று ஆண்டவனை வேண்டி இரண்டறக் கலத்தல் பேரின்பமாகும். எனவே, இரண்டும் தம்மை மறந்து, இருவரும் ஒருவராக இயையும் சிறப்பிலேதான் முடிகின்றன. சிற்றின்ப வாழ்வும் பேரின்ப வாழ்வும் – காதல் நெறியும் கடவுள் நெறியும் – ஒன்றை ஒன்று பற்றி வாழ்வனவே[2] என்பது தெளிவு.

மக்களைப் பக்தி வெள்ளத்தில் முழுவதும் திளைக்கச் செய்வதில் முதலாவதாகக் கொள்ளத்தக்கன, தென்தமிழில் – தேன் தமிழில் – உள்ள நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களேயாகும் என்பர்.[3] ஆகவே பக்தி நலங்கனிந்த பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் எனலாம்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தமானது திருமாமகள் கேள்வனான திருமாலது கருணையை இவ்வுலகோர் உன்னி உணரும் பொருட்டு ஆழ்வார்கள் பதினொருவரும் ஆண்டாள் ஒருத்தியுமாகிய பன்னிருவரும் அருளிச் செய்ததாகும். ஆழ்வார்கள் சமயநிலை தெளிந்த பெரியார்கள்; 'எம்பெருமான்' எனப்படும் இறைவனுடைய திருக்குணங்களில் ஆழங்கால்பட்டுத் தம்மையே மறந்தவர்கள். இறைவனுடைய தன்மைகளில் தோய்ந்தெழுந்தவர்கள். அந்தீந்தமிழால் நற்கலைகளை ஆய்ந்துரைத்தவர்களாவர்.

ஆழ்வார்கள் 'ஒண் தாமரையாள் கேள்வ னொருவனையே நோக்கு முணர்வு'[3] கொண்டவர்கள். அந்நோக்குடன் அவர்கள் வைணவத்திற்கு

Koviloor Digital Library

வித்திட்டவர்கள் ஆகின்றார்கள். அவர்களுக்குப் பின்வந்த ஆசாரியர்கள் ஆழ்வார்களின் பாடல்களுக்குத் தத்துவம் கூறிச் சமய உண்மைகளை எடுத்துக் காட்டியவர்கள்; அதனைப் பக்திப் பயிராக வளர்த்து வைணவப் பண்ணையாக்கிய பெருமை ஆசாரியர்களையே சாரும்.[5]

பக்தியியக்கத்தின் செல்வாக்கு தமிழ்நாட்டை மூன்று வழிகளில் ஆட்கொண்டதென்பர்.[6] அடியார்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பாடுதல், இவ்வுலக மக்களுக்காகக் கடவுள் பக்தி வழிபாடுகளைத் தூண்டும் வழிபடு பாடல்களை இயற்றுதல், பக்தி நலங்கனிந்த சமயக் காவியங்களைப் புனைதல் என்னும் வழிகளைக் காணலாம். பக்திப்பாடல் என்ற நூல் வகையில் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் மிகச் சிறந்ததென்று கூறுகின்றார் எஸ். வையாபுரிப்பிள்ளை.[7] அவ்வகையில் இந்தப் பாடல்கள் பக்தி நிலைகளையும், சமயக் கொள்கைகளையும், இறைவன் உயிர்கள் இவர்களின் தன்மைகளையும் உணர்த்துவனவாகவும் அமைந் துள்ளன. மேலும் இவை யாவும் இலக்கிய நயம் செறிந்தவையாக அமைந்துள்ளன வாதலால் சமயச் சார்பற்றவர்களும் அவற்றை விரும்பிக் கற்றுப் போற்றுகின்றனர்.

இலக்கிய நயம் செறிந்தவையாக இப்பாடல்கள் அமைந்துள்ளமைக்கு இதில் அமைந்துள்ள அகத்துறைப் பாடல்களும் காரணமாகின்றன எனலாம்.

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுக்காலப் பரப்பும் பல்வேறு 'இலக்கியக் காலப் பகுதி' களும் (Literary periods) கொண்டது; ஒவ்வொரு காலப் பகுதியும் பழைய வகைகளை வளர்த்திருக்கிறது; மரபு அடிப்படையிலான புதிய வகைகளையும் தோற்றுவித்திருக்கிறது.[8] பல இலக்கிய வகைகள் பொருளமைதி, புற வடிவம், உத்தி போன்றவற்றில் மாறுபடும். பரந்தும் பிணைந்தும் கிடக்கும் இலக்கியத்தில் வடிவத்தையும் பொருளையும் ஒன்றுடன் ஒன்று உறழ நோக்கும்போது பகுப்புமுறை தெளிவாகின்றது.

சங்கப் பாடல்கள் மிகுதியும் தன்னுணர்ச்சிப் பாக்கள். அவை எண்ணிக்கை அடிப்படையிலும் பொருளடிப்படையிலும் தொகுக்கப்பட்டுள்ளன. சில அடியளவாலும், சில யாப்பினாலும் பெயரிடப்பட்டுள்ளன. நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் 'இசைப்பா' 'இயற்பா' எனப் பிரிக்கப்பட்டு, இசைப் பாக்கள் மூன்று தொகுதிகளாகவும், இயற்பாக்கள் ஒரு தொகுதியாகவும் அடைவுபடுத்தி வெளியிடப்பட்டுள்ளன.[9] இந்தப் பாடல்களை நாதமுனிகள் என்ற வைணவப் பெரியார் அரும்பாடுபட்டுத் திரட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கப் பாடல்களில் அமைந்துள்ள காதல் மரபு ஆழ்வார் பாடல்களிலும் போற்றப்பட்டு வந்துள்ளன. பாடல்களின் வடிவங்களிலே தாம் வேறுபாடுகள்

Koviloor Digital Library

காணப்படுகின்றன. சங்கப்பாட்டுகள் கற்றவர்க்கு உரியனவாகப் பாடப்பட்டவை என்றும் ஆழ்வார் நாயன்மாரின் பக்திப் பாடல்கள் கற்றவர்களோடு மற்றவர்களும் கூடிப் பாடுதற்கு ஏற்றவாறு எளியதாய் அமைந்திருந்தன என்றும் கூறுவர்.[10] மக்கள் கூடிப் பாடுதற்கு ஏற்ற இசைப்பாடல்களாய் இவை திகழ்ந்தன. இவ்வாறு நடை எளிமையும் இசையினிமையும் கூடியமையால் தமிழ் இலக்கியத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அகத்துறைகளையும் புறத் துறைகளையும் சங்கிலித் தொடர் போலப் புனைந்து, மரபும் மாற்றமும் பொருந்த வளர்ச்சி காட்டும் பாங்கினைச் சங்க காலத்திற்குப் பிறகு காண்கிறோம்.[11] அவ்வாறு மாறிய காலத்தைச் சமயப் பாடல்களின் காலம் என்று கூற முடியும்.

"திவ்வியப் பிரபந்தம், பாசுரம் என்றால் சுவையும் இசையும் மலிந்த தமிழ்ப் பாக்கள் என்பது பொருள். மேலும் தமிழில் பாமாலைகள் என்றால் ஆழ்வார்கள் பரமனைப் பற்றித் தங்கள் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்திய கவிதை என்று பொருள் அறியலாம்" என்று கூறுகின்றார் சி. கனகசபாபதி.[12]

பக்தி இயக்கம்

இறைவன் என்ற தத்துவம் ஐம்புலன்களால் அறிய முடியாததொன்று; தருக்க நீதிக்கும் அப்பாற்பட்டது இது. காழ்த்த பக்தியினால்தான் அவனை அறிய முடியும். தாம் செய்யும் சமயச் சடங்குகள் அனைத்தும், பக்தியில்லையென்றால் கடவுளையடையப் பயனளிக்கா. இறைவன் உண்மையையறிதலே மனிதன் அடைய வேண்டிய பேறாகும். அந்த இறைவனையடைவதற்கும் பிரபத்தி அல்லது சரணாகதி ஒரு சிறந்த நெறிமுறையாகின்றது. "தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை"[13] என்று குலசேகரர் கூறியது இவ்வுண்மையை உணர்த்துகின்றது. "களைவாய் துன்பம்; களையாதொழிவாய்; களைகண் மற்றிலேன்" என்றார் நம்மாழ்வார்.[14] பகவத்கீதையில் கண்ணன் அருளியதும் இத்தத்துவத்தையேயாகும்.[15] இந்த அடைக்கலத் தத்துவத்திலிருந்து இறைவனருளை நம்பி வாழ்வது ஏற்படுகிறது. இறைவனின் இன்னருள் இல்லையேல் ஏதும் இல்லை என்ற உணர்வு மானுட ஆன்மாவுக்கு உணரும் நிலை வாய்க்கின்றது.

இறைவன் வேண்டியாங்கு வேண்டியபடி அருளை வழங்குபவன். அவனால் அந்த அருள் இவ்வுலகவுயிர்களுக்கு – குறிப்பாக மனித உயிர்க்கு இருவகையாக வழங்கப்படுகின்றது. முதலாவதைக் குரங்கு நியாயம் (மர்க்கட நியாயம்) என்பர். குரங்குக்குட்டி தன் முயற்சியாலே தாய்க் குரங்கைக் கட்டிக் கொள்கிறது. அந்நிலையில் தாய்க்குரங்கு வேறு ஓர் இடத்திற்குக் குட்டியை

Koviloor Digital Library

எடுத்துச் செல்லுகின்றது. இஃது ஒரு காரணம் பற்றி இறைவன் உயிரை ஏற்றுக் கொள்ளுதல் (ஸஹேதுக்கிருபை) ஆகும். "எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்" என்றார் குலசேகரர்.[16]

இனி, இரண்டாவதைப் பூனைக்குட்டி நியாயம் (மார்ச்சால நியாயம்) என்று கூறுவர். பூனைக்குட்டி தாய்ப்பூனை வைத்த இடத்திலேயேயிருந்து கொண்டு, அதுவாக வந்து எடுத்துப்போகும் வரையில் அங்கேயே கிடக்கும். இதனிடத்தில் யாதொரு முயற்சியும் இல்லை. அதாவது இங்கு யாதொரு கைம்முதலும் இல்லாமல் அவனருளையே பார்த்திருப்ப, அந்த உயிரைத் தானாகவே முன்வந்து மகிழ்ந்து ஏற்பதை எதிர்பார்த்திருக்கிறது. ஆக, "நாமும் முயல வேண்டும்; அப்போதுதான் இறைவன் அருள் செய்வான்"[17] என்ற குரங்கு நியாயத்திற்கு மறுதலையாக இஃது உள்ளது. சுருங்கச் சொன்னால், இதில் உயிர் யாதொரு முயற்சியும் தன் பங்குக்குச் செய்யாமல், அப்படி முயன்றாலும் அந்த முயற்சியால் ஏற்பட்டது என்கின்ற எண்ணம் சிறிதும் கலவாமலும் எப்படிப் பூனைக்குட்டியானது தாய்ப்பூனை வந்து எடுத்துப் போதலை எதிர்பார்த்து இருக்கிறதோ அதுபோலவே உயிரும் இறைவன் தன் கருணையே அவனாகச் செய்வான் என்ற பெருநோக்கோடு இருத்தல் வேண்டும் என்பது இந்த வகை நியாயத்தின் வாதமாகும்.

இந்த உயிர்நிலைப் பண்பை உள்ளத்திருத்திப் பக்தி என்ன என்பதை அறிய வேண்டும். அப்போது பக்தி என்பது ஞானத்தினால் அடைவது ஒன்றன்று; பிடிவாதத்தினால் அடைவது ஒன்றன்று; புறப் பற்றுக்களையெல்லாம் நீக்கிச் சொந்த பந்தங்களையறுத்து இறைவன் மேல் வைத்த நம்பிக்கையை எப்போதும் அணையா விளக்காய் மனத்தில் கொழுந்துவிட்டு எரிய அந்த இறைவனை அனுபவிப்பதுதான் பக்தி, அனைத்தையும் இறைவனுக்கு ஈடளித்தலே பக்தியாம் என்பது புலனாகும்.

இதனால் செயலாற்றல் இல்லாமல் வறிதே இருந்து விடக்கூடாது. "எல்லாக் கர்மங்களையும் விட்டு என்னைப் பற்று" என்றால் அதன் உள்ளார்ந்த பொருள் – "நீ செய்கின்ற கர்மங்களையெல்லாம் என்னை முற்றும் பற்றுகையையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்" என்பதாகும்.[18] ஆகவே இடையறாத பக்தி வைத்து அசைக்க முடியாத நம்பிக்கையோடு இருந்தால் சமூக முன்னேற்றம், சமய முன்னேற்றம், விலைக்கோட்பாட்டு ஈடேற்றம் ஆகியன ஏற்படும். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்னும் முதுமொழி பக்தி இயக்க நிலையில் "நம்புங்கள் நம்புங்கள் நாரணன் அடிதன்னை" என்னும் அளவில் ஆழங்கால் பட்டு அடியவர்களைத் தோயச் செய்தது.[19]

Koviloor Digital Library

மேற்கூறியவற்றிலிருந்து இறைவனையடைதற்குரிய நெறிகள் இருவகை என்னும் தெளிவு ஏற்படுகின்றது. ஒன்று பத்திநெறி; மற்றொன்று பிரபத்தி நெறி. பக்தி நெறியாவது, பற்றுவதெல்லாம் பற்றி இறைவனைப் பற்றுகை. பிரபத்தி நெறியாவது, விடுவதெல்லாம் விட்டுத் தன்னையும் விடுகை; தன்னையும் விடுகையாவது, விட்டோம் என்ற எண்ணத்தையும் விடுகை. இவ் இருவகை நெறியில் பக்தி நெறியில் – தன் முயற்சியால் நடைபெறுவது. பிரபத்தி நெறி – தன் முயற்சியால் ஆவதொன்றுமில்லை; எல்லாம் அவன் செயலால் ஆவனவே என்று துணிந்து தன் முயற்சி ஒழிய அவனருளையே எதிர்பார்த்திருப்பது. இதனால் பக்தி நெறி தகுதியுடைய ஒருசில பெருமக்கட்கே உரியது, பிரபத்தி நெறி யாவருக்கும் உரியது என்பது தேற்றம்.

பக்தி நெறியைப் பின்பற்றியவர்களாக ஆழ்வார்கள் தோன்றுகின்றனர். ஆனால்,

வல்லார் முயல்க வலியிழந் தாரென்றனைத் தொழுகென்
றெல்லாத்தரும முரைத்தவன்[20]

என்றமையான், 'தகுதியினால் கடைப்பிடிக்க வல்லார் பக்தி நெறியில் முயல வேண்டுமென்பதும், அவ்வன்மையில்லார் பிரபத்தி நெறியில் இறைவனைத் தொழுதல் வேண்டுமென்பதும் அவன் வாக்காலே புலப்படக் காணலாம்.

ஆழ்வார்கள் தாமான தன்மையில் இருந்து பேசும் செய்திகளையும், தம்மை இறைவனின் தலைவியாகக் கருதிக் கொண்டு (பாவனை) பேசும் செய்திகளையும் ஒக்க நோக்கும்போது இவ்விருவகைத் தன்மைகளையும் எய்தப் பெற்றவர்கள் இவர்கள் என்பது புலப்படக் கிடக்கின்றது. ஏனெனில் பக்திநெறி வாய்க்கப் பெற்றோருக்கும் பிரபத்திநெறியே உரியது எனவும் ஆன்றோர் கூறுவர்.[21]

இறைநெறிப் பாடல்கள்

தொடக்க கால மனித சமுதாயம் வீரத்தையும் காதலையும் உயிரென மதித்துப் போற்றி வாழ்ந்ததால் அக்காலத்தில் வீரயுகப் பாடல்கள் மலர்ந்தன எனலாம். வீரயுகப் போக்கு வரம்பிகந்து சென்ற காலத்தில் அறநெறிக் கோட்பாடுகள் வற்புறுத்தப்பட்டன; அந்நிலையில் அறநெறிப் பாடல்கள் வளர்ச்சி பெற்றன. "அறநெறிப் போக்கின் முதிர்ச்சி நிலையாக இறைவனைக் காட்டி அற நெறி புகட்டும் பக்திநெறி முகிழ்த்து எழ, தன்னுணர்ச்சிப் பாடல்களான பக்திப் பாடல்கள் ஏற்றம் பெறுகின்றன"[22] என்று மி.ஜான். சாமுவேல் கூறுகின்றார். எனவே இலக்கிய உள்ளீட்டு அடிப்படையில் முறையே வீரயுகப் பாடல்கள்,

Koviloor Digital Library

அறநெறிப் பாடல்கள், பக்திப் பாடல்கள் என்று ஒன்றன்பின் ஒன்றாக சில இலக்கியப் போக்குகள் தோன்றி வளர்ந்தமையைக் காணலாம்.

இறைநெறிக் கவிதைகள் தத்தம் சமயக் கொள்கைகளைப் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டமையின் அவற்றை 'இயக்க இலக்கியங்கள்' என்று அழைப்பது மிகவும் பொருந்தும் என்பர்.[23] இத்தகைய இயக்க இலக்கியப் படைப் பாளர்களாக ஈண்டுப் பன்னிரு ஆழ்வார்களையும் கருத இடமுண்டு. அவர்கள் மக்களோடு உறவாடிச் சமயக் கொள்கைகளைப் பரப்புவதைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள். இவர்களால் பாடப்பெற்ற இறைநெறிப் பாடல்கள், நாட்டை யாண்ட மன்னனிலும் உயர்ந்த மன்னனாக மக்கள் தத்தம் தேவை கருதி அமைத்துக் கொண்ட இறைவனை – ஆண்டானைப் பாடும் பாடல்களாக வளர்ச்சி பெற்றன.

அன்பைப் பேணி வளர்க்கும் பெருமைமிக்க அன்பு நெறியை – பக்தி நெறியை, அன்பினால் என்புருக ஏத்தினால் இறைவனைக் காணலாம் என்று அனுபவத்தில் கண்ட அருட்செல்வர்கள் உலகிற்குக் காட்டிச் சென்றனர் என்று பேராசிரியர் க.த.திருநாவுக்கரசு கூறுகின்றார்.[24] இவர் இந்நெறியினை மெய்யுணர்வுக் காதல் நெறி என்றும் பேசுகின்றார்.

> இக்காதல் நெறியைப் 'பிரேம பக்தி' என்றும், 'பக்திநெறிக் காதல்' (Devotional Love) என்றும், 'மெய்யுணர்வுக் காதல்' (Erotic Mysticism) என்றும் பிறமொழியாளர்கள் பலரும் பலவாறாகக் கூறுவர். இதை, நம் தமிழகத்தில் பெரியார்கள் 'நாயக–நாயகி பாவம்' என்றும் 'பேரின்பக் காதல் நெறி' என்றும் போற்றி வருகின்றனர்[25]

என்பது பேராசிரியர்தம் கருத்தாகும்.

'அவனே தானேயாகிய அந்நெறி' என்று மெய்கண்டார் சுட்டுவது இவ் அன்பு நெறியின் முதற்படி நிலையினையே யாகும்.

> அவனே தானே யாகிய அந்நெறி
> ஏக னாகி யிறைபணி நிற்க
> மலமாயை தன்னொடு வல்வினை யின்றே!

என்பது தெளிவினைத் தரும்.[26]

இக்கருத்து, "அதுவே, தானே அவளே தமியர் காணக் காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்" என்னும் இறையனார் களவியல் இரண்டாவது நூற்பாவின் கருத்தினை ஒப்ப அமைந்துள்ளதாகும்.

Koviloor Digital Library

இதை மெய்யுணர்வுக் காதல் நெறியினர் 'ஆன்மாவின் அடைக்கலம்' எனவும் 'பரபத்தி' எனவும் கூறுவர். முன்பு கூறிய பூனைக்குட்டி நியாயத்தோடு ஒப்ப அமைகிறது இது. "நான் ஒன்றினையும் செய்வதற்கு ஆற்றலுடையவன் அல்லேன்; என்னைக் காத்தருள வேண்டிய பாரம் இறைவனாகிய உன்னையே சார்ந்தது. ஆதலால் உன்னை எதிர்பார்த்திருப்பது தவிர என்னால் ஆவது ஒன்றும் இல்லை" என்னும் உறுதியான உள்ள உணர்வுடன் இறைவனுடைய திருவடி களையே அடைக்கலமாக அடைதல்தான் ஆன்மாவின் அடைக்கலம் என்னும் முத்தி நெறியின் இலக்கணமாகும்.

இவ்வான்மாவின் அடைக்கலத்தையே நாயகி, நாயகனை நாடிச் சென்று அவனோடு இரண்டறக் கலக்கின்ற இன்ப அன்பு நெறியாக ஆன்றோர்கள் உருவகப்படுத்திக் கூறுவர்.

'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்று தொடங்கும் அப்பர் தேவாரப் பாடல் இந்நெறியினைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது.[27]

இத்தகைய 'ஆன்மீகக் காதல்' நெறியினை எடுத்துரைக்கும் பாடல்களும் இலக்கியங்களும் தமிழ்மொழியில் பல உள்ளன.

வீரயுகத்தில் மன்னனைப் புகழ்ந்து பாடிய புகழ்ச்சிப் பாடல்கள் அனைத்தும் இறைநெறிக் காலத்தில் இறைவனைப் பாடும் வழிபடு பாடல்களாக மாற்றம் அடைந்தன. அப்போது காதலன், காதலி ஆகியோரிடையில் நிலவிய உள்ளப் பிணைப்பினைப் பாடிய அகத்துறைப் பாடல்கள் ஒரு புதிய மாற்றத்தை இப்போது அடைகின்றன. சங்க அகப் பாடல்களில் தலைவன் பெற்ற இடத்தை ஆழ்வார்கள் பாடல்களில் இறைவனும், தலைவியாகிய காதலி பெற்ற இடத்தை மனித ஆன்மாவும் – அஃதாவது ஆழ்வார்களும் பெறுவதைக் கண்ணுறலாம். "என் உள்ளம் கவர் கள்வன்" என்று திருஞானசம்பந்தர் கருதியதும் இந்நிலையில்தான் என்றுணர்தல் தகும். காதலியாக நின்று கொண்டு "ஆடையிலே எனை மணந்த மணவாளா" என்று வள்ளலார் வழுத்தியதும் நோக்கத்தக்கது.

உலகின் பெரும்பான்மையான இறைநெறி இலக்கியங்களிலும் இந்த நாயகன் நாயகி நிலையினைக் (Bridal Mysticism) காண முடியும். நாயகன், நாயகி உறவு நிலையில் இறைவன், ஆன்மா உறவினை விளக்கிச் செல்லும் போக்கினை ஆழ்வார்களின் பாடல்களில் நீளநெடுகிலும் காண முடிகின்றது. தன்னுணர்ச் சியின் வெளியீடாக இருப்பதால் இப்பாடல்களில் ஆழ்வார் தம் இறையன்பு மிகுதியைக் காணலாம்.

Koviloor Digital Library

இவர்கள்தம் பாடல்களுள் சில சங்க இலக்கிய அகப்பொருள் நுணுக்கத் திறன் கொண்டனவாகவும் இருக்கின்றன; தொல்காப்பியனார் சங்க காலப் புலவர்கள், இறையனார் களவியலுரை ஆசிரியர் காட்டிய காதற் பாடல்களின் புனைவு நெறியை ஆழ்வார் தம் அகச்சுவைப் பாடல்களில் காண்கிறோம். புலவரால், இல்லது இனியது நல்லது என நாட்டப்பட்ட களவு கற்பு ஒழுக்கங்கள் தானே அவள், அவளேதான் என இயன்ற ஈருடலின் ஒருயிர் போல்வார் உளத்தெழு அன்பின் உயர்ச்சி. எனவே அந்த அன்பின் உயர்ச்சியை உணர்ந்த முதிர்ச்சியில் 'அன்பின் விளைவே அகத்திணை யாப்பு' என்னும் அடிப்படையில் ஆழ்வார்கள் தம் அகத்துறைப் பாடல்கள் காணப்படுகின்றன.

இனி, மடல்திறம், உடன்போக்கு, வரைவு முடுக்கம், வேந்தற் குற்றுழிப் பிரிவு, ஆகிய பகுதிகளின் அடிப்படையில் விரியும் துறைகளின் போக்கில் நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களின் அகப்பொருள் பாடல்கள் உள்ளன. திருக்கோவையார் கல்லாடம் போன்ற நூல்களில் பயின்று வரும் அகப்பொருள் அமைதியினையும், காட்சிகளையும் ஆழ்வார்தம் பாடல்களில் காண முடியும்.

பொருளினை 'அகம், புறம்' எனப் பாகுபடுத்தி, உரைப்பதே தமிழ் மரபு எனவும், 'அறம் பொருள் இன்பம்' என மும்முதற் பொருள்களாக வகைப்படுத்திக் கூறுவது வடமொழி வழக்கு எனவும் மறைமலையடிகள் கருதுகின்றார்.[28] 'வீடு' சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து என்பது தெளிவு. மனிதன், தன் வாழ்க்கையில் அடைய வேண்டிய பேறுகளையே 'மும்முதற் பொருள்கள்' என்று முன்னோர் முழங்கினர். நாலடியாரில் 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவணது எய்த இருதலையும் எய்தும்'[29] எனக் குறிப்பிட்டிருப்பதை நோக்கலாம். இம்மும்முதற்பொருள் காலப் போக்கில் நான்காக விரிந்ததெனப்.[30] ஆகவே மும்முதற் பொருள்களுள் மூன்றாவதாகவும், நால்வகைப் பேறுகளுள் மூன்றாவதாகவும் இடம் பெறுவது இன்பம். இன்பம் என்னும் சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி அகமகிழ்ச்சி, இனிமை, காமம், கலியாணம், சொற்சுவை, பொருட்சுவை எனும் உவகைப் பொருள்களைக் காட்டி நிற்கின்றது.[31]

திருக்குறள் உள்ளிட்ட இலக்கியங்களெல்லாம் 'அகமகிழ்ச்சி' எனும் விரிந்த பொருளிலேயே 'இன்பம்' எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளன. ஆயின் ஆழ்வார் பாடல்களில் அகமகிழ்ச்சி எனும் பொருளேயன்றி (புலன் நுகர் இன்பம்) அந்த இன்பம் அறிவின்பமாக , அழகியல் இன்பமாக, ஆன்மிக இன்பமாக விரிந்த போக்கில் பேசப்படுவதை நோக்கலாம். மக்கள் வாழ்க்கையின் தலைசிறந்த குறிக்கோள், 'தன்னைத்தான் அறிதல்' அல்லது பிறவிப் பிணி அறுத்தல் என்பர்.

Koviloor Digital Library

இந்த மேலான இன்பத்தையே இறையனுபவத்தில் மூழ்கித் திளைத்த ஆழ்வார்கள், புலப்படுத்துகின்றனர் எனலாம்.

இறையனுபவ நிலையினை இரண்டு வகை நெறிகளில் அடைதல் கூடும் என்ற அமைப்பு முறையில் தங்கள் உள்ளார்ந்த பக்தியனுபவங்களைப் பாடினர். தாமான தன்மையில், அடியார் ஆண்டவர் கூட்டுறவில், இறையின் அருட்குணங்களில் ஆழங்கால்பட்டுப் பாடுகின்ற அருள் உணர்வு நிலை முதல் வகையாகும். அடுத்துத் தாமான தன்மையிழந்து, ஒரு பிராட்டி நிலையினை அவாவிக் கொண்டு, மகிழ்வினால் பாடும் நிலை கடந்து, ஆற்றாமையினால் உருகிக் கரைந்து, காதல் உணர்வுவழிப் பாடப்பெறும் அக உணர்வு வெளிப்பாட்டு நிலை இரண்டாவதாகும். இவ்விரு மரபுகளும், ஆழ்வார்கள் கடைப்பிடித்தொழுகிய இருபெரும் மரபுநிலைகளாகின்றன.

எனவே, நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அமைந்துள்ள பன்னிரு ஆழ்வார்கள் தம் திருமொழிகளில் இவ்விருவகைப் போக்குகளிலும், அக உயர்வு வழிப்பட்ட திருமொழிகளின் மரபுப் போக்குகளைத் தன் நிலையில் ஆய்வது புதிய விளக்கங்கள் பெறுதற்கான வழியாகின்றது. இங்குக் கால ஆராய்ச்சி கருத்தன்று. திருமொழிகளின் வைப்பு முறையும், பொருளமைதியும், மரபுப் போக்குகளும் ஆக இவையே ஆய்வுக்குரியன ஆகின்றன.

இறைப் பற்றிலக்கியங்களில், போற்றப் பெறும் இவ்விறைமைக் காதலுக்குரிய அகமரபுகளின் போக்குகளைச் சுட்டிக் காட்டுதல் வாயிலாக, தமிழின் அக இலக்கிய வாழ்வின் வளர்ச்சிப் போக்கு ஒன்றினை விரிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது. காலந்தோறும் குறிப்பிட்ட இலக்கிய மரபுகள், பின்பற்றப்பெறும் நிலை, மரபுகள் சில புறக்கணிக்கப்படும் போக்கு, அவற்றிற்கு வேறாகப் புதுமரபுகள் உருவாகும் புத்தமைவுப் போக்கு என்ற கூறுகள் பெறப்படுகின்றன. எனவே, இங்கு ஆய்வின் அடிப்படை திருமொழிகளில் காணலாகும் அகமரபுகளை எடுத்துரைப்பதே ஆகும். சமய உண்மைகளோ, தத்துவார்த்தப் பொருண்மைகளோ சிறப்பு நிலையில் ஆய்விற்கு உட்படுத்தப் பெறவில்லை என்பதனை மனங்கொள்ளல் வேண்டும். ஆயினும், தவிர்க்க இயலா நிலையில் இவை விளக்கம் பெறும்போது எடுத்துக் கொண்ட ஆய்வுப் பொருளினை விளக்க வந்தனவாகக் கொள்ள வேண்டும்.

★

Koviloor Digital Library

குறிப்புகள்

1. கம்பராமாயணம், பாலகாண்டம், ஆற்றுப்படலம், 19.
2. அ.மு. பரமசிவானந்தம், வையைத்தமிழ், ப.103.
3. ந. சுப்புரெட்டியார், "வைணவ சமய நூல்கள்" தெய்வத்தமிழ், ப.549.
4. பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி, 67:3–4.

   "பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு ஒண்பூ
   உயரும் கதிரவனே நோக்கும் – உயிரும்
   தருமனையே நோக்கும்; ஒண் டாமரையாள் கேள்வன்
   ஒருவனையே நோக்கும் உணர்வு."
5. ஆசாரியர் என்போர், அவ் ஆழ்வார்கட்கும் பிற்காலத்தே அவர்கள் அருளிச் செயலின் வழியைப் பின்பற்றி ஸ்ரீவைணவ தரிசனத்தைப் பிரவசனம் செய்து நாட்டை உய்யக் கொண்ட பெரியோராவர். இவர்கட்கெல்லாந் தலைவரானவர் ஸ்ரீமந் நாதமுனிகள் என்பது பலரும் அறிவர்.

   – மு. ராகவய்யங்கார், ஆழ்வார்கள் காலநிலை, ப.16.
6. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப.100.
7. எஸ். வையாபுரிப்பிள்ளை, திவ்வியப் பிரபந்தம், முதலாயிரம், எஸ். இராஜம் வெளியீடு, பதிப்புரை, ப.3.
8. இராம. பெரிய கருப்பன், "தமிழ் இலக்கிய வகைகள்", வையை மலர் ஒன்று, பக். 110–111.
9. காண்க பின்னிணைப்பு.
10. தி.கி.நாராயணசாமி நாயுடு, ஆழ்வார்கள் தமிழில் அக்காரக் கனிகள், பக்.5–8.
11. முத்துச் சண்முகன், இராம. பெரிய கருப்பன் (பதிப்பாசிரியர்கள்), வையை வியாழவட்டக் கருத்தரங்க மலர் 1, ப.125.
12. சி. கனகசபாபதி, "இலக்கியக் காலங்களும் கொள்கைகளும்", வையை மலர் ஒன்று, 151.
13. "தருதுயரம் தடாயேல், உன் சரண் அல்லால் சரண் இல்லை;
    விரைகுழுவு மலர்ப்பொழில் சூழ் வித்துவக்கோட்டு அம்மானே! அரிசினத்தால்
    ஈன்றதாய் அகற்றிடினும் மற்று அவள்தன்
    அருள் நினைந்தே அழும்குழவி அதுவே போன்று இருந்தேனே!"

    – குலசேகராழ்வார் பெருமாள் திருமொழி 5:1
14. "களைவாய் துன்பம்; களையாது ஒழிவாய்; களைகண் மற்று இலேன்;
    வளைவாய் நேமிப் படையாய்! குடந்தைக் கிடந்த மாமாயா!
    தளரா உடலம், என்னது ஆவி சரிந்து, போம்போது
    இளையாது உனதாள் ஒருங்கப் பிடித்துப் போத இசை நீயே"

    – நம்மாழ்வார் திருவாய்மொழி, 40:8

Koviloor Digital Library

15. "சர்வ தர்மாந் பரித்யஜ்யமாம் ஏகம் சரணம் வ்ரஜ
அகம்த்வா சர்வ பாபேப்யோ மோக்ஷஇஷ் யாமி மாசுச"

– பகவத் கீதை 18–66

16. "எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்து எழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்; மற்று அவைபோல்
மெய்த்துயர் வீட்டாவிடினும் – வித்துவக் கோட்டு அம்மா! – என்
சித்தம் மிக உன்பாலே வைப்பன், அடியேனே"

– குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 5:7

17. God helps those who help themselves.

18. "ஸர்வம் கிருஷ்ணார்ப்பணமஸ்து".

19. நம்பின கருத்துக்கு ஆதிமூலமானான்
நம்பாத கருத்துக்கு ஆதிகாலனானான்
நம்பின விபீடணனுக்கு ராமனானான்
நம்பாத ராவணனுக்கு யமனானான்
நம்பின பாஞ்சாலிக்குக் கிருஷ்ணனானான்
நம்பாத துரியோதனனுக்குத் துஷ்டனானான்
ஆகையால்
நம்புங்கள் நம்புங்கள் நாரணன் அடிதன்னை
நற்கதி தந்து அவர் இரட்சித்திடுவார்
நம்பாதவர்க்கு யமனாயிருந்து பொல்லா
நரகத்திற் காளா யமர்த்திடுவார்

– தெருக்கூத்துப் பாடல்

20. சுவாமி தேசிகன், சரமசுலோகச் சுருக்கு 1.

21. கி. வேங்கடசாமி (பதிப்பாசிரியர்) நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம் பதிப்பு. ப.20.

22. சி. ஜான் சாமுவேல், இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள், ப.9.

23. மேற்கூறிய நூல், ப.33.

24. க.த. திருநாவுக்கரசு, தமிழ் நிலவு, ப.54.

25. மேற்கூறியது. ப.56

26. மெய்கண்டார், சிவஞானபோதம், நூற்பா. 10.

27. தேவாரம் 6 : 25:6.

28. மறைமலையடிகள், பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம், ப.72.

29. நாலடியார், 114.

30. க.த. திருநாவுக்கரசு, திருக்குறளும் இந்திய அறநூல்களும், பக்.3–12.

31. தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1: ப.368.

Koviloor Digital Library

இயல் மூன்று

அக இலக்கண மரபுகள்

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

– திருக்குறள்

Koviloor Digital Library

அக இலக்கண மரபுகள்

அகத்துறைப் பாடல்களைப் பாடுகின்ற நெறி பற்றியும், அக உணர்வுகளில் பாடுபொருளாதற்குரிய உணர்வுகள் பற்றியும், வரையறை வகுத்து அக இலக்கணம் கண்ட மொழி தமிழ் என்பது வரலாறு காட்டும் உண்மை. உள்ளம் பண்பட்டு நிற்குமாயின் உயிர் ஆக்கம் பெறுதல் ஒரு தலை. இது பற்றிய முயற்சிகளை மேற் கொள்ளுதல் மானிட வாழ்க்கையின் செம்மாந்த நிலையினைக் காட்டும். உள்ளம் பண்படல் இலக்கியப் பயன் ஆகலின், வாழ்வினைப் பாடும் அகப்பாடல்களின் நோக்கமும் அதுவெனக் கோடலே சாலும். காதலும் காமமும் பொருள் சிறப்புடைய சொற்கள். காதல் உணர்வின் சீரிய வெளிப்பாட்டினைக் 'காதற் காமம்' என்ற சொல்லால் பரிபாடல் சுட்டுவது ஈண்டு உளங்கொள்ளத் தக்கதாம். கண்வழி உணர்வுப் பரிமாற்றம் செய்து உள்ளங்கலந்த இராமனும் சீதையும் காதலர்கள் ஆதலில் தடையில்லை. ஆயின் வலிந்து பற்றிய இராவணன் செயலோ காம வெளிப் பாட்டின் இழிநிலை சுட்டும். எனவே காதற் பாடல்கள் முறையான காதல் உணர்வுகளையே தோற்றுவிக்க வேண்டும் எனக் கருதிய தமிழ்ச் சான்றோர் உணர்வு மீறாமைக்கு இலக்கணக் கட்டுப்பாட்டினை விதித்தனர்.

மண்ணில் புரளும் மனித இனம், விழுமிய காம உணர்வில் தோய வேண்டும் என்பது பண்டைத் தமிழர் தம் அறவுணர்வில் பதிந்த கவிதை உள்ளத்தின் வேட்கையாயிற்று. இவ்வேட்கை உயர் காதற் கவிதைகளாய்த் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். அதனால்தான் இத்தகைய மன மாண்பில் உயர்ந்த கவிஞர்கள் கண்ட காட்சியை நேர்முகமாகவும், இலக்கிய வாயிலாகவும் கண்ட தொல்காப்பியர் அவற்றில் திகழ்ந்த உண்மைகளையும் பொதுக் கூறுகளையும் ஆராய்ந்து அகப் பொருள் இலக்கணம் அமைத்தார்.

தொல்காப்பியர் காட்டும் வாழ்வியல், புனைவியல் சார்ந்த புலனெறி வழக்குடை வாழ்வியல். முதல், கரு எல்லாம் இக்கவிதையமைப்பின் பகுதிகளே. உரிப் பொருளே வாழ்விற்குரிய பொருள். அன்பின் பிணைப்பு குறிஞ்சியாக, பிணைப்பின் அகற்சி பாலையாக, காதற்பொறையே முல்லையாகப் பரிணமிக்க, உணர்வு நிலை மீறலின் நெகிழ்ச்சி கரைந்து செயலது விளைவு நெய்தலாக, உணர்வு முரண்பாட்டுப் பிணக்கம் மருதமாக வெளிப்பட்டன. உணர்ந்து, கரைந்து, வெளிப்பட்ட உணர்வுகள் கூற்றுக்களாக வெளிப்போந்தன. அகமாந்தர்களின் அன்புப் பேச்சுக்களே, காதற்பாடல்களின் வெளியீட்டு வடிவங்களாயின.

ஒரு சார் அன்பின் 'போக்குவீடான' கைக்கிளையும், மீநிலை அன்பின் வெளிப்பாடான' பெருந்திணையும், இலக்கண நிலையில் சுட்டப் பெற்றனவே

Koviloor Digital Library

யன்றி அவை புலனெறிக் கோட்பாடுகள் வழிப்பட்ட பயன்பாட்டு நெறிகளாக விரித்துரைக்கப் பெறவில்லை என்பது கருதத் தக்கதாம். எனவே, ஐந்திணையே காதலாயிற்று. அகவிலக்கியமாயிற்று, உணர்வு வளர்ச்சியின் வரலாறு காதல் கவிதைகளாக வெளிப்பட்ட சங்க நாளிலிலிருந்து, பின்னரும், காலந்தோறும், காதற் காட்சிகளைக் கவிதைகளாக வடித்து வெளியிட்ட அக இலக்கிய வரலாறு, தொடர் வாழ்விற்குரியதாகிறது. உடல் வாழ்வு வழி, உள்ள வாழ்வின் உயர் நிலை கண்டு, உயிர் வாழ்வின் நிறைவு காண வழிகாட்டிய தொல்காப்பிய இலக்கண மரபுகளைப் போற்றிக் காத்த சங்க அகப் பாக்களின் அமைவுகளைப் பின்வந்த இலக்கியங்கள் முற்றாகப் புறக்கணிக்கவும் இல்லை – முழுமையாக ஏற்றுப் பிரதி எடுக்கவும் இல்லை. மாறாக, சமுதாயச் சூழலுக்கு ஏற்ற வண்ணமும், பண்பாட்டுக் கலப்பின் வெளிப்பாடாகவும் காலந்தோறும் காதற்கவிதைகள் பாடுபொருளிலும், பாடு நெறியிலும் மாற்றங்கள் பெற்றே வெளியிடப் பெற்றன.

இம்மாற்றங்களை, 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்ற விதிப்படி காலப் போக்குகளில் மலர்ந்த இலக்கண நூல்களும் சுட்டிக் காட்டின. எனவே, தொல்காப்பியத்திற்குப் பின்னரும், அக இலக்கணம் வகுத்துக் காட்டுகின்ற பான்மையில் இறையனார் களவியலும், நம்பியகப் பொருளும், வீரசோழியமும், என இலக்கண வரிசைக்குட்பட்ட இலக்கண நூல்களைக் காணுகின்றோம். இவை அவ்வக் காலத்திற்குரிய காதல் இலக்கண மரபு வழி ஏற்புகளை, வளர்நிலைகளை, மாறுபடு போக்குகளைச் சுட்டிக் காட்டும் சான்று நூல்களாகின்றன. எனவே இடைக் காலத்து எழுந்த அகவிலக்கியங்களை ஆய்வதற்கு தொல்காப்பியத் திற்குப் பின்னெழுந்த அகவிலக்கண நூல்களை அறிதலும் அடிப்படை ஆதாரங்களைப் பெறுதற்குரிய வழியாகிறது. ஆதலின் பக்தி இலக்கியங்களில் பரவலாகப் பின்பற்றப் பெறும் அகமரபுகளை எடுத்துரைப்பதற்கு அவை தோன்றிய காலத்திற்கு முன்னெழுந்த இலக்கண நூல்களின் விதிமுறைகளை விளக்கிக் காட்டுவது பொருத்தமாகிறது. அவ்வகையில், இவ்வியலில், ஆய்வுத் தலைப்பான நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் காணலாகும் அக மரபுகளை விரித்துரைக்க, அதற்கு முன்னெழுந்த அக இலக்கண நூல்களின் மரபுகள் சுட்டப்படுகின்றன. இதனடிப்படையில் ஆழ்வார்கள் தம் பாட்டல்களில் இம்மரபுகளை ஏற்றுப் போற்றியதும், புதுநெறி புனைந்ததும் காணலாகும்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு முன்னர் எழுந்த இலக்கண நூல்களாகிய தொல்காப்பியம், இறையனார் களவியல் உரை ஆகியவற்றில் அமைந்த அக இலக்கண மரபுகளும், பிரபந்த காலத்திற்குட்பட்ட நம்பியகப் பொருள் காட்டும் மரபுகளும், அமைப்பு முறை வழியாக ஒப்பீட்டு நோக்கில் இவ்வியலில், காட்டப்படுகிறது. இவற்றின் மரபுகளையும், திவ்வியப் பிரபந்தத்தின்

Koviloor Digital Library

இலக்கியப் போக்குகளையும் உட்கொண்டு பின்னால் புறப்பொருள் வெண்பா மாலை புதிய அகமரபுகளை உருவாக்கிய முறை வளர்ச்சி நிலை என்ற வகையில் இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது. இலக்கண மரபுகள் கீழ்க்காணும் அமைப்பு வரிசையில் தரப்படுகின்றன.

1. அகம் – இலக்கணம்
2. நோக்கமும் பகுப்பும்
3. அமைப்பு முறைகள்
4. நூலமைப்பு
5. இயலமைப்பு
6. நூற்பா அமைவு
7. புலனெறி வழக்கம்
8. திணைப்பொருட் பகுப்புக்கள்
    - அ. அகமும் புறமும்
    - ஆ. கைக்கிளை
    - இ. பெருந்திணை
    - ஈ. அன்பின் ஐந்திணை
9. முப்பொருட்கள்
10. திணைமயக்கம்
11. அகப்பொருள் மரபுகள்
12. இயற்பெயர்
13. தலைவர் இருவர்
14. மிக்கோன் தலைவன்
15. கலமும் பாசறையும்
16. களவும் கந்தருவ வழக்கமும்
17. பெண் மடலூர்தல்
18. தோழி
19. கூட்டக்கூடல்
20. கற்புச் சிறப்பு
21. புணர்ச்சி

Koviloor Digital Library

22. துணிதலும் குறிகளும்
23. அகப்பாட்டு உறுப்புகள்
24. உள்ளுறையும் இறைச்சியும்
25. இயல்புகளும் பண்புகளும்
26. பொருட்பண்புகள்
27. மெய்ப்பாடு
28. கூற்று வகை 4
    1. கூற்றுநிரல் மாற்றம்
    2. கூற்றிடம் பெறாமை
    3. குறியீடு மாறல்
    4. கூற்று நிலைப்பகுப்பு
29. பாடாண் பாட்டுக்காமம்
30. காமப்பகுதி
31. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் காமம்.

பிரபந்தத்திற்கு முன்னைய அகமரபுகள்

அகம்

அகத்தால் மட்டுமே உணரப்படுவது அகம் என்றும்,[1] அகத்தில் மட்டுமே (மனைக்கண்) பெரும்பாலும் நிகழ்தற்குரியது அகம் என்றும் பலவாறாய் அகத்திணையை வரையறை செய்தலுண்டு. தொல்காப்பியர் காமப்பகுதி என்றே அகப்பொருளைக் குறிப்பார்.[2] இளம்பூரணருக்கும் இதுவே கருத்து.[3] அகப் பொருள் பகுப்புக்களும், அவற்றின் விரிகளும் தமிழுக்கே உரியவாகலான், அவை 'அருந் தமிழ் அகப்பொருள்'[4] எனப்படும். தமிழ் மொழியுள்ளும் அவ்வகப் பொருள் கருத்துக்கள் என்றும் ஒரே படித்தாய் இல்லை. காலந்தோறும் இலக்கண நூலார் புதுக்கியும் திரித்தும் பல மாற்றங்களை அகப்பொருளில் செய்துள்ளனர். தொல் காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய இறையனார் அகப்பொருளும், நம்பியகப் பொருளும் பெரிதும் தொல்காப்பியத்தையே சார்ந்துள என்பதை உரை மேற்கோள்கள் சுட்டுவனவெனினும், இவைகளிடையே மாறுதல்களும் நிரம்ப உள.

நோக்கமும் பகுப்பும்

நாடக வழகினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கத்தால்[5]

Koviloor Digital Library

ஆகியன அகப்பொருட் பாடல்கள். உலகியல் வழக்கு மாறும் இயல்பினது. மக்களின் மனவுணர்வுகள் மாற மாற நாடக வழக்கும் படிப்படியாக மாற்றமடைதல் கூடும். எனவே இவ்விரு வழக்கும் தழுவிய புலனெறி வழக்கும், புலனெறி வழக்கம் சான்றவாகிய அகவிலக்கியமும் மாற்றங்களை ஏற்பனவே. இலக்கியத்தினின்று எடுபடுமிலக்கணமாகலின், அகவிலக்கணக் கருத்துக்களும் காலந்தோறும் மாறி வருவன. அம்மாற்றங்கள் இங்கு முறைப்படி எடுத்துரைக்கப்படுகின்றன.

சங்க காலப் பாக்கட்கு முன்னைய தொல்காப்பியமும் சங்க காலத்திற்குப் பின்னரும் பக்திக் காலத்திற்கு முன்னரும் தோன்றிய இறையனாரகப் பொருளும், பக்திக் கால இடைவெளியில் தோன்றிய நம்பியகப் பொருளும், அதன் பின்னர் எழுந்த புறப்பொருள் வெண்பா மாலையும் தமக்குள் மாறுபட்டு நிற்குமிடங்கள், ஈண்டு ஒப்பிடப்படுகின்றன என்பதை இங்கு நினைவு கூர்தல் வேண்டும். இவ்வகை ஒப்பீடு அவ்வக்கால மக்களின் பண்பாடுகளையும் உணர்வுகளையும் அறிய உதவும். மற்றும் இது பிற்காலத் தமிழரின் வாழ்விற்கும் மனப்போக்கிற்கும் அவற்றால் உருவாகும் இலக்கியங்கட்கும் உளதாய அடிப்படையை உணர்த்தும்.

இங்குக் கூறப்பட்ட அகவிலக்கணப் பகுதிகளில் 1. நூல், இயல், நூற்பா என்ற அமைப்பு முறைகளும், 2. திணை பொருட் பகுப்புக்கள், மரபுகள் இயல்புகள் பண்புகள் ஆகிய புலனெறி வழக்குகளும், 3. மனம் அழிந்த வழியும், அழியா வழியும் நிகழும் அகப்பொருள் சான்றவும், அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாய் நிற்பவுமான மெய்ப்பாடுகளும், 4. கூற்று, நிரல் மாற்றம், கூற்றிடம் பெறாமை, குறியீடு மாறல் கூற்றுப் பகுப்பு என்னும் கூற்றமைவுகளும், 5. காமப்பகுதி, கைக்கிளை எனத் தொல்காப்பியர் கூறுவனவும் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் மரபொடு மாறுபட்ட அமைவுகளும புறப்பொருள் வெண்பாமாலையின் காமக் கூறுகளுமாகிய புறத்திணைக் காம நிலைகளும் இவண் முறையே ஆய்ந்துரைக்கப் படுகின்றன.

அமைப்பு முறைகள்

நூலமைப்பு, இயலமைப்பு, நூற்பாவமைப்பு என அகவிலக்கணங்களுள் பொருள் அமைந்து நிற்கும் திறம் மூன்றாகும்.

நூலமைப்பு

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றுறுப்புக்கள் அடங்கிய பிண்டம்.[6] இவ்வுறுப்புக்களுள் பொருளதிகாரம் அகப்புறப் பொருட்களையும், உவமையையும் செய்யுட் கோட்பாடுகளையும் பிறவற்றையும் கூறுவது. எனவே, தொல்காப்பியத்தில் கூறப்படும் பலபொருள்களுள் ஒன்றாகவே

Koviloor Digital Library

அகம் அமைந்துள்ளது. இப்பொருளதிகாரப் பகுதிகள் தனித்தும் சேர்ந்தும் தனித்தனி இலக்கண நூல்களாய்ப் பிற்காலத்தே வடிவெடுத்தன. அவ்வாறு வடிவெடுத்த அகவிலக்கண நூல்களுள் முன்னோடியாய் விளங்குவது இறையனார் அகப்பொருளே. அதனை அடுத்துத் தோன்றியது நம்பியகப் பொருள். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் காமப் பகுதிகளே மிகுதியாகலின் அவை மட்டும் ஒருங்கு சேர்ந்து தனி நூலாய் அமையும் சிறப்புப் பெற்றதில் வியப்பேது மின்று.

இயலமைப்பு

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கியல்களும் அகத்தை முழுமையாய்க் கூறுவன. மரபியல் தவிர்ந்து எஞ்சிய நான்கு இயல்களும்கூட ஆங்காங்கே அகப்பொருட் செய்திகள் விரவ அமைந்துள்ளன. தொல்காப்பியர் இவ்வாறு விரித்துக் கூறிய அகப் பொருட் செய்திகளை இறையனார் அகப்பொருள் களவியல், கற்பியல் என்ற இரண்டியல்களில் அமைத்துக் கொண்டது. இதற்குக் களவு, கற்பு எனக் கைகோள்கள் இரண்டெனப் படுதலும், சங்கத்தார் பாடல்கள் இது களவு, இது கற்பு எனப் பகுத்துணர்தற்கு ஏதுவாயமைந்தமையும் காரணமாகலாம். தொல்காப்பியர் பொருளியலில் விரித்துக் கூறிய அறத்தொடு நிலையையும் கற்பியல் தொடக்கத்தில் காணப்படும் வரைவுச் செய்தியினையும் இறையனார் களவியலுள் மொழிந்தார். உடன்போக்குப் பற்றி இறையனார் அகப்பொருள் எதுவும் கூறவில்லை. "வெளிப்பட்ட பின்றையும் உரிய கிளவி" என்ற நூற்பாவில்[7] வரும் உம்மையை விதந்தோதி இனி உம்மையால் உடன்போக்கும் உரித்தாமாறு என்று தொடங்கி உரையாசிரியர் நக்கீரரே அதனை விரித்துரைக்கிறார். நாற்கவிராஜ நம்பி அறத்தொடு நிலையையும் உடன்போக்கையும் வரைவையும் களவியலிலோ கற்பியலிலோ கூறாது, தனியே வரைவியல் என்ற ஒன்றை அமைத்து அதனுள் மொழிகிறார்.

அறத்தொடு நிலை வெளிப்படை எனப்படுமாகலின்[8] அது களவாகாது. உடன்போக்கும் வெளிப்படையாம்[9] என்பது நக்கீரர் கருத்து. வரைவும் அத்தகையதே. எனவே வெளிப்படையைக் களவு எனல் தகாது என்றும் கற்பொழுக்கத்திற்கு முற்பட்டதாகலான் கற்பும் ஆகாது என்றும் கருதியே வரைவியல் என்ற ஒன்றை, நம்பி, புதிதாக அமைத்தனராதல் வேண்டும். எனினும் களவு வெளிப்படுதல்[10] களவோடொக்கும் என்று கொண்டு அவற்றைக் களவியலுள் அடக்குதலும், கற்பின் தோற்றுவாய் வரைவாகலான், அதனைக் கற்பியலுள் அடக்குதலும் ஏற்புடையவேயாம். அகத்திணையியல், களவியல்,

Koviloor Digital Library

வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்ட நம்பியகப் பொருளில் அகத்திணையியல் அகப்பொருட்கு முன்னுரை போலவும், ஒழிபியல் முடிவுரை போலவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நூற்பா அமைவு

தொல்காப்பியத்துள் அகப்பொருள் நுதலிய நூற்பாக்களின் தொகை எல்லாவியல்களிலும் சேர்த்து 260 (அகம், 58, புறம் 9, களவு 51, கற்பு 53, பொருள், 48, மெய்ப்பாடு 13, உவமம் 8, செய்யுள் 20). இறையனார் அகப்பொருள் நூற்பாக்கள் 60, நம்பியகப் பொருளின் நூற்பாத் தொகை 252. இவ்வெண் ணிக்கைகளை நோக்கின் அகப்பொருளைத் தொல்காப்பியரே விரித்துக் கூறியவராகின்றார். தொல்காப்பிய நூற்பாக்கள் கூற்றுக்களையும் நிகழ்ச்சி களையும் மட்டுமன்றிப் புலனெறி வழக்கஞ்சான்ற கோட்பாடுகளையும் மெய்ப்பாடு களையும் மிகுத்துக் கூறும். இறையனார் அகப்பொருள் நிகழ்வுகட்கும், நம்பி கூற்றுக்கட்கும் சிறப்பிடம் தந்தனர். எனவே இவர்கள் மூவேறு நிலையில் அகப் பொருளை நோக்கினர் எனலாம்.

புலனெறி வழக்கம்

புறப்பொருள் உலகியல்பானன்றி வாராது[11]

அகப்பொருள் உலகியல்போடொத்தும் நாடக வழக்கேற்றும் நடக்கும். இவ்விரு வழக்குகளும் சான்ற புலனெறி வழக்கம் அகப்பொருட்கேயுரியதாகலின், அது பற்றி அகத்திணையியலுள் மொழிந்தார், தொல்காப்பியர்.[12] இறையனார் அகப்பொருளுரை, அகப்பொருளை இல்லது இனியது, நல்லதென்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கம் என்றும், உலக வழக்கத்தினோடு அஃது இயையாது என்றும்[13] குறிப்பிடும். நம்பியகப் பொருள், புனைந்துரை உலகியல் எனும் திறம் இரண்டிலும் அகப்பொருள் மொழியப்படும் என்று கூறும்.[14] நாடக வழக்கினைப் புனைந்துரை என்று நம்பி கூறலான் இயற்கை யிறந்த புனைவுகள் இடம் பெறும் எனக் கொள்ளலாகாது. ஈண்டு இப்புலனெறி வழக்கத்தினைத் திணைப் பொருட் பகுப்புக்கள் என்றும், அகப்பொருள் மரபுகள் என்றும், இயல்புகளும் பண்புகளும் என்றும் மூப்பிரிவுகளாகப் பிரித்தாய்தல் நலம்.

திணைப் பொருட் பகுப்புகள்

அகமும் புறமும்

பிற்படக் கிளக்கும் புறத்திணையை இயைபு படுக்கும் முகத்தான், முற்படக் கிளந்த அகத்திணை[15] எனத் தொல்காப்பியர் கூறுமாறு கூறுதலோ, வெட்சி

Koviloor Digital Library

குறிஞ்சியது புறன், வஞ்சி முல்லையது புறன், உழிஞை மருதத்துப் புறன், தும்பை நெய்தற் புறன், வாகை பாலைப் புறன், காஞ்சி பெருந்திணைப் புறன், பாடாண் கைக்கிளைப் புறன் என அகத்திணை ஒன்றையும் புறத்திணை ஒன்றையும் இயைத்துக் கூறுதலோ[16] பிற அகப்பொருள் நூற்களிலும் புறப்பொருள் வெண்பா மாலையிலும் இடம் பெறவில்லை.

கைக்கிளை

அகத்திணை ஏழனுள் முதலாவதாகிய கைக்கிளையும் ஈற்றதாகிய பெருந்திணையும் பற்றி[17] இறையனார் அகப்பொருள் கூறவில்லை. உரையாசிரியர் நக்கீரரும் சிலவே எடுத்து மொழிந்தார்.[18] தொல்காப்பியர் காமஞ்சாலா இளமையோள் வயின் ஏற்படும் காமம், கைக்கிளையாம் என்றும் கூற[19] உரையாசிரியர் எண்வகை மணத்துள்ளும் அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன கைக்கிளையுள் அடங்கும் என்றும்[20] கூறுவார். மற்றும் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் காட்சியும், ஐயமும், தெளிதலும். தேறலும் கைக்கிளைக்குரித் தென்பார்[21] இளம்பூரணர்.

கைக்கிளையை இரண்டாக்கி, 'காமஞ்சாலா இளமையோள் வயின் நிகழ்வது புல்லித்தோன்றும் கைக்கிளை' என்றும் குறிப்பார்.[22] இவற்றுள் முன்னதை அகப் புறக் கைக்கிளை என்று கூறும் நம்பியகப் பொருள்.[23] பின்னதை அடையின்றிக் 'கைக்கிளை' என்றும்,[24] கைக்கிளையுடையதொரு தலைக் காமம், என்று கைக்கிளைக்கு எளிய விளக்கம் தரும்.[25] நம்பி கைக்கிளைக்குரிய தலைமக்கள் இன்னின்னார் என்றும் விரித்துரைப்பார்.[26] கைக்கிளை கூற்றினும் குறிப்பினும் நிகழ்வதன்றி மெய்ப்புணர்வு இல்லாதது என்றே அக இலக்கணங்களும் புறப்பொருள் வெண்பாமாலையும் கொள்ளும். தொல்காப்பியரும், நம்பியும், கைக்கிளையை ஆடவர்க்கே உரித்தாக்கி மொழியப்,[27] புறப்பொருள் வெண்பா மாலையாசிரியர் ஐயனாரிதனார் கைக்கிளைப் படலத்தை ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என்று பகுத்து விளக்குவார்.

பெருந்திணை

ஏறியமடற்றிறம், இளமைதீர்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல் என்ற நான்கையும் பெருந்திணைக் குறிப்பு என்பார் தொல்காப்பியர்.[28] பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்ற நான்கும் இதற்குரியதென உரையாசிரியர் விளக்கம் தருவார்.[29] இப்பெருந்திணைக் கூற்றுக்கள் பெண்பாற்கும் உரியன என்பது இளம்பூரணர் கருத்து.[30] அவர் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் வேறுபாடு கூறத் தொடங்கிக் கைக்கிளை

Koviloor Digital Library

புணராது நிகழும், பெருந்திணை புணர்ந்த பின் நிகழும் என்றும்[31] கைக்கிளை இன்பம் பயப்ப வரும் பெருந்திணை துன்பம் பயப்ப வரும் என்றும்[32] உரைப்பார். பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் என நவிலும் நாற்கவிராச நம்பி,[33] அப்பெருந்திணையை அகப்பொருட் பெருந்திணை, அகப்புறப் பெருந்திணை என இரண்டு கூற்றதாக்கி மொழிவார்.[34] இவ்விரண்டு பிரிவுகளுமே இயற்பெயர் பெற்று வாரா என்பது அவர் கருத்து. ஐயனாரிதனார் பெருந்திணைப் படலத்துள் பெண்பாற் கூற்று இருபாற் பெருந்திணை எனப் பெருந்திணையை இரண்டாகப் பகுப்பார். இந்நூலுள் பெண்பாற் பெருந்திணையே மிகுதியாய் இடம் பெறுகிறது. தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணைகளைப் பெண்ணிற்குக் கோடல் வேண்டும் என நூற்பாக்களில் யாண்டும் மொழிந்திலர். அவ்வாறு இலக்கியம் அமைத்தல் நல்லது, இனியது எனப் படாததால், புலனெறி வழக்கத்திற்கு மாறாகுமோ என அவர் கருதினார் எனக் கொள்ள வேண்டும். நம்பியகப் பொருள் கைக்கிளைக்கண் இந்நெறியைப் பின்பற்றுமாயினும், அகன்றுழிக் கலங்கல், பூப்பியலுரைத்தல் போன்ற தலைவிக்குரிய செய்திகளைப் பெருந்திணைப் பகுதிகளாக மொழிந்தார்.[35] புறப்பொருள் வெண்பாமாலையாரோ, புறப் பொருளில் அகப்பொருள் மொழிந்ததோடு, கைக்கிளையையும் பெருந் திணையையும் இருபாற்கும் உரியதாக்கிப் புலனெறி வழக்கத்தோடு மாறுபட்டவராகக் காணப் படுகிறார்.[36] ஐயனாரிதனார் காலத்திற்கு முன்பே பெண்பாற் கைக்கிளையும் பெண்பாற் பெருந்திணையும் இலக்கியங்களில் இடம் பெற்றுவிட்டன. முத்தொள்ளாயிரத்திலும் பக்தி இலக்கியங்களிலும் பெண்பாற் கைக்கிளை, பெருந்திணையாகிய மடலேறுதல் முறையே இடம் பெற்று விட்டமையால் இவர் மாறுபட இலக்கணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது என்று கொள்ளலாம்.

அன்பிணைந்திணை

குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம் என்பனவற்றை நடுவண் ஐந்திணை, அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்று தொல்காப்பியரும்[37] ஐந்திணை என்று இறையனாரும்[38] அன்புடைக் காமம் அளவில் இன்பத்தைந் திணை என்று நம்பியாரும்[39] குறிப்பர். தொல்காப்பியரும், நம்பியும் ஐந்திணைப் பெயர்களை நவில, இறையனார் 'ஐந்திணை' என்று மட்டுமே கூறுகின்றார். இது சுருக்க நூலாதலின் இவ்வாறு உரைத்தார் என்று உரையாசிரியர் இதனை விளக்குவார்.[40] பாலைத் திணையைத் தொல்காப்பியர் 'நடுவு நிலைத்திணை' என்று அகத்திணையிய லிலும் 'பாலை தானே வாகையது புறனே'[41]... என்று புறத்திணையியலிலும் கூறியுள்ளார்.

Koviloor Digital Library

முப்பொருட்கள்

உலகத்துப் பொருட்களெல்லாம் முதல், கரு, உரி எனும் மூன்றனுள் அடங்கும். அம்முப்பொருளும் ஒவ்வொரு திணைக் கண்ணும் நிற்றலை அகவிலக்கணங்கள் விரித்துரைப்பது வழக்கம். இறையனாரகப் பொருள் இக்கூற்றிற்கு விதி விலக்காயுள்ளது. அதன் உரையாசிரியரே முதல், கரு, உரிப்பொருள்களை விரித்துரைக்கிறாரன்றி நூலுள் அவை பற்றி யாதொரு குறிப்புமில்லை. குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் ஆகிய திணைகட்கு நிலம் கூறிய தொல்காப்பியர், நடுவுநிலைத் திணைக்கு நிலம் கூறவில்லை.[42] எனினும், சுரமென மொழிதலும் வரைநிலையின்றே[43] என்ற நூற்பாவில், சுரம் என்றொரு நிலன் உண்டு என்பதனைத் தொல்காப்பியரும் ஏற்றுக் கொள்கின்றார். இதனையுட் கொண்டே பின்வந்த நம்பியகப் பொருள், பாலைக்கு நிலன், சுரனும் சுரன் சார்ந்த இடமும் என்று மொழிந்தனராதல் வேண்டும்[44] தொல்காப்பியர் உடன்போக்குத் தலைவன் 'தான் போம்வழி சுரன்' என்றுண்டு என்கின்றார். எல்லாப் பாலைத் திணையமைவுகட்கும் சுரனைப் பொதுமையாக்கி இலக்கணம் கூறியமை இறையனாரகப் பொருளுரையையும் நம்பியகப் பொருளையுமே சாரும். சங்க இலக்கிய மரபு பற்றியே அவர் அவ்வாறு கூறினர் எனல் வேண்டும். முதல் பொருளின் இரண்டாம் கூறாகிய பொழுது பற்றி அகப்பொருள் இலக்கணர் அனைவரும் ஒப்ப மொழிந்தனர்.

தொல்காப்பியர் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழின் பகுதி என்பவற்றைக் கருப்பொருள் என்பார்.[45] திணை மயக்கம் கூறுழி, அவர் பூவைக் குறிப்பிடுதலால் [46] அவர் கூறும் கருப்பொருள்களின் தொகை ஒன்பது. நம்பியகப் பொருள் உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஊர், நீர், யாழ் என்பவற்றைச் சேர்த்துப் பதினான்கு கருப்பொருட்களைச் சுட்டும்.[47] நக்கீரரும் இவ்வாறே மொழிவர்.[48] இவர்கள் கூறுவனவற்றுள் உயர்ந்தோரும் தாழ்ந்தோருமாகிய மக்களைக் கருப்பொருள் என்னாது, திணை நிலைப் பெயர்கள் எனக் குறித்தார், தொல்காப்பியர்.[49] யாழின் பகுதியாகிய பண் கூறிய பின், யாழ் என்று ஒன்று தேவையின்றாகலான், ஊரும் நீருமே நக்கீரராலும் நம்பியாலும் புதிதாகச் சேர்க்கப்பட்டவை யாகின்றன. தொல்காப்பியர் முதற் கருப்பொருட்களாகிய தெய்வத்தினை மட்டும் திணை தோறும் கூறியவர்,[50] பிற கருப்பொருட்களை அவ்வாறு கூறவில்லை. ஆனால் நக்கீரரும் நம்பியும் எல்லாத் திணை கட்குமுள்ள இன்றியமையாக் கருப் பொருட்களைத் தொகுத்துரைத்துள்ளனர்.[51] நடுவுநிலைத் திணைக்கு நிலப் கூறாததால், தொல்காப்பியர் அதற்குக் கருப்பொருளையும் உரித்தாக்கவில்லை. எனவே அத்திணைக்கு முதற் கருப் பொருளாகிய தெய்வமும் தொல்காப்பியரால் சுட்டப்பட்டிலது. சிலப்பதிகார வேட்டுவ வரியோ, பாலைக்குத்

Koviloor Digital Library

தெய்வம் கொற்றவை எனக் கொள்ளும்.[52] இறையனாரகப் பொருளுரை, தொல்காப்பியரல்லாத பிறர் பாலைத் திணைக்குப் பகவதியையும், ஆதித்தனையும் தெய்வம் என்று வேண்டுவர்[53] என்னும் இம்மரபையெல்லாம் நோக்கிய நாற்கவிராச நம்பி பாலைத் தெய்வம் 'கன்னி' (கொற்றவை) என்றார்.[54] உரிப்பொருட் செய்திகளை எல்லோரும் ஒப்ப மொழிந்தனர்.

திணை மயக்கம்

தொல்காப்பியர் நிலனாகிய முதற்பொருளும், உரிப்பொருளும் மயங்கா என்றார்.[55] எனவே, பொழுதாகிய முதற்பொருளும் கருப்பொருள்களும் மயங்கு வனவாயின. கருப்பொருள்களுள் பூவும், புள்ளும் அந்நிலத்திற்குரியனவாயினும் வந்த நிலத்தின் கருப்பொருள்களாகவே கொள்ளப்படும். இவ்வாறு வருவன திணை மயக்கம் அன்று என்பார் இளம்பூரணரும். இறையனாரகப் பொரு ளுரைக்கும் இதுவே கருத்து.[56] நம்பியகப் பொருளோ முப்பொருளும் மயங்கும் என்று கூறும்.[57]

அகப்பொருள் மரபுகள்

புலனெறி வழக்கத்தில் மரபு பெரிதும் பண்டு போற்றப்பட்டது.

மரபு நிலை திரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவும் என்ப (அகத்.48)

என்பது தொல்காப்பியம். எனினும் காலப் போக்கில் ஏற்பட்ட மரபு மீறல்கள் பல. அம்மீறல்களை அவ்வக்கால இலக்கணங்கள் சுட்டின.

இயற்பெயர்

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்

எனும் தொல்காப்பிய நூற்பா[58] அன்பின் ஐந்திணைக்கண் கிளவித் தலைவன், தலைவி ஆகியோரின் இயற்பெயர் குறிக்கப்படா மரபினைக் கூறிற்று. இந்நூற்பா ஐந்திணை பற்றி மட்டுமே கூறலான், 'கைக்கிளையும் பெருந்திணையும்' சுட்டி ஒருவர் பெயர் கொண்டும் கொள்ளாதும் வரும் என்பார் நச்சினார்க்கினியர். அடுத்த நூற்பா,

புறத்திணை மருங்கின் பொருந்தி னல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே. (அகத்.56)

Koviloor Digital Library

என்பது. அகத்திணையாக வருங்கால் பிறவாய கைக்கிளையும், பெருந்திணையும் இயற்பெயரேற்கா என்பதும், அவை புறத்திணையாய் வருங்கால் இயற்பெயர் ஏற்று வரும் என்பதும் இதனாற் போந்த பொருள். புறத்தில் வரும் கைக்கிளை பெருந்திணைகளையே இளம்பூரணர், பாடாண் பாட்டுக் காமம் என்றார்.[59] இவற்றால் அகப்பொருள் ஒருவரைச் சாராது பொதுப்பட வரும் என்றாகிறது. இறையனார் அகப்பொருள் இயற்பெயர்ப் பேறு பற்றி யாதும் மொழிந்திலது. நம்பியகப் பொருள் கிளவித் தலைவற்கிசையார் என்றும்,[60] அகப்புறப் பெருந்திணைக்கண் இயற்பெயர் பொருந்தாது என்றும் உரைக்கும். ஏனைத் தலைவி முதலியோர்க்கும் பெருந்திணையல்லாத பிறதிணைக் கண்ணும் இயற்பெயர் கூறலாமா என்பது பற்றி யாதொரு குறிப்பும் நம்பியகப் பொருளில் இல்லை.

தலைவர் இருவர்

பாட்டுடைத் தலைவனும், கிளவித் தலைவனும் எனத் தலைவர் இருவர் என்ற குறிப்பு தொல்காப்பியத்தில் வெளிப்படையாக இல்லை. இறையனார் அகப்பொருளில் இப்பிரிப்பு இன்றெனினும் நக்கீரர்[61] இவ்விரு தலைவர்களையும் குறிப்பிட்டு உரையெழுதியுள்ளார். ஈண்டு இறையனார் அகப்பொருட் கருத்தையே நம்பியகப்பொருள் வழி மொழிகிறது.[62]

மிக்கோன் தலைவன்

தலைவனும் தலைவியும் ஒத்தனராதலேயன்றித் தலைவியினும் தலைவன் மிக்கோனாதலையும் தொல்காப்பியர் உடன்படுவார்.[63] நம்பிக்கும் இஃது உடன்பாடு.[64] இறையனாரகப் பொருளுரை திரிபிலர் ஒருவரோடொருவர் என்றும், வேற்றுமையின்மை முடிந்தது என்றும்[65] கூறித் தலைவனும் தலைவியும் யாண்டும் ஒத்தனராகவே கொள்ளும். தலைவன் மிக்கோனாதல் பற்றி ஆண்டுக் குறிப்பில்லை.

கலமும் பாசறையும்

தலைமகள் தலைமகனோடு கலத்தோடு செல்லலையும் பாசறைக்கண் புணர்தலையும்[66] தொல்காப்பியர் உடன்படார். இறையனாரும் நக்கீரரும் இவை பற்றி யாதும் மொழிந்திலர். ஆடவருள் அந்தணர் கலத்தில் செல்லார் என்றும், ஏனைய மூவரும் தத்தம் குலமகளிரோடு கலத்திலும் பாசறையிலும் சேறலில்லை என்றும் நம்பியகப் பொருள் கூறும்.[67]

Koviloor Digital Library

களவும் கந்தருவ வழக்கமும்

களவினை "யாழ்த் துணைமை யோரியல்பு" எனத் தொல்காப்பியரும்[68] கந்தருவ வழக்கம் என இறையனாரும்[69] யாழோர் கூட்டத்தியல்பினது என்று நம்பியும்[70] உரைப்பர். தமிழ்க் களவையும், கந்தருவ வழக்கத்தையும் ஒப்பிடும் நச்சினார்க்கினியர், 'களவு கற்பின்றி அமையாது; கந்தருவ வழக்கம் கற்பின்றியும் அமையும்' என வேறுபாட்டினை விளக்கியுரைப்பார்.[71]

பெண் மடலூர்தல்

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான். (அகத்.38)

என்பதில் தொல்காப்பியர் அகத்திணையாயினும் புறத்திணையாயினும் மகளிர் மடலேறுவதாகக் கூறல் நெறியன்று என்கின்றார். "கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப் பெண்" என்றார் வள்ளுவரும்.[72] இறையனாரோ, நம்பியோ இம்மரபிற் கெனத் தனி விதியமைக்கவில்லை. ஆயின் திருமங்கையாழ்வார் பாடல் களுள் பெண் மடலேறுதலைப் பெரிய திருமடலும், சிறிய திருமடலும் தெரிவிக்கும். புறப்பொருள் வெண்பா மாலை ஆண், பெண் இருபாலார்க்கும் மடலூர்தலைப் பொதுமைப்படுத்தும்.[73] இவை பிற்காலத்து எழுந்த புதுமரபுகள் ஆயின.

தோழி

தலைவன் தலைவி ஆகிய இருவரது உள்ள அன்பையும் உணர்ந்த பின்பே பாங்கியர்க் கூட்டம் உண்டாம் என்றும்[74] தலைவி அறத்தொடு நின்றாலன்றித் தோழி தானே அறத்தொடு நில்லாள் என்றும்,[75] தோழி செவிலியின் மகள் என்றும்[76] அருமறை கிளத்தலின் தாயெனப்படுவாள் என்றும்[77] தொல்காப்பியர் தோழி பற்றிக் குறிப்பிடும் கருத்துக்கள் பிற இலக்கணர்க்கும் உடன்பாடு.

கூட்டக் கூடல்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தவர்கள் இடந்தலைப்பாட்டானும், பாங்கற் கூட்டத்தானும் தாமே கூடுவரல்லது தோழியோ பிறரோ தம் முயற்சியால் இவரைக் கூட்டுதல் என்பது பொருந்தாது. இதனைக் 'கூட்டக் கூடல் எவ்விடத்தாலும் களவிற்கில்லை'[78] என்று இறையனார் அகப்பொருள் கூறும். பிறரும் இதனை உடன்படினும் வெளிப்படையாக இவ்வாறு கிளர்ந்திலர்.

கற்புச் சிறப்பு

களவு வழியாகக் கற்பு அமைதலே கற்பு என்பார், 'கற்பெனப் படுவது களவின் வழித்தே' என்பர் இறையனார் (15). தொல்காப்பியரோ களவுவழி வந்த

Koviloor Digital Library

கற்பிற்கும், களவு வழி வாராக் கற்பிற்கும் ஏற்றத்தாழ்வு எதுவும் கற்பித்திலர். நம்பியும் இவ்வகையில் தொல்காப்பியரை ஒப்பர்.

களவினுள் தவிர்ச்சி

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியும் காலத்தின் உயர்வெல்லை இரு திங்கள் என்பார் நம்பி.[79] இறையனாரும், 'களவினுட்டவிர்ச்சி வரைவி னீட்டம் திங்களிரண்டின் அகமென மொழிப'[80] என்பார். தொல்காப்பியர் இவ்வரையறை செய்திலர்.

புணர்ச்சிகள்

'குறிப்பே குறித்தது கொள்ளுமாயின் புணர்ச்சி நிகழும்'[81] என்று கூறினாரேயன்றித் தொல்காப்பியர் புணர்ச்சியை உள்ளுறு புணர்ச்சி மெய்யுறு புணர்ச்சியெனப் பகுத்துக் கூறினாரல்லர். நக்கீரரும் நம்பியும் இவ்விரு புணர்ச்சிகளையும் குறிப்பிட்டுள்ளனர்.[82]

கிளத்தல் மரபு

பசலை உண்டது என்றாற்போன்று 'உண்டற்குரிய அல்லாப் பொருளை உண்டன, போலக் கூறலும் மரபே' என்பர் தொல்காப்பியர் (பொருள்.18). இது பற்றிப் பிறர் ஒன்றும் கூறவில்லை. மற்றும் உயர் மொழிக் கிளவி தலைவற்கும் தலைவிக்கும் உரியது என்றும், ஐயக்கிளவி தலைமகனுக்கு மட்டும் உரியது என்றும்[83] உரனொடு கிளக்கும் தோழிக்கு உயர் மொழிக் கிளவியும் உரித்து என்றும்[84] வாயில்கள் வெளிப்படக் கிளத்தற்குரியர் என்றும்[85] தொல்காப்பியர் குறிப்பிடும் மரபுகளை இறையனாரோ நம்பியோ கிளக்கவில்லை. ஆனால் களவிய லுரைகாரர் மட்டும் ஐயக்கிளவி தலைவிக்கும் உரித்து என்பார். அவர், "இவளும் அவனை ஐயப்படும். "கடம்பமர் கடவுள் கொல்லோ, இயக்கன் கொல்லோ! அன்றி மக்களுள்ளான் கொல்லோ என்று இங்ஙனம் ஐயப்படும்" என்பார்.[86] இவ்வுரைக் கருத்தோடு தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் தரும், "தலைவி மாட்டு ஐயக்கிளவி இல்லென்றவாறாம். அதனாற் குற்றமென்னை யெனின் தெய்வ மென்று ஐயுறுங்கால் அதனை முன்பு கண்டறி வாளாதல் வேண்டும். காணாமை யின் ஐயமிலள் என்க" என்ற இளம்பூரணர் உரை ஒப்பிடற்பாலது.[87] ஈண்டுக் கூறிய வற்றால், காட்சி, ஐயம், தெளிவு என்னும் களவுக் கைக்கிளைப் பகுதிகள் ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலார்க்கும் உரியன என்பது நக்கீரர் கருத்தால் அறியலாம்.

துணிதலும் குறிகளும்

இயற்கைப் புணர்ச்சிக்கண் ஐயம் நீங்கித் துணிதற்கு வண்டு முதலியன ஏதுவாய் அமையும் பாங்கும்,[88] பகற்குறி, இரவுக்குறி பற்றிய செய்திகளும் எல்லா இலக்கணராலும் வேற்றுமையின்றி மொழியப்பட்டன.

Koviloor Digital Library

அகப் பாட்டுறுப்புக்கள்

தொல்காப்பியர் செய்யுளியல் முதல் நூற்பாவில்,

> திணையே கைகோள் பொருள்வகை எனாஅ
> கேட்போர் களனே காலவகை எனாஅ
> பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ
> முன்னம் பொருளே துறைவகை எனாஅ

என்று குறிப்பிடும் செய்யுளுறுப்புக்களை நம்பியகப் பொருள் அகப்பாட் டுறுப்புக்கள் எனக் கொள்ளும்.[89] இவற்றுள் முன்னம், துறை ஆகியவற்றை நீக்கி எஞ்சிய பத்தினையும் அகத்திணையும் உரைத்தல் ஆறு என மொழியும் இறையனாரகப் பொருள் (56).

உள்ளுறையும் இறைச்சியும்

தொல்காப்பியர் உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என உள்ளுறை ஐந்து வகைப்படும் என்றும் அவை அகப்பொருளில் வரும் என்றும் கொள்வார்.[90] தெய்வம் ஒழிந்தன உள்ளுறைக்கு நிலமெனக் கூறிப் பின்னர் அவ்வுள்ளுறையில் இலக்கண வரையறையையும் மொழிகின்றார் அவர்.[91] மற்றும் 'இறைச்சி உரிப்புறத்தது' எனவும்[92] அவ்விறைச்சியிற் பிறக்கும் பொருளுமுள எனவும்[93] 'அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும் வன்புறையாகும்' எனவும்[94] அவர் இறைச்சி பற்றி மொழிகின்றார். உள்ளுறை ஐந்தனுள் உள்ளுறையுவமத்தை மட்டுமே விளக்கும் நம்பியகப் பொருள், அவ்வுள்ளுறையுவமம் உய்த்துணர் வகையது என்றும், புள்ளொடும், விலங்கொடும் பிறவொடும் புலப்படும் என்றும் கூறும்.[95] மற்றும் கருப்பொருட் பிறக்கும் இறைச்சிப் பொருளே என இறைச்சி பற்றியும் உரைக்கும்.[96] இறையனாரும், நக்கீரரும் இவை பற்றி மொழிந்திலர்.

இயல்புகளும் பண்புகளும்

ஆண், பெண் இயல்புகளையும் பொருளியல்புகளையும் தொல்காப்பியர் பேசுமாறு பிற இலக்கணர் விரிவுபடச் சொல்லவில்லை.

ஆணியல்பு

பெருமையும் உரனும் ஆடவர்க்குரியன என்றார் தொல்காப்பியர்.[97] நம்பியகப் பொருளும் இதனை வழி மொழிகின்றது.[98] ஆனால் இறையனாரகப் பொருளுரை தலைமகனுக்குரிய பண்புகள் அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்றும்,[99] மேலும் புகழும் கொடுமையும் தலைமகனுக்கு உரியன என்று இறையனார் கூறும் செய்தியைப் பிற இலக்கணர்கள் குறிப்பிடவில்லை.[100]

Koviloor Digital Library

பெண்ணியல்பு

அச்சம், நாண், மடம் எனும் மூன்றுமே பெண்பாற் பண்புகள் எனத் தொல்காப்பியரும் நம்பியகப் பொருளும் மொழிய,[101] இறையனாரகப் பொருளுரை இவற்றோடு பயிர்ப்பு என்ற ஒன்றையும் சேர்த்து நான்காகக் கூறும்.[102] செறிவு, நிறைவு, செம்மை, செப்பு, அறிவு, அருமை என்று தொல்காப்பியர் மேலும் குறிப்பிடும் பெண்ணியல்புகளை நம்பியோ, நக்கீரரோ குறிப்பிடவில்லை.[103]

மேற்குறிப்பிட்டவையன்றித் தொல்காப்பியரால் மட்டும் குறிக்கப்படும் பிற பெண்ணியல்புகள் வருமாறு.

(அ) களவுத் தலைவி

களவுத் தலைவியின் வேட்கை, குறிப்பாலும் இடத்தாலும் தலைவனால் உணரப்படும்.[104] சொல்லெதிர் மொழிதல் அவட்கு இயலாதது.[105] தன்னுறு வேட்கையைத் தலைவனிடம் எவ்விடத்தும் மொழியாள்.[106] தலைவனிருப்பிடம் செல்வதாகத் தலைவி கற்பனை செய்யலாம்.[107] ஆனால் அவனிருப்பிடம் நாடிச் செல்லும் முறைமை அவளுக்கு இல்லை.[108] எனினும் கற்பினைக் காப்பாற்ற வேண்டிய சூழல் ஏற்படின் காமக் கிழவன் உள்வழிப்படலும் தாவில் நன்மொழி கிளத்தலும் தலைவிக்கும் கூடும்.[109] ஏனெனில் பெண்ணிற்கு உயிரினும் நாணும், நாணினும் கற்பும் சிறந்தவை.[110] தலைவனுடைய எல்லையை மீறுதல் தலைவிக்கு அறமன்றாம்.[111] காமம் இடையீடு பட்டுழித் தலைவியும், உடன்போக்கிற்குக் காலம் களவு காண்பதுண்டு.[112]

(ஆ) கற்புத் தலைவி

கற்பு, காமம், நல்லொழுக்கம், பொறை, நிறை, விருந்து புறந்தருதல், சுற்றம் ஓம்புதல் முதலியன கற்புத் தலைவியின் மாண்புகள் ஆம்.[113] கற்புத்தலைவிக்கு அலரினால் காமம் மிகும்.[114] வருத்த மிகுதியைக் குறித்த வழி, கற்புத் தலைவிக்கும், தோழிக்கும் இரக்கம் ஏற்படலுண்டு.[115] ஊடற்காலத்து மனைவி உயர்வாய்த் தோன்றற்கும் கணவன் பணிந்து நிற்றற்கும் உரியர்.[116]

(இ) தோழி

தோழி உரனுடையவளாயும், உயர் மொழிக்கிளவியினளாயும் விளங்குபவள்.[117]

பிறவிலக்கணரால் சொல்லப்படாதவையும் இறையனாரால் சொல்லப்பட்டனவுமாகிய அகமாந்தர் சிலரியல்புகள் வருமாறு.

Koviloor Digital Library

அ. தலைவியிடத்துக் கொடுமையில்லை.[118]

ஆ. தலைவன் முன் தலைவி ஊடற்காலத்தும் தன்னைப் புகழாள்.[119] எனினும் நாடும், ஊரும் இல்லும் சுட்டிச் சிலகால் புலவிக் காலத்தில் தற்புகழ்தல் உண்டு.

இ. வாயில்கள் வன்புறை குறித்தவை.[120]

நம்பி இவற்றைப் பரக்க மொழிந்திலர்.

பொருட் பண்புகள்

பொருட்கள் உயிருள்ளனவும் உயிரில்லனவுமென இரு பிரிவின. உயிருள்ள அனைத்துப் பொருட்களுக்கும் பொதுவான இயல்பாக இன்ப நாட்டம் உள்ளது என்பார் தொல்காப்பியர்.[121] உயிரில்லாப் பொருட்களுள் புலன்கட்குப் புலனாகும் முதலும் கருவுமாகிய பருப்பொருட்கள் மட்டுமன்றிக் காட்டலாகாப் பொருட்களாகிய நுண் பொருட்களும் உள. ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, ஏர், எழில், சாயல், நாண், மடன், நோய், வேட்கை, நுகர்வு என்பவை நெஞ்சினால் அறியப்படுவதன்றிக் காட்டலாகாப் பொருள்களாம் என்பார் தொல்காப்பியர்.[122] உலகத்துப் பொருள்கள் உண்மை மாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப் படாதனவும் உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவனவுமென இருவகைய என்றும், காமம், வெகுளி, மயக்கம், இன்பம், துன்பம் முதலியன முதல் வகையன என்றும் தொல்காப்பிய விதியை எடுத்துக்காட்டி நக்கீரர் கூறுவார்.[123] இவை பற்றி நம்பியகப் பொருள் யாதும் கூறவில்லை.

மெய்ப்பாடு

அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகளாகிய நகை, அழுகை முதலியவற்றையே நம்பியும், இறையனாரும் மெய்ப்பாடு என்றனர்.[124] தொல்காப்பியர் இவையன்றி அகத்திற்கும் புறத்திற்கும் உரிய வேறு முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளையும் உடைமையை முதலாகக் கொண்டு கூறுவார்.[125] மேலும், அவர், அகப்பொருள் மெய்ப்பாடுகளாக மனனழிந்தவழிப் பெறப்படுவன நாற்பத்து நான்கு என்றும், மனனழியாதவழிப் பெறப்படுவன பதினெட்டு என்றும் கூறுவார்.[126] விரிவாகத் தொல்காப்பியர் உணர்த்திய இம்மெய்ப்பாடுகளையெல்லாம் பிற்கால இலக்கணர் கூறாது விட்டனர் எனினும் இவ்வகப் பொருள் மெய்ப்பாடு களை இலக்கியங்கள் இடைக்காலம் உட்பட இன்றுகாறும் போற்றி வருகின்றன. தொல்காப்பியராலும், இலக்கியங்களாலும் உணர்த்தப் பெறும் இவ்வகப் பொருள் மெய்ப்பாடுகளைப் பின்னைய அகப்பொருள் இலக்கணர் மொழியாது விட்டமை ஒருவகையில் குறையேயாம்.

Koviloor Digital Library

காட்சி முதலாச் சாக்காடு ஈறாக வரும் பத்தவத்தைகளும் மனனழிந்தவழி ஏற்படும் அகப்பொருள் மெய்ப்பாடுகளே ஆகும். தொல்காப்பியர் இவற்றைக் களவு என்கின்றார்.[127] நாற்கவிராச நம்பி மெய்யுறு புணர்ச்சி எய்துமிடன் இவை என்கின்றார்.[128] இவை பற்றி இறையனாரோ, உரையாசிரியர் நக்கீரரோ ஏதும் கூறவில்லை.

கூற்றுக்கள்

அகமாந்தரின் கூற்றுக்களைக் கூற்று என்றும் கிளவி என்றும் தொல்காப்பியர் குறித்தார். கிளவிகளே துறை என இன்று கருதப்படினும் துறை பற்றிய இலக்கண வரையறைகள் எவையும், துறையும் கிளவியும் ஒன்று எனச் சுட்டவில்லை. துறை என்ற சொல்லே இறையனார் அகப்பொருளில் இல்லை. ஆனால் கூற்றமைவுகளை விரிவாக அனைத்திலக்கணருமே மொழிவர். இலக்கணந்தோறும் கூற்றுக்கள் மாறுபட்டு நிற்றலைக் கூற்றுநிரல் மாற்றம், கூற்றிடம் பெறாமை, குறியீடு மாறல், கூற்றுநிலைப் பகுப்பு என நான்காகப் பகுத்து விளக்கலாம்.

கூற்றுநிரல் மாற்றம்

கூற்றுக்கள் வைப்பு முறையில் தொல்காப்பியரோடு இறையனாரகப் பொருளும் நம்பியகப் பொருளும் மாறுபட்டு நிற்பன. களவிற்குரிய தலைவி கூற்று, களவிற்குரிய தலைவன் கூற்று எனக் களவியலிலும், கற்பிற்குரிய தலைவி கூற்று, கற்பிற்குரிய தலைவன் கூற்று எனக் கற்பியலிலும் ஒவ்வொரு மாந்தர்க்கும் தனித்தனியாகக் கூற்றுக்களை வகைப்படுத்தி ஒதுதல் தொல்காப்பியர் வழக்கம். இவ்வாறின்றி வரலாற்று முறையான் ஒரு கதையைப் போலக் கோவையமைப்பில் கூற்றுக்களை வரிசைப்படுத்தும் போக்கு முதற்கண் இறையனார் அகப்பொருளின் உரையாசிரியராகிய நக்கீரராலும் பின்னர் நம்பியகப் பொருள் ஆசிரியராலும் கடைப்பிடிக்கப்பட்டது. இத்தகையதோர் அமைப்பிற்குக் கபிலரின் குறிஞ்சிப் பாட்டும், சிலம்பின் கானல்வரியும், திருக்குறளின் காமத்துப்பாலும் வழிகாட்டியமைந்தன. சிறப்பாகத் திருக்குறட் காமத்துப்பாலின் அதிகார வைப்பு முறை இவ்வகையிலமைந்திருப்பது ஈண்டுக் கருதத்தக்கது. குறிஞ்சிப்பாட்டும் களவியல் துறைகள் பலவற்றைக் கதைபோலத் தொகுத்துக் கூறல் காணலாம்.

மாந்தர் வழிக்கூற்றுக்களைத் தொகுக்கும் தொல்காப்பியர் முறையையோ, கோவையமைப்பாய்க் கிளவிகளைத் தொகுக்கும் பின்னைய மரபினையோ பின்பற்றாது, வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார் ஒவ்வொரு திணைக்கும் இன்னின்ன கூற்றுக்கள் என்று தனித்தனியே பகுத்துத் தொகுத்தமையே

Koviloor Digital Library

மேற்கோளாய் மொழிகின்றார்.[129] தொல்காப்பியரும் இறையனாரும் நம்பியும் களவுக் கூற்றுக்களையும் கற்புக் கூற்றுக்களையும் தனியே பகுத்துக் கூற, வீரசோழிய உரையாசிரியரோ இவ்விரு வகைக் கைகோள்களின் கிளவிகளையும் கூட ஒருங்கே தொகுத்து மொழிவது புதுமையாயுள்ளது.

கூற்றுக்களை நிரல்படுத்துவதில் கையாளப்படும் மூன்று வகை அமைப்புக்களில், வீரசோழிய உரை கூறும் திணை வழி நிரல் அருகிய வழக்கம். கோவையமைப்பிலும் குழப்பங்கள் சில ஏற்படும். உலகில் பலரிடத்தும் நிகழும் காமப் பகுதிகளை ஒருங்கு தொகுத்துரைப்பதே அகப் பொருளாகலான் ஒரு குறிப்பிட்ட இணையாம் தலைவன் தலைவியிடை அனைத்துக் கூற்றுக்களும் நிகழ்ந்தன வாகக் கொண்டு வரலாற்று முறையால் கோவைப்படுத்துதல் ஏலாது. பகற்குறி கூறிய பின் ஒருசார் பகற்குறி எனக் கூறலும் தலைவன் தன் மனை வரைதல் கூறி உடன் போக்கிடையீடு கிளத்தலும் போன்ற பல நிலைகளில் நம்பியகப் பொருள் கோவை யமைப்பினைக் கையாள்வதில் குழம்பிக் கொள்வதை அறிகின்றோம். நக்கீரனார்க்கும் இது பொருந்தும். எனவே தனித்தனி மாந்தர் கூற்றுக்களைத் தொகுத்த தொல்காப்பியர் அமைவே பெரிதும் கோடற்குரித்து. இதனால் தனி மாந்தர் பண்பு நலன்களும் ஒரு சேரப் புலனாகும்.

களவுக் கைக்கிளைக் கிளவிகளாகிய காட்சி, ஐயம், தெளிவு, துணிவு, குறிப்புரை, குறிப்பறிதல் என்பன ஒவ்வொரு நூலிலும் ஒன்றிரண்டு குறைந்து வரினும் வரிசை முறை கோவை நிரலாகவே உள்ளது. தொல்காப்பியமும்,[130] நம்பியகப்பொருளும்,[131] இறையனார் களவியலுரையும்[132] இப்பகுதியை மட்டும் ஏனைய பகுதிகளிலும் சிறப்பாகக் கோவையமைவுபட ஒருமித்துக் கூறும்.

கூற்றிடம் பெறாமை

ஒரு நூலில் கூறப்பட்ட கிளவிகள் இன்னொரு நூலில் குறிப்பிடப் படாமையும் உண்டு. இவ்வகையில் இறையனார் அகப்பொருளுரை ஏனைய இரு இலக்கணங்களை விடக் குறைவான கிளவிகளையே கொண்டுள்ளது. எனவே இதன் மேற்கோட் செய்யுளாகிய பாண்டிக்கோவையும் ஒரு கிளவிக்கு ஒன்றும் பலவுமாய்ப் பாடல்களைப் பெற்றுக் கூற்றெண்ணிக்கையில் குறைந்து நின்றது.

களவுக் கைக்கிளையில் வரும் காட்சி, ஐயம், தெளிவு, துணிபு, குறிப்புரை, குறிப்பறிதல் என்னும் ஆறனுள் நம்பியகப் பொருள் தெளிவையும் குறிப்புரையையும், தொல்காப்பியம் தெளிவையும், இறையனாரகப் பொருளுரை குறிப்புரை, குறிப்பறிதல் ஆகியவற்றையும் தெரிவித்தில. இம்மூன்று இலக்கணங்களிலும் சேர்ந்து இயற்கைப் புணர்ச்சிக்கண் இடம் பெறும் மொத்தக் கிளவிகளின் தொகை நாற்பத்தியொன்று. இவற்றுள் நம்பியகப் பொருளில்

Koviloor Digital Library

வருபவை இருபத்தொன்பது. தொல்காப்பியத்துள் வருபவை இருபத்திரண்டு. இறையனாரகப் பொருளுரையில் வருபவை ஐந்து. இடந்தலைப்பாட்டில் மொத்தக் கிளவிகள் ஒன்பது. இவற்றுள் தந்த தெய்வம் தருமெனச் சேறல், முந்துறக் காண்டல், முயங்கல், புகழ்தல் என்ற நான்கு கிளவிகள் நம்பியகப் பொருளிலும்[133] சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல், தீராத் தேற்றம் பெற்றவழி மகிழ்தல், பிரிந்தவழிக் கலங்கல், நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைத்தல் என்ற ஐந்து கிளவிகள் தொல்காப்பியத்திலும்[134] பொழிலிடைச் சேறல், பொழில் கண்டு வைத்தல் என்ற இரு கிளவிகள் இறையனாரகப் பொருள் உரையிலும்[135] வந்துள்ளன. பாங்கற் கூட்டத்தின் மொத்தக் கிளவிகளாகிய இருபத்தாறனுள் நம்பியகப் பொருளில் இருபத்து நான்கு கிளவிகளும், தொல்காப்பியத்தில் மூன்று கிளவிகளும், இறையனாரகப் பொருளுரையில் பன்னிரண்டு கிளவிகளும் வந்தன. குற்றங்காட்டிய வாயில், குற்றங்காட்டிய வாயில் பெட்டல், பெட்ட வாயில் பெறுதல் என்ற மூன்று கூற்றுக்கள் மட்டுமே தொல்காப்பியத்தில் அமைந்துள. [136] இவற்றால் தொல்காப்பியர் பாங்கற் கூட்டத்தை மற்றக் கூட்டங்களோடு ஒப்ப மதித்திலர் என்பது பெறப்படுகிறது.

பாங்கியற் கூட்டத்தை அனைவருமே பரக்கப் பேசுவர். இதனால் பாங்கியற் கூட்டம் பெரு வழக்கிற்றாதலை உணரலாம். இறையனாரகப் பொருளுரையில் வரும் பிறை தொழுகென்றல்[137] என்ற கூற்றுப் புதிது போலத் தோற்றமளிப்பினும் தொல்காப்பியர் கூறும் பல்வேறு கவர் பொருள் நாட்டத்தாலும்[138] என்ற வாய்பாட்டுள் அஃது அடங்கும்.

கற்புப் பகுதியில் பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், கூடல் ஆகியவற்றை எல்லோரும் பெரும்பாலும் ஒரே வகையில் குறிப்பிட்டுள்ளனர். இவற்றில் மாற்றங்களும் மிகுதியாயில்லை. களவுப்பகுதிப் பாடல்கள் மாற்றங்கள் பலவற்றை, மிகுதியாகப் பெற்று விளங்கின. இறையனாரகப் பொருள் கற்புப் பகுதிக்குக் குறைவாகவே இடம் தந்தது. இந்நூல் களவு, கற்பு எனும் இரண்டையும் பேசினும் 'களவியல்' என்றே பெயர் பெற்றுள்ளது.

குறியிடு மாறல்

இலக்கணங்கள் கிளவிகட்குக் குறியீடு அமைப்பதில் மாறுபடுவதுண்டு. தொல்காப்பியரும், நம்பியும் கூறிய துணிவு, இறையனாரகப் பொருளுரையில் 'தேறல்' என்றாகிறது. தேறல் என்பது 'துணிவு' என்று அவ்வுரை அதனை விளக்குகிறது.[139] 'குறித்தது கொள்ளல்' எனத் தொல்காப்பியர் கூறுவதை நம்பியகப்பொருள் 'குறிப்பறிதல்' என்றும்.[140] 'பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்'[141] கூடுதலுறுதல்,[142] குற்றங்காட்டிய வாயில்[143] என்று தொல்காப்பியர்

Koviloor Digital Library

கூறுவனவற்றை வறிது நகை தோற்றல்[144] முயங்குதலுறுத்தல்[145] பாங்கன் கழறல்[146] என்ற துறைகளாக நம்பி கூறுவார். இவ்வாறே மேலும் சில மாறுதல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படுகின்றன.

கூற்றுநிலைப் பகுப்பு

கூற்றுக்களைத் தொகைப்படுத்தியும், வகைப்படுத்தியும் விரித்தும் கூறுவது நம்பியகப்பொருள் கையாளும் முறை. இவ்வாறு தொகை, வகை, விரியாக அகப்பொருட் கூற்றுக்களை முன்னைய இலக்கணராகிய தொல்காப்பியரோ, இறையனாரோ பகுத்தமைக்கவில்லை. தொல்காப்பியர் கிளவிகளை மிக விரிவாக மொழிந்தார். இறையனார் காமப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு. பாங்கற்கூட்டம், மதியுடம்படுதல், அறத்தொடு நிற்றல், இரவுக்குறி, பகற்குறி, அல்ல குறிப்படுதல், வரைதல் வேட்கைப் பொருள் வரைதல், களவு வெளிப்படை, அறுவகைக் கற்பிற் பிரிவுகள் என்று,[147] கிளவிகளை விரியாது அகப்பொருள் நிகழ்ச்சிகளைப் பல நூற்பாக்களில் சுட்ட, அவற்றையும் அவை போன்ற சிலவற்றையும் சேர்த்துத் தொகை என்றார் நம்பி. தொல்காப்பியத்திலுள்ள கூற்று விரிகளையும், இறையனார் கூறிய தொகைகளையும் நக்கீரர் ஆங்காங்கே பிரித்தவற்றையும் வகைப்படுத்தித் தொகை, வகை, விரியாக நாற்கவிராச நம்பி கிளவிகளை முறைப்படுத்தினார் எனலாம்.

பாடாண்பாட்டுக் காமம்

புறப்பொருட் பாடாண்திணையில் காமப் பொருளை அமைத்துப் பாடும் வழக்கம் பண்டுதொட்டு உண்டு. பாடாண் திணையில் எட்டு வகைகள் காமஞ் சான்ற இருவகைகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். அவர், அவற்றைக் காமப் பகுதி (புறத். 23) என்றும், கைக்கிளை (புறத்.29) என்றும் குறிப்பார்.

காமப்பகுதி

அகப்பாடல்களில் புறப்பொருட் செய்திகள் வருங்கால் கிளவித் தலைவனும், பாட்டுடைத் தலைவனும் என இருவர் தலைமக்களாய் வருதல் உண்டு. பாட்டுடைத் தலைவனாதற்குக் கடவுளும் ஏனோரும் (புறத்.23) உரிமையுடையர்.[148] பரிபாடற்கண், அகப்பாடலில் கடவுளரும், ஏனைக் குறுந்தொகை, நெடுந்தொகை போன்றவற்றில் அரசரும், வள்ளல்களும் பாட்டுடைத் தலைவராய் இருத்தலை இவண் சுட்டலாம். சில அகப்பாடல்களில் பாட்டுடைத் தலைவனுக்கு மாறாகக் குழவியையோ (புறத்.24) ஊரினையோ (புறத்.25) சிறப்பிப்பதும் உண்டு. 'முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்' என்பழி, அகப்பாடலில் ஊர்ச்சிறப்பு பேசப்பட்டது.[149]

Koviloor Digital Library

இம்மர புண்மை பற்றியே திருக் கோவையாருள், தில்லையும், தஞ்சைவாணன் கோவையுள் தஞ்சைவாணனும், பாண்டிக்கோவையுள் மாறனும் சிறப்பிக்கப் பட்டனர்.

இவ்வாறு அகப்பாடலில் கடவுள், ஏனோர், குழவி, ஊர் ஆகியவை சிறப்பிக் கப்படும்போது மெய்ப்பொருள் வழங்குதல் ஏற்றுக் கொண்ட வழக்கமாகும்.[150] ஈண்டு இயற்பெயர் என்னாது மெய்ப்பெயர் என்றது குழவிக்கும், ஊர்க்கும் உரிமையாக்கல் பற்றியேயாம். கிளவித் தலைவன் குறிக்கப் பெறின் அவன் இயற்பெயர் கிளக்கப் பெறான்.

இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் மேற்சுட்டப்பட்ட புறத்திணையியல் நூற்பாக்களின் (23, 24, 25,26) உரையில், கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம், கடவுள் மாட்டு கடவுட் பெண்டிர் நயந்த பக்கம் எனக் கூறவதெல்லாம் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் போன்ற பின்னைய நூல்களின் தாக்கத்தால் ஏற்பட்ட விளைவுகள் எனக் கருத இடமுண்டு.

அகப்பாடல்களில் புறப்பொருட் பாடாண் பகுதியமைவது சங்க காலத்திலிருந்து வழிவழி வரும் மரபாகும். இம்மரபினை ஒட்டியே பக்தி இலக்கியங்களுள் திருக்கோவையாரும் நம்மாழ்வார் திருவிருத்தத்தில் தலைவன் கூற்றாய் வரும் பன்னிரண்டு பாடல்களும் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாய்க் கொண்டு பாடப்பட்டன.

கைக்கிளை

இறைவனையும் அடியாரையுமே தலைவன் தலைவியராக உருவகப்படுத்தும் வழக்கத்திற்குச் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப் பாடல்களை முன்னோடியாகக் கொள்ளலாம். பண்டு ஆய்ச்சியர் கண்ணனை விழைந்தருள மதுரை நகர இடைக்குல மகளிர் நடித்துக் காட்டுகின்றனர். அவர்தம் கூற்றுக்கள் அகச்சுவைபட அமைந்து உருவக நலன் பொருந்தி யுள்ளன. ஈண்டுக் கிளவித் தலைவனும் பாட்டுடைத் தலைவனும் கண்ணனே. இயற்பெயர் சுட்டப்பட்டு இப்பாடல்கள் அமைகின்றன. முதன்முதலில் கண்ணனைப் பாடற்கு இம்முறை கையாளப்பட்டமை காரணமாகவே அக்கண்ணனைக் குறித்த ஆழ்வார்தம் காமப்பாடல்களில், ஆய்ச்சியர் கூற்றாய் வரிப்பாடல்கள் மிகுந்திருத்தலும் மேற்கூறிய கருத்திற்கு அரணாம். நாயன்மார் பாடல்களில் உருவக நிலை ஓரளவு குறைந்து காணப்படற்கும் மேற்குறிப்பிட்டதே காரணம் போலும்.

புறப்பொருள் வெண்பாமாலை காமப்பகுதிகளை விரித்துக் கூறற்கு நாலாயிர திவ்வியப் பிரபந்தம், நாயன்மார் பாடல்கள் ஆகியவற்றின் தாக்கம்

Koviloor Digital Library

காரணமாகலாம். எனவே, தொல்காப்பியத்திற்கு மாறானவையும், புறப்பொருள் வெண்பாமாலையில் ஏற்கப்பட்டவையுமான சில காமக் கூறுகள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெறுதலை ஈண்டுச் சுட்டல் தகும். எனவே, பிரபந்தத்திற்கு முன்னைய அக இலக்கண மரபுகளைப் பின்புலமாகக் கொண்டு, ஆழ்வார் பாடல்களில் பெறப்படும் அகமரபுகளின் அமைதியினை இனிக் காணலாம்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் காமம்

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் தலைவியின் கூற்றுக்களாய் வரும் பாசுரங்கள் 459. தாய் கூற்றாய் வரும் பாசுரங்கள் 201. தோழி கூற்றாய் வரும் பாசுரங்கள் 27. தலைவன் கூற்றாய் வருவன 12. தலைவிக்கும் கண்டார்க்குப் பொதுக் கூற்றாய் வரும் பாசுரங்கள் 10. தொல்காப்பியர் களவுத் தோழிக்குரிய கூற்றுக்கள் 32 என்றும் [151] களவுத் தாய்க்குரிய (செவிலித் தாய்) கூற்றுக்கள் 13 என்றும்[152] மொழிந்தார். தோழி கூற்று மிகுதியாயும் தாய் கூற்றுக் குறைவாயும் வரும் இத்தொல்காப்பிய மரபு மாற்றப்பட்டுத் தாய் கூற்று மிகுதியாகவும், தோழி கூற்று குறைவாகவும் வருதலை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் காண்கின்றோம். தலைவன் கூற்றுப் பாடல்கள் நம்மாழ்வார் பாடல்களில் மிகக் குறைவாக (12) வந்துள்ளமையும் ஒரு வகையில் மாறுதலே. தலைவியும் கண்டாரும் உரையாடுவதாக – வினா விடையாக – பத்துப் பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் வருகின்றன.[153] இவ்வகை உரையாடல் சங்க இலக்கியத்துக் கலியிலும் பரிபாடலிலுமே உள. ஆண்டும் தலைவியும் கண்டாரும் உரையாடிக் கொள்வதாகக் கூறவில்லை.

பெரியாழ்வார் பாடல்களில் தலைவி கூற்றாய் வரும் மூன்று பாசுரங்கள் தவிரப் பிற காமப் பாடல்களனைத்தும் செவிலி கூற்றாய் அமைவன. தலைவி தலைவனைக் கண்டு வியந்து தோழியிடம் கூறலும்,[154] தலைவற்கே எனைக் கொடுமின் எனத் தலைவி பெற்றோரிடம் சாற்றலும்[155]தலைவன் வீதிவரின் வளைத்து வைத்து முறுவல் காண்போம் எனத் தலைவி தோழியிடம் கூறலும்,[156] ஆகிய தலைவி கூற்றுக்கள் மூன்றும் அகவிலக்கண நூல்களில் இடம் பெறாதவை. பெரியாழ்வார் திருமொழியில் காணப்படும் கூற்று வகைகள் பத்தொன்பதில் தலைவனோடு இவளைச் சங்கையாதி என்னுள்ளம் தடுமாறுகிறதெனச் செவிலி சாற்றல்[157] உடன் போக்கால் வரும் குழப்பத்திற்குச் செவிலி அஞ்சல்[158] என்ற இரு கிளவிகள் மட்டுமே அக மரபிலக்கணங்களோடு ஒத்துச் செல்வன. பிறவெல்லாம் அகவிலக்கண மரபிற் கூறாதொழிந்தன. புதுவது கிளர்ந்தன.

ஆண்டாள் பாசுரங்களில் தலைவி தலைவனிடம் பறை வேண்டலும்,[159] காமனைத் தொழுதலும்[160] சிற்றில் சிதையேல் எனத் தலைவனைக் காமுற்று

Koviloor Digital Library

மொழிதலும்[161] காமுற்றார் துகில் வேண்டலும்[162] கூடலிழைத்தலும்[163] தன் காதலைத் தாயிடம் தலைவி தானாகவே கூறலும்[164] தலைவனுழைச் செலுத்துவீரெனத் தலைவி தமரொடு மொழிதலும்[165] தலைவன் அளியுால் அவலந்தணிமின் எனலும்[166] அவன் வாயமுதம் கொணர்ந்து தருக எனலும்[167] அவன் அடிப்பொடி பூசுக எனலும்[168] என் மார்பை அவன் மார்பொடு சேர இறுக்கிக் கட்டுக எனலும்[169] என் கொங்கையை அவன் மார்பின் கண் வீசி அழல் தீர்வேன் எனலும்[170] மார்போட ணைத்துப் பின் பிரியினும் நன்றே எனலும்,[171] அகவிலக்கணக் கிளவிகளுள் அடங்காதவை. ஆண்டாள் பாசுரங்களில் இலக்கண மரபொட்டிய காமம் மிக்க கழிபடர் கிளவிகளாய் மயில், குயில் போன்றவற்றோடு உசாவலும், தூது வேண்டலுமாக வருவன 26 பாசுரங்கள்.[172]

திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியில் தலைவி வரைவு கடாவுதல்[173] தலைவனிடம் தன்துயர் மொழிதல்[174] தலைவனழகை வியந்து தோழியிடம் உரைத்தல்[175] தோழியிடம் தலைவனூர் கூறி அவ்விடத்து அவனைத் தொழுவேம் எனல்[176] தலைவனுழைச் சேர்க்கவெனத் தலைவி தமரை வேண்டல்[177] இவனை அறிவேன் எனத் தாயிடம் கூறல்[178] அவனைத் தொழுது காணலாங்கொலோ எனத் தோழியை வினாதல்[179] அன்னையிடம் புலம்பல்[180] எனத் தாய் தலைவனை வினாதலும்[181] உடன்போய்த் தலைவனிருப்பிடம் சேர்ந்தனரோ எனத் தாய் வினவலும்[182] முதலிய தாய் கூற்றுக்கள் பலவும் இலக்கண வரம்பிகந்தவையாம். திருமங்கையாழ்வார் மடல்களில் பெண் மடலூர்தலைப் பேசும் பெற்றி, ஏற்கெனவே சுட்டப்பட்டது. பின்னரும் இது தனி விளக்கம் பெறும்.

நம்மாழ்வார் திருவிருத்தங்களிலும் திருவாய்மொழியிலும் மேற்சுட்டியவாறே பல கூற்றுக்கள், இலக்கணங்களுட் சொல்லப்படாதவையா யிருத்தலைத் தெள்ளிதின் உணரலாம்.

கூற்றுக்களையேயன்றி வேறு சில புலனெறி வழக்கங்களும் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் மாறி வந்துள. பெரிய திருமொழியில் வரும் அவன் பேர் பாடியா பாடல்,[183] அவன் மாலை விழைதல்[184] திருநெடுந்தாண்ட கத்தில் வரும் மணியோசை வெறுத்தல்[185] மேகலை நீங்கல்,[186] ஆவித்தல்[187] பிதற்றித் திரிதல்[188] நாச்சியார் திருமொழியில் வரும் மானமிலாமை[189] வாய் வெளுத்தல்[190] முதலிய பல மெய்ப்பாடுகள், தொல்காப்பியரால் குறிக்கப்படாத அகப்பொருள் மெய்ப்பாடுகளாம். பெரியாழ்வார் திருமொழியில் வரும் நாடும் ஊரும் அறியக் கிழத்தி கிழவோற் சேர்தல்[191] தலைவனோடு தலைவியைக் காவலிடுமாறு பாரோர் கூறல்[192] போன்ற மரபு நிறல்கள் புதுமரபு நெறிகளாக நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் மலர்ந்திருத்தல் காணலாம். களவுத் தலைவி தலைவனிடம் உரையாதாக

Koviloor Digital Library

இலக்கண மரபில்லை. ஆனால் பெருமாள் திருமொழியில் களவுத் தலைவியர் ஊடியமை கூறப்பட்டுள்ளது.[193]

இவ்வாறு நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் உருவக நிலை அகப்பாடல்கள் அக இலக்கண மரபினின்றும் விலகிப் போவதற்குக் காரணங்கள் பல இருத்தல் வேண்டும். அவற்றுட் சில வருமாறு:

(அ) பக்திப் பாடல்கள், கடவுளை வாழ்த்த வருபவை. தலைவன் இன்னார் என்று சுட்டப்பட்டுப் புகழல் இங்கு இயல்பாகிறது. அவ்வகையில் காமப் பகுதியிலும் இயற்பெயர் பெற்று வந்தன இப்பாடல்கள்.

(ஆ) கடவுளைத் தலைவனாகவும், அடியார்களைத் தலைவியாகவும் உருவகப்படுத்தி இயற்றப்பட்டவை இப்பாடல்கள். மிக்கோராயினும் 'கடிவரையின்றே' என்ற இலக்கண வரையறையோடு இவை ஒத்துச் செல்வனவெனினும், தலைவனுக்கும் தலைவிக்குமுள்ள வேறுபாடு ஆண்டான் – அடிமை வேறுபாடாய் உள்ளது. இதனால் தலைவி பெருமித மில்லாதவளாக – தலைவனுக்காக ஏங்குபவளாகக் காணப்படுகிறாள். இதனால் தலைவிக்குக் கிழவோற் சேர்தலும், மடலூர்தலும் போன்ற மரபு மீறற் பண்புகள் ஏற்படுகின்றன.

(இ) கண்ணனுக்கும் காதலியர் பலராகப் பாகவதத்தில் குறிக்கப் பெறலான், ஆய்ச்சியர் பலர் தமக்குள் காதற் போட்டி நடத்துவதாக இப்பாடல்கள் சில அமைந்துள்ளன. இதனால் தலைவி களவுக் காலத்து ஊடுதலும், தாயரொடு புலம்பலும் தாய் புலம்பலுமாகப் புதுவகைக் கூற்றுக்கள் உருவாகின்றன. பெரும்பாலான அகப்பொருட் பாசுரங்கள் ஆய்ச்சியர்கள் கூற்றாயுள என்பதைப் பதிக இறுதிச் செய்யுட்கள் புலப்படுத்தும்.

இனி, நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் பாடாண் திணைச் சேர்ந்தவை எனக் கொள்ளும் கூற்று ஆய்விற்குரியதாம். தொல்காப்பியர் கூற்றுப்படியும் இதனை உடன்பட்டும் அவர் கூறிய விதிகளுள் இவை பாடாண் கைக்கிளை எனக் கொள்வதிலும் தடை ஏற்படுகிறது. அழகும் சிறப்புமுடைய ஒருவன், ஒன்றுக்கு மேற்பட்ட பெண்டிரால் விரும்பப்படல் இயல்பு. இவ்வியல்பு தலைவனின் உயர்ச்சியைச் சுட்டுமாகலின் இத்தகைய பாடாண் கைக்கிளைப் பாடல்கள் பிற்கால வழக்காக அமைந்தன. ஆயின் நாலாயிர திவ்வியப் பிரபந்தக் காமப் பாடல்களைப் பாடாண் கைக்கிளையாகக் கொள்வதில் தடை ஏற்படுவது இப்பாடல்களின் பொருள் அமைதியாலாகும். தலைவன் இச்செயல் இவளைப் புரிந்தான் என்றும், 'மெய்ப்பிணக்கிட்டான்' என்றும் வரும் சில பகுதிகள் தலைவனுக்கும் தலைவிமாட்டு விருப்பம் இருத்தலைத் தெரிவிக்கும். எனவே

Koviloor Digital Library

ஈண்டுக் கூறப்பட்டவை இருபுடை ஒத்த காமமாகும் என்றும் அன்பின் ஐந்திணைக் கண்ணதாகச் சேர்க்கலாம் என்றும் கூற வழி ஏற்படுகிறது.

இக்கட்டுரையில் தொடர்ந்து கூறப்பெற்ற அக இலக்கண மரபுகள் பற்றிய ஆய்விலிருந்து பெறப்படும் முடிவுகளைக் கீழ்க்காணுமாறு வரிசைப் படுத்தி உரைக்கலாம்.

1. நாடக வழக்கும், உலகியல் வழக்கும் மக்கள் உணர்விற்கேற்பவும், காலத்திற்கேற்பவும் மாறுவனவாகலின் அவைகளிடையே வரும் புலனெறி வழக்கமும் புலனெறி வழக்கம் தழுவிய இலக்கியங்களும், இலக்கணங்களும் மாறுதல்களை ஏற்பவையே.

2. அகப்பொருளை மட்டும் கூறும் முதல் நன்னூல் இறையனாரகப் பொருள்.

3. இறையனாரகப் பொருள் களவியல், கற்பியல் என இரு பிரிவாய் அமைதற்கு வழிகாட்டியாயமைந்தது திருக்குறளே.

4. அறத்தொடு நிற்றலும், உடன்போக்கும் வரைவுமாகிய வெளிப்படைகளைக் களவு என்னல் தகாது என்றும், கற்பொழுக்கத்திற்கு முற்பட்டதாகலின் கற்பும் ஆகாது என்றும் கருதியே வரைவியல் என்ற ஒன்றை நம்பி புதிதாக அமைத்தார் எனலாம்.

5. தொல்காப்பியர் கூற்றுக்கள், நிகழ்ச்சிகள், மரபுக் கோட்பாடுகள், மெய்ப் பாடுகள் ஆகியவற்றை விரித்துக் கூறினார். இறையனார் நிகழ்ச்சிகட்கும், நம்பி, கூற்றுக்கும் சிறப்பிடம் தந்தவர். எனவே மூவரும் மூவேறு நிலையில் அகப்பொருளை நோக்கினர் எனலாம்.

6. கைக்கிளையை ஆடவர்க்குரியதாய்த் தொல்காப்பியரும் நம்பியும் கூற, அதனை இருபாற்குமுரியதாய்ப் புறப்பொருள் வெண்பாமாலை மொழியும். நக்கீரரும் களவுக் கைக்கிளையை இருபாற்கும் பொதுவாக்குவார்.

7. பாலைத் திணைக்கு நிலன் கூறாது, தொல்காப்பியர் உடன் போக்குத் தலைவன் 'சுரன்' எனலுண்டு என்கின்றார். இதனையும் சங்க இலக்கிய நெறிகளையும் உட்கொண்டே நக்கீரரும் நம்பியும் எல்லாப் பாலைத் திணையமைவுகட்கும் சுரனை நிலனாக்கி மொழிந்தனராதல் வேண்டும்.

8. ஊரும் நீருமே நம்பியாலும் நக்கீரராலும் புதிதாகக் கொள்ளப்பட்ட கருப் பொருள்கள், நடுவுநிலைத் திணைக்கு நிலம் கூறாததால், தொல்காப்பியர் அதற்குக் கருப்பொருளையும் உரித்தாக்கவில்லை.

Koviloor Digital Library

9. தலைவன் தலைவி முதலியோர்க்குத் தொல்காப்பியரும் இறையனாரும் கூறிய பண்புகள் பக்தியிலக்கியங்களில் சரிவர இடம் பெறாமையால் நம்பி அவற்றை விரிவாக மொழிந்திலர் என எண்ண இடமுண்டு.

10. தொல்காப்பியரால் கூறப்பட்டனவும் இலக்கியங்களில் இடம் பெறுவனவு மான அக மெய்ப்பாடுகளைப் பின்னைய இலக்கண நூல்கள் மொழியாமை ஒரு வகையில் குறையே.

11. இலக்கணத் துறையில் அகப்பொருட் கோவையம்மவினைப் புகுத்திய முதலாசிரியர் நக்கீரரே. இவரே நாற்கவிராச நம்பிக்கு இவ்வகையில் வழிகாட்டி. எனினும் நக்கீரர்க்குக் குறிஞ்சிப்பாட்டும், கானல் வரியும் திருக்குறட் காமத்துப் பாலும் ஆகிய இலக்கியங்கள் வழிகாட்டி நின்றன. இலக்கியம் தோன்ற அதற்குத் தக இலக்கணம் அமைத்தவர் நக்கீரனார்.

12. கூற்றுக்களை நிரல் படுத்துவதில் கையாளப்படும் மாந்தர் கூற்று நிரல், கோவை நிரல், திணை வழி நிரல் என்ற மூன்று வகை அமைவுகளில் மாந்தர் கூற்று நிரலே பெரிதும் ஏற்புடையது. தொல்காப்பியர் மேற் கொண்ட இம்முறையில் தனிமாந்தர் பண்புகளும் ஒருங்கு உணரப்படும்.

13. களவுக் கைக்கிளைக் கிளவிகள் எல்லா இலக்கணங்களிலும் கோவை யமைவினையே எய்தி நின்றன.

14. தொல்காப்பியர் பாங்கற்கூட்டத்திற்குப் போதிய சிறப்பிடம் தந்து மொழிய வில்லை. பாங்கியற்கூட்டத்தை அனைத்திலக்கணருமே விரித்துப் பேசலால் அஃது இலக்கியங்களில் பெருவழக்கிற்றாதல் பெறப்படும்.

15. கற்புப் பகுதியில் மாறுதல்கள் குறைவு. களவுப் பகுதி சுவையானதாகலின் அவ்வகைப் பாடல்கள் மென்மேலும் பெருகி இலக்கண மாறுதல்கள் களவில் மிகுதற்கு ஏதுவாயின.

16. இலக்கணங்களில் அகப்பொருட் கிளவிக் குறியீடுகள் சில மாறி அமைதல் உண்டு.

17. தொல்காப்பியத்திலுள்ள கூற்று விரிகளையும் இறையனார் கூறிய தொகை களையும் நக்கீரர் சற்று விரித்துரைத்தனவற்றையும் கொண்டு, தொகை வகை விரியாக நம்பியகப் பொருள் கிளவிகளை ஒழுங்குபடுத்திற்று எனலாம்.

18. தொல்காப்பியர் புறத்திணையியலில் கூறும் 'காமப்பகுதி' அகப்பாடலில் புறப்பொருட் செய்தி இடம் பெறலையும் 'கைக்கிளை' புறப்பாடலில் அகச்செய்தி இடம் பெறலையும் குறித்தனவாகக் கொள்ள இடமுண்டு.

Koviloor Digital Library

19. இறைவனையும் அடியாரையும் முறையே தலைவன் தலைவியராக உரு வகப்படுத்தும் முறைக்கு அடிகோலியவர் இளங்கோவடிகளே எனலாம்.

20. பக்திப் பாடல்கள் பல காமப் பொருளாகி வந்தன. கடவுளை வாழ்த்துதலே இப்பாடல்களின் நோக்கமாதலின் இயற்பெயர் கிளந்து இவற்றைப் பாட வேண்டியதாயிற்று. தலைவன் மிகவும் உயர்ந்தோனாதலும், கண்ணனுக்குக் காதலியர் பலராகப் புராணம் மொழிதலும் காமஞ்சான்ற பக்திப் பாடல்களில் மரபு மீறல்கள் ஏற்படக் காரணமாயமைந்தன.

21. நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் வரும் காமப் பகுதிகளை ஐந்திணை வழிப்பட்டவை எனக் கோடலே பொருந்தும்.

முடிவுரை

காலந்தோறும் அகவிலக்கணத்துள் ஏற்பட்ட மாறுதல்களைப் படிநிலை வளர்ச்சி என்றே கொள்ளல் வேண்டும். நம்பியகப் பொருட்குப் பின் வந்தோரும் அகவிலக்கணங்களை மொழிந்துளரென்றாலும் இலக்கியங்களை ஆராய்ந்து அவ்வக்காலங்கட்கேற்ற மாறுதல்களை உள்ளடக்கி மொழிந்தனர் எனக் கூறவியலாது. உலகியற் கண்ணோட்டமும் வாழ்வியல் சமூகவியல் ஆகியவற்றில் நாட்டமும் மிக்கோர் இக்கால இலக்கியங்களை ஆராய்ந்து முறையான மாறுதல் களையும் வளர்ச்சிகளையும் உட்கொண்டு விதி வகுத்தல் வேண்டும். அவ்வாறு வகுக்கப்படும் விதிமுறைகள் இலக்கியங்களை அறிதற்கு மட்டுமன்றி மாந்தரின் அகவாழ்க்கைக்கும் உரிய வகையில் பயன்பட வேண்டும் என நம்பலாம்.

இனி, இவ்வக இலக்கண மரபுகளை உட்கொண்டும், வேறுபட்டும், தனிநிலை அமைப்புகளை உருவாக்கியும் அகப்பாடல்களை இயற்றிய ஆழ்வார்கள் திருமொழிகளில் காணலாகும் அவ்வகப்பாடல்களின் வகைப்பாட்டினை அடுத்து வரும் இயல் விளக்கும்.

★

Koviloor Digital Library

குறிப்புகள்

1. நச்சினார்க்கினியர், தொல், அகத்திணையியல், முன்னுரை.
2. தொல்காப்பியம், புறத்திணையியல், 23.
3. இளம்பூரணர், தொல். களவியல், நூற்பா 1.
4. நாற்கவிராச நம்பி, நம்பியகப்பொருள், நூற்பா 1.
5. தொல். அகத். 56.
6. தொல். செய்யுளியல், 185.
7. இறையனார் அகப்பொருள், 23.
8. இறையனார் அகப்பொருள், 26.
9. நக்கீரர் இறையனார் களவியலுரை, 23, ப.122.
10. இறை. அகப். 24.
11. இளம்பூரணர், தொல். அகத். 56.
12. இளம்பூரணர், தொல். அகத். 56.
13. நக்கீரர், முன்னூல், நூற்பா 1, ப. 27.
14. நம்பி., முன்னூல். நூற்பா 2.
15. தொல். அகத். 1.
16. தொல். புறத். 1, 6, 8, 12, 15, 18, 20.
17. தொல். அகத். 1.
18. நக்கீரர், முன்னூல், நூற்பா 1.
19. தொல். நச். அகத். 55.
20. தொல். இளம். அகத். 53.
21. தொல். நச். அகத். 55.
22. தொல். இளம். அகத். 53.
23. நம்பி., 242.
24. நம்பி., 28.
25. நம்பி., 5.
26. நம்பி., 30, 31.
27. தொல். அகத். 53, நம்பி. 29.

Koviloor Digital Library

28. தொல். அகத். 54.
29. தொல். கள. 15.
30. தொல். இளம். அகத். 54.
31. தொல். இளம். அகத். 54.
32. தொல். இளம். அகத். 55.
33. நம்பி. 5.
34. நம்பி. 243, 244.
35. நம்பி. 243.
36. புறப்பொருள் வெண்பாமாலை, சிறப்புப் பாயிரம், தொல். பேரா. மரபியல், 94.
37. தொல். அகத்.2, கள. 1.
38. இறை. நூற்பா. 1.
39. நம்பி. 26, 4.
40. நக். இறை. நூற்பா 1.
41. தொல். அகத். 2.
42. தொல். அகத். 2.
43. தொல் பொருள். 20.
44. நம்பி. 9.
45. தொல். அகத். 20.
46. தொல். அகத். 21.
47. நம்பி. 19.
48. நக். இறை. 1.
49. தொல். அகத். 29.
50. தொல். அகத். 5.
51. நம்பி. 19, இறை.1.
52. இறை. உரை.1, ப. 21.
53. இறை. உரை.1, ப. 21.
54. நம்பி. 21.
55. தொல். அகத். 14, 15.

Koviloor Digital Library

56. நக், இறை. 2, ப.41.
57. நம்பி. 251.
58. தொல். அகத். 57.
59. தொல். அகத். 58.
60. நம்பி. 248.
61. நக். இறை, நூற்பா 2, ப. 42.
62. நம்பி. 245, 250.
63. தொல். கள. 2.
64. நம்பி. 119.
65. நக். இறை. நூற்பா 2, பக்.28, 29.
66. தொல். அகத்.37, கற்பு. 34.
67. நம்பி. 84.
68. தொல். கள. 1.
69. இறை. 1.
70. நம்பி. 117.
71. நக். தொல். கள.100.
72. திருக்குறள், 1137.
73. பு.பொ.வெ.மாலை, பெருந்திணைப்படலம், நூற்பா 17.
74. தொல். கள. 37.
75. தொல். பொருள். 11.
76. தொல். கள. 35.
77. தொல். கள. 34.
78. இறை. 4.
79. நம்பி. 41.
80. இறை. 32.
81. தொல். கள. 6.
82. நம்பி. 35, நக். இறை. நூற்பா. 2, ப. 35.
83. தொல். பொருள். 42.

Koviloor Digital Library

84. தொல். பொருள். 43, 44.
85. தொல். பொருள். 45.
86. நக். இறை. நூற்பா 2, ப. 36.
87. இளம், தொல். கள.3.
88. தொல், கள. 4.
89. நம்பி. 121, 211.
90. தொல். பொருள். 46, 47.
91 தொல். பொருள். 50, 51.
92. தொல். பொருள். 33.
93. தொல். பொருள். 34.
94. தொல். பொருள். 35.
95. நம்பி, 238.
96. நம்பி, 240.
97. தொல். கள. 7.
98. நம்பி. 35.
99. நக்கீ. இறை. 2. ப.35.
100. இறை. 45.
101. தொல் கள.8. பொருள். 6.
102. இறை. 2, ப.33.
103. தொல். பொருள். 14.
104. தொல். கள. 18.
105. தொல். கள. 20.
106. தொல். கள. 28.
107. தொல். பொருள். 9.
108. தொல். பொருள். 8.
109. தொல். கள. 23.
110. தொல். கள. 23.
111. தொல். கள. 30.
112. தொல். பொருள். 4.

Koviloor Digital Library

113. தொல். கற்பு. 11.
114. தொல். கற்பு. 22.
115. தொல். பொருள். 30.
116. தொல். பொருள். 31.
117. தொல். பொருள். 43, 44.
118. இறை. 46.
119. இறை. 42, 40.
120. இறை. 53.
121. தொல். பொருள். 27.
122. தொல். பொருள். 53 (நச். உரை)
123. நக். இறை. 1, ப.17.
124. நம்பி. 231, இறை. 56.
125. தொல். மெய்ப். 12.
126. தொல். மெய்ப். 13–22.
127. தொல். கள. 9.
128. நம்பி. 36.
129. பெருந்தேவனார், வீரசோழிய உரை மேற்கோள்.
130. தொல். கள. 2, 3, 4, 5, 6.
131. நம்பி. 119, 120, 121, 122.
132. நக். இறை. 2.
133. நம்பி. 135.
134. தொல். கள. 11.
135. நக். இறை. 3. ப. 57.
136. தொல். கள. 11.
137. நக். இறை. 7, ப. 70.
138. தொல். கள. 24.
139. நக். இறை. 2.
140. நம்பி. 6.
141. தொல். கள. 21.

Koviloor Digital Library

142. தொல். கள. 11.
143. தொல். கள. 11.
144. நம்பி. 127.
145. நம்பி. 127.
146. நம்பி. 137.
147. இறை. 2, 3, 6, 7, 17, 18, 26, 30, 35.
148. தொல். புறத். 23.
149. பட்டினப்பாலை
150. தொல். புறத். 23.
151. தொல், கள. 24
152. தொல். கள. 24, 25.
153. நம்மாழ்வார், திருவிருத்தம் 81, நாச்சியார் திருமொழி 14.
154. பெரியாழ்வார் திருமொழி, 3–4–4.
155. பெரியாழ்வார் திருமொழி, 3–4–5.
156. பெரியாழ்வார் திருமொழி, 3–4–6.
157. பெரியாழ்வார் திருமொழி, 3–4–7.
158. பெரியாழ்வார் திருமொழி, 3–8–2.
159. திருப்பாவை, 28, 29.
160. நாச்சியார் திருமொழி, முதற்பத்து.
161. நாச்சியார் திருமொழி, 2–3, 4, 9.
162. நாச்சியார் திருமொழி, 3, 7.
163. நாச்சியார் திருமொழி, 4.
164. நாச்சியார் திருமொழி, 11–1, 2.
165. நாச்சியார் திருமொழி, 12.
166. நாச்சியார் திருமொழி, 13–1, 2, 3.
167. நாச்சியார் திருமொழி, 13–4, 5.
168. நாச்சியார் திருமொழி, 13–6.
169. நாச்சியார் திருமொழி, 13–7.
170. நாச்சியார் திருமொழி, 13–8.

Koviloor Digital Library

171. நாச்சியார் திருமொழி, 13–9.
172. நாச்சியார் திருமொழி, 5–1, 7, 8; 9–3, 4, 5; 10–5, 10–7, 8, 9.
173. பெரிய திருமொழி, 3–6–5.
174. பெரிய திருமொழி, 3–6–7, 8, 9.
175. பெரிய திருமொழி, 9–2.
176. பெரிய திருமொழி, 9–3–4, 8, 9.
177. பெரிய திருமொழி, 9–5.
178. பெரிய திருமொழி, 10–10–9.
179. பெரிய திருமொழி, 11–2–9.
180. பெரிய திருமொழி, 11–3–1, 2, 3.
181. பெரிய திருமொழி, 2–7.
182. பெரிய திருமொழி, 2–7.
183. பெரிய திருமொழி, 11–3–2.
184. பெரிய திருமொழி, 11–3–8.
185. சிறுநெடுந்தாண்டகம், 94–95.
186. சிறுநெடுந்தாண்டகம், 22.
187. சிறுநெடுந்தாண்டகம், 19.
188. சிறுநெடுந்தாண்டகம், 65.
189. நாச்சியார் திருமொழி, 12–7.
190. நாச்சியார் திருமொழி 12–7.
191. பெரியாழ்வார் திருமொழி, 3–7–5.
192. பெரியாழ்வார் திருமொழி, 3–7–8.
193. பெருமாள் திருமொழி 6–1.

Koviloor Digital Library

இயல் நான்கு

நாலாயிர திவ்வியப் பிரபந்த அகப்பாடல்கள் - வகைமைப்பாடு

எழிலுடைய அம்மனைமீர் ! என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வ ளையே ஆக்கினரே!

- நாச்சியார் திருமொழி

Koviloor Digital Library

அகப்பாடல்கள் வகைமைப்பாடு

காலந்தோறும் அகப்பாடல்கள் பாடுதற்கான இலக்கண நெறிகளில் காணப்பட்ட மரபுகள் வழிப்பட்ட ஒற்றுமைக் கூறுகளையும், வேறுபாட்டுக் கூறுகளையும் முன் இயல் விளக்கியது. இவ்விலக்கண நூல்களின் பாதிப்புகளைப் பெற்றும், பாடும் கவிஞர்தம் பாடுதிறனின் வீறு தோன்றும்படியான புதிய போக்குகளைக் கொண்டும், இயற்றப்பட்ட நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் அகப்பாடல்களை வகைப்படுத்தல் வாயிலாக, மெய்ம்மைகள் சில பெறப்படுகின்றன. தொடர்ந்து வரும் இயல்களில் விளக்கம் பெறும் அக இலக்கியக் கூறுகளை விளக்கிக் காட்டுதற்கும் இவ்வகைமைப்பாடு நுழை வாயிலாக அமைகிறது.

இவ்வியல் அமைப்பு முறையில் கீழ்க்காணும் பிரிவுகள் வகைமை பெறுகின்றன.

அ. பிரபந்தப் பாடல்களின் முழுமையான அமைப்பு வழிப் பாகுபாடு.

ஆ. அகப்பாடல்களின் தனி அமைப்பு.

இ. அகப்பாடல்களின் பொருள் அமைதி வழிப் பாகுபாடு.

1. (அ) காந்த பாவம் வழிப்பட்டன

   (ஆ) மதுரபாவம் வழிப்பட்டன

2. நாயகன் – நாயகி பாவனை வழிப்பட்டன.

   (அ) சங்க மரபுகள்

   (ஆ) புது மரபுகள்

3. கூற்றுத்துறை வழிப்பட்டன.

இனி, நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் அமைந்துள்ள அகப்பொருள் பாடல்களின் வகைமையை உணருமுன்னர் அப்பாடல்களின் மொத்தப் பிரபந்தங்களும் வகுக்கப்பட்டுள்ளமையை நோக்குதல் சாலும். பின்னிணைப்பு அட்டவணை அப்பகுப்பு முறையினைக் காட்டி விளக்குவதாம். இதைக் காணும் போது முதல் ஆழ்வார் தொடங்கி நம்மாழ்வார், மதுர கவியாழ்வார் இறுதியாக நான்கு நூற்றாண்டுகள் வைணவ இலக்கிய மரபு தமிழ் மொழியில் அருட்பாசுர நெறியாகத் தொடர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது என்னும் தமிழ் இலக்கிய வரலாற்று அறிஞர்தம்[1] கூற்றின் உண்மையை உணரலாம்.

Koviloor Digital Library

ஆழ்வார்களின் இலக்கிய மரபுக்குரிய காலமாகக் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் (460 – 540) கி.பி. எட்டாம் நூற்றாண்டு வரை (740–805) கொள்வதற்கு உறுதுணையாக மு. இராகவையங்கார் அவர்களின் கருத்துக்கள் வாய்ப்பு நல்குகின்றன.[2]

வைணவ ஆழ்வார்களுள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் ஏனை ஆழ்வார்களுக்கு முன் தோன்றியமையின் அவர்கள் முதலாழ்வார்கள் எனப்பட்டனர். அகத்தும் புறத்தும் திருமாலைக் கண்டு களித்த முதலாழ்வார்களுக்கு இயற்கையும் இறைவன் வடிவமாகவே காட்சியளித்தது. நனவிலும் கனவிலும் திருமாலெண்ணமுடையோராய் வாழ்ந்த முதலாழ்வார்கள் காரைக்காலம்மையாரைப் போலத் திடமான பக்தி வைராக்கியமுடையவர்கள்.[3] அவர்கள் திருமாலிடத்திற் கொண்டிருந்த அளவற்ற அன்பினை 'என்றன் அளவன்றால் யானுடைய அன்பு' என்றும் 'ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு' என்றும் 'காண்காண் என விரும்பும் கண்கள்' என்றும் கூறும் அவர்கள் தம் பாக்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

அவர்கள் தெளிந்த உள்ளமுடையவர்கள்; அதனால், அவர்கள் பாடிய திருவந்தாதிகளும் களங்கமற்ற அவர்கள் உள்ளத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. 'இறைவன் ஆண்டான் (சேஷி). நான் அவன் அடியவன் (சேஷன்)'[4] என்னும் கொள்கையில் வாழ்ந்தவர்கள் இவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

இறைவன் புகழ் பாடுதலே இவர்தம் தொழிலாகக் கொண்டவரெனவே ஆண்டவனுடைய அடியார்களாய்க் கவிதை புனைந்தனர்; அவன் தலைவியாய் நின்று தம்முடைய உணர்ச்சி வெள்ளத்தைச் செஞ்சொற்களால் பாயும்படிச் செய்தனர். முதலாழ்வார்களின் பாக்களில் ஆங்காங்கே சிற்சில அகப்பொருள் கூறுகளே காணக்கிடைக்கின்றன. அவற்றை ஆழ்வார் வாரியாகப் பார்க்கும் பார்வையில் காணலாம்.

நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், குலசேகராழ்வார், ஆண்டாள் ஆகியோர் பாடல்களில் அகப்பொருள் மரபுகள் மிகுந்துள்ளன. ஆழ்வார்களுள் நம்மாழ்வார் தலைசிறந்தவர்; இறையன்பில் பெரிதும் ஆழ்ந்தவர். இவர் இறைவனிடத்தில் (பரமன்) கொண்ட அன்பின் முதிர்ச்சியை இவர் பாடல்கள் புலப்படுத்துகின்றன. அவற்றுள் நாயக நாயகி தொடர்பினைத் தெற்றெனக் காட்டும் பாசுரங்கள் முதன்மை யுறுகின்றன எனலாம். ஆழ்வார் நாயகியாகி புருடோத்தமனான நாயகனிடம் கரைகடந்த காதலை வெளிப் படுத்துகின்றார்.

Koviloor Digital Library

அப்பாடல்களில் நம்மாழ்வார் தம் இதயத்தைத் திறந்து, இயல்பாக எழும் காதலுணர்ச்சிகளைக் கடவுள் பேரில் வெளியிட்டார். வெளியிடும் போது தாம் சொல்வது போலவும், தோழி கூறுவது போலவும், தலைவி பேசுவது போலவும் மூன்று நிலைகளில் இவர்தம் பாடல்கள் உருக் கொண்டன.

திருமங்கையாழ்வார் திருநாகை சௌந்தர்யராசனின் அழகில் ஈடுபட்டுப் பராங்குச நாயகி நிலையில் நின்று பேசுகின்றார்.[5] இதில் இவருடைய பாவனை நிலை ஒரு பெண்ணின் கற்பனையையும் விஞ்சி நிற்கின்றது.

ஆண்டாளின் நூல்கள் அகப்பொருளாகும் மனோதத்துவ சாத்திரங் களையும் கடந்து நிற்பன. அகப்பொருள் நூல்கள் சிற்றின்பத்தைப் பற்றியவை என்றெண்ணும் பலர் மயக்கத்தைப் போக்கவே இவர் மாலிடம் மயக்கம் கொண்டு தம் நூல்களிலும் இத்துறைகள் அமையப் பாடினார் என்று எண்ணும் பாங்கில் இவர்தம் பாடல்கள் பங்கேற்கின்றன. ஆகவே ஆண்டாளுடைய பாடல்கள் தனிநிலையில் காணத்தக்கன.

மதுரகவியாழ்வாரின் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' ஒன்றுதான் அகப்பொருள்படப் பாடாதது என்பதைக் குறிப்பிட வேண்டும். இதில் அகப்பாடல் ஒன்றுகூட இல்லை; அகப்பொருள் நுணுக்கமும் ஈண்டுக் காணக் கிடைக்கில. ஆசார்ய பக்தியில் பிறந்தவை அப்பாடல்கள்.

ஓர் ஆணும் பெண்ணும் கூடி இன்பம் நுகர்ந்து மகிழ்ந்தும், பின் ஊரும் உலகும் அறியத் திருமணம் புரிந்து சான்றோர் போற்ற இல்லறம் புரிந்தும், வீடும் நாடும் போற்ற வாழும் உலகியல் வாழ்க்கை பற்றிய பொருள்களை யெல்லாம் உள்ளடக்கிக் காண்பதே அகப்பொருள் என்பது தெளிவு. அகத்தே நிகழ்தலின் அகம் எனப் பெயராயிற்று[6] என்பர் நச்சினார்க்கினியர். இறையன்பில் கரைந்து திளைத்த ஆழ்வார்கள் இறைவனாகிய தலைவனைத் தம் நெஞ்சினுள் அமரச் செய்து தாமும் அவருடன் கலந்து, எல்லையில்லா மகிழ்வு கொண்டு அந்தத் தலைவனுடைய பலவாகிய குணங்களைச் சொல்லிச் சொல்லி நெஞ்சுருகப் போற்றுதற்கு அகத்துறைப் பாடல்கள் அவர்களுக்கு ஒரு கருவியாயிற்று.

பிற நாட்டில் வைணவ பக்தி

வடநாட்டில் இராமானந்தர் வட இந்தியாவின் யோக தத்துவத்தையும் திராவிட நாட்டின் பக்தி இயக்கத்தையும் ஒன்று இணைத்துப் புதிய அருள் நெறியைத் தோற்றுவித்தார். இவருடைய முக்கிய சீடர்களில் ஒருவர் ரவிதாசர். கபீர்தாசர் ரவிதாசரிடம் பக்தியும் மதிப்பும் கொண்டிருந்தாராம். 'பாகவத சேவையே பகவானுடைய சேவை' என்பது ரவிதாசர் கொள்கை.[7] சித்தூர் ராணி சாலியும்,

Koviloor Digital Library

மீராபாயும் இவருடைய நன்மொழிகளைப் பின்பற்றித் தங்களைப் பண்படுத்திக் கொண்டார்கள். ரவிதாசர் இராமபக்தர், மீராபாய் கிருஷ்ண பக்தை. இந்துஸ்தானத்தில் கிருஷ்ண பத்தியை இவள் பரப்பினாள்.

ஆண்டாளைப் போலவே கண்ணனை நாயக பாவத்தில் வழிபட்டாள் இவள். இவளை வட இந்தியாவின் ஆண்டாள் என்று கூடக் கருதுவர்.

வங்காளத்தில் சைதன்யர் வைணவ சமயக் கருத்துப் பரப்பல் செய்தார். கண்ணனது லீலைகளை நினைந்து ஆடிப்பாடி அந்தக் கண்ணன் நிலையையே அடைந்து விடுவார் இவர். வங்காள வைணவர்கள் இராதா கிருஷ்ணனை வழிபடுபவர்கள். இளமையும் மயக்கும் அழகுமே கண்ணனின் உருவம்; அவன் ஆனந்த வடிவானவன். சத்தும் சித்தும் அவனின் குணங்கள். தன்னுடைய அழகினால் எல்லா உயிர்களையும் ஆன்மாக்களையும் அவன் ஈர்க்கின்றான்; அவனுடைய 'லீலா விநோதங்கள்' பிருந்தாவனம், விரஜை, கோகுலம் முதலிய இடங்களில் நடப்பன. இவை தூய்மையும் கடவுட்டன்மையும் நிறைந்த பேரின்ப இல்லங்கள். அவனுடைய அன்பர்கள் ஒவ்வொரு வழியில் அவனிடம் அன்பு காட்டினார்கள். இந்த அன்பு காட்டும் நிலையில் அனைத்து நாட்டினரும் ஒன்று போலவே செயல்பட்டார்கள் என உணரக் கிடக்கின்றது.

இந்த அடிப்படையை நன்கு உணர்ந்து கொண்டால்தான் ஆழ்வார்கள் பாடல்களின் வகைப்பாட்டினை உணர வழிகிடைக்கும். ஆகவே அவற்றை ஈண்டு விரித்துரைப்பது இனறியமையாததாகின்றது.

கண்ணனுடைய பிருந்தாவன அன்பர்கள் நான்கு பிரிவினர் என விளக்குகின்றார் எம். ராதாகிருஷ்ண பிள்ளை.[8]

1. தாஸ்ய பக்தர்கள் என்பவர்கள் கண்ணனது பெருமையை உணர்ந்து அவருக்கு அடிமையாக எண்ணியவர்கள்.

2. சக்ய பக்தர்கள் கண்ணனுக்குச் சமமாகத் தம்மை எண்ணிக் கொண்டவர்கள்.

3. வாத்சல்ய பக்தர்கள் என்பவர்கள் கண்ணனுடைய தாய் தந்தையராகிய நந்தகோபரும் யசோதையும் போன்றவர். அவனைக் குழந்தையாக எண்ணித் தங்கள் பாதுகாப்புக்குட்பட்டவன் என்று கருதியவர்கள்.

4. நான்காமவர் காந்த பக்தர் என்ற கோபிகள். இவர்களுள் சிறந்தவள் இராதை. இவர்களிடம் தெய்வீக அன்பின் முழுமையையும் காணலாம். இது 'மஹா பாவம்' எனப்படும். இந்த அன்பும் காதலும் சிற்றின்பச் சார்புடையன அல்ல. இங்கே அன்பு மாயையினால் ஏற்படுகிறது.

Koviloor Digital Library

ஆகவே இராதாகிருஷ்ண ஐக்கிய பாவமே பேரின்பம். கிருஷ்ணனையே எண்ணி உருகி அவன் மயமாகி அவனான நிலை 'ஆத்மா ராமதா' எனப்படும். கண்ணன் சொரூப சக்தி, மாயா சக்தி, ஜீவ சக்தி என்ற மூன்று சக்திகளும் உடையவன்.

இந்த மூன்று நிலைகளிலுமே அவன் அருளுணர்ந்து அவனாலே அருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். மாயா சக்திக்குட்பட்டு அவனைப் பாடியவர்களே அகத்துறைப் பாடல்களைத் தேர்ந்தனர். இந்தப் பாடல்கள் மூலம் இவர்கள் தெரிவித்த செய்திகள் பற்பல. ஆன்மாக்களுக்கு இன்பமும் சுகமும் ஊட்டவல்ல ஒரே பொருள் பரமாத்மாவான கண்ணன் தான். சீவான்மாக்கள் பரமான்மாவை அடைய அவாவுகின்றன. அவனை அடைந்த பின்னரும் சீவான்மா தனித்தே நிற்கிறது. தனித்து நிற்கும் நிலையில்தான் அன்பையும் அதனடியாக ஏற்படும் இன்பத்தையும் பெற இயலும்.

இந்த இடையறா இன்பத்தைப் பெற, 'சாதனை' என்ற ஆன்மப் பயிற்சி வேண்டும். இதனால் ஆண்டாளைப் போல, நம்மாழ்வாரைப் போல, எப்போதும் அவன் நினைவாகவே இருக்கலாம். இச்சாதனையாம் ஆன்மப் பயிற்சி மேற்கூறிய நான்கு குழுவினர் வகையில் ஒரு வகையினரைப் பின்பற்றித் தொண்டு செய்ய வேண்டும். அதனால் அவனை எளிதில் அடையலாம் என்பது துணிபு.

பாகவதருடன் பழகுவதால் அவன் அருள் எளிதில் கிடைக்கப் பெறும். இதுவே சைதன்யரின் கொள்கை.

பிற்காலத்தில் மத்வாசாரியரின் கொள்கைகளைப்[9] பின்பற்றித் துணை இயக்கங்கள் கர்நாடகத்தில் தோன்றின. 'தாசர் இயக்கம்' என்று ஓர் இயக்கம் அங்கே தோன்றியது. இறைவனுடைய தொண்டுக்கென்றே தம்மை ஆட்படுத்திக் கொண்ட தொண்டர் குழு ஒன்று இதனால் உருவாயிற்று. கன்னட நாட்டுத் தாசர்களாகக் குறிக்கத்தக்கவர்கள்: பாத ராசர் (இலட்சுமண தீர்த்தர் என்ற பெயரும் இவருக்குண்டு). இவருடைய சீடர் வியாசராயர். இவருடைய சீடர்கள் புரந்தரதாசர், (புரந்தரதாசர் கர்நாடக சங்கீதத்தின் தந்தை) கனகதாசர், வாதிராசர், விசயதாசர், செகந்நாத தாசர், கோபாலர் இவர்கள் பாடல்களின் சத்தாகவும், சாரமாகவும் ஆண்டான் அடிமை உறவுநிலை அமைந்தது.[10]

எனவே, பத்தி இலக்கியத்தில் இது உலகப் பொதுமை பெற்ற ஓர் உத்தி நிலையே எனலாம்.[11] உலகம் தழுவிய மரபு நெறியாகும் இது என்பதனை அடுத்துவரும் இயல் தெளிவுபட விளக்கும். ஈண்டு ஓர் அடிப்படை வளர்ச்சி நிலை காட்டப்பட்டது. ஆண்டான் அடிமை நிலை பற்றிப் பாடுவதில் மொழி வேறு

Koviloor Digital Library

பாட்டிற்கப்பாற்பட்ட பொது நிலையினை உணரலாம். தாசர் இயக்கம் சமயப் புரட்சியில் ஒரு ஜனநாயக எழுச்சி; ஆழ்வார்கள் காட்டிய வழியை ஒத்தது[12] என்று மட்டும் உணருதல் சாலும்.

> தெய்வ நிலையை–தெய்வக்காட்சியை நிலைநாட்டுவது தான் கவிஞனுடைய அமரத் தொழிலாகும். ஆண்டவனுடைய அடியார் களாய்க் கவிதை புனையலாம்; அவன் குழந்தைகளாய்ப் பாட்டி–சைக்கலாம்; அவன் தலைவியாய் நின்று நம்முடைய உணர்ச்சி வெள்ளத்தைச் செஞ்சொற்களால் பாயும்படிச் செய்யலாம்.[13]

என்னும் கருத்தும் இதற்கு அரண் செய்கின்றது.

இறைவனை அடைவதற்குரிய நெறிகளுள் ஒன்றாகக் 'காதல் நெறி'யாகிய அகப்பொருள் நெறியைத் தமிழ்ச் சான்றோர் கொண்டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கடவுளைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும் அவர்கள் உருவகப்படுத்தியுள்ளனர். இவ்வாறு தலைவன் – தலைவியாக இறைவனையும் ஆன்மாவையும் உருவகப்படுத்திக் கூறுவது சமய மலர்ச்சிக் காலத்தில் தோன்றிய வழக்கமாகும். இறைவனுக்கும் ஆன்மாக் களுக்கும் இடையே இருந்துவரும் தொடர்பினை ஒன்பது வகையாக முன்னோர்கள் வரையறுத் துள்ளனர் என்பது முன்னர் விளக்கம் பெற்றது. அவற்றுள் ஒன்று நாயகன் – நாயகித் தொடர்பு என்பது மீண்டும் நினைவு கூரத்தக்கது. மெய்யுணர்வுக் காதல் நெறியாகிய இந்நெறியில் நின்று பாடப் பட்டவையாக ஆயிரத்து நான்கு பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் காணப்படுகின்றன.[14] நாலாயிரம் பாடல்களில் நான்கில் ஒரு பங்காக இவ்வமைப்புப் பாடல்கள் அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

அகப்பொருள் நெறியை ஒட்டியும், அந்த அடிப்படையின் மேல் சில மாறுதல்களைச் செய்தும் பாடியுள்ள வகைமையை ஆராய்தலே ஈண்டு நோக்கமாகின்றது.

அகப்பொருள் பாகுபாடு

அகப்பொருளாம் இன்ப வாழ்க்கை ஓவியம் உலகியல் அடிப்படையில் நாடக வழக்காய்ப் புனைந்துரைக்கப்படுவதாகும். புலவர் பெருமக்கள் இன்ப வொழுக்கினைப் பாடுதற்குச் சிற்சில மரபுகளையும் மேற்கொண்டுள்ளனர். இப்புலவர் மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டே வழிவழி வந்த மரபாகும்.[15] பின்பு சங்க இலக்கியங்கள் உயர்ந்தோர் வழக்குகளைச் சிறப்பாகப் போற்றி, யாப்பு மரபு, பொருள் மரபு முதலியவற்றைப் போற்றி அவ்வாறே 'புலனெறி வழக்கம்' எனப் போற்றப்படும் இலக்கிய மரபுகளைக் காத்தன.

Koviloor Digital Library

ஆனால், ஆழ்வார் பாடல்களில் இம்மரபு முற்றும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. இறைவனைப் புகழ்தற்கு ஏற்ற நிலையில் பண்டைய அக மரபிலிருந்து சில மாற்றங்கள், சில மரபு மீறல்கள், துறைகளில் சில தேர்ச்சி நிலைகள் (selections) செய்யப்பட்டிருத்தலைக் காண்கிறோம்.[16] இந்தத் தனித்தன்மை பெற்ற அகக்கோட்பாடுகளை இவண் இனம் பிரித்தறிதல் இன்றியமையாததாகின்றது.

சமய மலர்ச்சிக் காலம் தனிச்சிறப்புடைய காலம். ஆகவே அக் காலத்தில் எழுந்த ஆழ்வார்களின் பாடல்கள் இறைவனிடத்தில் கைம்மாறு கருதாத அன்பு செலுத்துதல், தொண்டர்தம் பெருமையை விதந்து கூறுதல் ஆகியவற்றைப் பொதுக் கொள்கைகளாகக் கொண்டு இயங்குகின்றன. சிறப்புக் கொள்கை களென நோக்கின், வீடு பேற்றையும் கருதாத இறை அன்பு, ஒட்டையும் பொன்னை யும் ஒக்க நோக்கும் உயர்ந்த சிந்தை, அடியவர் பெருமையைப் போற்றும் மாண்பு, கூட்டு வழிபாட்டில் இறைவனை வணங்குதல், தலைவன் தலைவி பாவனையில் இறைவனிடம் ஒன்றிப் பாடுதல் போன்ற கொள்கைகள் சமய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த அருளாளரின் பாடல்களில் ஊடுருவி நிற்கின்றன என்னும் கருத்து பொருத்தமாகின்றது.[17]

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"[18] என்றார் தொல்காப்பியர். "காதல் அடைதல் உயிரியற்கை"[19] என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறுகின்றார். ஆகவே, "கலியன் கண்ண கத்தும் மனத்தும் அகலாக் கொற்றவன் முற்றுலகாகி நின்ற குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்" என்று பரகால நாயகியாகிய தலைவி நிலையில் நின்று திருமங்கையாழ்வார் சொல்லுவதும் சிறப்பானதேயாகும்.[20] இது பொருந்துமோ எனின், தன்னைப் பிறன்போலக் கூறிக்கொள்ளும் பாடல்களை யாத்தலும் மரபேயாதலின் பொருந்துமென்பர் உரையாசிரியர். ஈண்டு இம்முறையில் பார்க்கில் "நாங்கள் இருவரும் ஒருவரேதான். என்னைப் பெண் நிலையில் வைத்துத் தலைவி தசையையடைந்து பேசினேன் கலியனாகிய யான்" என்றார். எனவே இவர் பூண்டு கொள்ளும் பாவனை முறை திருத்தம் பெறுகின்றது – அதாவது தகுதியுடையதாகின்றது எனலாம்.

இந்திரியங்களின் துணையின்றி அறிவின் துணையொன்றே
கொண்டு சிற்றின்பத்தைப் பேரின்பமாக மாற்றவல்ல
ஒரு பரிணாம விந்தை அது; சாதாரணப் பொன்னையும்
மாற்றறியாத பசும் பொன்னாக்க வல்ல அற்புதக்
கருவியாக உதவுவது. எல்லாச் சமய அறிஞர்களும்
இதனைக் கைவந்த கருவியாக ஆண்டு வந்தாலும்,

Koviloor Digital Library

தமிழகக் கவிஞர்கள் இதனைக் கையாண்டிருப்பது
ஒரு தனி அலாதி. இத்தகைய உயர்ந்த உக்தி
பக்திக்கு இடையூறு ஆகாது.[21]

என்னும் கருத்தும் ஈண்டு ஏற்றுத் தெளியத் தக்கதாம்.

ஞானச் செல்வர்களாகிய ஆழ்வார்கள் இறைவன் மீது கொள்ளும் காமம் 'பகவத் காமம்' என்று சொல்லப்பெறும். இவர்கள் மால்மீது கொள்ளும் மயக்கம் இவ்வுலகோர் மங்கையர் மீது கொள்ளும் காமத்தினின்றும் வேறுபட்டது என்பது உறுதி. இலக்கிய உத்தியில் சிற்றின்ப அனுபவமாகிய காமத்துக்குக் கூறப்பெறும் அகப்பொருள் துறைகள் யாவும் இந்த 'பகவத் காமத்திற்கும்' கூறப்பெறும். சிற்றின்ப அனுபவத்திற்கு ஆட்படும் உறுப்புகள் இறையனுபவ பேரின்பத்திற்குப் பரபக்தி, பரஞானம் என்பனவாகக் கொள்ளப்படுகின்றன. ஆகவே கொங்கை முதலான சொற்கள் இவர்களுடைய அகத்துறைப் பாடல்களில் பரவியும் விரவியும் வருவதாக ஆன்றோர் கொள்வர்.[22] சூபி மதத்தில் சந்தன மலர் முதலிய மணப் பொருட்களுக்கும் தத்துவம் கூறப் பெற்றிருப்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

இன்பச் சுவையின் தொடர்பு சிறிதுமின்றியே பக்திச் சுவையின் அடிப்படை யாகவே பெரும்பகுதியான ஆழ்வார்களின் பாடல்கள் அமைவதையும் நோக்கலாம். பராங்குசராம் நம்மாழ்வாரின் தோற்றத்திற்கு விடிவெள்ளி போல் திகழ்ந்தவர் மதுரகவி ஆழ்வார்; இவர் நம்மாழ்வாரின் தலைமைச் சீடராய்த் திகழ்ந்தார்; தம் ஆசாரியரின் பெருமைகளை வெளியிட்டுத் தம்முடைய குருநாதர் மீது, 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்ற பதினொரு பாடல்கள் அடங்கிய திவ்வியப் பிரபந்தத்தை யாத்தார். இதில் இவர், தம் ஆசான் ஆழங்கால் பட்ட கண்ணபிரானை விட்டுத் தம் குருநாதரின் பெயரைச் சொன்னாலே தம் நாவுக்கு மிகவும் இனிக்கும் என்கின்றார்.

நண்ணித் தென்குரு கூர்நம்பி என்றக்கால்
அண்ணிக் கும்அமு தூறுமென் நாவுக்கே.[23]

மேலும் நம்மாழ்வாரின் செய்திகளிலேயே தம்முக்கரணங்களும் (எண்ணம் சொல் செயல்) ஈடுபட்டதைக் கூறுகின்றார்.

தேவு மற்றறி யேன்குரு கூர்நம்பி
பாரி னின்னிசை பாடித் திரிவேனே.[24]

இவ்வாறே இவர் நம்மாழ்வார் அருளினால் மேலுள்ள காலமெல்லாம் அவருடைய திருக்குணங்களை ஏத்துவதைப் பேறாகக் கருதுகின்றார்;[25] இந்தப் பேரருளை எண் திசையிலுள்ளவர்களும் அறியும்படிச் செய்கின்றார்.[26] இன்னும் இவர்,

Koviloor Digital Library

மிக்க வேதியர் வேதத்தி னுட்பொருள்
நிற்கப் பாடியென் நெஞ்சுள் நிறுத்தினான்.[27]

என்றும் கூறுகின்றார். இவ்வகையில் இவர் நம்மாழ்வாருக்குத் தொண்டு செய்யும் பேற்றினையே பயனாகக் கொண்டு வாழ்ந்தமையால், அகத்துறைப் பாடல் மரபில் இவர் சிந்தை செல்லவில்லை. ஆகவே இந்த ஆய்வுக்குரிய அகப் பொருளி னின்றும் மதுரகவியாழ்வார் ஒதுங்கி நிற்கின்றார்.

இனி, மற்ற ஆழ்வார்கள் பாடிய பாடல்களை நோக்கும்போது வகைப்பாட்டில் முதற்கண் பிரபந்தங்களின் பகுப்பு முறையே கண்ணில் காணப்படுகின்றது.

'இராமானுச நூற்றந்தாதி' உள்ளிட்ட திவ்வியப் பிரபந்தம் இருபத்து நான்கு ஆகும்.[28] அதில் இயற்பாப் பிரபந்தங்கள் பதினொன்று. இதில் திருவிருத்தம், சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய மூன்றும் அகத்துறைப் பிரபந்தங்களாகும் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இன்பச் சுவையின் தொடர்பு சிறிதுமின்றியே பக்திச் சுவையின் அடிப்படை யாகவே இந்த ஞானச் செல்வர்கள் அருளிச் செய்துள்ள பாடல்களே செம்பாதி யாக இருக்கின்றன. அங்ஙனமிருக்க, காதல் சுவையையும் கலந்து பாடல்கள் அருளிச் செய்திருப்பதற்கு ஒரு காரணம் உண்டு என்று வழிவழியாகச் சொல்லப் பட்டு வரும் கருத்தும் உன்னுதற்குரியதாம்.

உடல்நலத்திற்குக் காரணமாக வேப்பிலையுருண்டையை உட்கொள்ள வேண்டியவர்கட்கு வெல்லத்தை வெளியிற் பூசிக் கொடுத்து உண்பிப்பது போலவும், இக்கால மாத்திரைகட்குச் சர்க்கரைப் பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் தின்பிப்பது போலவும் சிற்றின்பம் கூறும் வகையாற் பேரின்பத்தை நிலைநாட்டுகின்றனர் எனலாம். இறையனார் களவியல் இது கடையாய காலத்தை யுடையவர்க்குக் காட்டப்பெறும் உத்திமுறையென இயம்பும். இந்த ஆய்வுரையில் இவ்வாறு கருதி ஆராயாது, இந்த நாயகி–நாயக பாவனை முறை சுவை கருதியும், மரபு கருதியும், இலக்கிய வகை மாற்றம் நோக்கியும், புத்திலக்கிய வளர்ச்சி முறை கருதியும் அமைந்துள்ளதை எடுத்துக்காட்டும் போக்கில் ஆராயப்பட்டுள்ளது.

இன்னார் என்றறியேன்
அன்னே! ஆழியோடும்
பொன்னார் சார்ங்க முடைய அடிகளை
இன்னார் என்றறியேன்.[29]

என்று தலைவி தோழியை விளித்துப் பேசுகின்றாள். இலக்கண வரம்புப்படி "காட்சி, ஐயம், குறிப்பறிதல், தெளிவு" ஆகிய இவை தலைவியைக் குறித்துச்

Koviloor Digital Library

சொல்லப்பட்டுள்ளதேயொழியத் தலைவனைக் குறித்துச் சொல்லப்படவில்லை. இங்கே 'இன்னாரென்றறியேன்' என்று பரகால நாயகிக்குத் தலைவனைப் பற்றி ஐயம் நிகழ்ந்தபோது தலைவன் இறைவனேயாதலின் "மநுஷத்வே பரத்வம்" காட்டிய வடிவைக் கண்டு பேசுகின்றார்.

எனவேதான் "தோழி! ஆழிப்படையோடும் சார்ங்கமென்னும் வில்லையும் கையில் ஏந்திய தலைவனை இன்னாரென்று அறிகிலேன். அவர் தேவனோ, அன்றி மானிடனோ? திருவாழிப் படையைக் கையில் பார்த்தால் தேவனுக்கு அடையாளம், சார்ங்கம் என்னும் வில்லைப் பார்த்தால் மானுடனுக்கு அடையாளம். இப்படி 'மநுஷத்வே பரத்வம்' இவருக்கு அடையாளம்" என்று சொல்லிக் கொண்டு வியக்கின்றாள் தலைவி.[30]

இவ்வாறு சொன்ன தலைவி, பின்னர் அன்னவனோடு கூடிப் பிரிந்து, மீண்டும் கூட்டம் விரும்பி, இயலாமையால் நிறையழிந்து நிற்கின்றாள். தக்க பருவம் வாய்ந்து பெரிய பிராட்டியாரை மாயன் தன் மார்பகத்தே பிணைத்து வைத்திருப்பதைப் பார்த்த பின்பும் இவள் அம்மாயனுக்கே அற்றுத் தீர்கின்றாள். அவனையே நினைந்து வாடுகின்றாள். நிறையழிந்ததற்கு அடையாளமாக நெடு மூச்செறிகின்றாள்; தோழியைப் பார்த்து "அணியரங்கம் ஆடுதுமோ?" என்கின்றாள்.

எல்லாவற்றிற்கும் மேலே பெற்ற தாயின் சொற்களைக் கேளாள்; மாயனவன் சொன்ன சொற்களைக் கேட்பள்; தோழி சொன்ன சொற்களைக் கேட்பள்; பெற்றதே குற்றமாகத் தாய் சொற்களைக் கேட்க மாட்டாள். இந்நிலையில் அந்தத் தாய் "நங்கையீர்! உங்கள் வயிற்றில் பிறந்த பெண்ணும் இப்படித்தானோ" என்று பிற தாய்மார்களை நோக்கிப் பேசி இரங்குகின்றார்.[31]

இனி, வெறி விலக்குவிக்க நினைந்த தோழி இரங்கிக் கூறும் பாடலாக வருவதுமுண்டு. தலைவியின் தாயார் அவருக்கு நேர்ந்துள்ள நோயின் காரணத்தையும் அதனைத் தீர்க்கும் வழிமுறைகளையும் ஆராய்ந்து தெளிதல் இல்லாதவராய் வெறியாட்டு முதலிய வினைகளை நடத்துவதாற் பயனில்லை என்று கருதுகின்றாள் தோழி.

> உறுகின்ற கன்மங்கள் மேலான ஓர்ப்பில ராய் இவளைப்
> பெறுகின்ற தாயர்மெய்ந் நொந்து பெறார்கொல்? துழாய் குழல்வாய்த்
> துறுகின் றிலர்; தொல்லை வேங்கட மாட்டவும் சூழ்கின்றிலர்;
> இறுகின்ற தாலிவ ளாகம் மெல்லாவி எரி கொள்ளவே.

என்னும் பாடலில் தோழியின் சிந்தனை வெளிப்படுகின்றது.[32] ஆகவே வெறி

Koviloor Digital Library

யாட்டு நிகழ்த்துவதற்குப் பதிலாகத் தலைவியின் கூந்தலிலே பெருமானது திருத்துழாயைச் சூட்டுகின்றாரில்லை. திருவேங்கடமலையிலே இவளைக் கொண்டு போய் ஆட்டவும் நினைக்கின்றாரில்லை; அவளது உடம்போ உயிரைக் காமத்தீ கவர்ந்து கொள்ளும்படி முடிகிற அளவாக நிற்கின்றது என்ற போக்கில் செல்லுகின்றது தோழியின் மனம்.

இவ்வாறு தலைமகன், தாய், தோழி ஆகியோர் கூறும் பாடல்களும், பாங்கன், தலைமகன், செவிலி, கட்டுவிச்சி ஆகியோர் பேசுவன ஒரோ வழியும் ஆழ்வார்களின் அகத்துறைப் பாடல்களில் அமைந்துள்ளன. அவற்றை வகைப் படுத்து முறையில் வளர்ந்து வரும் மரபு முறையினைக் களிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

பொதுவாக, நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் பாடு முறையில் இரு நெறிகளைக் காணலாம். ஒன்று ஆழ்வார்கள் தாமான தன்மையில் பாடுவன; பிறிதொன்று அவர்கள் நாயகி பாவனை கொண்டு பாடுவன. இரண்டிற்கும் அடிப்படை நிலை பக்தி நிலையேயாம். ஆயின் 'பாவனை' நெறியில் ஒருவித நெருக்கமும், உள்ளத்தோய்வும் பின்னும் புலப்படக் காணலாகும்.

புவியும் இருவிசும்பும் நின்னகத்த நீயென்
செவியின் வழிபுகுந்தென் னுள்ளாய், – அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை என்பதனை யாரறி வார்?,
ஊன்பருகு நேமியாய்! உள்ளு.[33]

என்று கூறுவதில் விண்ணும் மண்ணும் அவன் அகத்துள்ளே ஒடுங்கியுள்ள நிலை உணர்த்தப்படுகின்றது. "உலகம் முழுவதையும் அடக்கிய நீயே என் உள்ளத்திலே குடிகொண்டாய். அப்படி இருக்க நீ பெரியையா? நான் பெரியவனா? இதனை யார் அறிவார்" என்று பேசும் நிலையில் பரமாத்மாவை உள்ளடக்கிய உயிரான்மா வின் உயர்நிலையை விவரிக்கின்றார் ஆழ்வார். இதனால் தெரிய வைக்கும் அகப்பொருள் நுணுக்கம் நோக்கத்தக்கது. அதாவது, தலைவியினும் உயர்ந்தவன் தலைவன்; "இறையோன் உயரினும் குறைவின்று என்மனார்"[34] என்பது இலக்கண விதி. ஆயினும் அத்தகு உயர்தலைவனையும் தன் நெஞ்சத்து இருத்தி என்றும் மறவாது எஞ்ஞான்றும் தலைவனினும் பெரியவன் என்னும் உணர்வின் உந்துதலால் பிறந்த பெருமித நினைப்புத் தோன்றும். "தந்தது உன் தன்னைக் கொண்டது என்தன்னைச் சங்கரா யார் கொலோ சதுரர்"[35] என்ற மணிவாசகர் வாக்கு ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. இதை நோக்கும் போது ஆழ்வார்கள் நாயகியாகத் தம்மைப் பாவித்துக் கொண்ட நோக்கு புலனாகின்றது.

Koviloor Digital Library

தலைவனிலும் பெரியவன் என்னும் அன்பிலே கட்டுண்ட நிலை அது. உலக நெறியில் வைணவ சம்பிரதாயப்படி நாராயணனே பர தெய்வம், எல்லாம் அவனுக்குச் சரீரமானவை. அவனே சரீரி. காணப்படுகின்ற உயிருடைப் பொருள்கள், உயிரில் பொருள்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கியவன்; அவ்வாறு அவன் அடக்கியவை அவனது கட்டளையின்றி வெளியில் புறப்படா. இவ்வாறு எலலாவற்றையும் உள்ளே வைத்துக் கரந்தவன். இவ்வளவையும் கரந்து வயிற்றுக்குள் அடக்கி ஒரு சிறிய ஆலந்தளிரிலே ஊழிக்காலத்து வைத்துக் காப்பாற்றுபவன். இப்படிப்பட்ட இயலாதனவற்றையும் இயற்றுவிக்கும் திறனுடைய மாயனையல்லாது மற்றொரு கடவுளை இறைவனென்று எண்ணியிருப்பது பேதைமை என்பதை,

நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்
தளிரொளி யிமையவர் தலைவனும் முதலா
யாவகை யுலகமும் யாவரும் அகப்பட
நிலநீர் தீகால் சுடரிரு விசும்பும்
மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மயங்கு
ஒருபொருள் புறப்பா டின்றி முழுவதும்
அகப்படக் கரந்த ஓர்ஆலைச் சேர்ந்தஎம்
பெருமா மாயனை யல்லது
ஒருமா தெய்வம்மற் றுடையமோ யாமே?[36]

என்னும் பாடல் மூலம் உணர்த்துவதைக் காணலாம். இதனால் நாராயணனுடைய பரத்துவத்தையும் தலைமையையும் காட்டி நம்மாழ்வார் அறுதியிடுகின்றார்.

ஒரு தலைவிக்குத் தலைவன்தான் பரதெய்வம். அவனே எல்லாவற்றிற்கும் கதி. அவனுள்ளே இவள் அடக்கம். அவனிட்ட வழக்கு இவள். அவனுடைய கட்டளையின்றி இவள் புறப்பட முடியாது. அவனுள்ளே அகத்துக் கரந்து கிடப்பவள். அவன் விருப்பப்படி ஏவல் செய்பவள்; இப்படித் தலைவனையே மேலான தெய்வமாகக் கொண்டு ஒழுகுகின்ற தலைவியின் மேன்மையையும் அவள் மூலம் தலைவனின் மேன்மையையும் ஆழ்வார் பெற வைக்கின்றார். இதனால் பரமாத்மாவிடம் ஜீவாத்மா ஒடுக்கம் என்பதையும், அவளிட்ட வழக்காய் இந்த உயிர் செயல்படும் என்பதையும் உள்ளுறையாகக் காட்டுகின்றார்.

இவ்வகையில் புற நிகழ்ச்சிகளைக் காட்டி அகப்பொருள் நுணுக்கத்தைப் பெற வைப்பதும், அகப்பொருள் நுணுக்கத்தின் மூலம் உள்ளுறைப் பொருளைச் சுட்டுவதும் நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் போக்கில் ஆங்காங்கே மைல் கற்களாக எல்லை காட்டி நிற்கின்றன.

Koviloor Digital Library

வைணவப் பக்திப் பாடல்கள் உணர்ச்சிகளை ஆழமாகத் தொடுகின்றன. அவற்றுள் சரணாகதி எனப்படும் பிரபத்தி நெறியொன்றே வலியுறுத்தப்படு கின்றது. வேதங்களிற் சிறப்பிடம் பெற்ற கர்ம மார்க்கம், உபநிடத்துக்களிற் சிறப்பிடம் பெற்ற ஞானமார்க்கம் யாவும் பக்தி நெறியோடு இணையும் போதே பயனுள்ளவையாகின்றன எனப்படுகிறது. பயனை எதிர்பாராது கடமையைச் செய்ய வேண்டும் என்ற பகவத்கீதை அறவுரை வாழ்விலிருந்து ஒதுங்கிப் போகும் வைராக்கிய மனப்பான்மைக்குத் தடையாக அமைகிறது. ஆகவே அவதாரங்கள் எடுத்து வரும் திருமால், அடியார்கள் அண்மிச் செல்லக் கூடியவராகக் காணப்படுகிறார்.

> சங்க காலத்திற் சிறப்புற்றிருந்த இயற்கை நெறியின் ஓர் அம்சமான உலகியற் காதல் பக்திப் போர்வையிலே திரும்பவும் தலைகாட்டுகிறது. புலவர்கள் தங்கள் இதயங் களைத் திறந்து, இயல்பாக எழும் காதலுணர்ச்சிகளைக் கடவுள்பேரில் வெளியிடு – கின்றனர். கோகுலத்திலே, பிருந்தாவனத்திலே, கண்ணன் கோபிகைகளுடன் செய்த லீலைகள், ஆழ்வார்கள் பக்திக் காதலைப் பாடும்போது, அடிப்படையாக அமைந்து, அப்பாடல்களுக்கு இயற்கைத் தன்மையை அளிக்கின்றன.[37]

என்பார் தம் கருத்து ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. ஆகவே வைணவர்களின் மனத்தைத் திருமால் அவதாரங்களின் வரலாறுகள் கவர்ந்தன என்னும் அடிப்படையைக் கொள்ளலாம். இந்த அடிப்படையில் ஆழ்வார்களின் பாடல்களைக் கணிக்கும்போது, அவர்களுடைய பாடல் முறையின் பாவனை நெறியை நோக்கலாம். அவ்வாறு நோக்கும்போது, இருநிலைகளில் அவற்றைப் பாகுபடுத்த முடியும். முதலாவதாக காந்த பாவமும், அடுத்ததாக மதுர பாவமும் பகுக்கப் படுகின்றன. இவ்விரு நிலைகளுமே பெருநிலையில் வைத்துப் போற்றத்தக்கன.

காந்த பாவம்

அவதாரப் பெருமைகள் ஆழ்வார்கள் பாடல்களில் பேசப்படுகின்றன. அவதாரங்கள் அருட்செயல்களாகக் கொள்ளப்படுகின்றன. இக்கதைகளில் ஆழ்வார்கள் அழுந்தி அழுந்திப் பாடியுள்ளனர் என்பது தெரியலாம். கண்ணன் அவதாரமும், இராமாவதாரமுமே ஆழ்வார்களின் மனத்தைக் குறிப்பாகவும், சிறப்பாகவும் ஈர்த்தன. இந்த ஈர்ப்பினால் உந்தப்பட்டு உணர்வுகளைப் புலப்படுத்திப் பாடுதல் 'காந்த பாவம்' என்ற அமைப்பு ஆகும். கண்ணன் ஆய்ச்சியர் தொடர்பான காதல் வெளிப்பாட்டில் சிறக்கின்றது. தலைவன் ஒருவனாய்

Koviloor Digital Library

அவனைப் பற்றிப் பாடும் தலைவியர் பலராய் இங்கு ஆன்மக் கூத்து நிகழ்கிறது. இது கற்பு வழிப்பட்டது என விளக்கம் தருவார் துரை அரங்கசாமி.[38] இம்முறையே நோக்கின் பெரியாழ்வாரும், ஆண்டாளும் கண்ணன் அவதாரத்தில் தம் உள்ளத்தைப் பறி கொடுத்துள்ளனர் என்பதை உணரலாம். ஆயின் ஆண்டாள் பாடுநிலை தனிவகைப்பட்டதாம்.

இவர்களுள் பெரியாழ்வார் பெருமானுடைய வாழ்வைத் தமது வாழ்வாக நினைத்துத் 'திருப்பல்லாண்டு' பாடியுள்ளார். இதனை,

சோராத காதல் பெருஞ்சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும்
பாராது அவனைப் பல்லாண்டு என்று காப்பிடும் பான்மையன்[39]

என்று திருவரங்கத்து அமுதனார் மொழிகள் தெரிவிக்கின்றன. கண்ணன் அவதாரம் இவருள்ளத்தைக் கொள்ளை கொண்டதால், கண்ணனின் தோற்றம் முதல் அவன் செய்த பிள்ளைக் குறும்புகளையும், துணிவான வினைகளையும், வெற்றித் திறன்களையும் யசோதையின் பேச்சுக்களாகவும், ஆய்ச்சியரின் பேச்சுக்களாகவும் பாடியுள்ளார். பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கிய வகைக்கு வித்திட்ட பெருமை இவரைச் சேருமெனலாம்.

"கண்ணனாகிய குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்கவும், விளையாட்டுக்களைப் பார்க்கவும் மட்டிலும் ஆசைப்படாத உள்ளம் அவனுடைய துடுக்கான செயல்களையும் அதிமானுடச் செயல்களையும் காண ஆசைப்பட்டதை அவர் பாடியுள்ள பாசுரங்களில் காணலாம்" என்பர்.[40]

பொன்னைக் கொண்டு ரைகல் மீதே
நிறமெழ வுரைத்தாற் போல்
உன்னைக் கொண்டென் நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்
உன்னைக்கொண் டென்னுள் வைத்தேன்
என்னையும் உன்னி லிட்டேன்.[41]

என்னும் ஆழ்வார் உரையே இக்கூற்றுக்கு உரைகல்லாகும்.

இவர் தம் மகளாரின் பெருமையைப் புகழ்ந்து 'என்னை ஆண்டாள் இவளே!' என்று தம் மகளுக்குப் புகழ்மாலை சூட்டியதால் அன்று முதல் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி 'ஆண்டாள்' என்ற பெயர் பெற்றார். எனினும் 'ஆண்டாள்' என்ற பெயர் அவருக்கு எப்போது ஏற்பட்டதென்பது விளங்க வில்லை. ஆண்டவன் தேவியாதல் பற்றி ஆண்டாள் என்ற பெயர் வந்திருத்தல் கூடும் என்பர் கா.சு. பிள்ளை.[42] இவர் 'மானிடவர்க் கென்று பேச்சுப்படின் வாழகில்லேன்' என்று கூறித்

Koviloor Digital Library

திருவரங்கப் பெருமானையே கணவனாகக் கருதினார். இவர் பாடல்களில் கண்ணனைப் பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப் பெறுகின்றன. திருப்பாவையில் வரும் கண்ணனைப் பற்றிய செய்திகள் சான்றாகின்றன.[43] இவர் படைத்த நாச்சியார் திருமொழியில் உள்ள நூற்று நாற்பத்து மூன்று பாடல்களிலும் கண்ணன்பால் இவர் காட்டும் காதற் பெருக்குப் புலனாவதையறிவதால் அது மதுர பாவத்திற்குரியதென்பது தெளிவாகும். அஃதாவது களவு வழிப்பட்ட காதல் வெளிப்பாடு என்று இதைக் கருதலாம்.

தொல்காப்பியக் கருத்தும், சங்க நூற் செய்திகளும் கோவைகளில் மறுபிறவி பெற்று விளங்குவதைப் பார்க்கலாம். இம்முறை ஆழ்வார்கள் பாடல்களில் பின்னும் பொலிவுறச் சிறக்கின்றன. அகத்திணை மாந்தர்க்குப் பெயரிடுதல் கூடாது என்னும் தொல்காப்பிய நெறியை எல்லாக் கோவைகளும் போற்றியுள்ளதைப் போன்றே ஆழ்வார்கள் பாடல்களும் போற்றியுள்ளன. யார் பாட்டுடைத் தலைவனாகலாம் எனத் தொல்காப்பியம் வரையறை செய்ய வில்லை. ஆதலால் கோவையில் கடவுளர் பாட்டுடைத் தலைவர்களாயினர்; ஆழ்வார்களின் பாடல்களிலும் அந்நிலையையே காணலாம். ஆதலால் இதனைச் 'சமய இயற்கை' என்று கொள்ள வேண்டும் என்பது நினைவு கொள்ளத்தக்கது. ஆழ்வார்கள் திருமாலைத் தவிர வேறொருவரையும் தம் மொழியில் கலவாது அவன் ஆண்மையிலும் தம் பெண்மையிலும் (பாவனை) இடையறாது மனத்தைச் செலுத்தினர்.

ஆண்பாலரான மற்றை ஆழ்வார்கள் தம்மை நாயகியராக ஏறட்டுக் கொண்டும் திருமாலை நாயகனாகக் கொண்டும் பாடிப் பரவினர். ஆயினும் அவர்கள் கொண்ட பாவம் = ஏற்ற பாவனை முறை இயற்கையானதன்று என்றும், அவாவிக் கொண்ட நெறியென்றும் உணர முடிகின்றது. எனவேதான் அன்னோர் திருமாலிடம் செலுத்திய அன்பு மேட்டுமடை நீர் போன்றதென்று பெரியோர் பணிப்பர்.

ஆனால் ஆண்டாள் பெண்பாலராய்ப் பிறந்து ஒன்றையும் ஏறட்டுக் கொள்ளாமல் அழகிய திருவரங்கப் பெருமானையே தம் தலைவனாக ஏற்றுக் கொண்டு – இன்னும் சொல்லப் போனால் அறுதியிட்டுக் கொண்டு, அவனிடம் உள்ளம் உருகி அன்பு செய்து பாடல்களைப் பாடினார். ஆகவே இவரது இயற்கையான காதற்பெருக்கு பள்ளமடை நீர் போன்றதென்றும் இவரது காதலைப் 'பள்ளமடைக் காதல்' என்றும் கூறுவர். இவருடைய பாடல்களைக் காணின் திருப்பாவையில் காந்த பாவமும், திருமொழியில் மதுர பாவமும் தளும்பி நிற்பதைப்

Koviloor Digital Library

பார்க்கலாம். முதலாவதைக் காரண நூல் (உபேய நூல்) என்றும் இரண்டாவதைக் காரிய நூல் (உபாய நூல்) என்றும் கூறலாம்.

குலசேகரர் உரைத்த பெருமாள் திருமொழியில்,

அல்லி மலர்த் திருமங்கை கேள்வன் தன்னை
நயந்து இள வாய்ச்சி மார்கள்
எல்லிப் பொழுதினில் ஏமத் தூடி
எள்கி யுரைத்த உரை.[44]

என்பதனால் ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கி உரைத்த திறத்திலே 'காந்த பாவம்' உணரும் வாய்ப்புண்டு. கண்ணனைக் காதலித்து இள ஆய்ச்சியர் இரவுப் பொழுதில் இடையாமத்து ஊடி இகழ்ந்துரைத்த சொற்களாக இவர் கூறுந்திறன் சிறப்புடைத்து. 'மடல்' வழிவழியாக ஒரு மரபான அகப்பொருளில் கொள்ளப்படினும் இம்மரபுக்கு ஒரு புதுமெருகு ஏற்றும் நயத்தினை இவர் வழிக் காணலாம். இதன் விரிவினை ஆழ்வார் முறையில் நிரலாக அமையும் இயல் விளக்கி நிற்கும்.

திருமங்கை ஆழ்வாரின் பாடல்களை 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர் கோனின் ஆறங்கங்கள்' எனக் கருதுவர் வைணவப் பெருமக்கள். இவரது பாடல்களில் திருமாலுக்கே அடிமைபூணும் திறம் கூறப் பெறுகின்றது. கண்ணன் அவதார நிலையில் நிகழ்த்திய அரும்பெருஞ்செயல்கள் நயம்படப் புலப்படுத்துவதால் 'காந்த பாவம்' திறன்படக் காணலாம்.[45] மேலும் இவர் தாமான தன்மையில் இருந்து பாடியன பலவாகும்.

இவரது அகத்துறைகள் அமைந்த பாடல்கள் கற்குந்தோறும் இன்பம் பயக்கும். ஆழ்வார் நாயகியின் மொழிகள் நல்லின்பம் பயப்பவை. குறுகிய காதலை, தெய்வக் காதலை இவண் கண்டு மகிழ முடியும். தமது பாடலின் இனிய கருத்தையறிய விழைவு உண்டெனில், திருமாலையும் தம்மிடம் வந்து கற்குமாறு அழைக்கின்றார் இவர்.

கண்ண நின்றனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் கவியின் பொருள்தானே [46]

என்னுந் துணிவில் இவரது உயர்ந்த பக்தி நிலையும், தன்னம்பிக்கையும் இறை யனுபவமும் பெறப்படும். அடுத்து ஆழ்வார் பாடல்களின் வகையமைப்பினை நோக்கலாம்.

Koviloor Digital Library

ஆழ்வார்கள் பாடல் நெறி

காந்த நெறி	மதுர நெறி
கண்ணனின் அவதார நிலை	நாயகி நாயக பாவனை
அடிப்படை	அடிப்படை

நாயக நாயகி முறை

அகமரபுப்படி அமைதல் துறைப் பாகுபாடு புது மரபு

1. சங்க மரபு
2. கோவை மரபு
3. பிறநெறி முறை

ஆழ்வார் கூற்று துறைகள்

இந்த வகைப்பாட்டின் வழியமையும் ஆழ்வார்கள், அவர்கள் மேற் கொண்ட நெறிமுறைகள், மாற்றங்கள், முன்னோர் மொழி பொருளே போற்றிய திறன், நயங்கள் ஆகியன நிரலே தொடர்ந்து வரும் இயல்கள் அமைத்து விளக்கும். அவ்வவற்றிற்குரிய அசைவுகளும், இணைப்புகளும் பின்னிணைப்பில் சேர்க்கப்படும்.

இந்தப் பாடல்கள் அனைத்தும் "அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்" என்கிறபடியால் இறையருளால் உண்டானவை ஆயினும் இவ்வுல கோருக்கு உணர்த்தும் திறத்தானே அகப்பொருள் மரபுகளும், நுணுக்கங்களும் விரவப் பாடியிருப்பது சிறப்பாகும்.

இவை இறைவனது மேலாந்தன்மை (பரத்வம்) அவன் பாற்கடலில் பள்ளி கொள்ளும் நிலை (வியூகம்) இராம, கண்ணனவதாரங்கள் (விபவம்), கண்ணுக்குத் தோன்றாது உள் மறைந்திருக்கும் நிலை (அந்தர்யாமி) பல தலங்களில் கோயில் கொண்ட நிலை (அர்ச்சை) ஆகிய ஐவகை நிலைகளையும் பொது வகையில் காட்டுவன. இந்த ஐவகை நிலைகளை உணர்த்தும் பான்மையில் தோன்றியவர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார் அனைவரிலும் தகுதியான முதன்மை பெற்றவர் நம்மாழ்வார். ஏனைய ஆழ்வார்களை அவயங்களாகவும் இவரை அவயவியாகவும் கொள்வர் வைணவப் பெருமக்கள்.

இவர்கள் பாடிய பாடல்கள் தானான தன்மையில் நின்று ஆழ்வாரே பேசு வதாக அமைந்த பாசுரங்கள், பெண் தன்மையை ஏறட்டுக் கொண்டு நாயகியாக நின்று பேசும் பாசுரங்கள் என்று இருவகையாகப் பெரும்பிரிவு படுத்தப்படும்.

Koviloor Digital Library

ஆழ்வார் பாடல்கள்

தானான தன்மை	ஏறட்டுக் கொண்ட
புறத்துறைப்	நாயகி நிலைப் பாடல்கள்
பாடல்கள்	அகத்துறைப் பாடல்கள்

ஆழ்வார்களின் ஞானநிலை மீதூர்ந்து நிற்கும்பொழுது புறத்துறைப் பாடல்களும், இன்பநிலை மீதூர்ந்து நிற்கும்போது அகத்துறைப் பாடல்களும் தோன்றின என்பர். இதனை,

ஞானத்தில் தம்பேச்சு
பிரேமத்தில் பெண்பேச்சு.[47]

என்று ஆசாரிய ஹ்ருதயம் குறிப்பிடுகின்றது. இனி, இன்பநிலை மீதூர்ந்து பேசும் 'பிரேமத்'தில் அமையும் பெண் பேச்சினையே ஈண்டுப் பொருளாக ஏற்று வகைப்பாடு செய்யப்படுகின்றது.

இந்த வகைப்பாட்டில் நம்மாழ்வார் முன் நிற்கின்றார். திருவாய் மொழியில் இருபத்தெட்டுப் பதிகங்கள்[48] அகத்துறைப் பாடல்களாகவும், திருவிருத்தம் முழுவதுமே (முதலும், இறுதியும் நீங்கலாக) அகத்துறைப் பாடல்களாகவும் அமைந்துள்ளன. அவற்றின் துறைகளை இனம் பிரித்து நோக்கு முறையில் மரபு வகைப்பாடும், வழிவழி மாற்றமும், பொருள் அமைவும் துறைப் பொருள்களைக் காட்டும் போக்கில் உணர்த்தப்படுகின்றன.[49]

இன்னும் திருமங்கையாழ்வாரை இவருடன் ஒப்பிட்டு நோக்கும்போது நம்மாழ்வார் பராங்குச நாயகியாக விளங்கவும், திருமங்கையாழ்வார் பரகால நாயகியாக அமையவும் காணலாம். இருவரும் மரபு முறையினைப் பின்பற்றிக் கூற்று நிலைகளில் பாடல்களை யாத்திருப்பது குறிப்பிடத் தக்கது. கோவைத் துறை முறையில் பாடுவதற்காகவும் மயங்கல் பெண்மை நிலை அவாவி ஆன்மா வின் துடிப்பைக் காட்டும் வகையிலும் தாய், தோழி, மகள், தலைவன், கூற்று முறையில் பாடியிருக்கின்றனர். திருமங்கை மன்னனின் திருமடல்கள் இரண்டும் தனியாக ஆராயத் தக்கன.

ஆண்டாள் ஒருவரே பெண்ணாக இருந்து தலைவி நிலையில் தான் நின்று, கடவுட் காமம் கொண்டு 'கணவன் மனைவி உறவு ஆன்ம ஆண்டவன் உறவு போன்றது அதை ஒழிக்க இயலாது' என்று இராமானுசர் கூறியவாறு பாடியவர்.[50] ஆகவே இவரது பாடல்கள் தனிநிலையில் காணத்தக்கன.

Koviloor Digital Library

பிற ஆழ்வார்கள் சிற்சில பதிகங்களாகவும் ஒருசில பாடல்களாகவும் பாடியுள்ளனர். அவருள்ளும் சிலர் சிற்சில அகப்பொருள் கூறுகளையே தம் படைப்பில் ஆங்காங்கு இனங்காட்டியுள்ளனர்.[51] ஆகவே அவற்றை எடுத்துக் காட்டுதலும் ஆய்வுப் பொருளுக்கு அரண் சேர்க்கும் எனக் கருதி அவறறையும் விளக்குதலை அடுத்துக் காணலாம்.

இம்முறையே இனியமையும் இயல் பொருள் பாகுபாட்டுடனும், துறைப் பாகுபாட்டுடனும், மரபுகாத்தல் வழியும், மரபு மீறல் வழியும் அமையும் வகையிலும் சான்றுகளுடன் கருத்துக்களை வகைப்படுத்தி ஆழ்வார்கள் வாரியாக வகுத்தும், விரித்தும் காட்டும் போக்கில் அமையும் எனக் கருதலாம்.

★

Koviloor Digital Library

குறிப்புகள்

1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 10 ஆம் நூற்றாண்டு, ப.506.
2. மு. இராகவையங்கார், இலக்கிய சாசன வழக்காறுகள், ப. 299.
3. வி. செல்வநாயகம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.126.
4. இராமானுசரின் அருள்வாக்கு. அவர் திருநாட்டுக்கெழுந்தருளும் போது சொன்ன 82 வாக்குகளில் இதுவும் ஒன்று.
5. பொன்னிவர் மேனி மரக தத்தின்
   பொங்கிளஞ் சோதி யகலத்து ஆரம்
   பின் இவர் வாயில்நல் வேத மோதும்
   வேதியர்; வானவ ராவர்; தோழீ
   என்னையும் நோக்கியென் னல்குலும் நோக்கி
   ஏந்திளங் கொங்கையும் நோக்குகின்றார்
   அன்னையென் நோக்குமென் றஞ்சு கின்றேன்
   அச்சோ ஒருவர் அழகியவா!
   –திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 9:2–1.
6. ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்திற்குப் பின்னர் அவ்விருவரும் ஒருவருக் கொருவர் தத்தமக்குப் புலனாக 'இவ்வாறிருந்தது' எனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இனபுறுவதோர் பொருளாதலின், அதனை அகம் என்றார். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஓர் ஆகு பெயராம்.
   – தொல். பொருள். நச். நூற்பா. 1.
7. எம். ராதாகிருஷ்ண பிள்ளை, பிற்கால வைணவம், ப. 104.
8. எம். ராதாகிருஷ்ண பிள்ளை, பிற்கால வைணவம். ப. 114.
9. உடுப்பிக்கருகே கலியாணபுரத்தில் வைதீக அந்தணர் குலத்திலே மத்வாசாரியர் பிறந்தார்; வைணவ சமயக் கொள்கைகளை அச்சுதப் பிரகாசர் என்ற துறவியிடம் கற்று, துறவறத்தை மேற்கொண்டார். இளமையிலிருந்தே சங்கரரின் அத்வைதக் கொள்கைகளைக் கண்டித்து வந்தார்.

   'உலகம் தனித்து இருக்கும் ஒரு பொருள்; இறைவனின் வேறானது; உயிர்கள் கரையேற அவனைச் சார்ந்து நிற்கின்றன. அவை நல்லனவும் தீயனவுமாக

Koviloor Digital Library

உள்ளன. தீயவை தீமை அடையும்; நல்லன பக்தியின் மூலம் ஈடேறும். பகவானை வேத நூல்கள் வழியிலே சென்று அறியலாம்; நாராயணனே தனிப்பரம்பொருள்' என்பது மத்வர் கொள்கை. இதற்குத் துவைதக் கொள்கை என்றும் கூறுவர்.

இறைவன் நிர்க்குணன், உலகம் வெறுந்தோற்றம், மாயையால் தோன்றுவது என்பது அத்வைதக் கொள்கை.

இறைவன் குணங்கள் நிறைந்தவன்; பிரம்மம் சூக்ஷ்ம – சித் – அசித் – விசிஷ்டமாம் உலகத்தின் தோற்றமாய் அமைந்தது. உலகம் இறைவனின் ஒரு பகுதி என்பது இராமானுசரின் விசிட்டாத்வைதக் கொள்கை.

10. "Aazhwars and Daasars", Indian Express, Thursday, February 24, 1983. P.5.
11. இந்திரா மனுவேல், "பக்தி இலக்கியத்தில் அகக்கோட்பாடு" பதினோராவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி 1, பக்.84–89.
12. எம். ராதாகிருஷ்ண பிள்ளை, பிற்கால வைணவம், ப.123.
13. தேசிகன் ரா.ஸ்ரீ. கவிதைக்கலை, இரண்டாம் பாகம், ப.3.
14. காண்க. பின்னிணைப்பு.
15. மு. சண்முகம் பிள்ளை, அகப்பொருள் மரபும் திருக்குறளும், ப.5.
16. இந்திரா மனுவேல், முற்கூறிய கட்டுரை, ப.90.
17. அ. நலங்கிள்ளி, "தமிழ் இலக்கியக் கொள்கை", பன்னிரண்டாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 1, ப.398.
18. தொல்.
19. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1.
20. திருமொழி, 9. 5:10
21. "வைணவ சமய நூல்கள்" என்னும் தலைப்பில் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் (31.1.1973) சொற் பொழிவாற்றினார். அவ்வமயம் தமிழ்த்துறை எழுப்பிய வினாக்களுக்கு விடையளிக்கும்போது தந்த விளக்கம் இது.
22. காண்க விளக்கக் கட்டுரை உள்ளுறைப் பொருள்.
23. கண்ணி நுண் சிறுத்தாம்பு, 1.
24. கண்ணி நுண் சிறுத்தாம்பு, 2.
25. கண்ணி நுண் சிறுத்தாம்பு, 6.

Koviloor Digital Library

26. கண்ணி நுண் சிறுத்தாம்பு, 7.

27. கண்ணி நுண் சிறுத்தாம்பு, 9.

28. அப்பிள்ளை என்பார் இராமானுச நூற்றந்தாதியின் பாடல்களைச் சேர்க்காமல் 4000 ஆகக் கணக்கிடுவர். ஆயினும் வைணவம் நிலைத் திருக்கும் காலம் வரையிலும் இராமானுசருடைய பெயரும் நிலைத்திருக்கு மாறு காத்தல் வேண்டும் என்னும் எண்ணத்தில் இந்த ஆய்வுரை 'இராமானுச நூற்றந்தாதி'யைச் சேர்த்தே கணக்கிட்டு ஆராய்கின்றது.

29. பெரிய திருமொழி, 10–10:9.

30. "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்றார் கோலவில் இராமனும். இராம பிரானைப் பார்த்துப் பிரமன் உள்ளிட்ட தேவர்கள் பரத்துவம் பேசியபோது "நான் மனிதன், தசரதன் மகன்" என்று சொன்னான் இராமன் என்றார் பெரியவாச்சான் பிள்ளை.

31. திருநெடுந்தாண்டகம், 19.

32. திருவிருத்தம், 81.

33. பெரிய திருவந்தாதி, 75.

34. திருவாசகம் கோயில் திருப்பதிகம். பா.9.

35. திருவாசகம்.

36. திருவாசிரியம், 7.

37. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், இரண்டாம் பதிப்பு. 1972. ப.137.

38. துரை அரங்கசாமி.

39. இராமாநுச நூற்றந்தாதி, 15.

40. ந. சுப்பு ரெட்டியார், முற்கூறிய கட்டுரை

41. பெரியாழ்வார் திருமொழி 5.4:5.

42. கா. சுப்பிரமணிய பிள்ளை, ஆண்டாள் வரலாறும் நூலாராய்ச்சியும், ப.21.

43. திருப்பாவை 5, 8, 24 ஆகிய பாடல்களில் கண்ணன் ஆயர் குலத்தில் தோன்றியமை, சகடாசுரனை அழித்தமை, சாணூரன், முஷ்டிகன் என்ற மல்லரைக் கொன்றமை, கேசியைப் பிளந்தமை, கன்று குணிலாக் கொண்டு விளவெறிந்தமை, குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தமை போன்ற செய்திகளைக் காணலாம்.

44. பெரியாழ்வார் திருமொழி 6:10.

Koviloor Digital Library

45. ஏழுவிடைகளை அடர்த்தது, விளங்கனி எறிந்தது. பேய்முலை உண்டது. மருதிடந்தது, குன்றெடுத்தது, அன்ன மாயன்றங் கருமறை பயந்தது. அந்தணாளன் பிள்ளையை அந்நாளளித்தது முதலியவற்றைக் குறிப்பிடலாம். – திருமொழி 10.5, திருமொழி 10.7, திருமொழி 10.9.

46. பெரியாழ்வார் திருமொழி 7.10:10.

47. ஆசாரிய ஹிருதயம், நூற்பா 118.

48. காண்க பின்னிணைப்பு.

49. காண்க பின்னிணைப்பு.

50. இராமாநுசர் (எதிராசர்) உறங்காவில்லிதாசரையும் பொன்னாச்சி என்னும் ஹேமாம்பாளையும் சேர்த்து வைத்தார்.
– காழியூர் சேஷாத்திரி மணவாளன், இராமாநுசர், ப.33.

51. காண்க பின்னிணைப்பு – "ஆழ்வார்கள் அகத்துறைப் பாடல்கள் பட்டியல்."

Koviloor Digital Library

இயல் ஐந்து

நாயகன் - நாயகி பாவம் - ஒரு விளக்கம்

பதியமைந்து நாடிப் பருத்தெழுந்த சிந்தை
மதி யுரிஞ்சி வான்முகடு நோக்கிக் – கதிமிகுத்தங்
கோல்தேடி யோடும் கொழுந்ததே போன்றதே
மால்தேடி யோடும் மனம்.

- இரண்டாம் திருவந்தாதி

Koviloor Digital Library

நாயகன் நாயகி பாவம் - ஒரு விளக்கம்

அகத்து எழும் இறைவன் மீது கொண்ட காதலைப் புறவடிவ அமைப்பு முறையில் அக இலக்கணக் கூறுகளில் அடக்கி வெளிப்படுத்தியவை, இறைமைக் காதற்பாக்களாம். வெளியீட்டுப் பாங்கில் காணப்பெறும் இலக்கண மரபுகளுக்கு அப்பால் உள்ளீடு பொருளாய் உறைந்து நிற்பது உயிர்க்கும் இறைக்கும் இடையே உள்ள உறவுநிலையாகும். இவ்வுறவு நிலையின் உள்ளார்ந்த தத்துவத்தினை ஆய்ந்து காண்பதால், இறைப்பற்று இலக்கியங்களில் பெரிதும் போற்றப்பெறும் அகமரபுகளின் உண்மைப் பொருளை அறிய வாய்ப்புக் கிடைக்கின்றது. இதனை எடுத்து விளக்குவதே இவ்வியலின் நோக்கமாகும். நாயகன் நாயகி பாவத்தின் பொருள் விளக்கமே இயலின் உட்பெறு பொருளுமாகும்.

இறையோடு உயிர் ஒன்றுபடத் துடிக்கும் அன்பு நிலையைக் காண்பதற்கு முயலும் நெறியே, பக்தி நெறியாகும். அப்பக்தி நெறியில் நிற்கும் அடியார்கள், தம்மை இழந்து அவனில் கரைந்து ஒன்றி உடனாதற்கு மேற்கொள்ளும் வழிநிலைகளைப் பெரியவர்கள் வகுத்து வைத்துள்ளனர். தாச மார்க்கம், சன்மார்க்கம், சக மார்க்கம், ஞான மார்க்கம் என்ற அறிவு நெறி பற்றிய வகைமைப்பாடும், தாஸ்யம், ஸக்யம், வாத்சல்யம், மதுரம் என்ற அன்புவழிப் பிறந்த வகைமைப்பாடும், இறைவனோடு தமக்குள்ள சம்பந்த ஞானத்தை உணர்ந்த அடியார்கள் மேற்கொள்ளுகின்ற நெறி முறைகளைப் பற்றியனவாக அமைதலைக் காட்டுகின்றன.[1]

அன்பு, ஒருவனைத் தன்னை மறக்கச் செய்யும். அன்பு கொள்வாரிடத்துத் தொண்டு செய்வதற்காகத் தன்னையே முழுமையாக ஒப்புவிக்கச் செய்யும். அன்பு செய்வாரும், அதனை ஏற்பாரும் ஒன்றாகக் கலக்கின்ற அத்துவித நிலையினை அது உருவாக்கும். தாமான தன்மை அழிதலே அன்பு செய்தலின் இறுதி நிலையாகும். இதுவே பக்தி நெறியின் உயிர்நிலை. இங்கு இறை வேறு, உயிர் வேறு என்ற வேறுபாடு ஒழிந்து, ஒன்றிக் கலக்கும் உயர்பேறு வாய்க்கின்றது. இதனை அடைவதே எடுத்த பிறவியின் அடிப்படை நோக்கமென அடியார்கள் கருதினர். ஏதுக்களாலும், எடுத்த மொழிகளாலும், வழிபாட்டுச் சடங்குகளாலும் இந்நிலையை அடைவதினும், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உருகிப் பாடும், இசை வழியை ஏற்றவழியாய்க் கண்டனர், இடைக்காலத்து வாழ்ந்த அடியார்கள்.

Koviloor Digital Library

பெண்மைர்மை கொள்ளல்

பெண் என்ற சொற்குப் பொருள் கட்புலனாயதோர் அமைதித் தன்மை என்பர்.[2] பெட்பு அல்லது பேணுதல், விரும்புதல் என்ற பொருள் விளக்கமும் அதற்குக் கொள்ளலாம். 'மாதர் காதல்'[3] எனத் தொல்காப்பியம், இதற்கு அழகு என்ற பொருளையும் எடுத்துரைக்கும். எனவே, அமைதி, அன்பு, அழகு என்ற மூன்றும் இயைந்தொருங்கு வீற்றிருக்கும் வடிவே பெண்ணாகும். அமைதி உண்டாகும் இடத்து அழகும், இரண்டும் இணையும் இடத்து விருப்பமான அன்புச் சூழலும் உருவாகும் என்பது பெறப்படும். "அமைதி, நிறைவால் உண்டாவது. நிறைவு என்பது ஈண்டு நற்குணங்களின் நிறைவாம். எல்லாவித நற்குணங்களும் ஒருவர்பால் நிறைவுறின், யான், எனதெனும் அகங்கார மமகாரங்கள் கெட்டொழியும்; ஆண்டவர்பால் அன்பும், அவரொருவரே தமக்கும் பிறர்க்கும் தலைவன் என்ற எண்ணமும் உண்டாகும். அவன் நாயகன் என்றும், தான் நாயகி என்றும் கருத்துண்டாய் அமைந்தொழுகும் சிறப்புண்டாகும்."[4]

தாமான தன்மையழிந்து, பெண்மையினை ஏறிட்டுக் கொண்டு, இறைவனோடு உறவு பூண்டு அன்பு பாராட்டுகையில், அவன் இடையறாத இன்பம் அருளுவன். இதனையே பேரின்பம் என்றனர். இடையிடையே அற்றுப் போகும் இன்பம் சிற்றின்பமாயிற்று. இதனை வெறுத்துப் பேரின்பம் அடையும் வழிகளில் ஒன்றாக இப்பாவனையை மேற்கொண்டதனால், இதன் பெருமை கருதி 'மஹாபாவனை' என்றனர், வடநெறியாளர்.

இந்தியச் சமயப் பண்பாட்டின் விளக்கமாக அமையும் இந்நெறி முறை உலகளாவிய பொதுமை நிலை கொண்டது என்பது இங்குக் கருதத் தக்கது. இந்திய மண்ணில் வேதகாலம் முதல் இது பற்றிய சிந்தனை இருந்ததைப் பிரகதாரண்ய உபநிஷத் நமக்கு எடுத்துக் காட்டும். "மானிடன், மனைவியுடன் இன்புறுகையில், உள்ளும், புறமும் வேறு சிந்தனையின்றிக் காதலில் கரைந்து, அதன் மயமாகின்றான். இவனே, அறிவு வடிவமான இறையுடன் கலக்கையில், தன் நிலை அழிந்து, அதுவாகவே மாறுகின்றான். அதுதான் அவனின் உண்மைச் சொரூபமாகிறது. அந்நிலையில் அவன் விருப்பம் நிறைவு பெறுகிறது; அவன் ஆன்ம விருப்பமும் அதுவாகும்; அப்பெருநிலை எய்துங்கால், விருப்பு, வெறுப்பற்ற ஆன்ம ஈடேற்றம் நிறைவடைகிறது."[5]

மானிடக் காதல், இறைமைக் காதலின் குறியீடு என்ற இத்தத்துவம், சைவ, வைணவ சமயங்களில் ஆழப் பதிந்ததாக அமைகின்ற நிலையை இந்தியச் சமய வரலாறு எடுத்துக்காட்டும். வடநாட்டில், வங்காளத்தில் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் தோன்றிய ஜெயதேவர் தம் கீதகோவிந்தத்தில் கண்ணன், கோபியர்

Koviloor Digital Library

ஈடுபாட்டினை மிகத் தெளிவாகப் பாடியருளி யிருக்கின்றார். மீராபாயின் இறையருட் பாடல்களும் இத்தன்மையனவே. தென்னாட்டில், ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்களில் இம்மரபு சிறப்பு நிலையில் கையாளப் பெற்றிருப்பதைக் காணலாம். இவ்வாய்வேட்டின் உட்பொருளாக அமைந்துள்ள இம்மரபு பற்றிய விளக்கங்களைத் தொடர்ந்து வரும் இயல்களில் விரிவாகக் காணலாம்.

இறைப்பற்று இலக்கியங்களில் புலப்படுத்தப் பெறும் இம்மரபு நெறி பற்றிய சாயலை சீன நாட்டில், கன்பூசியஸ் கோட்பாடுகளிலும், தாவோவினக் கொள்கைகளிலும் காணலாம் என்றும் கி.மு. 200–ல் வாழ்ந்த சூ யுவான், தொகுத்த 'ஒன்பது பாக்கள்' (Nine Odes) என்ற சமயச் சார்பான பாக்களில், இக்கூறு அமைந்துள்ளது என்றும் எஸ்.கே. சாட்டர்ஜி கூறுங் கருத்து இங்குச் சிந்திக்கத் தக்கது.[6]

திருக்குறள் பாடல்களில்

பழைய ஏற்பாட்டில், சாலமோனின் 'உன்னத சங்கீதம்' என்ற பகுதியில் காணப்பெறும் பாடல்கள், இறைமைக் காதல் உணர்வின் வெளிப் பாடாக அமைவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. "சாலமோனுக்கு (சாலமோனால்) பாடப்பட்ட பாடல்களுள் தலைசிறந்த பாடல்" என்ற பொருள்படும் உன்னத சங்கீதம் இம்மரபு தழுவியதாம். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று சொல்லப்படும் இப்பகுதி, தலைமக்களுக்கிடையே நிகழும் காதல் அனுபவங்களைச் சொல்கிறது.[7]

இப்பகுதியில், தலைமகன், தலைமகள் கூற்றாகக் கவிதைகள் அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. தலைமகள், காதலன் தோற்ற நலனை வருணித்து மகிழ்தல், "என் காதலர் எனக்குரியர், நான் அவருக்குரியள்... இராவேளையில் என் படுக்கையில் என் நெஞ்சத்தின் அன்புக்குரியவரைத் தேடினேன். நான் எழுந்து நகரத்தில் சுற்றிவந்து தெருக்களிலும் நாற்சந்திகளிலும் என் நெஞ்சத்தின் அன்பிற்குரியவரைத் தேடுவேன். என் நெஞ்சத்தின் அன்பிற்குரியவரைக் கண்டு கொண்டேன். அவரைப் பற்றிக் கொண்டேன், விடவே இல்லை"[8] என்றும், 'அன்பு என்னும் கொடியைத் தன்மேல் பறக்க விட்டவராகிய "என் காதலர் எனக்குரியர், நான் அவருக்குரியவள்" எனும் தலைவி, தன்னை இழந்து காதல் வயப்பட்டுப் பாடும் இடங்கள் பலவற்றை உன்னத சங்கீதத்தில் காணலாம். 'உன் பார்வை என்னை மயக்குகின்றது. கன்னிப் பெண்களுக்குக் கணக்கில்லை. என் வெண்புறா, என் நிறையழகி ஒருத்தியே' என்று தலைவன் தலைவியின் அழகில் ஈடுபட்டும்,

Koviloor Digital Library

நீ என்னை உன் இதயத்தின் மேல் முத்திரையாகவும்
கையிலே இலச்சினையாகவும் பொறித்துவை.
ஏனெனில் காதல் சாவைப்போல் வலிமையுள்ளது.
அதன் சுடர்கள் நெருப்புச் சுடர்கள் போலும் !
பெருங்கடலும் அன்பைத் தணிக்க முடியாது.[9]

என்று தலைவி மேற் கொண்ட காதலை வெளிப்படுத்தியும் பாடியுள்ள இடங்கள் அன்பின் அகனைந்திணைக்குரிய இயல்புகள் வழி இறைமைக்காதல் உயர்வினைச் சுட்டுகின்றன. நிலம், பொழுது, கருப்பொருட்கள் வழி, கூடல், பிரிவு என்ற உரிப்பொருள் உணர்வுகளையும் எடுத்தியம்புகின்ற தன்மையினையும் இங்குக் காணலாம். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பின்பற்றப்பட்ட இக்காதல் மரபினைக் கிறித்துவச் சான்றோர் தொடர்ந்து கடைப்பிடித்தொழுகினர் என்பதை, கிறித்துவ ஞானிகள் செயிண்ட் பெர்னார்டு ஹென்றி சூசோ போன்றவர்கள் இயற்றிய காதற் கவிதைகள் சான்று தந்து நிறுவுகின்றன. ஆண்டாளைப் போல இறைமை அன்பில் நெஞ்சுருகிப் பாடிய செயிண்ட் தெரெசா,தன் ஆன்ம அனுபவங்களைக் கூறுகையில், இயேசுவுடன் தான் ஒன்றிக் கலந்த ஆன்ம ஒருமைப்பாட்டுத் திருமணத்தில், உடல் பற்றிய காம உணர்வுகள் எல்லாம் அழிந்தொழியப் புலன்வழி உணரும் அறிவெல்லாம் தடைப்பட, பிரிவாற்றாமையால் அநுபவிக்கும் துன்பமெல்லாம் கரைந்து, பேரின்பப் பெருக்கில் தாம் திளைத்ததாக எடுத்துரைப்பார்.[10] மனத்துக்கினியானைத் தன்னுள் அகப்படுத்திக் கொண்ட பெருமிதத்தில்,

மலர்பல செறிந்தவென் மார்பி னூடே
அலர்கதிர் அவனே அன்றிமற் றிலரே
எனக்கினி யானின் இன்பநல் லகமாய்
மனத்தினை யளித்தனன் மகிழ்வுடன் யானே[11]

என்று செயிண்ட் ஜான் பாடிப் பரவசம் அடைவார். மாயை இருளில் தடுமாறும் ஆன்மா, இறைவன் ஒளியருள் பெற்று உய்யும் வரை, அதற்கு ஏற்படுகின்ற இடர்களும், அவத்தைகளும் தலைவன், தலைவி களவொழுக்கத்தில் அவர்கள் எதிர்கொள்ளும், துன்பங்களை நிகர்த்தனவாக அமைகின்றன. இறைவன், உயிரினிடத்தில் 'கண்பொத்தி' விளையாடும் களியாட்டம் நிகழ்த்துகின்றான். அருள் முகம் காட்டியும், திருமுகம் மறைத்தும் அவன் ஆடும் இன்பக் கூத்தில், உயிர் பிரிவால் வாடியும், கூடலால் மகிழ்ந்து தளிர்த்தும், காதல் அநுபவங்களை ஒரு சேரத் துய்க்கின்றது. வடபுல மரபில் இதனை 'ஸம்லேஷம்' (கூடல்), விஸ்லேஷம் (பிரிவு) எனக் குறிப்பர். கூடலில் மகிழ்வும், நம்பிக்கையும், பிரிவில்,

Koviloor Digital Library

தன்னை முனிதலும், தாங்கொணாத துன்பம் அநுபவித்தலும் உயிர்க்கு இயல்பாகிறது. இதனையே, கிறித்தவப் பெரியவர்களும் உன்னதப் பாடல்களில் பாடியருளிய திறம், உலகளாவிய இறைமைக் காதல் கோட்பாட்டின் பொதுமைப் பண்பினை விளக்கி நிற்கின்றது.

இஸ்லாம் நெறியில்

உலகப் பற்றுக்களை ஒழித்து, இறைவன் பொருட்டு எதனையும் இழக்கச் சித்தமாய் இருந்து, இறை பணிக்காகத் தன்னை முழுமையாக ஒப்படைத்து வாழ்வது என்பன போன்ற கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருப்பதே இஸ்லாமியப் பிரிவுகளில் ஒன்றாகிய சூபிசத்தின் (Sufism) அடிப்படை தத்துவமாகும்.

சூபிக் கவிஞர்கள், உடல் அழகினைப் பெரிதும் பாராட்டிப் பாடுவது மரபு. "ஆன்மீகக் காதலை அடைதற்கான ஏணி, மானிடக் காதல்" என்பது அவர்கள் கோட்பாடாகும். உலகியல் காதல் பற்றிப் பாடும் முறையில், மக்கள் இறைவனைக் காதலித்து, அவனுடன் இரண்டறக் கலக்கும் நெறியினை வற்புறுத்தினர். மக்கள் இத்தத்துவத்தினை உணர்வதற்காக 'நாயகன் நாயகி'ப் படிமத்தினைப் பயன்படுத்தினர். பாரசீகத்திலும், இந்தியாவிலும், இஸ்லாம் கோட்பாடுகளை வெளிப்படுத்தும் பாடல்களில் ஆன்மீகத்தையும், காம உணர்வையும் ஒருங்கிணைத்துப் பாடுகின்ற காதல் பாடல்களைப் பாடுதற்குக் காரணமானவர்கள் இவர்களே.[12]

அவன் தோள்களில்
உன் குழற் கற்றைகள் அசைய
இன்துயில் கொள்ளும் பெண்ணே!
இரவின் இன்பத்தை
இதயத்தின் பெருமையினை
இனிய துயிலின் அமைதியினை
அவனுக்கே அர்ப்பணிப்பாய்.[13]

எனவரும் கஸல் (Gazal பெண்ணுடன் பேசுதல், காதலுடன் பேசுதல் என்பது பொருள்). மானிடக் காதலை, இறைமைக் காதலையடைதற்கான படிநிலை என்பதனை உணர்த்தி நிற்கும். இத்தகைய சூபிக் கவிஞர் பாடல்களில், மதுவும், முத்தமும், அணைப்பும், படிமங்களாகப் பயன்படுத்தப் பெற்று, அவற்றின்வழி இறைமைக் காதலையும் அக்காதல் அநுபவங்களின் வழி அடையும் பேரின்ப நிலையின் சுகத்தையும் கண்டின்புறலாம். மீராபாய், ஆண்டாள், செயிண்ட்

Koviloor Digital Library

தொரஸா போன்ற பெண் அடியார்கள் வழியில், சூபிக் கவிஞர், ரபியா (Rabia of Basra) இறைமை அழகில் ஈடுபட்டுத் தன்னை இழந்து பாடும் பாடல்கள் பாரசீக மொழியில் பெரிதும் போற்றப் பெறுகின்றன.

பாக்தாத் நகரில் வாழ்ந்த ஹலாஜ் (Hallaj) என்ற சூபி ஞானி கூறுவது நோக்கத்தக்கது.[14] இங்ஙனம் இறைமைக் காதலில் தன்னை இழக்கும் ஞானி, இறைத்தன்மை அடைந்து அவனாகவே மாறி விடுகின்றார் என்ற அத்துவித நிலையினை எடுத்துரைப்பர் அச்சமயப் பெரியார்கள்.

ஜலாலுடின் சூபி இவ்வற்புத நிலையினைப் பாடும் பாடல் ஈண்டு எண்ணி இன்புறுதற்குரியதாம்.[15] நாயகன் நாயகி பாவத்தின் வெளிப்பாடாக அமையும் இப்பாடலைப் போன்ற பாடல்கள் வழிச் சூபிக் கவிஞர்கள், இறையின்ப அநுபவங்களில் திளைத்து மகிழ்ந்துள்ளமையைக் காணலாம்.

இறையும், உயிரும் அன்பின்வழி ஒன்றுபடும் நிலையினைச் சைவ, வைணவ சமய இலக்கியங்களிலும் காணலாம். வடநாட்டில் ஜெயதேவர், மீராபாய் போன்ற அடியார்கள் கண்ணன் வடிவழகிலும், குண வழகிலும் ஈடுபட்டுப் பாடியருளிய கவிதைகள் 'காந்த பாவத்தின்' வெளிப்பாடுகளாக ஊனினை உருக்குகின்றன. "இளம் பெண்களின் மனம், இளைஞர்களிடம் ஈடுபாடு கொண்டு இன்புறுவதைப் போல, இளைஞர்கள் உள்ளமும், இளம் பெண்களால் ஈர்க்கப்பட்டு அந்நிலையடையும் தன்மை போல, என் மனமும் இறைவா, உன்னிடத்தில் ஈடுபாடு கொண்டு, இன்பத்தில் திளைத்து மகிழ்கின்றது"[16] என வரும் இடைக்காலத்து எழுந்த கவிதை, ஆண், பெண் உறவால் பிறக்கும் இன்பத்தின் சிலிர்ப்பு, இறை, உயிர் உறவிற்குக் குறியீடாக அமைகின்ற திறத்தினை வெளிப்படையாகவே சுட்டிக் காட்டுகிறது. கண்ணன், கோபியர் தம் இன்ப விளையாட்டுக்களில் உள்ளுறையும் தத்துவப் பொருள் இதுவென உட்கொண்டு, இதனைப் பெரியவர்கள் தெளிவுரை செய்வர்.

சைவ, வைணவ சமயங்களைச் சார்ந்த அடியார்களால், இடைக்காலத் தமிழகத்தில் இம்மரபுநெறி போற்றப்பெற்ற பான்மையினை, இனிக் காண்பது பொருத்தமாகும். இவ்வாய்வேட்டின் மையப் பொருளாக அமையும், நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அகமரபுகள் என்ற கருத்தினைத் தெளிவுபடுத்தவும், இறைப்பற்று இலக்கியங்களில், இம்மரபுகள் தனிநிலைக் கொள்கைகளாக வெளிப்படும் சிறப்பினை எடுத்துரைக்கவும் முற்படுகின்ற ஆய்வுப் போக்கில், சில அடிப்படை மெய்ம்மைகளைக் காணலாம்.

உலகளாவிய பொதுமை நெறி இது என முன்பகுதியில் சான்றுகள் சில கூறி எடுத்துக்காட்டப்பட்டது. ஆயின், தமிழ் இலக்கியங்களில் இது பற்றிய

Koviloor Digital Library

சிந்தனையும், வெளிப்பாடும், இலக்கணக் குறிப்பிலும், இலக்கிய அமைப்பிலும், சுட்டிக் காட்டப்படுகின்றனவா என ஆராய்வது, இன்றியமையாததாகும்.

தொல்காப்பியம், இறையனார் களவியல் உரை, நம்பியகப் பொருள் முதலான இலக்கணங்கள், அகனைந்திணை மரபுகளைத் தெளிவுபடுத்தும் பான்மை, இதற்கு முன் இயலில் விரிவாகக் கூறப் பெற்றுள்ளது. இறைப்பற்று இலக்கியங்களில் காணப் பெறும் அக மரபிற்கான அடிப்படையினைத் தொல்காப்பியர் சுட்டுவது அங்கு விளக்கப்பட்டுள்ளது. ஆயின், மானிடக் காதலை, வரையறைக்குட்பட்ட நிலையில், புலனெறி வழக்கில் வெளிப்படுத்தும், சங்க அகப்பாக்கள் சிலவற்றிலும், இறைமைக் காதலுக்கான முதற்படி நிலை, இம்மானிடக் காதல் எனக் குறிப்பாக எடுத்துரைக்கும் போக்குக் காணப்படுகிறது.

அகப்பாக்களுக்கு வலிந்து பொருள் கொள்ளும் போக்கு இதனைப் புறக்கணிக்க இயலாது. மாறாக, சொல்லும் பொருண்மையிலும், வெளியிடப் பெறும் பாங்கிலும், இறைமைக் காதல் நெறிக்கான கூறுகளைக் கண்டின்புறலாம். பிற்காலத்து எழுந்த இறைமைக் காதல் பாக்களின் ஊற்றுக்கண்கள் இவை. என்பதனையும் உய்த்துணரலாம். தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆகிய இடைக்காலப் பக்தி இலக்கியங்களுக்குப் பின்னரும், உலா, குறவஞ்சி, கலம்பகம் முதலான சிற்றிலக்கியங்களிலும், இம்மரபு பின்பற்றப்பட்டது. அன்றியும், தொடர்ந்து, தாயுமானவர், வள்ளலார், மஸ்தான்சாகிபு, பாரதியார் ஆகியோரும் இம்மரபினைப் பெரிதும் தழுவிப் பாடியுள்ளனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

'நாடனொடு நட்பு',[17] 'புரையோர் கேண்மை',[18] 'பிரிவதரிதாகிய தண்டாக் காமம்',[19] 'மடந்தையொடு நட்பு',[20] எனவரும் இடங்களில் சுட்டப் பெறும் நட்பு, கேண்மை, காமம் என்ற சொற்கள் காதல் என்பதனைக் குறிக்கும் ஒருபொருட் கிளவிகள் ஆகின்றன. இன்றும் நட்பினைக் காதல் என்றும்,[21] வழங்குகின்ற மரபும் உண்டு. எனவே, உயிர் ஒன்றிப் பழகிய நண்பருக்காகவோ, காதலுக்குரிய வருக்காகவோ, தன்னையே இழக்கும் துணிவு, நட்புக்கும், காதலுக்கும் பொதுத் தன்மையாகிறது. இந்த அடிப்படையினை ஏற்றுக் கொண்டால், அடியவன் தன்னை ஆண்டவன்பால் இழக்கத் துணியும் நிலையினையும் காதல் என்று கொள்வதில் தடை ஏற்படாது. அன்றியும் நட்பிலும், காதலிலும், புணர்ச்சி பழகுதல் வேண்டாமலே உணர்ச்சி ஒன்றுபடுதலும் உண்டு. கண்டு பழகுதலும், காணாது நினைந்து மகிழ்தலும், இரண்டற்கும் பொதுவாகும். எனவே, தன்னை இழக்க முற்படும், அன்பின் முதிர்நிலை நட்பிலும், காதலிலும் அமைகின்ற உண்மையை உட்கொண்டு சங்கப் பாவலர்கள், அகனைந்திணை மரபுகளில், இதனைப்

Koviloor Digital Library

பாடினர். தன்னைப் பற்றிய முனைப்பு அழிவதற்கு ஏற்ற மனப்பாங்கினை உருவாக்குவதே தலைவன் தலைவியர் உறவின் குறிப்பு என இதனைப் பொதுவாகக் கொள்ளலாம். தற்போதம் கழிந்து தனித்தலைவனாம் பரம்பொருள் நினைப்பிலே திளைப்பது பத்தித் துறையாகிறது. எனவே இரண்டற்கும் அடிப்படை ஒன்று என்பது போதரும்.

ஒருயிர், ஈருடம்பு எடுத்து தலைவன், தலைவி என்ற நிலையில், உள்ளம், உயிர், அன்பு இவற்றின் நிறைவால் இன்பம் எய்துகின்றனர். எனவே, அவர்கள் துய்க்கும் இன்பம், காம இன்பம் எனப்படுவது. நிறைவுடைமையால் வருவது. காமத் துன்பம் என்பது நிறைவு குறைவதால் வருவது.

> திருவள்ளுவர் 'இன்பம் கடல் மற்றுக்காமம்' என்றும், ஊடுதல் காமத்திற்கின்பம் என்றும் கூறியிருப்பதால், காமம் வேறு; இன்பம் வேறு; காமம் காரணம்; இன்பம் காரியம். காமத்தால் வருவது இன்பம்; ஆனால், இவ்வின்பம் வெறும் உடலளவில் பெறும் இன்பமன்று; உணர்வால் பெறும் இன்பமாகும். இது பற்றியன்றோ காமம் என்ற சொல்லையே பயில ஆண்டு, இன்பம் என்ற சொல்லை அருகி ஆள்கின்றார் திருவள்ளுவர் காமத்துப்பாலில்![22]

என்று இதனைத் தெளிவுபடுத்துவார் மொ. அ. துரையரங்கசாமி.

எனவே, மெய்யுறு புணர்ச்சியால் வரும் உடல் இன்பம் என்பதினும், ஒருவர் உள்ளத்து ஒருவர் நிறையும், மன நிறைவால் பெறுவது காம இன்பம் என்று கொள்ள இடம் ஏற்படுகிறது.

இவர்கள் நட்புக் களவில் சிறக்கின்றது. புறத்தடைகள் எல்லாம் காதலுக்கு வலுக் கொடுக்கின்றன. அவனில் அவளும், அவளில் அவனும் கரைந்து நிற்கையில் கூடுவதால் இன்பமும், இணைபிரியின் இடையறாத் துன்பமும் அவர்களைச் சென்று சேர்கின்றன. பிரிவால் காதலர் படும் துன்ப நிலைகளைப் பாடும் பாக்களில், அன்பு நெஞ்சங்களின் துடிப்பினையே கேட்கின்றோம். ஒருவரில் ஒருவர் இன்றியமையாதவராய்த் தம்மை ஐக்கியப் படுத்திக் கொள்ளும் வகையில் முழுமையாகத் தம்மை ஒப்புக் கொடுக்கின்றனர்.

> நல்கார் நயவாராயினும்
> பல்காற் காண்டலு முள்ளத்துக் கினிதே[23]
> தாயுடன் றலைக்கும் காலையும் வாய்விட்

Koviloor Digital Library

டன்னா யென்னுக் குழவி போல
இன்னா செயினு மினிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினளென் தோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே[24]

என வருமிடங்களில், தலைவி தன்னை முழுமையாகத் தலைவனிடம் ஒப்புக் கொடுத்து ஆட்பட்டு நிற்கும் அன்புவழிப்பட்ட அடிமைத் திறத்தினைக் காணு கின்றோம். இச்சங்ககால அன்பே பக்திக்கால இறையன்பாகப் பரிணமிக்கிறது எனலாம்.

கூடியும், பிரிந்தும், மறுபடி கூடுதற்கே உயிர்ப்பாரம் பொறுத்தும் வாழ்வ தாக அகப்புறப் போராட்டங்களின் நிலைக்களனாகக் களவுக் காலம் அமைவதைச் சங்க அகப் பாக்கள் எடுத்துரைக்கும். பிரிவால் படும் துயரினைப் பாடும் பாக்களே, மிகுதியும் அமைந்துள்ளமையும் இங்கு எண்ணத்தக்கது. ஐந்து திணைகளில், குறிஞ்சி நீங்கலாக நான்குமே பிரிவு பற்றியன என்பதும் உன்னற்பாலது.

... ... காதலர்
ஒரு நாள் கழியினும் உயிர் வேறுபடுஉம்[25]
மணங்கமழ் கானல் இயைந்தநங் கேண்மை
ஒருநாள் பிரியினும் உய்வரிது[26]
... ... அளியள்தானே யாக்கைக்கு
உயிரியைந்தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோளே[27]
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே[28]
பிரிவரிதாகிய தண்டாக் காமமொடு
உடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவே மாகிய உலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே[29]

என வருமிடங்களிலெல்லாம், தலைவன், தலைவியின் அன்புப் பிணைப்பில் பிரிவு தலைப்படுதல் உயிர் போகைக்குரிய துன்பம் தருவதாகிறது. இங்கு இருவர் உறவும் உடலொடு உயிர் கலந்தது ஆதலின், உடம்பினைப் பிரியினும், உயிரினைப் பிரிவது போல்வதோர் துன்பம் உணரப் பெறுகிறது. இறைக்கும், உயிர்க்கும் இடையே உள்ள காதற்பிணைப்பும், இத்தன்மைத்து என முன்னரும் எடுத்துக் காட்டப் பெற்றது. இங்கு, உயிர், இறைவன் அன்பில் கனிந்த அருளைப் பெறாது

Koviloor Digital Library

மறுகுகின்ற காலங்களில் எல்லாம், வாழ்வதும், பொருளற்றதாய், நினைந்தும், அவன் புகழ் வனைந்தும், நினைப்பில் நெஞ்சு நெகிழ்ந்தும், கண்ணீர் வார்த்தும், அரற்றியும், புலம்பியும் துடிக்கும் நிலையினைக் காணலாம்.

எனவேதான், பிரிவில்லாத, நிலைபேறுடைய பேரின்ப நிலையை அடைய உயிர் துடித்து நிற்கின்றது. தலைவனும் தலைவியும், முடிவில்லா இன்பத்தில் இவ்வுலகிலன்றி, இனிப் பிறப்பெடுக்கும் காலங்களிலும் பெற்று மகிழ வேண்டும் என்ற நினைப்பில் உடல் அழியும் என்ற உண்மையினை உணர்ந்தாலும், அடுத்த பிறப்பில் தம் நிலை என்னாகுமோ என அஞ்சி வருந்துவதையும் சங்கப் பாக்கள் எடுத்துரைக்கும்.

சாத லஞ்சேன் அஞ்சுவல் சாவில்
பிறப்புப் பிறிதாகுவ தாயின்
மறக்குவன் கொல் என் காதலரெனவே[30]
இம்மை மாறி மறுமையாயினும்
நீயா கியாரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.[31]

என வரும் பாடல்களிலும்.

தன் துணையாக – இம்மை மறுமைக்குத் துணையாக[32]

என்ற கலித்தொகையடிக்கு உரை விளக்கம் தரும் நச்சினார்க்கினியர் உரையிலும் இவ்வுண்மை தெளிவுறுத்தப் பெறும். தலைவனும், தலைவியுடன் கொண்ட அன்பு மறுமையிலும் தொடர்வது என்னும் உறுதிப்பாடுடையவன் என்பதை,

இன்றை யன்ன நட்பி னிந்நோய்
இறுமுறை யெனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறுமே[33]

எனக் குறுந்தொகையில் பரணர் பாடும் பாடல் (199) வழி உணரலாம். "ஏனை யுலகத்து மியைவதா னமக்கென" என்ற குறிஞ்சிப்பாட்டு அடிகளும் (குறிஞ்சிப் பாட்டு [24]) இதை மேலும் வலியுறுத்துவதைக் காணலாம். இத்தகு மனநிலை முதிர்வின் எதிரொலியைத் தான் இறைப்பற்று இலக்கியங்கள் குறியீட்டு நிலையில் தலைவிவழிக் கூறும் கூற்றுக்களில் கேட்கிறோம் என்பது இங்குக் கருதத் தக்கது. இவ்வுலகில் இக்காதலின்பம் கைகூடப் பெறாது போயினும் இங்கேயே நோன்பிருந்து, உலகத்து அழித்துப் பிறந்தாயினும் அவ்வின்பத்தைப் பெறுதல் வேண்டுமெனப் பேசும் பெருங்கதைக் குறிப்பும்,[34] தீவினையாற் பிரிவு நேரிடினும், சென்று, சென்று எடுக்கும் அடுக்கிய பிறவிகளிலும் இருவரும்

Koviloor Digital Library

நெருங்கி அன்பால் ஒன்றுபடும் தன்மையராவர் எனத் திருக்கோவையார் கூறும் குறிப்பும் ஒப்பு நோக்கத்தக்கதாம்.[35] ஆகவே, மானிடக்காதலின், பல்வேறு உணர்வு நிலைகளைப் பேசிடும் சங்கப் பாக்கள், உடலால் ஒன்றுபட்டுத் துய்க்கும் புலனின்பத்தினை எடுத்துரைப்பதிலும், உள்ளங்களால் ஈர்க்கப்பட்டு இணைந்து கலந்து ஒன்றாகும் உணர்வொன்றிய, புலன்களுக்கப்பாற்பட்ட இறையின்பத்திற்கு நிகரவாய உயர் இன்ப நிலையினையே வெளிப்படையாகவும், குறிப்பாகவும் உணர்த்துகின்றன என்பதை அறியலாம். சங்க அகமரபுகளைப் பின்வந்த பக்தி இலக்கியப் பாவலர்கள் கடைப்பிடித்தமைக்குரிய காரணத்தையும் இங்கு அறிவதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது.

இப் படிநிலை வளர்ச்சியில், குறள்வழிக் காதல் பெறும் இடமும் இங்கு உற்று நோக்கி, ஒப்பிடத் தக்கதாம். சங்கப் பனுவல்கள் உடல் பொலிவாலும், உள்ளத்து உயர்வாலும் இணைந்து காதலில் ஒன்றுபடும் தலைமக்கள் தம் அகவாழ்வின் பல்வேறு கூறுகளையும் நிகழ்ச்சிப் பின்னணியில், உணர்வு வெளிப்பாடுகளாக உணர்த்துகின்றன. திருக்குறள் காமத்துப்பால், ஒன்றுபட்ட உள்ளங்களின் காதல் உணர்வுகளை வெளிப்படுத்தச் சூழலும், நிகழ்ச்சிப் பின்னணியும் கூடத் தேவையில்லை எனக் கொள்கிறது. எனவேதான், குறளில், காதலர் கூற்றுக்களே, உணர்வுகளை வெளிப்படுத்தி விடுகின்றன. இங்கு உயிர் பேசுகின்றது. உணர்வு உன்னத நிலை பெறுகின்றது.

உடலொடு உயிர்க்கியைந்த நட்பு எனக் காதலுக்கு இலக்கணம் வகுத்தல் வாயிலாக, பிரிக்கவியலாத உழுவலன்பின் உயிர்நிலை உணர்த்தப் பெறுகிறது. இவ்வுயிர் நிலையே, இறைமைக் காதல் நிலைக்கு இரண்டாம் படி நிலையாகும். ஆகவேதான் வள்ளுவர், புறத்து இயற்கைப் பின்னணியும், புறப் போராட்டக் களங்களும், அகமாந்தர் போக்கும் வரவும் மிகை எனக் கொண்டு, கூற்று நிலையிலே உணர்வின் உயிர்ப்பினைக் காட்டி விடுகிறார். இறையும், உயிரும் ஒன்று கலக்கின்ற அத்துவித நிலையில் காதல் நிகழ்வுகளும், பேச்சு மகிழ்வுகளும் பொருட் பயனின்றி அமையும். தெ.பொ. மீனாட்சி சுந்தரம் இக்கருத்தினையே "காமத்தின் கடவுள் நிலையை, உலகம் விலங்குணர்ச்சியோடு வைத்துப் பாழாக்கி வருகிறது. அதன் உயர்வினைத் தூய்மையைக் கடவுள் நிலையை வள்ளுவர் பாடும் காமத்துப் பாலில் முற்ற முடிய முழுதும் கண்டு களிக்கின்றோம்" என்று கூறுவார்.[36]

எனவே, சங்க அகப்பாக்கள் உடலும், உயிரும் கலந்து பெறும் காதலின் பத்தினை எடுத்துரைக்க, திருக்குறள், உள்ளமும், உயிரும் ஒருங்கிணைந்து துய்க்கும் உயர்காதல் படிநிலையினை விளக்க, இவற்றின் அடிவழியொற்றி, இடைக்காலத்து எழுந்த இறைப்பற்று இலக்கியங்கள், உயிரும், உயிர்மூலமும்

Koviloor Digital Library

(இறை) கலந்து ஒன்றி உடனாகும் தெய்வீகக் காதல் நிலையினைப் பேசுகின்றன என மூவகைப்படி நிலைகளை வகைப்படுத்தற்கான வாய்ப்பினைப் பெறுகின் றோம். இலக்கியச் சான்றுகளால் பெறப்படும் இவ்வகைமைப்பாடும், அதன்வழிக் காணலாகும் பொருண்மையும், இலக்கண அமைப்புகளாலும் உறுதி செய்யப்படல் வேண்டும்.

இந்த அடிப்படையில், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், தேவாரப் பதிகங்கள் ஆகிய இவற்றிற்கு முன்னர் எழுந்த இலக்கண நூல்களில் கூறப் பெறும் அகமரபுகள் தனி இயலில் சுட்டப் பெறுகின்றன. ஆயினும் இங்கு, அந்நூல்கள் சுட்டும் அடிப்படை மரபுகள் இரண்டன் பொருத்தம் பற்றிக் குறிப்பிட வேண்டி யுள்ளது. தொல்காப்பியர்,

காமப்பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்[37]

எனக் கடவுள்மாட்டு வருவதோர் பாடாண்பக்கம் உணர்த்துவார். கடவுள் மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கமும், மானிடப் பெண்டிர் நயந்த பக்கமும் பாடப்பெறும் என்று உரைவிளக்கம் தருவர். இறைவனைச் சிறப்பித்துத் தொழும் முகமாக அமைந்து இருப்பதால், தலைவன், தலைவி நிலைப் பாடல்களும் பாடாண்டினை பெறும். பாடாண் திணையுள்ளும், தலைவன் தலைவி நிலை, கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்தமை கூறாது கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்தமையையே பெரும்பகுதி கூறும். தலைவன் இங்குக் காமத்திற் கலங்காதவனாகவும், தலைவியோ நாண் துறந்து, உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படையாகப் பேசுபவளாகவும் அமைகின்றாள். எனவே, தெய்வத்தின் மீது காதல் கொண்ட நிலையில், தலைவி பேசுவதாகப் பாடும் மரபினைத் தொல்காப்பியர் சுட்டுவது தெளிவாகிறது. இச்செய்தி இனிவரும் இயலிலும் விரித்துரைக்கப்படும். ஆயின், இங்ஙனம் தலைவி, தன்னிலை கெட்டு, நாண்விட்டு அரற்றும் நிலையில் எடுத்துரைக்கும் கூற்றுகளைப் பெண்பாற் கைக்கிளை, பெருந்திணை மரபுகளைக் கொண்டனவாகக் கொள்ளுதற்கு இடமுண்டா என்பது ஆய்விற்குரியதாம்.

கைக்கிளை என்பது ஒருதலைக் கேண்மை. காமம் சாலாதவள் இடத்துக் கொள்ளும் காதலாம். "சொல் எதிர் பெறாது சொல்லி இன்புறுமாறு புல்லித் தோன்றுவது இதன் இயல்பு என்பது பெறப்படும்." ஆனால் இறைப்பற்றிலக்கியப் பாக்களில், இறைவனை நாயகனாய்க் கொண்ட தலைவி, அவன் தலைமையையும், உயர்வையும் அன்பையும் ஏற்றுக் கொண்ட பரிபக்குவம் கொண்டவள். இறைப்பேறு பெறுதற்கான தகுதியும் பெற்றவள். ஒரு மருங்கு பற்றிய கேண்மை

Koviloor Digital Library

யாகாது, தலைவன் தலையளி கிடைக்கப் பெற்றுப் பின் பிரிந்த நிலையில் மீண்டும் அதனைப் பெறுதற்காக வாடும் உள்ளத்தின் ஆற்றாமையும், தவிப்புமே பெரும் பாலான பாடல்களின் பொருளாகின்றன.

'என்னார் வந்தென் எழில் கொண்டார்'
'நாதர் வந்தென் நலம் கொண்டார்'
'எவ்வம் செய்தென் எழில் கொண்டார்'
'வந்தென் நன்னலம் வௌவினார்'

எனவரும் தொடர்களும்[38] தலைவன் தலைவியர் அன்பினைப் பறைசாற்றும். இனி,

அநாதி காலம் இல்வாழ்வாரைத் தன்னோடே
சேர விடுகைக்கும் காலம் பார்த்திருந்த
இறைவன், இவர் பக்கம் வெறுப்பின்மை உண்டான
சமயம் பார்த்து, இவருக்கு மயர்வற மதிநலம்
அருளல் ஈண்டுப் புணர்ச்சி எனப்படும். அவன்
கொடுத்த அந்த ஞானப் பேற்றோடே தலைக்
கட்டப் பெறாமை பிரிவு எனப்படும்[39]

என்று கூறும் ஈடு உரையும், தலைவனோடு கூடி மகிழ்ந்த தலைவியின் அகத்திணை அன்புநிலையை விளக்கும். ஆகவே, இடைக்காலதது இலக்கியங் களில் பேசப் பெறும் பெண்பாற் கைக்கிளை மரபென, இப்பாடல்களைக் கொள் வதன் பொருத்தமின்மை உணரற்பாலது.

ஆயின், மிக்க காமத்து வெளிப்பாடுகளாகப் பாடல்களின் பொருள் தோன்றுவதால், பெருந்திணைக் குறிப்பு அமையப் பெற்றனவோ என ஐயுறுதற்கு இடமுண்டா என ஆராய்கையில் அதற்கும் மறுதலையான போக்கே இங்குக் காணப் பெறுகிறது எனலாம்.

ஏறிய மடற்றிறம், இளமைதீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே[40]

என்பது தொல்காப்பியம்.

'மடலூர்வேன்' எனத் தலைவி மரபுமீறிப் பேசும் இடங்களும், மடலூர்தல் பொருளாகத் திருமங்கையாழ்வார் பாடியுள்ள சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய நெடும்பாடல்களும், தலைவி, மடல் ஊர்ந்து செல்வதைக் காட்டாது.

Koviloor Digital Library

ஐந்திணையில் தலைவன் 'மடலூர்வேன்' எனக் கூறிக் காட்டும் அளவில் அமைவது போலவே, கூறப்பெறுவது குறிக்கத்தக்கது.

இளமை தீர்ந்த பெண்ணின் காம உணர்வுகள் வெளிப்படுத்தப்பட வில்லை என்பது தெளிவு. தலைவியின் இளமையும், அழகும், பருவம் நிறைந்த பான்மையும் பாடல்கள் வழி அறியலாம். ஐந்திணைத் தலைவியின் நிறை காதல் உணர்வுகளே இங்குக் காட்டப்படுகின்றன என்பதைப் பின்வரும் இயல்கள் எடுத்துரைக்கும். மரபு மீறியன எனக் கருதப் பெறும் மடலேறுதல், தலைவன் பதிநாடிச் செல்லுதல், வெளிப்படையாகக் காதல் உரைத்தல் முதலான துறைகளும் கூட, அன்பின் ஐந்திணைவழி வெளிப்படுத்தப் பெறும் தலைவியின் புதிய போக்கு நிலைகளே ஆகும். அன்றியும் தத்துவார்த்தப் பொருள் கோடலில், இவற்றிற்கான அமைதி களும் விளக்கம் பெறுகின்றன. எனவே, கைக்கிளை, பெருந்திணை மரபுகளை இப்பாடல்களுக்கு ஏற்றிப் பார்த்தல் கருத்து முரண்பாட்டிற்குரியதென்பது பெறப்படுகிறது.

அடுத்து, இறைப் பற்றிலக்கியங்களில், குறிப்பாக ஆழ்வார்கள் பாசுரங் களில், நாயகன் – நாயகி பாவம் வெளிப்படும் பான்மையினைச் சுருக்கமாகக் காணுதல் சிறப்பாம்.

"ஞானத்தில் தம் பேச்சு; பிரேமத்தில் பெண்பேச்சு"[41] என்றபடி ஆண்டான், அடிமைத்திறத்தில், இரு நிலைகளில் அன்பு வெளிப்படும். ஞானமும், பக்தியும் நிறைந்த அடியார்கள், ஞான நிலையில் தம்மை வெளிப்படுத்துகையில், தாமான தன்மையிலும், பக்தி நிலையில், அஃதாவது, அன்பு நிலையில் வேறு ஒரு நிலையினை அடைந்தவராய்ப் பெண் பேச்சாகவும் பேசுவர். அன்றியும் ஆழ்வார்கள் அறுவகைக் குணநலன்கள் பெற்றவராவர்.

> அநந்யார்ஹ சேஷத்வம் (வேறு ஒருவருக்குமின்றி இறைவனுக்கே அடிமைப்பட்டிருக்கும் தன்மை), அநந்ய சரணத்து வம் (இறைவனையே பற்றுக்கோடாகப் பற்றி யிருக்கும் தன்மை), கூடி இருக்கும் போது தரிக்கை, பிரிந்திருக்கும்போது தரியா தொழிகை, அவனுக்கே இன்பத்தை அளிக்கை, அவன் காப்பாற்று– கின்றவனாகத் தாம் காப்பாற்றப்படும் பொருளாக இருக்கை.[42]

இவ்வாறு அறுவகைக் குணங்களும் கொண்ட ஆழ்வார், பிராட்டி நிலையை அடைதல் இயல்பாகிறது. ஈடுதரும் விளக்கம் ஆழ்வார்கள் பெண் நிலையை யடைந்து பேசும் திறம் பெறுதற்கான வாய்ப்பினைத் தெளிவுபடுத்து கின்றது.[43]

Koviloor Digital Library

பரமபக்தி நிலை என்பது அன்பின் எல்லை நிலமாம். இதனை அடைவதே ஆழ்வார்கள் குறிக்கோளாகிறது. காதல், அன்பு, வேட்கை, அவா என்ற நான்கு படிநிலைகளைக் கடந்த பரமபக்தி நிலைப்பேறு வாய்க்கின்றது. இப் படிநிலைகளை அடைதற்கு முன் ஆன்மாவானது இருள், துயக்கு, மயக்கு, மறப்பு என்னும் அறிவின் குறைபாடுகளால் அலைக்கழிக்கப்படுகிறது. இருள் என்பது இறைபற்றி உணரும் அறிவு தோன்றாமை. துயக்கு என்பது மெய்ம்மைக்கும் பொய்ம்மைக்கும் வேறுபாடு உணராது ஏற்படும் ஐயம். மயக்கு என்பது அறிவு அல்லாததையும் அறிவாக நினைக்கும் திரிபுணர்ச்சி. மறப்பு என்பது முன்னரே அறியப்பட்ட பொருளால் உண்டான நினைவு இன்மை. இவை நான்கும் அழிதற்கே இறைவன் 'மயர்வற மதிநலம்' அருளுவன்.

எனவே இவ்வறிவுக் குறைபாடுகள் அவன் தந்த அறிவாலே நீங்கி, மனத்தூய்மை பெற்றுத் 'தாமரையாள் கேள்வன்' ஒருவனையே நோக்கும் உணர்வு அடையத்தக்கவண்ணம், தன்னை நோக்கி வளரும் ஞானம் பெருகுகிறது. இவ்வாறு நான்கு படிநிலைகளில் – காதல், அன்பு, வேட்கை, அவா – பெறுதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை விளக்கமாகக் காணலாம்.[44]

இங்ஙனம், ஆழ்வார்கள், இருள் முதலான அறிவின் குறைபாடுகள் நீங்கப் பெற்றவராய், அறிவின் பேறு தலைக்கூட, காதல் முதலான நான்கு நிலைகளிலும் இறைவன் அருளுடன் தம்மை இழந்து கலக்கின்ற பரமபக்தி நிலையடையும்படியாக அவர்கள் அடிமைத்திறம் அமைகின்றது. இந்நிலை அவாவி நிற்கின்ற ஆன்மா, பிராட்டி நிலையில் இதனைத் துய்த்தற்குப் பேசும் பேச்சே அன்பில் முதிர்கின்ற காதல் பேச்சாகின்றது. இதுவே நாயகன் – நாயகி பாவனையின் அடிப்பொருளாகின்றது. அழியும் உலகில் இடையிடையே இறைவனோடு கூடிப்பெறும் பேரின்ப நிலை களவு நிலையாகிறது. அழியாத பேருலகில் இடைவிடாது இறைவனோடு கூடி வாழும் வாழ்க்கை பேரின்பநிலையாகிய கற்பு நிலையாகிறது. இங்ஙனம், ஆணாயினும் பெண்ணாயினும் உலகியல் காம நினைவு மாய்ந்து மனம் தூயதாகும்போது தான் மதுரபக்தி உண்டாகும். இது கடவுட் காதலாகும். இந்நிலை பெறுதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கச் சமயப் பெரியார்களாகிய நாயன்மார்களும், ஆழ்வார்களும், பண்டைத் தமிழ் நெறியாகிய அன்பின் அகனைந்திணையைப் பின்பற்றினர். பாவனைக்குகந்ததாக இம்மரபுகள் அமைந்தன. மானிடக் காதலுக்கு வரையறை கண்ட தமிழ்ச் சமுதாயம் போற்றிய அகக்கோட்பாடுகள், இறைமைக் காதலை அடைதற்கான அடிப்படைகள் ஆயினமை இங்குக் குறிப்பிடத் தக்கதாம். கூடலில் கனியும் அன்பு வெளிப்

Koviloor Digital Library

பாட்டினைக் காட்டிலும், பிரிவில் முதிர்ந்து நிற்கும் காதல் உணர்வு, உள்ள ஒருமைப்பாட்டிற்கு அடித்தளம் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் பண்டைத் தமிழ்ச் சான்றோர். ஆகவே ஐந்திணையில் குறிஞ்சி நீங்கலாக ஏனை நான்கும் பிரிவுத் திணைகளாயின. இந்தப் பிரிவு பற்றித் தெளிவானதொரு விளக்கத்தைத் தருகின்றார் ம.ரா.போ. குருசாமி அவர்கள்.[45]

இங்கு ஆழ்வார்களும், 'பிறிது எவ்வுணர்வும் இன்றி அவ்வாற்றாமை தானேயாவது' எனக் களவியல் உரைகாரர் கூறுமாப்போலே, ஆற்றாமை மீதூரப் பாடி நின்றனர். இறைவன் அருளில் திளைத்தவர்கள், பின்னரும் அப்பேற்றினின்றும் விலக, மீண்டும் தலைக்கூடப் பெறுதல் வேண்டும் என்ற ஆற்றாமை காரணமாகப் பேறுற்றுப் பாடும் பாசுரங்கள் நெஞ்சினை உருக்கும் தகைமையன, மகள், தாய், தோழி என்ற மூன்று நிலைகளிலும், பிரிவால் தவிக்கும் ஆன்மாவின் பல்வேறு நிலைகளும் விளக்கம் பெறுகின்றன.

முடிவுரை

ஆழ்வார்கள் தமக்கு முன்னர் இலக்கண, இலக்கிய நூல்களில் காணப் பெறும் அகநெறிகளைப் பின்பற்றுகையில்[8], சில வரையறைகளைப் போற்றினர் என்பது பின்னரும் விளக்கப் பெறும். இங்கு ஆன்மாவின் பேச்சு, அன்பில் வெளிவரும் பெண் பேச்சாகிறது. இறைவன் அருளைப் பெறும் அந் நிலையைப் பேசுவதிலும், பெற்ற பேறு நிலைபெறாது, பிரிவு ஏற்படுகையால், மீண்டும் அப்பேற்றினை அடைய வேண்டும் என்கின்ற அவாப் பெருக்கினையே பாசுரங்களில் பெற வைத்தனர். எனவே இங்கு, பிரிவில் கனியும் காதல் உணர்வு முறுகிச் சிறக்கிறது. தலைவனுடன் கூடிப் பெற்றவை, முன் அநுபவங்களாகச் சுட்டப் பெறுகின்றன. தலைவன் கூற்றுக்களாகத் திருவிருத்தத்தில் காணப் பெறுபவை, மரபுகளைப் போற்றல் என்ற அளவில் எடுத்துக் கொள்ளப் பெறும். ஏனைய பாசுரங்கள் அனைத்திலும் காணப் பெறுவது, தலைவியின் அன்பு நிலையே. தலைவனை அடையத் தலைவி மேற்கொள்ளும் முயற்சிகளே உருக்கமாக வெளிப்படுவன. இதுவே பாவனை நிலையாகிறது. இதுவே நாயகன் – நாயகி தத்துவத்தின் உள்ளார்ந்த பொருளாகும். இதன் பல்வேறு அமைப்பு முறைகளும், மரபு நிலையிலும், புது மரபு உருவாக்க நிலையிலும் வெளிப்படுத்தப் படுகின்ற வழிநிலைகள் பற்றிய அமைப்பு விளக்கமே இவ்வாய்வேட்டின் உட்பொருளாகின்றது.

★

Koviloor Digital Library

குறிப்புகள்

1. மொ.அ.துரையரங்கசாமி, இலக்கியக் கட்டுரைகள், "பிரிவரிதாகிய தண்டாக்காமம்", ப.71.
2. திரு.வி.க., பெண்ணின் பெருமை, ப.55.
3. தொல்காப்பியம், உரியியல், நூற்பா 811.
4. மொ.அ. துரையரங்கசாமி, மேற்படி நூல், ப.102.
5. பிரகதாரண்ய உபநிடதம், பகுதி 4, 3, 21.
6. Sunil Kumar Chatterji, Jayadeva, 'Profane love and sacred love', p.53.
7. "இதில் கடவுள் – இஸ்ராயேல் ஆகிய இருவருக்கிடையே உள்ள அன்புறவை (காதலுறவை) யூதராபிகள் கண்டார்கள்; கிறிஸ்து – திருச்சபை இருவருக்கிடையே நிலவும் அன்புறவைக் (காதலுறவை)க் கிறிஸ்துவ ஆராய்ச்சியாளர்கள் காண்கின்றனர். ... உலகியல் காதல் கவிதையில் இறைவனின் காதலையும், கிறிஸ்துவின் காதலையும் காணும் வகையில் இந்நூலைப் படித்தலுக்கு 'மறுபொருள்கோள்' (Rereading) என்பது பெயர். காதல் கவிதை என்னும் இலக்கிய வகைக்கும் இறை ஏவுதலுக்கும் எவ்வகையிலும் முரண்பாடு இல்லை" எனத் தெளிவாகத் தலைவன் – தலைவி உறவு முறையில் இறையன்பைப் பெறுகின்ற தன்மையை எடுத்துரைப்பர்.

   – பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாடு, திருத்திய பதிப்பு, உன்னத சங்கீதம், முன்னுரை, ப.44அ.
8. மேற்படி நூல், ப.693.
9. மேற்படி நூல், ப.697.
10. M.A. Dorai Rangasamy, The Religion and Philosophy olf Tevaram, Book II. P.1239.
11. "Upon my flowery breast
    wholly for Him and Save Himself for none
    There did I give sweet rest
    To my beloved one"

    -St. John "The obscure night of the soul"

    Quoted and translated by

    சொ. சிங்காரவேலன், திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், ப.150

Koviloor Digital Library

12. Ram Babu Saksena, A History of Urdu Literature, p.27.

13. Ibid. p.27

14. "நான் காதலிக்கின்ற அவனாக மாறிவிட்டேன். என்னைக் காதலிக்கின்ற அவன், நானாக மாறிவிட்டான். மனித 'நான்' தெய்வீக 'நானாக' மாறும் அற்புதநிலை இது. இறையருளால் மாண்ட ஆணவம் ஒழியும் உன்னதநிலை இது. காதலுக்கும், காதலிக்கும் இடையேயுள்ள அன்பினைப் போல, இறைக்கும் உயிருக்கும் இடையே மலர்கின்ற தெய்வக்காதல் நிலை இதுவாகும். இங்கு அறிவு, காதலின் தூண்டுதலால் உள்ளுணர்வாய் மாறுகிறது. காதல் பெருகிப் பரந்து, இறையுடன் மயங்கித் தற்போதம் அழிந்து கள்வெறி கொண்டு நிலையழிந்து, சுகாநந்தப் பெருநிலையினை அடைகிறது".

- M.A. Dorai Rangasamy, Op. Cit., p.1240/

15. "கள்ளிடைத் தண்ணீர் கலந்தது போலே
கன்னலா முன்னுயிர் என்னு யிராகி
உள்ளிடைக் குழைந்தே ஒன்றா யினவே
உலகிடை யாரே நமைப் பிரிப்பாரே?"

"என்னவ னாயினை என்னுயிர்த் தலைவ !
இனிச்சிறி தேனும் நினைப்பிரி யேனால்!
உன்னவ ளாக்கித் தழுவினை யாயின்
உனையணைந் தின்பம் இனியடை வேனோ?"

"இதழிடைக் குழையும் இன்குழ லானேன்;
இனியனின் மார்பிடை வீணையு மாவேன்
இதயத்து மூச்சே என்னரம் பாகும்
இசையினைத் தூண்டின் எண்கணீர் ஒளிரும்."

- Ibid. p.1240. Translated by சொ. சிங்காரவேலன், திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், ப.150

"With thy sweet soul, this soul of mine
Hath Mixed as water doth with wine
Who can the wine and water part
Or me and thee when we combine?

Thou art become my greater self
Small bounds no more can one confine;

Koviloor Digital Library

Thou hast my being taken on
And shall not I now take on Thine?

I rest a flute laid on thy lips
A lute, I on thy breast recline
Breathe deep in me that I may sigh
Yet strike my strings and tears shall shine

(The Festival of spring by Rumi, Tr. p.10)

16. Sunil Kumar Chatterji, Op.Cit., p.52.
17. குறுந்தொகை, பா.3
18. நற்றிணை. பா.
19. குறுந்தொகை, பா.57.
20. திருக்குறள். பா.1122
21. புறம்., பா.216 "சிறந்த காதற்கிழமை".
22. மொ.அ. துரையரங்கசாமி, மேற்படி நூல், ப.76.
23. குறுந். 60.
24. குறுந். 397
25. நற்றிணை. 129.
26. நற்றிணை. 293.
27. அகம். 339
28. குறுந். 32.
29. குறுந். 57.
30. நற்றிணை, 397.
31. குறுந். 49.
32. கலித்தொகை. ப.62:4
33. குறுந். 199.
34. பெருங்கதை, 1, 36:113–115.
35. திருச்சிற்றம்பலக் கோவை, 205.
36. தெ.பொ. மீனாட்சிசுந்தரம், வள்ளுவர் கண்ட நாடும் காமமும், ப.201.
37. தொல்காப்பியம், புறத்திணையியல், நூற்பா 81.
38. திருஞானசம்பந்தர் தேவாரம், 56–3, 6, 8, 10.

Koviloor Digital Library

39. திருவாய்மொழி, பகுதி 1 (முதற்பத்து) ஈட்டின் தமிழாக்கம், பு.ரா. புருஷோத்தம நாயுடு, ப.132
40. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா 54.
41. ஆசாரிய ஹிருதயம், இரண்டாம் பகுதி, நூற்பா 118.
42. திருவாய்மொழி, முதற்பத்து, நான்காம் திருவாய்மொழி, முன்னுரை, (ஈட்டின் மொழியாக்கம், பு.ரா. புருஷோத்தம நாயுடு), ப.180.
43. "ஆயின் பிராட்டி தானாகப் பேசுவாள் ஏன்? என்னில், தாமரை திருவடி களுக்குப் போலியாக இருக்க, 'வையங்கொண்ட தடந்தாமரை' (திருவாய் மொழி 6.9:9) என்று தாமரையாகவே திருவடிகளைப் பேசுவது போன்று, இங்குப் பிராட்டியாகவே பேசப்படுகிறது; முற்றுவமை இருக்கிறபடி 'ஆயினும் இவர் ஆடவர் ஆகையாலே, ஆண் தன்மை பின் நாடாதோ? எனின், இராஜ இருடி பிரம இருடி ஆன பின்னர், அரசருடைய தன்மை பின் நாட்டிற்றில்லை அன்றே? எதிர்த்தலையில், ஆண்தன்மையை அழித்துப் பெண் உடை உடுத்தும்படியன்றோ அவனுடைய புருஷோத்தமனாம் தன்மை இருப்பது? ஆதலால், நாடாது."

– மேற்படி, பக். 180, 181

44. காதல் என்பது 'உளப்பெருங்காதல்' (திருவிருத்தம் 59) என்றும், நேரிய காதல் (திருவாசிரியம் 2) என்றும், கழிய மிக்கதோர் காதல் (திருவாய் மொழி, 5, 5:10) என்றும் ஆழ்வார் பாடல்களில் காணப் பெறுகின்றது. இதனால் அன்பின் அடித்தளமாயமையும் 'சங்கம்' இது என்றுணரப்படும்.

இனி, அன்பு எனப்படும் காமம் – 'அன்பில் இன்பு' (திருவாசிரியம் 2) 'அன்பே பெருகும் மிக' (பெரிய திருவந்தாதி 8), 'ஆறா அன்பு' (திருவாய்மொழி 6, 10:2), என்று பலபடியாகச் சொல்லப்படுகின்றது. (கூட்டு) தோன்றுவதாய்ப் பார்க்கப்படுகின்ற பொருளை அநுபவித்தல்லது நிற்க ஒன்றாதபடியிருக்கும் அதன் முதிர்ந்த நிலையான காமம் "ஸங்காத் ஸஞ்ஜாயதே காம" (கீதை 2:62). அடுத்து வேட்கை என்னும் அநுராகம் – "வேவாரா வேட்கை நோய்" (திருவாய்மொழி 2.1:10) "பெருகுமால் வேட்கை" (திருவாய்மொழி 2.1:10) 'ஆவியின் பரமல்ல வேட்கை" (திருவாய்மொழி 10.3:2) என்று பல இடங்களில் சொல்லப்படுவது, காமத்தின், காரியமாய், அநுபவிக்கப்படுகின்ற பொருளில் வைத்த ஆசையாவது இடையீடு இன்றி அமையும் நிலை (அநுராகநிலை) ஆகும். அவா என்னும் சிநேகம் – பற்றிய பொருளை, மேலும் மேலும் துய்த்தல் அல்லது, விட்டுவிடாத பற்றாகப் பற்றிக் கொள்ளும். அநுராகத்தின் பின் விளையும் சிநேகம் "அவா ஒருக்கா வினையொடும்"

Koviloor Digital Library

(திருவிருத்தம், 64) "காண்பாள் அவாவுவள்" (திருவிருத்தம் 84), "சூடுதற்கு அவா" (திருவாசிரியம் 2) "அதனில் பெரிய என்னவா" (திருவாய்மொழி 10, 10:10) என்று பல இடங்களிலும் ஆழ்வார்கள் இதனைக் குறிப்பர்.

45. "காதலின் அருமைப்பாட்டை உணர்த்தவல்லது பிரிவென்ற ஒரே தத்துவம் தான். பிரிந்துள்ள பொழுது உண்மைக் காதலுள்ளம் தன்னைத் திறை கொண்ட மற்றோர் உள்ளத்திலேயே தோய்ந்து கிடக்கும். முதலில் கண்ட பொழுது தனக்கொரு துணைவாய்த்தது என நினைப்பதே தொடக்கமாகும். ஆனால் தனக்கொரு துணையென்ற நினைவோடு அவளின்றித் தானில்லை என அவனும், அவனின்றித் தானில்லையென அவளும் நினைக்கின்ற கரைவு காதலின் வளர்ச்சியைப் புலப்படுத்துவதாகும். இவ்வாறு அவளில் அவனும், அவனில் அவளும் வரைவது திளைப்பிலே தோன்றாது; நினைப்பிலே முகிழ்க்கும், பிரிவிலே மலரும், பரிவிலே கனியும்; நினைந்து நினைந்து பிரிவால் பரிந்து, பரிந்து காதல் உறுதி பெறுகின்றது. இத்தகைய பிரிவுத் துன்பத்திற்குத் துணைபோகும் உள்ளமே உண்மையில் காதல் உள்ளமாகும்."

– ம.ரா. போ. குருசாமி, சங்ககாலம், ப.51

Koviloor Digital Library

இயல் ஆறு

நம்மாழ்வார் திருமொழிகளில் அகப்பொருள்

அஞ்சிறைய புட்கடமை ஆழியா னுக்குநீர்
என்செயலைச் சொல்லும் எனவிரைந்து – விஞ்ச
நலங்கியதும் மாறனிங்கே நாயகனைத் தேடி
மயங்கியதும் பத்தி வளம்.

– திருவாய்மொழி 1:4.

Koviloor Digital Library

நம்மாழ்வார் பாடல்களில் அகப்பொருள்

அவரவர் தமதமது அறிவு அறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்;
அவரவர் இறையவர் குறைவுஇலர்; இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே[1]

என ஏற்றமுற எடுத்துப் பாடியவர் நம்மாழ்வார். மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களுள் தலைவர் இவர்; நம்மாழ்வார் 'பிரபந்ந கடஸ்தர்' என்று கருதப்படுபவர்.

ஆழ்வார்களில் நம்மாழ்வாரை ஆன்மா என்பர். ஏனைய ஆழ்வார்களை உடல் அல்லது சரீரம் என்பர். அவர்கள் அவயவங்கள், இவர் அவயவி. "ஆழ்வார்களனனவரும் உலக ஞானம் பெற்றவர்களாயிருந்து பிறகு தத்துவ ஞானம் பெற்றார்கள்; ஆனால் நம்மாழ்வார் திருத்துழாய் போல் பிறக்கும் போதே பரிமளத்தோடு தோன்றியவர். இயற்கையிலேயே ஞான பக்தியோடு விளங்கியவர்" என்று எம். ராதாகிருஷ்ண பிள்ளை கூறுகின்றார்.[2]

நம்மாழ்வார் துறவு மனப்பான்மை கொண்டவர். ஆனாலும் மக்களைக் கண்டு அஞ்சி ஓடவில்லை. மக்களுடைய இன்ப துன்பங்களில் தாமும் பங்கு கொண்டார். மக்களுக்கு மெய்யுணர்வை ஊட்டி அவர்களும் தம்மைப் போல் இறைவனை நாடி வாழ்வு பெற வேண்டுமென்பது இவரது பெரு விருப்பமாயிருந் திருக்கின்றது. இந்தக் குறிக்கோளே இவரது வாழ்வைத் தெய்வ வாழ்க்கை யாக்கியது.

'இறைவனை நம்முடைய முயற்சியால் கண்டு கொள்ளலாம் என்பது பேதைமை' என்பது நம்மாழ்வார் கருத்து. இறைவன் அருளைக் கொண்டு அவன் தாளை அடைவது எளிதாகும் என்பது இவரது கொள்கை.

இவர் எங்குமுள்ள பரம்பொருளை உணர்ந்து, அதனுடன் ஒன்றித் தான் ஒழித்து அதுவாய் நின்றார்.

தானே யாகி நிறைந் தெல்லா
உலகும் உயிரும் தாமேயாம்
தானே யானென் பானாகி[3]

என்றும்,

Koviloor Digital Library

என்னைமுற்றும் உயிருண்டு என்
மாய ஆள்கை இதனுள் புக்கு
என்னை முற்றும் தானே யாய்
நின்ற மாய அம்மான்[4]

என்றும், ஆழ்வார் இறைவன் தம்முடன் இரண்டறக் கலந்ததைப் பல இடங்களில் கூறக் காணலாம்.

நம்மாழ்வார் சாத்திரங் கற்றவர். ஆனால் அவர் அறிவு நூலறிவு மட்டு மன்று; அவர் அறிவு அனுபவத்தால் மட்டும், பயிற்சியினால் மட்டும் வளர்ந்ததன்று. இறைவனுடைய அருள் தந்த அறிவு அது என்று ஆழ்வாரே நம்பினார்.[5] வைணவப் பெரியோரும் அவ்வாறே கருதுவர்.

நம்மாழ்வாரை உள்ளிட்ட ஆழ்வார்கள் பக்தி நெறியையும், பிரபத்தி யென்ற அடைக்கல (சரணாகதி) நெறியையும் அறிவுறுத்தினர். இவர்கள் அறிவினை ஆக்கக் கலையாக்கி வேதத்தின் பிழிபொருளைத் தமிழில் பொழிந்தார்கள். பக்தி நெறி இவர்களால் பரவியது எனத் தெரியலாம். சாதியைவிடப் பக்தியே சிறந்தது என்பது ஆழ்வார்கள் கொள்கை என்பது அறிய வேண்டியவொன்றாகும். அதனால்தான் தற்கால வைணவத்தின் மூல புருடர்கள் என்று கருதப்படும் ஆசாரியர்கள் ஆழ்வார்களை வணக்கத்திற் குரியவர்களாகக் கருதினர்; அதோடு திருமாலின் ஆயுதங்களும் அடியார்களுமே ஆழ்வார்களாக உலகத்தில் அவதாரம் செய்தனர் என்றனர். மேலும் இவர்கள் அருளிச் செயல்கள் விழாக் காலங்களில் கோயிலில் ஓதப்பட வேண்டுமென்று வகுத்தனர். விசிட்டாத்துவைத தத்துவத்தோடு ஆழ்வார்களுடைய சரணாகதி நெறி முதலான கொள்கைகளை ஒன்றுபடுத்தி நிறுவினர்.

நம்மாழ்வாருடைய இறையனுபவம் ஒரு பெரிய கருங்கடலுக் கொப்பானது. இறைவன் மாயக்கவியாய் வந்து தன் நெஞ்சிலும் உயிரிலும் கலந்து கொண்டு தன்னைக் கொண்டு தன்னைத்தானே பாடுவித்தான் என்கிறார் இவர். தன் நிலையிழந்து பக்தி வயப்பட்டுப் பாடியதாக நம்மாழ்வார் கூறுவது ஞான உச்சியின் எல்லையை எட்டிப் பிடிக்கின்றது என்று கருதலாம்.

மேலும் இவர், 'வண்தமிழ் நூற்க நோற்றேன்'[6] என்று கூறி, அடியார்க்கு இன்ப மழை பொழிய வண்தமிழைக் கற்றுக் கொண்ட தம் பேற்றுக்கு இணையானதொன்றுமில்லை என்கிறார். எனவே தத்துவத்தின் முடிவு கண்ட 'சதுர்மறை புரோகிதனா'ன நம்மாழ்வாருக்கு வைணவ ஆசாரிய பீடத்தை அளித்ததில் வியப்பொன்றுமில்லை எனலாம்.

Koviloor Digital Library

திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என்று நான்கு பிரபந்தங்களாக இவரது அருளிச் செயல்கள் வழங்கி வருகின்றன. இவை முறையே இருக்கு, யசுர், அதர்வணம், சாமம் என்ற நான்கு மறைகளின் சாரமாக அமைந்துள்ளன என்பர் வைணவப் பெரியோர்.

"நம்மாழ்வார் மாணிக்கவாசகரை ஒத்தவர். இருவரும் ஞான நெறியில் நின்றனர். காதல் மார்க்கத்தில் நின்ற நம்மாழ்வார் இறைவனை எண்ணி உருகுவனவே, அவர் பாடல்களுள் பெரும்பாலன" என்று ஆ. வேலுப்பிள்ளை கூறுகின்றார்.[7] உண்டியே உடையே உகந்தோடுமுலகத்தாருடைய இயற்கைக்கு மாறுபட்டு "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணனாகவே" இவருக்கு இருக்கும். இந்த எம்பெருமானை அனுபவித்த அனுபவமே ஆழ்வாரின் பாடல்களாயின.

நான்கு ஆயிரம் பாடல்கள் அடங்கியுள்ள நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றாறு பாடல்களைப் பாடியுள்ளார் நம்மாழ்வார். மொத்தப் பாடல்களில் மூன்றில் ஒரு பங்குக்குச் சில பாடல்களே குறைவாகவுள்ளன.

ஆயிரத்து நான்கு அகப்பொருள் பாடல்கள் அடங்கியுள்ள நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களுள் முந்நூற்று எண்பத்து மூன்று பாடல்கள் நம்மாழ்வார் பாடியவை என்பது குறிப்பிடத்தக்கது.[8] ஏனைய ஆழ்வார்கள் பாடியுள்ளதனைக் காட்டிலும் மிகுதியான பாடல்களை இவர் பாடியுள்ளார். மொத்த அகப்பொருள் பாடல்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகுதிப்பட்டே இவர் பாடியுள்ளமை கருதத்தக்கது. இவரையடுத்து அவரளவுக்கு அகப் பொருள்படப் பாடியுள்ளவர் திருமங்கையாழ்வார் எனலாம். அவர் நம்மாழ்வாரைப் பின்பற்றியே பல துறைப் பாடல்களையும் பாடியுள்ளார் என்பது தெளியப்படும்.

திருவிருத்தம்

இது இருக்கு வேதத்தின் சாரமாகக் கருதப்படுகிறது. நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இவை கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தவை. கட்டளைக் கலித்துறையை விருத்தம் என்ற பாவகையில் அடக்கி வழங்கும் மரபு உண்டு. திருநாவுக்கரசருடைய "ஈன்றாளுமாய்" எனத் தொடங்கும் கட்டளைக் கலித் துறைப் பதிகம் திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம் என வழங்கப்படும் என்பது நோக்கத்தக்கது. அஃதே போல் நம்பியாண்டார் நம்பியின் திருப்பண்ணியர் விருத்தம் கட்டளைக் கலித்துறையாலானது.

திருவிருத்தத்தின் முதற்பாடலில் 'தாமான தன்மையால்' ஆழ்வார் அருளிச் செய்திருத்தலானும், இறுதிப்பாடலில் – நூறாவது பாடலில் நூற்பயன்

Koviloor Digital Library

கூறுவதாலும் அவை இரண்டினையும் நீக்கி மீதி 98 பாடல்களில் அக இலக்கிய மரபுக்கு ஏற்பப் பல அகப்பொருள் துறைகள் அமையும்படி[11] அவற்றிற்கு இலக்கியமாக விருத்தப்பாடல்களை அந்தாதித் தொடையால் யாத்துள்ளார் நம்மாழ்வார்.

தமிழ் மொழிக்கு உயிர்நிலையாகிய அகப்பொருள் நுணுக்கங்களை இவ் ஆழ்வார் திறம்படப் பேசியுள்ளார். இவர் படைத்துள்ள அகப் பொருள் துறைகள் தமிழ்மொழியின் அக இலக்கணத்துக்குச் சட்டமென வழங்குவர் பெரியோர். ஆனால் இவர் அமைத்துள்ள அகப்பொருள் துறைகளில் பல பண்டைய தொல் காப்பிய அகப்பொருட் கிளவிகளுக்கும், பிற்காலத்திய நம்பியகப் பொருள் போன்ற நூல்களிற் கூறியுள்ள அகப்பொருள் கிளவிகளுக்கும் மாறுபடவும் விளங்குகின்றன. ஆனால் சில அகப்பொருள் கிளவிகள் மாறுபடுவது போலத் தோன்றிப் பின்னர் அம்மாறுபாடு அழியும்படி அமைக்கப்பட்டுள்ள திறனையும் காணலாம்.

இத்தகைய அகத்துறை வேறுபாட்டு நிலைகள் பண்டைய முறையினின்று சிறிது மாறுபட்டன போன்று காணப்படினும் அவை அனைத்துக்கும் காரணம் இது கடவுளைத் தலைவனாகக் கொண்டு பாடிய பாடல்களாகும். பொதுவாக, பண்டைய இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள தலைவன் தலைவியர் நிலைகளை வைத்து நோக்கினால், இந்த மாறுபாடு தோன்றுவது போன்று ஒரு தோற்றம் ஏற்படுகிறது. ஆனால் பராங்குச நாயகியாகிய ஆழ்வார் அந்தப் பரத்துவமான தெய்வத்தைத் தலைவனாகக் கொண்டு இந்த அகப்பொருள் கிளவித் துறைகளை அமைத்துத் திருவிருத்தம் பாடியுள்ளார் என்பதை உள்ளத்தில் உறுதியாக நிறுத்தினால் இவரின் போக்கு விளங்கும். 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்ற புறப் பொருள் வெண்பாமாலைத் துறை இங்கே நினைவு கொள்ளத்தக்கவொன்றாகும்.

இனி, நம்மாழ்வார் திருவிருத்தத்தில் வந்துள்ள அகப்பொருள் துறைகளைத் தோழி செயலாகவும், தலைவி செயலாகவும், தலைவன் கூற்றாகவும், நற்றாய் செயலாகவும் செவிலி கூற்றாகவும், பாங்கன் செயலாகவும் வகைப்படுத்திக் காண வாய்ப்புண்டு. அனைத்துக்கும் பொதுவாக வரும் அகப் பொருள் துறைப் பகுதிகளும் காணத் தக்கனவாம்.

தோழி கூற்றுப் பாடல்கள்

ஆழ்வார்கள் பாடல்களில் 'தாமான தன்மையில்' இருந்து பாடுவதைக் காட்டிலும், அகப்பொருள் பாடல்கள் சில தனி இயல்புகளைக் கொண்டுள்ளன. அகப்பொருள் பாடல்கள் பெண்தன்மையை ஏறிட்டுக் கொண்டும், அக இலக்கிய மாந்தருள் ஒருவராகத் தம்மைக் கருதிக் கொண்டும் பாடப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

பெரும்பான்மையான அகத்துறைப் பாடல்கள் மூன்று வகையாக நடைபெறுகின்றன. 'தாய்ப் பாசுரங்கள்' 'தோழிப் பாசுரங்கள்' 'தலைவிப் பாசுரங்கள்' ஆகியவை முறையே தாய் சொல்லுவது போல, தோழி கூறுவதைப் போல, தலைவி நவில்வதைப் போலப் பேசப்படுகின்றன. ஆயினும், மூன்று வகையாகப் பேசினாலும் பேசுபவர் ஆழ்வாரேயாவர்[12] என்பது சிந்திக்கத் தக்கது.

அக இலக்கியத்தில் இன்றியமையா இடம் பெறுபவள் தோழி. அகப் பொருள் பாடல்களில் தலைவன், தலைவி ஆகியோர் முதன்மையான பாத்திரங்களேயாயினும் தோழியே அவற்றின்கண்' பெரும்பங்கு பெறுகின்றாள். அகத்துறைப் புலவர் கண்ட 'புலனெறி வழக்கம்' என்னும் கோபுரத்தின் கலசமே தோழி என்னும் பாத்திரம் என்பர்.[13] தலைவன் தலைவி என்னுமிருவர் கூற்றிலும் இவ்விருவர் அன்பினையும் இடையூறின்றி வளர்க்கும் தோழியின் நுட்பமான கூற்றே இக்களவொழுக்கத்தின் இயல்பினை இனிது விளக்குவதாம்.[14]

திருவிருத்தத்தில் தோழியின் பங்கினைப் பெரிதும் காணலாம். தோழி இரங்குதல்,[15] தோழி தலைவனிடம் கூற்று நிகழ்த்துதல்,[16] தோழி தலைவியிடம் கூற்று நிகழ்த்துதல்,[17] வரைவு கடாதல்[18] ஆகிய நிலைகளில் தோழியின் பணி காணக் கிடக்கின்றது.

தோழி வாடைக்கு வருந்திய தலைவியின் மனம் கண்டு இரங்குதலையும், பிரிவாற்றாத தலைவி இருளுக்கும் வாடைக்கும் இரங்குதலுக்குத் தான் இரங்குதலும், கார் கண்டு நலிந்த தலைவியின் ஆற்றாமை கண்டு இரங்குதலும், இளம்பிறையையுடைய மாலைக் காலத்துக்கு ஆற்றாத தலைவியின் தளர்ச்சி கண்டு இரங்குதலையும், அன்றிலின் குரலுக்கு ஆற்றாத தலைவியின் தளர்ச்சி கண்டு இரங்குதலையும், அன்றிலுக்கும், ஆழிக்கும் ஆற்றாத தலைவியின் நிலை கண்டு தான் இரங்குதலையும் திருவிருத்தத்தில் காணலாம்.

செழுநீர்த் தடத்துக் கயல்மிளிர்ந்தா லொப்பச் சேயரிக்கண்
அழுநீர் துளும்ப அலமரு கின்றன வாழியரோ
முழுநீர் முகில்வண்ணன் கண்ணன்விண் ணாட்டவர் மூதுவராம்
தொழுநீரிணையடிக்கே அன்புசூட்டிய சூழ்குழற்கே.[19]

இந்தப் பாடல் நம்மாழ்வார் தாமான தன்மை நீங்கிப் பெண் நிலைமையெய்திப் பேசும் பாடலாகும். "நாயிகாவஸ்தையையடைந்து பேசும் பேச்சுக்களில், தாய் பாசுரம் தலைவி பாசுரம் தோழி பாசுரம் என மூன்று வகைகள் உண்டு. இப்பாட்டு தோழி பாசுரமாய்ச் செல்லுகிறது. தலைவி வேறுபாடு கண்ட தோழி வியந் துரைத்தல் நாயகிக்கு உண்டான வைலக்ஷண்யத்தைத் தோழியானவள் கண்டு ஆச்சரியப்பட்டுப் பேசுகிறாள்" என்னுங் கருத்து நோக்கத் தக்கது.[20]

Koviloor Digital Library

ஈண்டு நம்மாழ்வார் ஆழ்வார் என்னும் திருப்பெயரையிழந்து 'பராங்குச நாயகி' என்ற பெயர் பூண்டு பேசுகிறார். தமக்குண்டான அன்பு நிலைமையைத் தம் வாயாற் சொல்லிக் கொள்வதிற்காட்டிலும் வேற்று வாயாலே விளக்குதல் அழகியதாகத் தோன்றியமையால் தோழி சொல்லுமா போலே சொல்லிக் கொள்கிறார்.

தலைவன் தலைவியைப் புணர்ந்து, புணர்ச்சிக்கு அடுத்தபடியாகப் பிரிவு உண்டாவது இயல்பாதலால் அப்படியே பிரிந்து, அப்பிரிவை ஆற்றாதவளான நாயகியினுடைய நிலைமை வேறுபட்டிருப்பதைக் கண்டு வியப்புற்ற தோழியின் கூற்றாக இது சொல்லப்பட்டிருக்கின்றது.

வாடைக்கு வருந்தி மாமையிழந்த நாயகியின் நிலைமையைக் கண்டு தோழி பேசுகின்ற பாடலும் ஈண்டு உண்டு. 'எல்லோருடையவும் எவ்வகையான பிரிவுத் துன்பத்தையும் தணிப்பதையே இயற்கைத் தொழிலாகவுடைய குளிர்ந்த காற்றானது இப்பொழுது இவ்வூரில் இவளை எரிக்கின்றது; எரிப்பது நெருப்பின் தன்மையேயன்றிக் காற்றின் தன்மையன்று. அங்ஙனமிருக்க இந்த நிலைமை மாறுபாட்டிற்கு என்ன காரணமிருக்கும்' என்று எண்ணுகின்றாள் தோழி.[21]

நெடுங்கடல் நிற்பதும் ஞாயிறு காய்வதும் நிற்றலும் கால்,
ஒடுங்கிநடப்பதும் தண் கார் பொழிவதும் ஊழிதனில்,
கடுங்கனல் பற்றிச் சுடாதே யிருப்பதும் தும்பை புனைந்து,
அடுங்கள வாழி அரங்கேசர் தந்திருவா ணையிலே.[22]

என்றபடி உலகத்தில் படைப்புப் பொருள்கள் யாவும் புடைபெயர்தல் எம்பெருமானது கட்டளைப்படியேயாதலால், இங்கு வாடையின் குணம் மாறுவதை இறைவனது ஆணை கோணுதலினாலாகியதெனத் தோழி குறிக்கும் நயம் சிறபபுடைததாம். "ஒரு நான்று தடாவியதே" எனனும போது, இறைவனது செங்கோன்மை ஒருநாளும் நிலைகுலைவதன்று; அப்படிப்பட்டது இவள் நிறத்தையழிப்பதற்காக இவ்வொரு பொழுது நிலைகுலைந்ததே என்பதுவே தோழியின் வருத்தமாகும்.

இதனைத் தோழியின் கூற்றாகக் கொள்வதன்றி தாய் கூற்றாகக் கொள்வதுமுண்டு[23] என்பது சிந்திக்கத் தக்கது. பொருளுரையின் பொருத்தத் தைக் கூர்ந்து நோக்கித் தோழியின் பாட்டாகவே இந்த ஆய்வு முடிவு செய்கின்றது.

"திருவிருத்தத்தில் ஆழ்வார் சங்க நூல்களின் அகத்துறை முறைக் கிணங்க 'நாயகி' பாவமெய்தி, பெண் பேச்சுப் பேசி, தம் கடவுட் காதலைப் பிரேம திசையில் வெளியிடுகிறார்"[24] என்னும் கூற்றுக்கேற்றவொரு பொருத்தமான

Koviloor Digital Library

சான்றாகக் 'கால மயக்கு' துறை ஈண்டுத் தோழி வாயிலாகப் புலப்படுத்தப் படுகின்றது.[25]

இத்துறைதானே திருக்கோவையாரில் 'காலமறைத்துரைத்தல்' என வழங்கப் பெற்றுள்ளது. தலைவியை ஒருவாறு ஆற்றவேண்டிக் காலத்தை மயக்கிக் கூறுகின்றாள் தோழி.

சின்மொழி நோயோ கழிபெருந் தெய்வம் – இந்நோயினதென்று
இன்மொழி கேட்கும் இளந்தெய்வ மன்றிது – வேல! நில்நீ
என்மொழி கேண்மினென் எம்மனைமீர்! உலகேழுமுண்டான்
சொல்மொழி மாலையந் தண்ணந் துழாய்கொண்டு சூட்டுமினே[26]

இப்பாட்டுக்குத் துறை வெறிவிலக்கு.

தலைவன், தலைவியைப் புணர்ந்து பின்பு பொருள் கருதிப் பிரிந்துள்ளான்; அந்நிலையில் பிரிவாற்றாது மிக வருந்துகின்றாள் தலைவி; அவளது வடிவு வேறுபாடு கருதி செவிலி கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் (குறிசொல்லும் குறத்தி) குறி கேட்க, அவள் சில சொல்லுகின்றாள். அதனால் வெறியாட்டாளனை அழைப்பித்து அவனைக் கொண்டு ஆவேசமாடுவிக்க முயல்கின்றனர். தலைவி மிக வருந்துகின்றாள்; அச்சமயத்தில் அவளது துன்பத்தின் உண்மைக் காரண முணர்ந்த தோழி வேலனையும் செவிலியரையும் நோக்கிச் சில கூறி வெறிவிலக் குவதாமிது.

நம்மாழ்வாரின் திருவாய்மொழியிலும்,

திசைக்கின்ற தேயிவள் நோயிது மிக்க பெருந்தெய்வம்
இசைப்பின்றி நீரணங் காடும் இளந்தெய்வம் அன்றிது
திசைப்பின்றி யேசங்கு சக்கர மென்றிவள் கேட்கநீர்
இசைக்கிற்றி ராகில்நன் றேயில் பெறுமிது காண்மினே[27]

என்றும்,

இது காண்மின் அன்னைமீர் ! இக்கட்டு விச்சி சொற்கொண்டு நீர்
எதுவானும் செய்தங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேல்மின்
மதுவார் துழாய்முடி மாயப்பிரான் கழல் வாழ்த்தினால்
அதுவே யிவளுற்ற நோய்க்கும் அருமருந் தாகுமே[28]

என்றும் நம்மாழ்வார் பாடியுள்ள பாடல்கள் இங்கு அறியத்தக்கன. 'வெறி விலக்கு' என்னும் நிகழ்ச்சியின் விளக்கமே போல, ஈண்டும் இவை தோழியின் கூற்றாக வருவன உளங்கொள்ளத்தக்கன.

Koviloor Digital Library

நோயாளிகட்கு உட்செலுத்துவதொரு மருந்தும் மேலிற் பூசுவதொரு மருந்தும் பயன்படுத்துவது போல உளநோய் கொண்ட இந்தத் தலைவிக்கு எம்பெருமானது திருப்பெயர்களை அவள் செவிவழியே உள்ளே புகும்படிச் சொல்ல வேண்டும்; மேலுக்கு அவன் அணிந்து கொண்ட திருத்துழாய் மாலையைக் கொணர்ந்து சூட்ட வேண்டும். தோழி, இவ்விருவகை வழிகளையும் கூறுகின்றாள். நோயும், முதலும் நாடி, அது தணிக்கும் வாயிலும் வகையும் சொல்லும் இத்தோழியின் திறன் சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் வரும் குறிஞ்சிப்பாட்டுத் தோழியை நினைக்கச் செய்கின்றது.

இங்ஙனமே திருவிருத்தத்தில் பிறிதோரிடத்தும் திருத்துழாயை முடியில் சூட்டுதலும், தலைவன் உறையும் திருவேங்கடமலைக்கு அழைத்துக் கொண்டு போதலுமே தலைவி கொண்ட நோய்தீர வழிகளாம் என்று தோழி உரைத்தல் உன்ன வேண்டிய செய்திகளாகும்.[29]

மற்ற ஆழ்வார்களுக்கு உயிர்நிலையில் (அங்கிஸ்தானத்தில்) அமைந்துள்ள நம்மாழ்வார் உருவ வழிபாட்டில் பேரன்பு கொண்டவர். இவர் திருக்குடந்தை திருவேங்கடம் முதலிய இடங்களில் உருக் கொண்டெழுந் தருளியிருக்கும் 'அர்ச்சை'களிடமே பக்தி செலுத்துகிறார். இவர் ஒரு சமயம் திருவேங்கடத்தில் தம் மனப்பார்வையைச் செலுத்துகிறார்.[30] திருமகளை மார்பிலே உடைய எம்பெருமான் இவருக்குக் காட்சியளிக்கிறார். இவர் இதுவே தாம் சரண் அடைவதற்குத் தகுந்த இடமென்றும், தம் உய்விற்கு இப்பெருமானே ஊன்று கோலென்றும் உறுதிப்படுத்துகிறார். இவர் பாடும் பாடலும் இதற்குச் சான்றா கின்றது.[31] தலைவிக்கு வழிகாட்டும் போதும் தோழி வாயிலாக திருவேங்கடம் அழைத்துச் செல்லச் சொல்வதும் இவர் தாம் அர்ச்சையிடம் கொண்ட அவாவினையே காட்டும்.

'ஏறுகோள் கூறி வரைவு கடாதல்' துறையில் ஒரு பாடல் அமையும். இதில் முல்லை நிலத்துத் தலைமகளைக் களவொழுக்கத்தாற் கூடி நின்ற தலைமகனை நோக்கித் தோழி, "இனி நீ இவள் குலத்துக்கு உரிய மரபின்படி வெளிப்படையாக விரைந்து வந்து ஏறுதழுவி இவளை மணம் செய்து கொள்வாயாக" என்று வற்புறுத்திக் கூறுகின்றாள்.[32] முன்பு நப்பின்னையை வரைதற்பொருட்டு நீ ஏறுதழுவினாயென இது கூறியதனால், தோழி தலைவனை 'இப்பொழுது ஏறு தழுவி இவளை வரைந்து கொள்வாயாக எனக் குறிப்பால் ஏறுகோள் கூறி வரைவு கடாவுதல் துறை பேசப்படுகின்றது.

இது தோழியின் பாடலாகக் கொள்ளலாகும். அன்றியே, நாயகியின் பாசுரமாகவும் கொள்ளலாம் என்பர்.[33] இவையேயன்றியும் ஆழ்வார் தாமான

Koviloor Digital Library

தன்மையிலே அருளிச் செய்வதாகக் கிளவித்துறை கூறாமலேயே நம்பிள்ளை முதலான ஆசிரியர்கள் இப்பாடலுக்கு விளக்கம் செய்துள்ளனர். இப்பாட்டு ஆழ்வார் தாமான தன்மையில் 'கிருஷ்ணாவதார லீலைகளில்' ஈடுபட்டு அருளிச் செய்திருப்பதாக இவர்கள் கணிப்பது சிந்தனைக்குரியது.

தோழி கூற்றாக நம்மாழ்வார் அமைத்துள்ள இருபத்திரண்டு பாடல்களும் சங்க இலக்கியக் கிளவித் துறைகளைப் பின்பற்றியனவாகவும், தோழியின் பங்கினையும், பாங்கினையும் நன்கு வெளிப்படுத்துவனவாகவும் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றுள், தலைவியைப் பிரிவுத்துயர் ஆற்றாமை யிலிருந்து தேற்றுவதே தோழியின் தலையாய பணியென்றும், தலைவி தன் துயரங் களைத் தோழி தன் துயராக எண்ணி உரையாடுதலும், துயர் களையப் பாடுபடு தலும் நோக்கத் தக்கவையாயுள்ளன.

தலைவன் கூற்றுப் பாடல்கள்

திருவிருத்தத்தில் தலைவன் கூற்றுப் பாடல்களாகப் பதினான்கு பாடல்கள் காணப்படுகின்றன.[34] ஆழ்வார்கள் பாடல்களில் தலைவன் இறைவன் ஆகவே தலைவன் கூற்றுப் பாடல்கள் அமைவது இல்லை. ஆயின் திருவிருத்தம் பாடிய நம்மாழ்வார் தலைவன் கூற்றுப் பாடல்களைச் சிறப்புற அமைத்துக் காட்டியிருப்பது இவர்தம் ஆழ்ந்த இலக்கியப் பற்றையும், முன்னோர் மொழிபொருளைப் போற்ற வேண்டுமென்ற எண்ணத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. இங்கே இன்பச் சுவையின் பரிமாற்றம் எடுத்தாளப்படுகின்றது எனலாம்.

தலைவன் கூற்றாக வரும் பாடல்களில் தலைமகள் ஆழ்வார் என்பதில் மாற்றமில்லை; ஈண்டுத் தலைமகள் கூற்று வரும்போது தலைமகன் – பாகவதர் என்று உள்பொருளுரை உரைக்கின்றது.

> கீழ் எம்பெருமானைத் தலைமகனாகக் கூறி வந்தவர் இங்கு ஸ்ரீவைஷ்ணவர்களைத் தலைமகனாகக் கொள்ள வேண்டும்படி பாசுரம் அருளிச் செய்யலாமோ? எனின்; கிளவித் தலைமகன் என்றும் பாட்டுடைத் தலைமகன் என்றும் இரண்டு தலைமகன் அமைவது உண்டு. (இது இறையனாரகப் பொருளுரையாலும் விளங்கும்), ஆழ்வார் எம்பெருமான் பக்கலிற் போல அவனது ஸம்பந்தம் பெற்ற அடியார்களிடத்திலும் மிக்க பக்தி கொண்டு அவர்களையும் தமக்குத் தலைவராகக் கொள்ளுந் தகுதியுடைய வரென்பது 'மாயப் பிரானடியார்கள் குழாங்களை – உடன்

Koviloor Digital Library

கூடுவதென்று கொலோ"[35] இத்யாதி ஸ்ரீஸுக்திகளில் விளங்குதலால் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கிளவித் தலைமகனாகக் கொள்ளலாம். எம்பெருமான் எப்போதும் பாட்டுடைத் தலைமகன்[36]

என்னுங்கருத்து விளக்கத்திற்குரியதாம்.

அவ்வகையில்தான்,

தடாவிய அம்பும் முரிந்த சிலைகளும் போகவிட்டுக்
கடாயின கொண்டொல்கும் வல்லியீ தேனும், அசுரர்மங்கக்
கடாவிய வேகப் பறவையின் பாகன் மதனசெங்கோல்
நடாவிய கூற்றங்கண்டீர், உயிர் காமின்கள் ஞாலத்துள்ளே[37]

என்று ஒரு தலைவன் ஒரு தலைவியின் அழகிய வடிவத்தைக் கண்டு அதனிடத்து மிக ஈடுபட்டுக் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல். இந்த அழகிலே ஒவ்வொருவரும் தம்மையிழக்காமல் குறிக்கொண்டு காத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் கிளவித்தலைவனின் கருத்தாகும்.

இவ்வாறு தலைவியின் நலம் கண்டு வியந்த தலைவன் அந்தத் தலைவியின் நலம் பாராட்டுதலும் காணலாம்.[38] தலைவன் தலைவியோடே புணர்ந்து பிரிகிறபோது மூன்று காரணங்களினால் தலைவியின் அழகைப் பாராட்டுவது வழக்கம் என்பர்.[39] தலைவியின் கண்ணழகில் ஈடுபட்டுப் பேசும் பாடல் திருவிருத்தத்தில் அமைந்துள்ள நலம் பாராட்டுத்துறை முதற்பாடல். ஓயாத சிந்தையை விளைத்தல், நிறத்தை வேறுபடுத்தல் முதலியன மன்மத பாணங்களின் தொழில்கள்; இவற்றையே நாயகியின் கண்களும் செய்கின்றன என்று கூறுகின்றான் தலைவன். மற்றுமொரு பாடலில் தலைவனானவன் தலைவியிடத்தில் தான் வைத்துள்ள காதலை ஒருவாறு வெளியிட வேண்டி அவளது சிறப்பை உள்பொருள்படப் புகழ்ந்துரைக்கின்றான்.[40]

தலைவன் தலைவியின் நீங்கலருமை கூறல், தலைவன் குறையுற உரைத்தல், நகர் காட்டல், தலைவன் மீண்டு வருகையில் பாங்கனொடு கூறுதல் போன்ற இன்னும் பல துறைகளும் தலைவன் கூற்றாகத் திருவிருத்தத்தில் அமைந்து பொலிவு தருகின்றன.

தலைவி கூற்றுப் பாடல்கள்

திருவிருத்தத்தில் தலைவன் கூற்றுப் பாடல்கள் செம்பாதி இடத்தைப் பெறுகின்றன. ஐம்பத்துநான்கு பாடல்கள் இவ்வகையில் அமைகின்றன.[41]

Koviloor Digital Library

தலைவிக்கான அகப்பொருட்களின் கிளவிகளை இருபது வகைகளில் அடக்கலாம்.

வாடைக்கு வருந்துதல்,[42] நெஞ்சழிந்து ஆற்றாமை,[43] இருள்கண்டு அழுங்கல்,[44] கடலை நோக்கியிரங்குதல்.[45] ஆற்றாமை கூறுதல்,[46] கால நீட்டிப்புக்கு வருந்தல்,[47] தாருக்கு மகிழ்தல்,[48] தென்றலுக்கு மகிழ்தல்,[49] ஆகிய இரண்டினையும் மகிழ்தல் என்றே செப்பலாம்; அன்னப் பறவையை வெறுத்தல்,[50] தோழி செவிலியரை வெறுத்தல்,[51] தூது விடுதல்,[52] இரங்குதல்,[53] போலிகண்டு உரைத்தல்,[54] உருவெளிப்பாடு,[55] வரைவு விருப்புத் தோழிக்குக் கூறல்,[56] தலைவனிடத்து ஈடுபாடு,[57] தோழியின் ஈடுபாடு,[58] தலைவி தலைவனைக் காண விரைதல்,[59] பொழுது கண்டிரங்கல்,[60] தோழிக்குத் தன் கற்புணர்த்தி அறத்தொடு நிற்றல்,[61] தோழியிடம் தலைவி கூற்று நிகழ்த்துதல்[62] ஆகிய துறைகளில் தலைவியின் கூற்றுக்களை அடக்கிவிடலாம்.

இவற்றையும் வினைகள்வழிச் செப்பலுறின் தலைவியின் வருந்துதல், ஆற்றாமை, அழுங்கல், இரங்குதல், கூறுதல், மகிழ்தல், வெறுத்தல், தூது விடுதல், ஈடுபாடு கொள்ளுதல், விரைதல், அறத்தொடு நிற்றல் ஆகியவற்றுள் அடங்குவதாகக் கொள்ளலாம். ஆழ்வாரே தலைவியாம் நிலையை அவாவிப் பேசியதாகவே அவர் பிரேமத்தில் பேசும் பெண் பேச்சுக்களாக இத்துறைகள் அமைகின்றன.

தலைவி வாடை கண்டு வருந்துதலும், இளம்பிறை கண்டு ஆற்றாது வருந்துதலும், இருள்கண்டு அழுங்கலும், கடலொலி கேட்டு அரற்றுதலும் இன்ன பிறவும் வழிவழியாகத் தலைவனைப் பிரிந்தபோது தலைவியர்க்கு ஏற்படும் இன்னல்களாக இலக்கியங்கள் எடுத்தியம்பி வந்துள்ளன. திருக்கோவையார் அகப்பொருட் சுவைமிக்க நூல். அந்த நூலைப் போன்று நம்மாழ்வாரின் திருவிருத்தம் அகப்பொருள் இலக்கணம் அமையப் பெற்றது என்பர்.[63]

திருவிருத்தம் வெளிப்படைப் பொருள், உள்ளுறை பொருள் (அந்நியாபதேசம், ஸ்வாபதேசம்) என்ற இருவகைப் பொருளும் அமையப் பாடப் பெற்றது. வெளிப்படையாய்ச் சிற்றின்பக் கருத்துக்கள் தோன்றச் செய்யப்பட்டுள்ளது; கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தலைவன் தலைவியர், களவு முறையிற் கலந்து துய்க்கும் இன்பக் கருத்துக்களைக் கொண்ட செய்யுட்கள் அடங்கியது திருவிருத்தம். நூற்கள் பெரும்பாலும் ஆழ்வார் தம்மைப் பிராட்டியாகக் கருதி இறைவனைப் பலவகையிற் புகழ்ந்து கூறுவதைக் காணலாம். ஆகவேதான் தலைவி கூற்றுப் பாடல்கள் மிகுதியும் இந்நூலில் அமைந்துள்ளன.

Koviloor Digital Library

காண்கின்றனகளுங் கேட்கின்றனகளுங் காணில் இந்நாள்
பாண்குன்றநாடர் பயில்கின் றனஇதெல் லாமறிந்தோம்
மாண்குன்றமேந்தி தண்மாமலை வேங்கடத் தும்பர் நம்பும்
சேண்குன்றம் சென்று பொருள் படைப்பான் கற்ற திண்ணனவே[64]

தலைவன் பொருள்வயிற் பிரிதலைக் குறிப்பாலறிந்த தலைவி தோழிக்குக் கூறல் இது. ஈண்டு வெளிப்படையாகவே தலைவன் வேங்கடமலை நாயகன் என்று தெரிகின்றது. அங்ஙனமிருக்க அத்தலைவன் பொருள் பெறும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லப் பார்க்கிறானெனில், அவன் ஏழை என்று ஏற்படுமே; இறைவனாம் தலைவன் ஏழையென்றால் பொருந்தாதே என்ற ஐயம் ஏற்படுவதுண்டு.

பொருளில்லாதவனாய்ப் பொருளீட்டுதற்காகப் பிரிகிறா –
னென்பதில்லை; தனது முதுகுரவரால் படைக்கப்பட்ட
பல்வகைப் பொருள்கள் நிரம்பப் பெற்றுள்ளவனே;
அப்பொருள் கொண்டு துய்ப்பது ஆண்மைத் தன்மை –
யன்று என்று கருதித் தனது ஸ்வயார்ஜிதமாய்ப்
படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்வதற்குப்
பிரியும் பிரிவு இது – என்றுணர்க. ஆதலால் இப்பிரிவு
ஏழைமையைக் காட்டாதென்க.[65]

என்னும் பொருளுரை மனங்கொள்ளத்தக்கதாகும்.

தலைவி கடலை நோக்கித் 'தேர்வழி தூரல் என்னும் துறை'யில் கூறும் பாடல் நயமிக்கதாம்.

இருள்விரிந்தாலன்ன மாநீர்த் திரைகொண்டு வாழியரோ
இருள் பிரிந்தாரன்பர் தேர்வழிதூரல் அரவணைமேல்
இருள்விரிநீலக் கருநாயிறு சுடர்கால்வதுபோல்
இருள்விரி சோதி பெருமா னுறையு மெறிகடலே[67]

களவு முறையால் தலைவியைப் புணர்ந்து நின்ற தலைவன் அதனால் ஊரெங்கும் பழி பரவுதலையறிந்து அப்பழிதூற்றல் அடங்குமாறு அவளைச் சிலநாள் பிரிந்திருக்கக் கருதி அதனைத் தலைவிக்குக் கூறாமல் சென்றான். அவன் தான் பிரிவதை அவளறிந்தால் வருந்துவளென்று அவளறியாதபடியும் ஊரார் அறியாதபடியும் அவள் முகங்காண்கின்றபொழுது தான் போக மாட்டாமையாலும் இருளிலே பிரிந்து செல்லுகின்றான். பின்பு அப்பிரிவை யறிந்து ஆற்றாது வருந்துகின்ற தலைவி அவனது தேர்ச்சக்கரம் சென்ற அடையாளத்தை நோக்கி, அவன் திரும்பி வருமளவும் அதனையே தனது உயிர்க்குப் பற்றுக்

Koviloor Digital Library

கோடாகப் பாவித்துப் பார்த்துக் கொண்டிருக்கையில், அங்ஙனம் பிரிந்திருந்து இரங்குமிடம் கடற்கரையாகிய நெய்தல் நிலமாதலாலே அத்தேர்க்கால் அடையாளத்தைக் கடலின் அலை வீசி வந்து அழிக்கப்புக, அழித்திடாதேயென்று அதனை வணங்கி வேண்டிக் கொள்வதாக இந்தப் பாடல் அமைகின்றது.

தலைவி தூது விடுத்தல்

அரசியலிலும், காதலிலும் தூது விடுத்தது போலவே இறையடியார்கள், பரம் பொருளிடமும் தூது விடுத்தனர். இறையை நாயகனாகக் கொண்டு பாடிய இவர்தம் பாடல்களில் அமைந்துள்ள அகப்பொருள் மரபுகளுக்கு ஏற்பத் தூதும் இடம் பெற்றதில் வியப்பில்லை என்பர்.[69] இவ்வாறே வைணவ இலக்கியத்தில் ஆழ்வார்கள் தூது விடுத்துப் பெருமாளிடம் தம் ஆழ்ந்த காதலைப் புலப்படுத்து கின்றனர்.

நம்மாழ்வாரின் 'அஞ்சிறை மடநாராய்' எனத் தொடங்கும் திருவாய் மொழிப் பதிகப் பாடல்கள் தூது விடுப்பதைச் சிறப்பித்துப் பேசுகின்றது. திருவிருத்தத்தில் ஐந்து பாடல்கள் தூதுவிடுக்கும் முறையில் அமைந் துள்ளன.[70]

"உள்ளுறைப் பொருளில் (ஸ்வாபதேசத்தில்) 'தூது' என்பது ஆசாரிய விஷயத்தையென்பர். எம்பெருமானைச் சேரப் பெறாத ஆழ்வார் தம்முடைய ஆற்றாமையை ஒருவர் முகமாக அவனுக்கு அறிவிக்க நினைத்துத் தாம் வேண்டிய விடத்திலும் ஒருவரும் தகுந்தவர் நேரிடாமல் அவரவர் தம்தம் காரியத்திலே ஊன்றியிருக்க, ஆழ்வார் வெறுத்துக் கூறும் வார்த்தை இதற்கு உள்ளுறைப் பொருள்" என்பது கவனிக்கத் தக்கது.[71]

தலைவி அன்னப் பறவையைத் தூது செல்லுமாறு வேண்ட, அது செய்யாதே தன் பேடையொடு உலாவித் திரிகிற அன்னங்களைக் குறித்து வெறுத்துரைக்கின்றாள் என்பது வெளிப்படைப் பொருள். இத்துறை திருக் கோவையாரில் 'அன்னமோடழிதல்' எனப்படும்.[72]

அன்னஞ்செல்வீரும் வண்டானஞ்செல்வீரும் தொழுதிரந்தேன்
முன்னஞ் செல்வீர்கள் மறவேன்மினோ.

என்றும் தலைவனைப் பிரிந்த தலைவி அன்னங்களையும், வண்டானங்களை யும் தூது வேண்டுகின்றாள். ஒரே சமயத்தில் பலவற்றையும் தூது விடுதலால் ஒன்றை முன்பு தூதுவிட்டு அதுபோய்க் காரியம் பார்த்து வருமமளவும் பொழுது போக்கி ஆறியிருக்க மாட்டாமை தோன்றும். ஆகவே ஆற்றாமை முதிர்ச்சியில் இங்ஙனம் அனுப்புந்திறன் உன்னுந்தகைத்தாம்.

Koviloor Digital Library

நெஞ்சைத் தூதுவிட்ட தலைவி அது மீண்டு வருதலின்மை கண்டு,

மடநெஞ்ச மென்றுந் தமதென்றும் ஓர்கருமங்கருதி
விடநெஞ்சை யுற்றார் விடவோ வமையும்

என்று கூறுகின்றாள் தலைவி. இப்பாட்டை ஒரு புடை அடியொற்றியே திருவரங்கக் கலம்பகச் செய்யுள் ஒன்று மலர்ந்ததென்பர் வைணவப் பெரியோர்.[73]

தலைவி இவ்வாறெல்லாம் தூதனுப்பி, சென்றவை அங்கேயே சேர நிற்றலின் பின்னும் விரைந்து காண விழைகின்றாள்.

தையல்நல் லார்கள் குழாங்கள் குழிய குழுவினுள்ளும்
ஐயநல் லார்கள் குழியவிழவினும் அங்கங்கெல்லாம்
கைபபொன்னாழி வெண் சங்கொடும் காண்பா னவாவுவன்நான்
மையவண்ணா! மணியே முத்தமே! யென்றன் மாணிக்கமே!

ஈண்டுத் தலைவன் பிரிவினை ஆற்றாத தலைவி அவனை முன்னிலையிலே இருப்பது போலப் பாவித்துக் கூறுகின்றாள். ஆட்டன் அத்தியைக் காண விழைந்த ஆதி மந்தியின் குரல் இந்தத் தலைவியின் குரலிலே ஒலிக்கின்றது.[74] தலைவனையே இடையறாது நினைத்துக் கொண்டிருந்து நினைப்பு மிகுதியால் அவனை எதிரில் நிற்கிறாப் போல முன்னிலைப்படுத்திக் கூறியது காணத் தக்கது.

"தலைவி தோழிக்குத் தன் கற்புணர்த்தி அறத்தொடு நிற்றல்" என்னுந் துறைவழி இரு பாடல்களால் விளங்க நிற்கின்றன. வேற்று வரைவைப் பற்றிப் பேச்சுவர அஞ்ஞான்று தலைவி தன் கற்பு நிலையையுணர்த்த வேண்டி, தனக்கும் தலைமகனுக்கும் ஏற்பட்ட உறவினைத் தெரிவித்து அந்தக் கற்பறத்தின் வழியே நிற்பல் என்பதை அறிய வேண்டுவதாக அமைகின்றன பாடல்கள்.[75]

அறத்தொடு நிற்றல் என்பது தலைவிக்கும் உண்டு. "தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும்" என்பது விதி.

சுருங்குஉறி வெண்ணெய் தொகுவுண்ட கள்வனை வையமுற்றும்
ஒருங்குற வுண்ட பெருவயிற்றாளனை மாவலிமாட்டு
இருங்குறளாகி இசையவோர் மூவடி வேண்டிச் சென்ற
பெருங்கிறியானை யல்லால் அடியே னெஞ்சம் பேணலதே.

தலைவி, தன்னை அத்திருமாலுக்கே மணம் செய்து வைக்கும்படித் தன் கருத்தைத் தோழிக்கு வெளிப்படுத்தியது. இது இங்ஙனம் களவை வெளிப்படுத்தல் 'அறத்தொடு நிற்றல்' எனப்படும். இங்கு இறைவனுடைய குணங்கள் சிறக்கப் பேசப்படுகின்றன.

Koviloor Digital Library

அடுத்தும் தலைவி, ''இந்த உயிராவது பலவகைப் பிறப்புகள் எடுத்து[76] அப்பிறப்புக்களுள் யாதாகிலும் ஓர் உடம்பில் நுழைந்து கட்டுப்பட்டு நின்று பிறகு நீங்கி நிலைமாறி அலையுந்தன்மையுடையது. ஆகவே மாதாவினைப், பிதாவை, திருமாலை வணங்குவனே'' என்று கூறுகின்றாள்.

இப்பிறப்பிலேயே இத்தலைவனைப் பிரியாது கூடுமாறு தலைவியின் உயிர் இவள் உடம்பை விட்டு நீங்கு முன்னமே விரைந்து முயல வேண்டும் என்பதே கருத்தாகின்றது. அதாவது நாணத்தை விட்டுத் தோழியிடம் இதனால் தலைவி அறத்தொடு நிற்கின்றாள்.

இனி, அக இலக்கிய மரபில் பயின்று வராத 'கலவி பற்றிக் கூறல்' தலைவி கூற்றாகத் திருவிருத்தத்தில் வருவது நோக்கத்தக்கது. தலைவன் இரவிடைத் தன்னோடு கலந்தமையைத் தலைவி தோழிக்கு உரைக்கின்றாள்.[77] தலைவன் அன்போடு வந்து கலந்ததை வெளிப்படையாகக் கூறுவது நாணத்திற்கு இழுக் காகும். ஆதலினாலே அழகிய மணவாள ஜீயர் இதற்கு உரை சொல்லும் போது, தென்றல் மேல் வைத்துக் கூறுவதாகக் கூறுகின்றார். ''தன் ஆற்றாமைக்குக் கலங்கி உரைத்த தோழியைக் குறித்துத் தலைவி இரவிடத்துத் தலைமகன் கலந்தமையைத் 'தென்றல் மேல் வைத்து உரைத்த பாசுரம்'' என்கிறார் அவர்.

தென்றல்மேல் வைத்துக் கூறுதலாவது – நாயகன் அன்போடு வந்து கலந்ததை வெளிப்படையாகக் கூறுதற்கு நாணம் கொண்டு தென்றல் மேல் வைத்துக் குறிப்பாகக் கூறுதலாம்.

ஆழ்வார் எம்பெருமானைச் சேர்ந்து அநுபவிக்கப் பெறாமல் வருந்துமளவில், அவ்வருத்தந்தீரப் பெருமாள் ஒருகால் அருகில் வந்து சேவை தந்து இவரைத் தான் சேர்த்துக் கொள்ளுந்தன்மையை வெளியிட, அதனால் ஆழ்வார் துன்பந்தணிந்து, முன்புள்ள ஆற்றாமையைக் கண்டு கலங்கின அன்பரை நோக்கிக் கூறும் சொல் இதற்கு உள்ளுறை பொருள் என்பர்.[78]

இவ்வாறு திருவிருத்தப் பாடல்கள் அனைத்திற்கும் உள்ளுறைப் பொருளும் உடன் கூறுவர் உரைகாரர். ஆயின் வெளிப்படையாக அகப் பொருளே தெற்றென விளங்குவது தேற்றமாகும். திருவிருத்தம் பண்டைய அகப் பொருள் மரபினை அடியொற்றியது என்பதை ஏற்று உறுதி செய்த காரணத்தினால்தான் கலவி பற்றிக் கூறுதல் அகப்பொருள் மரபில் பயின்று வராதது எனக் கருதித் தென்றல் மேல் வைத்துக் கூறும் உரை தோன்றிய தெனலாம்.

எனவே திருவிருத்தப் பாடல்களில் அகப்பொருள் இலக்கணச் சிறப்புக் கூறுகள் இலக்கிய நயத்தோடு அமைகின்றன என்பது தெளிவு; அவற்றை

Koviloor Digital Library

விளக்குமுறையில் அம்மாந்தர் கூற்றுகளாகப் பாடல்கள் புனைந்துள்ளமை சிறப்பு; தலைவன் கூற்று புதுமுறையில் நம்மாழ்வார் பாடல்களில் இடம் பெறுகின்றன. தலைவி கூற்றுக்கள் பல்கிப் பெருகிப் பண்டைய மரபுவழி நடம் பயில்கின்றன. செவிலி, நற்றாய், கட்டுவிச்சி, பாங்கன் ஆகியோர் கூற்றுகள் அகப் பொருள் மரபுக்காக எண்ணி இடம் பெறுகின்றன.

திருவிருத்தம் எழுத்தெண்ணிப் படிக்க வேண்டிய ஓர் அகப்பொருள் இலக்கிய நூல் என்று கூறலாம்.

திருவாய் மொழி

மாறன் என்றும், பராங்குசர் என்றும், குருகூர் நம்பி என்றும், சடகோபர் என்றும், வகுள, பூஷண பாஸ்கரர் என்றும் சிறப்பாக 'நம்மாழ்வார்' என்றும் வழங்கப்படுகின்ற ஆழ்வார் அருளிச் செய்தது திருவாய்மொழி. வேதங்களுள் சிறந்ததும், இறைவனது வடிவமாகவே உள்ளதுமான சாமவேதத்தின் தத்துவப் பொருளை இந்தத் திருவாய்மொழி மூலம் அருளிச் செய்து அவற்றை மதுரகவி யாழ்வாருக்கு உபதேசித்தருளினார் நம்மாழ்வார்.

இத்திருவாய்மொழி 1102 பாடல்களைக் கொண்டு அந்தாதித் தொடையால் அமைந்தது. பத்துப் பத்துக்களைக் கொண்டு ஒவ்வொரு பத்திலும் பத்துத் திருவாய் மொழிகளைக் கொண்டு மிளிர்வது. ஒவ்வொரு திருவாய் மொழிப் பதிகத்தின் சாரத்தை உணரும் பொருட்டு மணவாள மாமுனிகள் திருவாய் மொழி நூற்றந்தாதியை இயற்றியருளினார்.

இந்தத் திருவாய் மொழி, ஒவ்வொருவரும், சிறப்பாக அறிய வேண்டிய 'அர்த்த பஞ்சக ஞானத்தை' ஊட்டுவதாகும். அர்த்த பஞ்சகமாவது – ஐந்து பேருண்மைகளாம்.[79] அவற்றைப் பட்டர் ஒரு வெண்பாவினால் தெளிய வைக்கிறார்.[80] 'ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரம்' என்று போற்றப்படும் திருவாய் மொழியில், ஆழ்வார்தம் மனக்கடலைக் கடைந்து தாம் பெற்ற அமுத மாகிய வேதாந்த ஞானத்தையும், பக்தி அனுபவத்தையும் உலகுய்ய அருளிச் செய் துள்ளார்.

திருவாய்மொழி, மிக்க இறைநிலையையும், மெய்யாம் உயிர் நிலையையும், பக்தி நெறியையும், இந்நெறிக்குத் தடை செய்யும் பழவூழ்வினையையும் காட்டுவதல்லாமல் இறைவனுக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்ற வாழ்க்கை முறையையும் தெளிவாகக் காட்டுகிறது. அவற்றோடு கூட அக இலக்கிய மரபுகளைக் கொண்டு தோழி பேச்சாகவும், தாய் பேச்சாகவும், தலைவி பேச்சாகவும் பாசுரங்கள் காணப்படுகின்றன.

Koviloor Digital Library

தோழி பேச்சாக மூன்று திருவாய்மொழிகளும், தாய் பேச்சாக ஏழு திருவாய் மொழிகளும், தலைமகள் பேச்சாகப் பதினெட்டுத் திருவாய் மொழிகளும் காணப்படுகின்றன.[81] ஆக அகத்துறைப் பதிகங்கள் இருபத்தெட்டு என்பார்தம் கருத்து[82] ஈண்டு ஏற்றுக் கொள்ளத் தக்கதேயாகும். இந்த இருபத்தெட்டுத் திருவாய்மொழிப் பதிகப் பாடல்களையும் ஒவ்வொன்றாக ஆய்ந்து பார்க்கும் பொழுது பலவகை அகப்பொருள் உண்மைகளும், நுணுக்கங்களும் புலப்படும். அவற்றுள் உள்ளுறைப் பொருளாக (ஸ்வாப தேசமாக) பல வைணவ சமயக் கருத்துக்கள் பொதிந்து வைக்கப் பட்டுள்ளன. ஈண்டு ஆய்வுக்கு உட்பட்ட அகப்பொருள் பாக்களைக் காணுதலே கருத்தாகும்.

தோழி கூற்றுப் பாடல்கள்

வெறி விலக்கு

தீர்ப்பாரை யாமினி யெங்ஙனம் நாடுதும் அன்னைமீர்
ஓர்ப்பாலிவ் வொண்ணுதல் உற்றநன் னோயிது தேறினோம்.[83]

என்று தொடங்கும் திருவாய்மொழி தோழி பேச்சாக அமைந்துள்ளது. கலி நிலைத் துறை யாப்பில் வந்துள்ளது.

தொழுதாடித் தூமணி வண்ணனுக் காட்செய்து நோய்தீர்ந்த
வழுவாத தொல்புகழ் வண்குரு கூர்ச்சட கோபன் சொல்
வழுவாத ஆயிரத் துள்ளிவை பத்து வெறிகளும்
தொழுதாடிப் பாடவல் லார்துக்க சீலம் இலர்களே[84]

என்னும் இறுதிப்பாடலில் 'வெறிகளும்' என்று வந்துள்ள சொல்லால் நம்மாழ்வார் தமிழ் இலக்கிய இலக்கண மரபுகள் அறிந்தவர் என்று அறியக் கிடக்கின்றது. தோழி, வெறிவிலக்கல் துறையில் இப்பதிகம் அமைந்துள்ளது. பாடல்களின் சுவைத் தொடர்பு கருதித் திருவிருத்தத்தில் இந்தத் துறையை எடுத்துக் காட்டும்போது எடுத்துக்காட்டப்படுகின்றது.

முதல்பாட்டில் தோழியானவள் தலைவி நோய்க்குக் காரணத்தைச் சொல்லி, "நீங்கள் செய்வன இவள் நோய் தீர்க்கவல்லன அல்ல" என்று விலக்குகிறாள். போருக்குரிய வினைகளையெல்லாம் தாமே செய்து பஞ்ச பாண்டவர்களை வெல்லும்படி அக்காலத்தில் மாயப்போர் செய்த தேர்ப்பாகனார் பால் தலைவி மனம் மயங்குகின்றது என்று எடுத்துக்காட்டுகின்றாள்.

சிறுதெய்வங்கட்குச் செய்யும் பூசைகளால் இந்நோய் போக்குதல் அரிது; பரம்பொருளாம் பகவானைப் பற்றிப் பேசி இவளைப் பெறலாம்; இவள் காதில்

Koviloor Digital Library

கேட்கும்படி, "சங்கு சக்கரம்" என்று சொன்னால் நலமாகும்; "மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலுங்கள்" என்றெல்லாம் பேசுகின்றாள் தோழி.

கீழ்மையி லங்கோர் கீழ்மக னிட்ட முழவின்கீழ்,
நாழ்மை பலசொல்லி நீரணங் காடும் பொய் காண்கிலேன்,
ஏழ்மைப் பிறப்புக்கும் சேமமிந் நோய்க்குமீ தேமருந்து
ஊழ்மையில் கண்ணபி ரான்கழல் வாழ்த்துமின் உன்னித்தே[85]

என்னும் கூற்றினால் தோழி, "பிழைக்க வேண்டும் என்று இருந்தீர்களாகில், கண்ணன் திருவடிகளை நினைந்து வாழ்த்துங்கள். அவன்தான் எழுவகைப் பட்ட பிறப்புக்களுக்கும் பாதுகாப்பு" என்று விளக்குகின்றாள்.

'ஏழ்மைப் பிறப்பு' என்று ஈண்டு வரும் சொல் எழுவகைப் பிறப்பினை யுணர்த்தி நிற்கின்றது. இக்காலத்து வழக்கில் ஏழைமையைக் குறிக்கும்படி வழங்கு வதைக் காணலாம். ஆனால் இது பண்டைக்காலத்து, 'ஏழு' என்ற எண்ணைக் காட்டி வருகின்றது; 'ஏழைமை' என்னும் பொருளில் வராது என்பதைத் தமிழ் செய்த மாறன் சடகோபன் சொல்லாலே உணரலாம். இக்காலத்துப் 'புதியன புகுதல்' என்னுமுறையிலும், சொல்லும் பொருளும் காலத்திற்குக் காலம் மாறுந் தன்மையன என்னும் வகையிலும் சொற்பொருள் மாற்றம் பெறுகின்றதை நோக்கலாம்.[86]

அடுத்து ஒரு பதிகத்தைத் தோழி தாய்மாரை நோக்கிப் பேசுகின்றாள். இதனால் ஆழ்வார் எம்பெருமானிடத்து ஈடுபட்டமை பேசப்படுகிறது. எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தால் ஆய பதிகம் இது.[87] இந்தப் பதிகம் ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்த ஒன்பது திருக்கோயில்களும் (நவதிருப்பதி) தொலைவில்லி மங்கலம் என்ற திருத்தலத்தைப் பற்றியது. இதனை இரட்டைத் திருப்பதியென்றும் வழங்குவர். இங்குள்ள எம்பெருமானுக்கு இரண்டு பெயர்களுண்டு; அரவிந்த லோசனன் என்றும், தேவபிரான் என்றும் வழங்கப்படுவான். இந்தத் திருப்பதியைத் தொழும் தலைவிக்கு வெறியாட்டுவதினின்றும் விலக்கி விடும்படி கூறுகின்றாள் தோழி.

நிற்கும் நான்மறை வாணர் வாழ்தொலை
வில்லி மங்கலங் கண்டபின்
அற்க மொன்றும் அறிவு றாள்மலிந்
தாள்கண் டீரிவள் அன்னைமீர்
கற்கும் கல்வியெல் லாம்க ருங்கடல்
வள்ளல் கண்ணபி ரானென்றே
ஒற்க மொன்று மிலள் உகந்துகந்
துள்மகிழ்ந்து குழையுமே[88]

Koviloor Digital Library

என்று கூறுகின்றாள் தோழி. தலைவி தொலை வில்லி மங்கலத்தைக் கண்டு வந்த பின்பு, அடக்கம் சிறிதும் உடையள் அல்லளாய்க் கைகடந்துவிட்டாள். இவள் பழகுகிற பேச்சுக்களெல்லாம் கண்ணபிரானைப் பற்றியனவேயாகும். இவ்வாறு பேசலாமாவெனின், பேசுபவர் ஆழ்வாராகவே பெண் தன்மை ஏறட்டுக் கொண்டு இவர் பேசுகிறாராகவே தம் நிலையையே வடித்துக் காட்டுகிறாரெனவே பேசலாமெனலாம்.

இவ்வாறு மேற்கூறியவாறு வெறிவிலக்குவிப்பதும், தலைவி (ஆழ்வார்) எம்பெருமானிடத்து ஈடுபட்டமை பேசுவதும் தோழியின் சிறந்த பணிகளா கின்றன. இத்துடன் தலைவியைப் பிறர் மணம் பேசி வர, அதை விலக்குவது போலே தாய்மாரோடு கூறுவதும் இவளது தலையாய கடனாகின்றது.

தேவிமா ராவார் திருமகள் பூமி
யேவமற் றமரராட் செய்வார்
மேவிய வுலகம் மூன்றவை யாட்சி
வேண்டுவேண் டுருவம்நின் னுருவம்[89]

என்று முன்பு தாமான தன்மையில் நின்று பேசிய ஆழ்வார், பின்பு தோழி கூற்றாகப் பேசுவதிலும் தம் பக்தி மேலீட்டை இனங்காட்டுகின்றார்.

"எம்பெருமானுடைய எழிலார்ந்த அவயவங்களின் அழகினைக் கண்டு மற்றொன்றும் அறியாதபடி ஈடுபட்டாள் தலைவி" என்கிறாள் தோழி. "கரு மாணிக்கமலை மேல் மணித்தடம் தாமரைக் காடுகள் போல, திருமார்பு, கண், கை, உந்தி, கால் உடையாடைகள் செய்ய பிரான்"[90] என்று தோழி கூறும் போது குட்டநாட்டுத் திருப்புலியூரில் எழுந்தருளியுள்ள அந்த மாயனின் தோற்றம் கண்ணெதிர் காட்சியளிக்கச் செய்கின்றது. ஈண்டு,

சீர்வ ளம்கிளர் மூவுல
குண்டுஉமிழ் தேவ பிரான்
பேரின் பம்கிளர்ந் தன்றிப்பேச்
சிலளின்றிப் புனையிழையே

என்று முடித்துக் காட்டும்போது 'மூவுலகு உண்டு உமிழ் தேவபிரான்' என்ற தொடர் புனல்தரு புணர்ச்சியைக் குறிப்பாகக் காட்டுகிறதென்பர்.[91] சங்க இலக்கிய அகமரபு இதற்குச் சான்றாக முன்னிற்கின்றது.[92]

தாய்க்கூற்றுப் 'பாடல்கள்

தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட தாய், தலைவனை நோக்கி இரங்கிக் கூறும் பாடல்கள் பல ஈண்டுள. 'இவனுடைய இடையாட்டத்தில்

Koviloor Digital Library

நீர் செய்ய நினைத்திருப்பது யாது?' என்ற கருத்தை மையமாக வைத்து ஒரு பதிகம் அமைந்துள்ளது.[93]

ஆடிபாடி அகம் கரைந்து இசை
பாடிப்பாடிக் கண்ணீர்மல் கிளங்கும்
நாடி நாடி நரசிங்கா வென்று
வாடி வாடுமிவ் வாணு தலே[94]

என்னும் பாடலில் சொற்களை அடுக்கி அடுக்கிக் கூறி, தலைவியின் நிலைமையைச் சித்திரித்துக் காட்டுகின்றாள் தாய். இறுதியில் "நுமதிட்டமென் கொல் இவ்வேழைக்கே?" என்று கேட்கும்போது, இதில் பேசப்படும் துன்பம்[95] தலைவியே தலைநின்று பேசும் திருமொழிகளிலே காணப்படுகிற[96] பிரிவுத் துன்பத்திலும் மிகுதியாகக் காண்கின்றது. இதற்குக் காரணம் காசினை இழந்தவருக்கும், பொன்னினை இழந்தவர்க்கும் இரத்தினத்தை இழந்தவருக்கும் இழந்ததனால் உளதாய துன்பம் ஒத்ததாக இராமல் வேறுபடுவது போன்று, அங்குமிங்கும் பிரிவுத் துன்பம் ஒன்றாயினும் துன்பத்தில் வேற்றுமை உண்டு என்றுணரலாம்.

வாணுதலிம் மடவரல், உம்மைக்
காணுமாசையுள் நைகின்றாள், விறல்
வாணனாயிரந் தோள்துணித்தீர், உம்மைக்
காணநீ ரிரக்க மிலீரே[97]

'உம்மைக் காணும் ஆசை' என்று தாய் கூறுவது நயமுடைத்து. "உம்மை அணைய ஆசைப்பட்டாளோ, இல்லையே காட்சியிலேயும் அருமைப்படுத்து வீரோ?" என்பாள் 'காணும் ஆசை' என்கிறாள்.

"தன் நெஞ்சிலே ஒடுகின்றவற்றைப் பிறர் அறியாதபடி அடக்கும் இயல்புடைய இவள், இப்போது வாய்விட்டுக் கூப்பிடும்படி இவளை வஞ்சித்தாயே" என்கிறாள் தாய்.

உள்ளு ளாவி யுலர்ந்துலர்ந்து என்
வள்ளலே! கண்ணனே! என்னும்; பின்னும்
வெள்ளநீர்க் கிடந்தாய்! என்னும் என்
கள்விதான் பட்ட வஞ்சனையே[98]

என்னும் இவளது கூற்றில் தன் மகள் இழந்த இழப்புகளையும் அதனால் அவள்படும் துன்பங்களையும் உள்ளபடி கூறுவதைக் காணலாம்.

Koviloor Digital Library

இவ்வாறே, இது 'தேசத்தாலும் காலத்தாலும் கைகழிந்த அவள் படிகளையும் அந்தந்தத் தேசத்தோடும் காலத்தோடும் கூட்டி, இப்போதே பெற்று அனுபவிக்க வேண்டும் என்ற நிலையிலிருந்த தலைமகளின் தன்மையைக் கண்டு தாய் இரங்கிக் கூறும் பாடல்கள் அகப்பொருட் சுவைபட அமைந்துள்ளன.[99]

தலைவியின் கூற்றுகளில் அமையும் பாடல்களே அவள் கூறுவதைக் கூறித் தாய் இரங்குவதாக அமைந்துள்ளது. அதாவது மரபு கருதித் தாய் கூற்றுப் பாடல்கள் அமைத்துக் காட்டுகின்றார் நம்மாழ்வார்.[100] பிரிவாற்றாத நிலையில் போலி கண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் தாயுரைக்கும் பாசுரம் இது. தோழியினும் அணுக்க நிலையிலிருந்து இந்தத்தாய், தன் மகளின் செயல்களைக் கூர்ந்து நோக்குதல் குறிப்பிடத்தக்கதாம்.

இப்படி, பிரிவாற்றாது தலைவன் தன்மைகளை எண்ணி உயிர் வாழ்ந்திருக்கப் பார்க்கிற தலைவியின் நிலைகண்ட தாய் 'ஆவேசமோ' என்று உளம் நொந்து கூறுதலும்[101] தலைவனை அணுகி அனுபவிக்க முடியாமல் வந்த துன்பத்தால், பிரிந்து வருந்தும் தலைமகளைக் குறித்துத் தாய் இரங்கும் பாசுரங்களும்[102] அகப்பொருள் நயந்தோன்ற அமைந்துள்ளன.

1. செந்தாமரைக் கண்ணற்கு ஏலக்குழலி இழந்தது சங்கே.
2. தூமாய் முடியானுக்கு என் மங்கை இழந்தது மாமை நிறமே.
3. சக்கரக் கையவனுக்கு என் பிறங்கிருள் கூந்தல் இழந்தது பீடே.
4. நாடுடை மன்னர்க்குத் தூதுசெல் நம்பிக்கு என்பாடுடையல்குல் இழந்தது பண்பே.
5. எம்தேவபிரானுக்கு என்கண்புனை கோதை யிழந்தது கற்பே.
   (கற்பு – அறிவுடைமை)
6. தாமரை நாண்மலர்க் கையாற்கு என்வில் புருவக் கொடி தோற்றது மெய்யே.
7. கண்ணபிரானுக்கு என் தையல் இழந்தது தன்னுடைச் சாயே !
   (சாய் – ஒளி)
8. பேயைப் பிணம்படப் பாலுண்டபிரானுக்கு என் வாசக்குழலி யிழந்தது மாண்பே.
9. எம் காகுத்த நம்பிக்கு என்பூண் புனைமென்முலை தோற்றது பொற்பே.
10. மாயற்கு என் கற்புடையாட்டி இழந்தது கட்டே[103]
    (கற்புடையாட்டி – தக்க அறிவுடையளான என் மகள். கட்டு – எல்லாமும்)

Koviloor Digital Library

இந்தப் பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் தலைவி இன்னலம் இழந்தாள், இழந்தாள் என்று சொல்லி அவள் இழந்தமைக்குத் தான் வருந்துகின்றாள் தாய்.

இங்குத் தன் பெண்ணை ஆகுபெயர்ப் பொருள்பட, கூந்தல், கோதை, கொடி, தையல் என்றே குறித்துள்ள நயம் பாராட்டத்தக்கது. இங்ஙனம் மாலுடனே தான் கலந்து வாழப் பெறாமையால் சால நைந்து தன்னுடைமை யெல்லாம் தோற்று வருந்தும் தலைமகளை ஈண்டுக் காட்டுகின்றாள் தாய். இந்தப் பதிகத்தில் வேங்கட வாணனைப் பல அடைமொழிகளால் நான்கனுருபு விரிந்துவரக் கூறியுள்ள திறம் பெரிதும் போற்றத்தக்கது.

இவ்வாறே,

உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற் றிலையுமெல்லாம்
கண்ணன், எம்பெருமா னென்றென் றேகண்கள் நீர்மல்கி,
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக் கவனூர் வினவி,
திண்ண மென்னிள மான்புகு மூர்திருக் கோளூரே.[104]

என்று தொடங்கும் பதிகம் எடுப்பானதொரு பதிகமாகும். தன்மகளின் வாழ்வும் வளமும், அடிப்படைப் பொருளும் (தாரக, போஷக, போக்கியங்கள்) எல்லாம் கண்ணன் என்று உணர்ந்து திருக்கோளூரில் ஈடுபட்டதை, அத்தலைவனது அந்நகர் நோக்கிச் செல்கின்ற தலைமகளைப் பற்றித் தாய் இரங்கும் பாடல்களாக ஈண்டு நம்மாழ்வார் அகப்பொருள் மரபுவழி முறைப்படி பாடியிருக்கின்றார். ஆயினும் ஆழ்வாரின் குரலும், மனமும், சொல்லும், செயலும், வாழ்வும் வகையும் இதன் அடிநிலையோசையாக ஒலிக்கக் கேட்கலாம்.

இறுதியாக, வைணவ உலகில் சிறப்பாகக் கொண்டாடப்படும் தாய் கூற்றுப் பதிகம் ஒன்றும் நினைக்கத்தக்கது. இதற்குக் காரணம் இந்தப் பாடல்களில் வரும் செய்திகள் அனைத்தும் திருவரங்கன் பற்றியவையாம். இதனைக் கொண்டு பட்டர் திருவாய்மொழி ஆயிரமும் மதிளரங்கர் புகழ்மேல் பாடப்பட்டவை என்றே தமது உட்கருத்தை வெளியிட்டார். பராங்குச நாயகி பெரிய பெருமானிடத்தில் (அரங்கன்) காதல் கொண்டு மயங்கிக் கிடப்பதைத் தாய் கண்டு 'இவள்வழி ஏது நினைத்திருக்கிறீர்?'[105] என்று வினாவும்படி அமைந்துள்ளது.

தன்னுடைய பெண் ஒரு பிராட்டி தசையையடைந்து "கங்குலும் பகலும் கண் துயிலறியாள், இட்டகால் இட்ட கையளாயிருக்கும், சிந்திக்கும் திசைக்கும் முதலான பாடல்களில் கூறியபடியே இராப்பகலாக அழுவது, தொழுவது, மயங்குவது, [illegible]வது, நெடுமூச்செறிவது, இவையும் செய்ய மாட்டாமல்

Koviloor Digital Library

நிற்பது''[106] முதலான நிலைகளையடைந்து, பிரிவு மிகுந்து செய்கையாலே மிக வருந்துவதைச் சித்திரிக்கும்.

ஈண்டு ஒரு மரபு மாற்றத்தை அகப்பொருள் முறையில் காணலாம். சங்க இலக்கியங்களிலோ, அக இலக்கண விதி முறைகளிலோ தாய் தலைவனிடம் நேர்நின்று பலபடப் பேசுவதைப் பார்க்க இயலாது. ஆனால் ஈண்டு ஆழ்வார் பாடல்களில் தன் பெண்ணை அவள் விரும்பும் பெரிய பெருமாள் கண் வளர்ந்தருளுகிற கோயில் திருவாயிலில் போகட்டுத் திருத்தாயார் நாணமில்லாமல் தானே இவள் தசையை மணவாளப் பிள்ளையான பெரிய பெருமாளுக்குச் சொல்லி ''திருவரங்கத்தாய்! இவள் திறத்து என் செய்கின்றாயே!''[107] ''இவள் திறத்து என் செய்திட்டாயே''[108] ''இவள் திறத்து என் சிந்தித்தாயே''[109] ''என் செய்கேன் என் திருமகட்கே''[110] என்று அவர் தம்மையே கேட்கும்படி அவ்வளவு பெரிய வருத்தம் தாயாகிய ஆழ்வார்க்கு உண்டாகின்றது.

கங்குலும் பகலும் கண்டுயி லறியாள்
கண்ணநீர் கைகளால் இறைக்கும்
சங்குசக் கரங்க ளென்றுகை கூப்பும்
'தாமரைக்கண்' என்றே தளரும்
'எங்ஙனே தரிக்கே னுன்னைவிட் டென்னும்
இருநிலம் கைதுழா விருக்கும்[111]

என்ற பாட்டில், தலைவி இரவும் பகலும் கண்துயில் அறியாள் என்கின்றாள் தாய். தலைவி களவில் (ஸம்ச்லேஷத்தில்) உறங்க மாட்டாள். பிரிவில் (விச்லேஷத்தில்) பிரிவுத் துயர் உறங்கவொட்டாது. ஆகையாலே இவருக்கு இரண்டு படியாலும் உறக்கமில்லாமையாலே ''அறியாள்'' என்கிறாள்.

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்[112]
பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு[113]

என்னும் காமத்துப்பால் குறட்பாக்கள் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன. இனி இரு குறட்பாக்களும் தலைவனது பிரிவினால் துன்புறும் தலைவியின் நிலையைக் கூறுவன. பிரிந்த தலைவர் வந்தால், அவர் பிரிவு அஞ்சித் துயிலா – அதாவது இனியும் அவர் பிரிவாரோ என அஞ்சிக் கண்கள் தலைவிக்கு உறங்காவாயின என உரைகண்ட பரிமேலழகர் பெரிதும் பாராட்டுதற்குரியவர் என்பர்.[114] இவ்வாறே ஈண்டுப் பராங்குச நாயகி, கலவியில் உறங்க மாட்டாள். பிரிவுத் துயர் உறங்க

Koviloor Digital Library

வொட்டாது என இரண்டுபடியாலும் உறக்கமில்லாமை இந்தத் தாய் கூற்றினால் சிறப்புறச் சித்திரிக்கப்படுகின்றது.

தலைவி கூற்றுப் பாடல்கள்

தலைமகள் தூதுவிடும் திருவாய்மொழி நான்காகும். 'அஞ்சிறைய மட நாராய்'[115] என்று தொடங்கும் பத்து மிகச் சிறப்புடையதாகும். இங்குத் தூது விட்டது, 'பிரேம காரியம்' என்பர் வைணவப் பெரியோர். ஆற்றாமையாலே தலைவனது பிழை பொறுத்தலைப் பற்றாகக் கொண்டு தலைமகள் பறவை முதலியவற்றைத் தூது செல்ல விடும் பாடல்கள் திருவாய் மொழியில் நான்கு பதிகங்கள் புலப்படுத்துகின்றன.

'அஞ்சிறைய மட நாராய்'

இந்தப் பதிகத்தில் அமைந்துள்ள பத்துப் பாடல்களும் தரவு கொச்சகக் கலிப்பா. பராங்குச நாயகி தன் பக்கத்திலிருந்த ஒரு பெடை நாரையைப் பார்த்து "நீ உன் சேவலோடு சென்று என் நிலையை என் தலைவர்க்கு அறிவித்து என்னையும் அவனையும் சேர்க்க வேண்டும்" என்கிறாள்.

'அஞ்சிறைய மடநாராய்' என்று சிறகுகளைக் கொண்டாடுதற்குக் காரணம் – தாயின் உறுப்புக்கள் எல்லாம் கிடக்க, குழந்தை மார்பிலே வாய் வைக்குமாபோலே, பறப்பதற்குச் சாதனமான சிறகிலே முற்படக் கண் வைக்கிறாள். இனி, கலவியாலே பிறந்த மகிழ்ச்சி வடிவிலே தோன்றுவதாலும் "அஞ்சிறை" என்கிறாள். நாரையை விளித்து "என்பால் அருள் பண்ணத் தக்காய்" என்று கூறியதும் உணரத்தக்கது. இந்தச் சமயத்தில் இவள் நாரையைப் பார்த்தது யாங்ஙனமிருந்தது என்னில் – பிராட்டியைப் பிரிந்து இராமன் பம்பை நதிக்கரையில் அநுமானைச் சந்தித்தது போன்றிருந்தது என்பர் உரை விளக்கங்கூறுவோர்.

இது போன்றே தலைவி குயிலை விளித்து, தன் செங்கண் பெருமானிடத்தில் தூதாகச் செல்லும்படி வேண்டுகின்றாள்.[116] விதியினால் பெடை மணக்கும் அன்னங்களை விளித்துத் தலைவி பேசுவதும்[117] மகன்றில்களை யழைத்து நீலமுகில் வண்ணற்குத் தன் நிலையைக் கூறும்படி கேட்பதும்[118] மிக்க சுவையுடைய அகப்பொருட்பாக்களாம். இவற்றுள் மகன்றில்களையழைத்து "என் நீர்மை கண்டிரங்கி இது தகாது என்னாத" என்று சொல்லும்போது அகப் பொருட்டுறை சிறக்க விளக்கமுறுவதைக் காணலாம்.

ஈண்டு, பட்டரை ஒரு தமிழ்ப் புலவர் "கேட்டு இரங்கி" என்னாது "கண்டு இரங்கி" என்னப் பொருந்துமோ என்று வினவினாராம். அதற்குப் பட்டர்

Koviloor Digital Library

விடையாக "அணைக்கக் கை நெகிழ்த்த அளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத் தகாது என்று இருக்க வேண்டாவோ?" என்று அருளிச் செய்தார். கேட்ட புலவர் அப்போதும் தெளிவடையாமல் "இவ்வாறு நிகழ்வது உளதோ?" என்ன, "புல்லிக் கிடந்தேன் புடை பெயர்ந்தேன் அவ்வளவில், அள்ளிக் கொள்வற்றே பசப்பு"[119] "ஊருண் கேணி உண்டுறை தொக்க, பாசியற்றே பசலை காதலர், தொடுவுழித் தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப் பரத்தலானே"[120] என்பன போன்ற தமிழ் வழக்குகளை நீர் அறியீர் போலும் என்று அருளிச் செய்தாராம்.

இவ்வாறே இரைதேர் வண் குருகை நோக்கி, மல்குநீர்க் கண்ணனாகிய தனக்கு ஒரு சொல் சொல்லும்படி வேண்டுகின்றாள். 'தாரான், தரும்' என்ற இரண்டில் ஒன்று கேட்டுவர வேண்டுமென்பதே ஒரு சொல்லாகும்.[121] மறுக்கும் சொல்லும் வேண்டுவதோ என்னில், அதுவும் அமையும்; "பாவி நீ அன்று ஒன்று சொல்லாய், பாவியேன் காண வந்தேன்" என்றார் நம்மாழ்வாரே,[122]

நீயலையே சிறுபூவாய்! நெடுமாலார்க் கென்தூ தாய்
நோயெனது நுவலென்ன நுவலாதே யிருந்தொழிந்தாய்!
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான், இனியுனது
வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே[123]

இது தலைவி சிறுபூவையை நோக்கிச் சொல்லியது. 'இனிமேல் உனது வாயலகில் இன்ப உணவினையூட்ட வல்லவர்களைத் தேடிக் கொள்வாய்' என்று தலைவி சொல்லும்போது அவள் தன் சாயலும் அழகிய மாமை நிறமும் நீக்கப் பெற்றமை தெற்றெனத் தெளிவாகின்றது.

இங்கு இந்தப் பாடல் வைணவப் பெரியோரின் உள்ளத்தை ஈர்த்த பாடல் என்பதற்குப் பல சான்றுகள் உள.[124] இங்ஙனமே வாடைக் காற்றை விளித்துத் தூது செல்லச் சொல்லுவதும்[125] மடநெஞ்சை விளித்துக் கூறுவதும்[126] நம்மாழ்வார் பராங்குச நாயகியாக நின்று மனம் பொருந்தி அருளிச் செய்த பண்டைய மரபினை அடியொற்றியெழுந்த தூது இலக்கியப் பாடல்களாகும்.

அகப்பொருளுக்கென்றிருந்த தூதின்நிலை மாறி சமய இலக்கியங்களில் இறையருள் பெறுவதற்கும் இந்தத் தூது இலக்கிய உத்தி பயன்படும் வண்ணம் இலக்கியக் கொள்கை ஆழ்வார்கள் காலத்தில் உருவெடுக்கின்றது என்பார்தம் கருத்து சிந்தனைக்குரியதாம்.[127] தொல்காப்பியர் காலத்திலிருந்து சமய இலக்கியங்கள் காலம் வரை தூது ஓர் இலக்கிய உத்தியாகவே பயன்பட்டது; பின்னர் இந்நிலைமாறி நாளடைவில் பெரும் வளர்ச்சி பெற்றுத் தனி இலக்கியமாகவே கால்கொள்ளத் தொடங்குகிறது. கலம்பகங்களில் மகளிர் தூது விடுப்பது அந்நூல்களின் ஓர் அங்கமாக விளங்கியது. தூது இலக்கியம் இக்

Koviloor Digital Library

கலம்பக உறுப்பின் வளர்ச்சி என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.[128] பின்னர் உலா, மடல் முதலிய அகப்பொருள் இலக்கியங்களைப் போலத் தனி இலக்கிய மாகவும் வளம்பெறலாயிற்று.

இவ்வாறு அகப்பொருள் இலக்கணத்தைத் தழுவித் தலைவனைப் பிரிந்து தலைவி வருந்தும் முறையிலும், பறவைகளைத் தூதாக விடுக்கும் முறையிலும் பல இனிய பாடல்களை நம்மாழ்வாரது படைப்புகளில் காணக் கூடும். தலைவி தன் நிலையழிவையும், மனக்குறைவையும் பெருமானிடம் தூதாக நாரை, குயில், அன்னம், அன்றில், குருகு, வண்டு, கிளி, பூவை முதலிய புட்களை விடுத்துத் தெரிவித்து அவன் அருளை வேண்டுதலைச் சிறக்கக் காணலாம். பிசிராந்தையார் அன்னச்சேவலைத் தன் ஆருயிர் நண்பனான கோப்பெருஞ்சோழனிடம் தூதாக விடுத்ததைப் புறநானூற்றுச் செய்யுள் கொண்டு இவ்வாறு பறவைகளைத் தூதாக அனுப்புதல் தமிழ்நாட்டுப் பழமையான வழக்கு என்பதனை உணர்த்துவர் அறிஞர்.[129]

புள்ளினங்களை முன்னிலைப்படுத்தித் தன் துயரைக் கூறுவதுடன், அவையும் தன்னைப் போன்று துயருறுவதாகக் கூறப்படும் பகுதிகள் அவலச் சுவை மிகுந்து தோன்றுவன எனலாம்,

... ... அன்றிலே
ஆட்பட்ட வெம்மே போல் நீயும் அரவ ணையான்
தாட்பட்ட தண்டுழாய்த் தாமம்கா முற்றாயே[130]
காமுற்ற கையறவோ டெல்லே இராப்பகல்
நீமுற்றக் கண்டுயிலாய் நெஞ்சுருகி யேங்குதியால்
தீமுற்றத் தென்னிலங்கை யூட்டினான் தாள்நயந்த
யாமுற்ற துற்றாயோ வாழி கனைகடலே![131]

என்று பாடியுள்ள பாடல்கள் அவலச்சுவை ததும்பி நிற்கும் அரிய கூற்றுகளாம்.

'வைகல் பூங்கழிவாய்' என்னும் ஆறாம் பத்து முதல் மொழியும், ஆறாம் பத்து எட்டாம் திருமொழியும் இவ்வாறு அமைந்து கல்நெஞ்சரையும் ஈரநெஞ்சினராய் உருகும்படி பாடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

ஒன்பதாம் பத்து ஏழாந்திருமொழி எம்பெருமானது வடிவழகே பற்றாகத் தலைவி (பராங்குச நாயகி) திருமுழிக்களத்தே பறவைகளைத் தூது விடுவதாகக் கூறும் பாடல்களைக் கொண்டுள்ளது. இந்தப் பாடல்கள் நெஞ்சையள்ளுவனவாய் அமைந்துள்ளன. இதற்குக் காரணம் – பராங்குச நாயகி அலற்றிய சொற்களே பாடல்களாக அமைந்தன என்பது கவனிக்க வேண்டுவது.[132]

Koviloor Digital Library

நம்மாழ்வாரால் கூறப்பட்ட நான்கு தூதுகளும் அகவிலக்கிய மரபுப்படி காமமிக்க கழிபடர் கிளவி என்ற துறையினைச் சாரும். இக்கிளவி வேட்கைமிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லும் சொல்லாகும். இக்கிளவிச் செய்யுட்களுக்குக் கருத்து – கடல், கானல், பொழில், விலங்கு, புள் இவற்றை நோக்கித் தலைவி இரங்கிக் கூறுதலாகும்.

ஆழ்வார் (பராங்குச நாயகி) விடுத்த தூது நான்கு பதிகங்களுக்கும் அமைத்த செய்தியடைவு (விஷய நிரூபணம்) தத்துவப் பொருள் உறுதியாக்கம் காண வேண்டிய – கற்றுப் பயன்பெற வேண்டியவொன்றாகும். [133]

பிரிவாற்றாமை

தலைவனாம் இறைவன் – இறைவனாம் தலைவன் மறைய நிற்க ஆழ்வார் ஒரு பிராட்டி தசையை அடைந்து இயற்கைப் பொருள்களும் தம்மோடு வருத்தங் கொண்டு வருந்துவதாக எண்ணிப் புலம்பும் 'வாயுந் திரையுகளும்', என்னும் பதிகம் தலைவியின் ஆற்றாமையின் கூற்றாகச் சிறப்புற அமைந்துள்ளது.[134] முதற்பாடல் தன்னுள் கையாறு எய்திடு கிளவி என்னும் துறையின் பாற்படும். அதாவது தனக்கு நேர்ந்த துன்பத்தைத் தன் ஆற்றாமையால் பிறிதொன்றின் மேலிட்டுக் கூறுகின்றாள் தலைவி. "மட நாராய்! என்னைப் போன்று நீயும் நோயும் பசலையும் எங்கும் பரவும்படி திருமாலால் நெஞ்சம் கொள்ளப் பட்டாயோ" என்கிறாள் தலைவி. இதற்குப் பயன் ஆறுதல் கிடைப்பதாம்.

பராங்குச நாயகி தலைவன் வேண்டாத, அவனுக்குப் பயன்படாத மாமை, நெஞ்சு, நிறை, தளிர், நிறம் அறிவு, கிளரொலி வரிவளை, மேகலை, உடம்பு, உயிர் ஆகிய இவை தனக்கும் வேண்டா என்னும் பகுதி அகப்பொருள் சுவைபுடையதாகும்.

1. மாறாளன் கவரா மணிமாமை குறைவிலமே.
2. மணிமாயன் கவராத மடநெஞ்சால் குறைவிலமே.
3. நெடுமாயன் கவராத நிறையினால் குறைவிலமே.
4. சறையினார் கவராத தளிர் நிறத்தால் குறைவிலமே
   (சறை – இடையர் அரையில் கட்டும் ஒருவகை மண்)
5. அளிமிக்கான் கவராத அறிவினால் குறைவிலமே.
6. கிறியம்மான் கவராத கிளரொளியால் குறைவிலமே.
   (கிறி – தந்திரம்)
7. வளரொளியான் கவராத வரிவளையால் குறைவிலமே.

Koviloor Digital Library

8. விரிபுகழான் கவராத மேகலையால் குறைவிலமே.

9. யோக மணைவான் கவராத வுடம்பினால் குறைவிலமே.

10. சடைமுடியன் தனியொரு கூறமர்ந்துறையும்
உடம்புடையான் கவராத உயிரினால் குறைவிலமே[135]

இப்படித் தலைவன் விரும்பாத எந்தப் பொருளினாலும் தான் ஒரு பயனும் உடையளல்லள் என்கிறாள். இங்கு எம்பெருமாள் விரும்பாத ஆன்மாவையும் ஆன்மாவோடு தொடர்புடைய பொருள்களையும் வேண்டா என்று கூறும் இந்தப் பதிகத்தைச் சொல்பவர் காய்ப்பு ஏறிய இந்தப் பிறவியை அறுத்துக் கொண்டு வைகுண்டம் நண்ணுவர் என்னும் நம்பிக்கையை ஊட்டுகின்றார் நம்மாழ்வார்.[136]

மடல் ஊரத் துணிதல்

'மாசறு சோதி என்செய்யவாய்' என்னும் பதிகம் தலைவனை விட்டுப் பிரிவு பொறுக்க மாட்டாமல் தலைமகள் ஆசை மேலிட்டினால், உலகோர் பழிக்கும் அஞ்சாமல் மடல் ஊரத் துணிந்ததாகக் கூறுகின்றது.[137] இதில் அமைந்துள்ள பாடல்கள் தோழியை விளித்துப் பேசியவை; கலிவிருத்தத்தால் அமைந்துள்ளன. இது பற்றித் திருமங்கையாழ்வாரின் 'மடல்' பற்றிய பாடல்களோடு ஒப்பிட்டு ஆய்வில் உரைக்கப்படுகின்றன. குதிரியாய் (நாணமற்றவளாய்) மடல் ஊரப் போவதாகக் கூறுகின்றாள் தலைவி. மடல் ஊர்ந்து தலைவனுடைய துழாய் மலர் கொண்டு சூடுவதாகவும் இயம்புகின்றாள்; தெருத்தோறும் அயல் பெண்கள் நாக்கு மடங்கும்படி அவர்களைப் பழியைத் தூற்றி நாடு முழுவதும் இரைக்கப் போவதாகத் தலைவி சொல்லுகின்றாள்.

இந்தப் பதிகம் பிரிவின் ஆற்றாமையின் மிகுதியை நெஞ்சுருகக் கண் பனிப்ப ஏற்றமுற எடுத்துக்காட்டுகிறது என்பர் வைணவப் பெரியோர். "பெண்கள் மடல் ஊரார்" என்ற மரபினை மீறிப் பேசுகின்ற இம்மரபு மாற்றப் பாடல்கள் குறிக்கத்தக்கன. இவ்வகையில் மகளிர் மடல் ஏற விழையும் புதிய மரபினைத் தோற்றுவித்தவர் நம்மாழ்வார் என்று துணியலாம். இவரைப் பின்பற்றியே திருமங்கையாழ்வார் தம் மடல்களை அமைக்கின்றார்.

மடல் ஊர்தற்கு வலிமையில்லாமல் தலைவி இரவு நீட்டிக்கவே வருந்திக் கூறும் திருவாய்மொழிப் பதிகம் சிந்தனைக்கு விருந்தாகும்.[138]

உருவெளிப்பாடு கண்டுரைத்தல்

உருவெளிப்பாடு கண்ட தலைவி தாயை மறுத்துரைக்கும் 'எங்ஙனேயோ அன்னைமீர்காள்' என்னும் பதிகம் அகப்பொருள் நிலையில் எண்ணுதற்கு

Koviloor Digital Library

உரியது.[139] திருக்குறுங்குடி நம்பியின் வடிவழகிலே நெஞ்சு பரிவுண்டு கிடக்கும் தலைமகள் பேச்சு 'நீங்கள் என்னை அடக்கப் பார்ப்பது முறையல்ல' என்று அன்னையரை நோக்கிப் பகர்வதைக் காட்டுகின்றது.

ஏழையர் ஆவியுண் ணுமிணைக் கூற்றங்கொ லோவறியேன்
ஆழியங் கண்ண பிரான்திருக் கண்கள்கொ லோவறியேன்
சூழவும் தாமரை நாண்மலர் போல்வந்து தோன்றும் கண்டீர்
தோழியர் காள்!அன்னை மீர்!என்செய் கேன்துய ராட்டியேனே![140]

திருக்குறுங்குடி நம்பியைப் பற்றிய பதிகத்திலே உருவெளிப்பாடு கண்ட தலைவி தாயை மறுத்துரைத்தாள். இந்தப் பாட்டு உருவெளிப்பாட்டைப் பற்றியே பேசுகின்றது. இந்தப் பதிகம் முழுவதும் ஒவ்வொரு பாடலிலும் எம்பெருமானுடைய ஒவ்வோர் உறுப்பையும் குறித்துக் காட்டி அவை படுத்தும் பாட்டைச் சொல்லுகின்றாள் தலைவி. முறையே திருக்கண்கள், திருமூக்கு, திருவாய், புருவம், முறுவல் (பல்) திருக்குண்டலக் காதுகள், திருநுதல், வாண் முகம், மாயன் கருங்குழல், அவன் சுடர்முடி இவைகள் பேசப்படுகின்றன.[141]

ஊடல் கொண்டுரைத்தல்

தலைவன் நேரங்கழித்து வரக்கண்ட தலைவி, 'உமக்கு வேண்டிய கோபியர் இருக்க இங்கே வர வேண்டா' என்று மடல் திறத்தினால் முகம் கொடாது இருக்குந் திறத்தை எடுத்துக்காட்டுகிறது ஒரு பதிகம்.[142]

இந்தப் பதிகம் பாகவதத்தில் கண்ணன்· கோபியரிடை நிகழ்ந்த ஊடல் திறத்தின் சாயலாக அமைந்துள்ளது என்று சொல்லலாம். "நின் தன்னால் நலிவே படுவோம் என்றும் ஆச்சியாமோ" என்னும் பத்தாவது பாடல் இதற்குச் சான்றாகும்.

ஊடல் திறத்தினால் பிற பெண்டிரை ஏசுவது முதல் ஆறு பாடல்களில் தெற்றெனக் காணலாம். இவை சீற்றத்தினால் எழுந்தவை என்பதையும் இறுதிப்பாடலில் அறியலாம்.[143] ஏழு முதல் பத்து வரை பாடல்களில் ஊடல்திறம் வேறுவகையாகப் பேசப்படுகிறது.

பெரிய திருமொழியிலே "காதில் கடிப்பிட்டு" என்ற திருமொழியும், பெருமாள் திருமொழியில் "ஏர்மலர்ப் பூங்குழல்" என்ற திருமொழியும் இந்தப் பாவனையிலேயே தோன்றியன என்பது நோக்கத் தக்கது. கிருஷ்ணாவ தாரத்தில் கண்ணனோடு கலந்து பரிமாறின கோபியர் இத்தகைய ஊடல் (பிரணவ சீற்றத்தாலே) செய்தல் பாகவதத்தில் காட்டப்படுகின்றது. அவர்களுடைய

Koviloor Digital Library

பாவனையையே இப்போது இங்குப் பராங்குச நாயகியாகிய ஆழ்வாரும் ஏற்று ஏறட்டுக் கொண்ட அந்த பாவனையே வெளிப்படையாயிற்று எனலாம்.

புதிய மரபு படைத்தல்

தாய்மாரும் தோழிமாரும் தடுக்கவும் தலைவி, திருப்பேரைக்குச் செல்வேன் என்று கூறுவதும்.[144] தலைவனை நோக்கச் செல்லக் கருதிய தலைவி கூற்றாக அமைந்த பதிகமும்[145] நன்கு ஆராயத் தக்கன. ஆழ்வார் பெண் நிலையை ஏறட்டுக் கொண்டதனால் உண்டான புது மாபு நிலையாகும் இவை. இல்லெனில் தலைவி தானாகச் சென்று சேரல் அவள் பெண்மைக்கு இழுக்காகும். எனவே இறைவன் தலைவனாகவும், ஈண்டுத் தலைவி தான் கடந்த நிலையில் பிரிவுத் துன்பத்தில் பேசுகின்றாளாதலாலும் இம்மரபு மாற்றம் ஏற்றுக் கொள்ளப்படு கின்றது.

இனி மாலைப்பூசல்,[146] காலைப்பூசல்[147] என்றமையும் பதிகங்களும் சிந்திக்கத்தக்கன. ஈண்டுத் தலைவி தனது ஆற்றாமையாலே வருந்திக் கூறுகின்றாள்; தனது இரக்கமின்மையைத் தெரிவிக்கின்றாள். நெஞ்சை நெகிழ்விக்கும் முறையில் இவை அமைக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

மாலையும் வந்தது, மாயன் வாரான்[148]

என்னும் நயம் நெஞ்சை நெகிழ்விக்கும். காலையில் பசுநிரை மேய்க்கப் போதலைக் குறித்துக் காட்டிப் பின் அந்த மேய்தலையொழிப்பான் இந்தப் பராங்குச நாயகி முயலும் நிலை இவளின் அரற்றுதலைச் சித்திரித்துக் காட்டுகின்றது.[149]

வேய்மருதோள் இத்திரைகோன் மேவுகின்ற தேசத்தைத்
தான்மருவாத் தன்மையினால் தன்னையின்னும் – பூமியிலே
வைக்குமெனச் சங்கித்து மால்தெளிவிக் கத்தெளிந்த
தக்கபுகழ் மாறனெங்கள் சார்வு.

என்று மணவாள மாமுனிகள் கூறுவதால் நாயகி பூசலிடுதலைத் திரும்பத் திரும்பக் கூறி அரற்றுதலைப் பெற வைத்தல் நோக்கலாம். சொற் பொருளாழம் மிக்கதாய் இந்தக் கூற்றுப் பாடல்கள் அமைந்துள்ளன.

இவ்வாறெல்லாம் நம்மாழ்வார் பராங்குச நாயகியாக நின்று பதினெட்டுப் படி நிலைகளில் [150] பலபடியாக நாவன்மையும், பொருட் சிறப்பும். பக்தி நலமும். அகப்பொருட் சுவைப் பெருக்கும், தலைவனிடம் கொண்ட காதல் பெருக்கமும்

Koviloor Digital Library

தோற்றும்படியாக இனிதாக எடுத்து மொழிகின்றார். கற்பார்க்குக் கருத்துக் கருவூலமாக இவை அமைந்து இலக்கியச் சுவை பயக்கின்றன.

நம்மாழ்வாரின் திருமொழிகள் இவ்வகையில் இலக்கியவாணர்களுக்கு இனிய விருந்தாகும்; 'வேதாந்திகளுக்கு ஞானமும் பக்திப் பெருவெள்ளத்தின் உணர்ச்சியும் தரத்தக்கன; இறைவன் பற்றிய செய்திகளை இன்தமிழில் கூறிச் சிறக்க வைக்கின்றன; 'பாலேய் தமிழர், இசைகாரர், பக்தர் பரவும் ஆயிரத்தின்' என்று இவரால் பாராட்டச் செய்வன. பக்தர்கள் பக்திக்குத் திருவாய்மொழியைப் பாடினார்கள் என்றால், இசைகாரர், பாடலின் இசைக்காகவும், தமிழர் தமிழ்ப் பயிற்சிக்காகவும் அதைப் படிக்கும் வண்ணம் திகழ்கின்றன. திருமாலே மாயக்கவியாய் வந்து தன் நெஞ்சிலும் உயிரிலும் கலந்து கொண்டு தன்னைப் பாடுவித்துக் கொண்டான் என்பது நம்மாழ்வார் நம்பிக்கை.

சென்று புனல் மூழ்கிச் செய்தவங்கள் செய்தாலும்
வென்று புலன் ஐந்தடக்கிவிட்டாலும் – பைந்தமிழால்
மாறன் இசைத்த மறை ஒதார்க்கு இல்லைதிரு
ஆறன் வினையான் அருள்.

என்று இராமானுசர் கொண்டாடினாரென்றால் அஃது ஏற்புடைத்தேயாகும்.

★

Koviloor Digital Library

குறிப்புகள்

1. நம்மாழ்வார், திருவாய்மொழி, 1:7.
2. எம். ராதாகிருஷ்ண பிள்ளை, பிற்கால வைணவம். ப.23.
3. திருவாய் மொழி, 10:7–2.
4. திருவாய் மொழி, 10:7–3.
5. "அறியாக் காலத்துள்ளே
   அடிமைக்கண் அன்பு செய்வித்து
   அறியா மாமாயத்து
   அடியேனை வைத்தாயால்"
   – திருவாய் மொழி, 2:3–3

   இந்தப் பகுதியினால் நம்மாழ்வார் ஒதாதுணர்ந்த ஞானச் சிறப்புடையவர் என்பதும், தான் இறைவனிடம் அன்பு கொள்ளுமாறு இறைவன் அருள் புரிந்தான் என்றும் கூறுவதையும் காணலாம்.
6. திருவாய் மொழி, 4 : 5–10.
7. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப.135.
8. காண்க பின்னிணைப்பு.
9.
10.
11. காண்க பின்னிணைப்பு "திருவிருத்தம் – துறைகள்."
12. ந. சுப்புரெட்டியார், "வைணவ சமய நூல்கள்", தெய்வத்தமிழ், ப.466.
13. ஈ.கோ.பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தோழி, ப.5.
14. வெள்ளைவாரணர், "குறிஞ்சிப்பாட்டு", பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள், ப.232.
15. திருவிருத்தம், 5, 13, 16, 73, 83, 87.
16. திருவிருத்தம், 22, 33, 34, 36, 82
17. திருவிருத்தம், 56, 61, 69, 98
18. திருவிருத்தம், 18.
19. திருவிருத்தம், 2.
20. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர், திருவிருத்தம் – திவ்யார்த்த தீபிகை, ப.16.

Koviloor Digital Library

21. பனிப்பியல்வாக உடைய தண்வாடை இக்கால மிவ்வூர்
பனிப்பியல்வெல்லாந்தவிர்ந் தெரிவீசும் அந்தண் ணந்துழாய்ப்
பனிப் புயல்சோருந் தடங்கண்ணி மாமைத் திறத்துக் கொலாம்?
பனிப் புயல்வல்லன் செங்கோ லொரு நான்று தடாவியதே

– திருவிருத்தம், 5.

22. திருவரங்கத்து மாலை, 15.

23. திருவிருத்தம், திவ்யார்த்த தீபிகை, ப.31.

24. ஜி. எத்திராஜுலு நாயுடு, பக்திப் பூங்கா. ப.43.

25. ஞாலம் பனிப்பச் செறிந்த நன்னீரிட்டுக் கால் சிதைந்து
நீலவல்லேறு பொராநின்ற வானமிது திருமால்
கோலஞ்சுமந்து பிரிந்தார் கொடுமை குழறுதண்பூங்
காலங்கொலோ வறியேன் வினையாட்டியேன் காண்கின்றவே.

– திருவிருத்தம், 7.

26. திருவிருத்தம். 20.

27. திருவாய் மொழி, 4 : 6 – 2.

28. திருவாய் மொழி, 4 : 6 –3.

29. திருவிருத்தம், 81.

30. நம்மாழ்வார் தாம்பிறந்த ஆழ்வார் திருநகரிக் கோயிலின் ஒரு புறத்துள்ள புளிய மரத்தின் பொந்திலிருந்து வேறெங்கும் சென்றவரல்லர். ஆனால் எல்லாத் திவ்ய திருக்கோயில் பெருமான்களும் இவருக்குக் காட்சியளிக் கிறார்கள். இவரோ, தாம் இருந்த இடத்திலிருந்தே அப்பெருமான்கள் எல்லாரையும் தம்மனக் கண்ணால் கண்டு வணங்குகின்றார்; பாடிப் பரவுகின்றார். இம்முறையிலேதான், அந்தந்தப் பெருமான்களிடம் இவர் பண்ணும் பிரபத்தியும் அமைகின்றது. அதனால்தான் 'திருவேங்கடத்தில் தம் மனப்பார்வையைச் செலுத்துகிறார்' என்று கூறப்படுகின்றது.

31. "அகல கில்லேன் இறையு" மென்று
அலர்மேல் மங்கை யுறை மார்பா!
நிகரில் புகழாய்! உலகமூன்று
உடையாய்! என்னை யாள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகலொன் றில்லா அடியேன்உன்
அடிச்கீ ழமர்ந்து புகுந்தேனே!"

– திருவாய்மொழி, 6 : 10 – 10.

Koviloor Digital Library

32. திருவிருத்தம், 21.

33. அண்ணங்கராசாரியர், திருவிருத்தம், திவ்யார்த்த தீபிகை, ப.90.

34. காண்க பின்னிணைப்பு திருவிருத்தம் தலைவன், செவிலி, நற்றாய், பாங்கன், கட்டுவிச்சி கூற்றுகள்.

35. திருவாய்மொழி, 2 : 3–10.

36. அண்ணங்கராசாரியர், திருவிருத்தம், திவ்யார்த்த தீபிகை, ப. 33.

37. திருவிருத்தம், 6.

38. திருவிருத்தம், 14, 55.

39. "உண்மையில் அவனழகில் தான் ஈடுபட்டிருப்பது முதற்காரணம். பிரிந்த காலத்தில் இக்கொண்டாட்டம் தன்னுடைய தரிப்புக்கு உறுப்பாயிருக்குமென்பது இரண்டாம் காரணம்; இவர் நம்மைப் பிரிந்து நெடும்போது உயிர் தரிக்க மாட்டார்; கடுக வந்திடுவர் என்று நாயகி தெரிந்து கொண்டு ஆறியிருக்க வேணுமென்பது மூன்றாங்காரணம்."

– அண்ணங்கராச்சாரியர், முற்கூறிய நூல், ப.64

40. வண்டுக ளோ!வம்மின்நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ
உண்டு களித்துழல்வீர்க் கொன்றுரைக்கியம் ஏனமொன்றாய்
மண்துக ளாடிவை குந்தமன்னாள்குழல் வாய்விரைபோல்
விண்டுகள் வாரும் மலருள வோநும்வியலிடத்தே?

– திருவிருத்தம், 55.

எம்பெருமான் திறத்தில் ஆழ்வார்க்கு அளவு கடந்து உண்டான பக்தியின் தலைமையைக் கண்ட பாகவதர் கொண்டாடிக் கூறும் வார்த்தை இப்பாட்டுக்கு ஸ்வாபதேசப் பொருளாம்.

41. காண்க பின்னிணைப்பு "திருவிருத்தம் – தலைவி கூற்று."

42. திருவிருத்தம், 4, 28, 35, 41.

43. திருவிருத்தம், 3, 72, 76, 78.

44. திருவிருத்தம், 16, 49, 70.

45. திருவிருத்தம், 17, 51.

46. திருவிருத்தம், 25.

47. திருவிருத்தம், 90.

48. திருவிருத்தம், 3.

49. திருவிருத்தம், 74.

Koviloor Digital Library

50. திருவிருத்தம், 29.

51. திருவிருத்தம், 93.

52. திருவிருத்தம், 30, 46, 54.

53. திருவிருத்தம், மேகங்களைக் குறித்து, செய்யுள் 31
பேர்கூறித் தரித்திருத்தல் செய்யுள் 64
மகளிர் சிறப்புக்காகச் செய்யுள் 79.
பிரிவுக்காகச் செய்யுள் 86
கலவிக்காகச் செய்யுள் 89
வேந்தற்குற்றுழிப்பிரிவு ஆற்றாமை செய்யுள் 92
துயிலின்றி செய்யுள் 97.

54. திருவிருத்தம், 32, 38, 88.

55. திருவிருத்தம், 39, 82.

56. திருவிருத்தம், 40.

57. திருவிருத்தம், 42, 43, 44

58. திருவிருத்தம், 61.

59. திருவிருத்தம், 84.

60. திருவிருத்தம், 77, 80, 85.

61. திருவிருத்தம், 91, 95.

62. திருவிருத்தம், 48, 56, 63, 71, 96, 99.
இதன் பிரிவு : நன்னிமித்தம் கண்டுகூறல் (48); கல்விபற்றிக் கூறல் (56); இயற்பட மொழிதல் (63); செவிலிதன்னை வெறுத்தல் (71); வெறிவிலக்கு மிக்க நினைத்தல் (96); தலைவனிடத்துக் காழ்த்த அன்புடைமை பற்றிக் கூறல் (99).

63. இ.எஸ். வரதராஜ அய்யர், தமிழ் இலக்கிய வரலாறு, பக்.306–307.
"திருக்கோவை பாடிச் சிரிப்பிப்பரே" என்ற பிற்காலத்தாசிரியர் வாக்கு அகப் பொருட்டுறைகள் யாவும் ஒரு சேர அமையப் பெற்றுச் செம்பாகமாக மணிவாசகப் பெருமானால் இயற்றப்பெற்ற திருச்சிற்றம்பலக் கோவை யாரைப் பின்பற்றி எழுதப்பட்டது இந்நூல் என்பதைக் குறிக்கும்.

64. திருவிருத்தம் 8.

65. அண்ணங்கராச்சாரியர், முற்கூறிய நூல், ப.41.

Koviloor Digital Library

66. திருவிருத்தம், 17.

69. இ. சுந்தரமூர்த்தி, "தூது", தமிழ் இலக்கியக் கொள்கை 7, ப.319.

70. திருவிருத்தம், 29, 30, 31, 46, 54.

71. அண்ணங்கராச்சாரியார், திருவிருத்தம், திவ்யார்த்த தீபிகை, ப.113.

72. "உலகமெல்லாம் துயிலா நின்ற இந்நிலைமைக் கண்ணும் யான் துயிலா மைக்குக் காரணமாகிய என் வருத்தத்தைச் சென்று அவர்க்குச் சொல்லாது தான் தன் சேவலைப் பொருந்திக் கவற்சியின்றித் துயிலா நின்றது என அன்னத்தோடு அழிந்து கூறா நிற்றல்" என்பது திருக்கோவையார் உரையாகும்.

73. "நீரிருக்க மடமங்கையீர்! கிளிகள்தாமிருக்க மதுகரமெலாம் நிறைந்திருக்க மடவன்னமுள்ள நீரையா யிருக்க வுரையாமல் யான் ஆரிருக்கிலு மென் னெஞ்ச மல்லதொரு வஞ்சமற்ற துணையில்லையென்று ஆதரத்தினொடு தூதுவிட்ட பிழை யாரிடத்துரை செய்தாறுவேன் சீரிருக்கு மறை முடிவு தேடரிய திருவரங்கரை வணங்கியே திருத்துழாய்தரில் விரும்பியே கொடு திரும்பியே வருத லின்றியே வாரிருக்குமுலை மலர்மடந்தை யுறை மார்பிலே பெரிய தோளிலே மயங்கியின்புற முயங்கி என்னையுமறந்து தன்னையு மறந்ததே"

– திருவரங்கக் கலம்பகம்.

74. "மள்ளர் குழீஇய விழவினானும்
மகளிர் தழீஇய துணங்கையானும்
யாண்டுங்காணேன் மாண்டக்கோனை
யானுமோராடுகள மகளே யென்கைக்
கோடீரிலங்கு வளை ஞெகிழ்த்த
பீடுகெழு குரிசிலு மாடுகள மகனே"

– குறுந் தொகை 31

இது நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது என்பர். நச்சினார்க்கினியராலும் "உயிரினுஞ் சிறந்தன்று" என்ற தொல் காப்பியச் சூத்திரத்தின் உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

75. திருவிருத்தம், 91, 95.

76. "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

Koviloor Digital Library

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்''

– திருவாசகம், சிவபுராணம், 26–31.

77. திருவிருத்தம், 56.

78. திருவிருத்தம், திவ்யார்த்த தீபிகை, ப.199.

79. ஐந்து வகை ஞானத்தைப் பற்றி நமது பூருவர் கூறினர். அவை சீவஸ்வரூபம், பரஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம், உபாயஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம் என்பனவாம்.

– எம். ராதாகிருஷ்ண பிள்ளை, பிற்கால வைணவம், ப. 152.

80. ''மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித் – தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்''

– பட்டர்

81. காண்க பின்னிணைப்பு.

82. தி.சி. நாராயணசாமி நாயுடு, ஆழ்வார்கள் தமிழில் அக்காரக் கனிகள், ப.42.

83. திருவாய்மொழி, 4 : 6 – 1.

84. திருவாய்மொழி, 4 : 6 – 11.

85. திருவாய்மொழி, 4 : 6 – 9.

86. ''இமிழ் திரைப்பரவை ஞாலம் ஏழைமை உடைத்து மாதோ'' – கம்பன்.
''ஏன் இந்த ஏழைமைக்கு என்னை ஆட்செய்தீர்'' – அரிச்சந்திரபுராணம்.

87. திருவாய்மொழி, 6 : 5

88. திருவாய்மொழி, 6 : 5 –4.

89. திருவாய்மொழி, 8 : 1 : 1

90. திருவாய்மொழி, 8 : 9 : 1

91. திரு.சி. செகந்நாதாச்சார்யர் ஆய்வாளரிடம் கருத்து விளக்கத்தின் போது கூறியது.

92. ''பொன்னார் புனலெம்மை வாங்கும் பொழுதங் கொர் பூங்கணைவேன்
அன்னானொருவன் அணைத்தெமக்குச் செய்த ஆரருரும்.''

– கலித்தொகை.

93. திருவாய்மொழி, 2 : 4

94. திருவாய்மொழி, 2 : 4 : 1

Koviloor Digital Library

95. திருவாய்மொழி, 2 : 4 : 9

96. திருவாய்மொழி, 1 : 4 – அஞ்சிறைய மடநாராய்
2 : 1 – வாயுந்திரையுகளும்

97. திருவாய்மொழி, 2 : 4 : 2

98. திருவாய்மொழி, 2 : 4 : 7

99. திருவாய்மொழி, 4 : 2

100. "மண்ணையிருந்து துழாவி" என்னும் பதிகத்தைக் காண்க: 4 : 4

101. திருவாய்மொழி, 5 : 6

102. திருவாய்மொழி, 6 : 6

103. திருவாய்மொழி, 6 : 6 : 1 – 0

104. திருவாய்மொழி, 6 : 7 : 1

105. திருவாய்மொழி, 7 : 2

106. காண்க. பின்னிணைப்பு "நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் காணும் மெய்ப்பாடு."

107. திருவாய்மொழி, 7 : 2 : 1

108. திருவாய்மொழி, 7 : 2 : 3

109. திருவாய்மொழி, 7 : 2 : 4

110. திருவாய்மொழி, 7 : 2 : 8

111. திருவாய்மொழி, 7 : 2 : 1

112. திருக்குறள் 1179.

113. திருக்குறள் 1295.

114. லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1957.

115. அஞ்சிறைய மடநாராய்! அளியத்தாய், நீயும்நின்
அஞ்சிறைய சேவலுமாய் ஆவாவென் றெனக்கருளி,
வெஞ்சிறைப்புள் ளுயர்த்தாற்கென் விடுதூதாய்ச் சென்றக்கால்,
வன்சிறையில் அவன்வைக்கில் வைப்புண்டா லென்செய்யுமோ?
– திருவாய்மொழி, 1:4:1

116. திருவாய்மொழி, 1 : 4 : 2.

Koviloor Digital Library

117. திருவாய்மொழி, 1 : 4 : 3.

118. திருவாய்மொழி, 1 : 4 : 4.

119. திருக்குறள், 1187.

120. குறுந்தொகை, 399.

121. நல்கித் தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே,
நல்கத்தா னாகாதோ? நாரணனைக் கண்டக்கால்
மல்குநீர்ப் புனற்படப்பை இரைதேர்வண் சிறுகுருகே
மல்குநீர்க் கண்ணேற்கோர் வாசகம் கொண்டருளாயே

– திருவாய்மொழி, 1:4:5

122. திருவாய்மொழி, 4:7:3
"ஈவிலாத தீவினைகள் எத்தனை செய்த னன்கொல்?
தாவி வையம் கொண்ட எந்தாய் ! தாமோதரா! என்றென்று,
கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனி சோர நின்றால்,
பாவி நீயென் றொன்று சொல்லாய் பாவியேன் காண வந்தே!"

– என்பது அது.

123. திருவாய்மொழி, 1:4:9

124. ஒரு சான்று : பெரிய திருமலை நம்பி தம்முடைய இறுதிக் காலத்தில் தாம் திருவாராதனம் செய்து வந்த வெண்ணெய்க்காடும் பிள்ளையைக் (கிருஷ்ண விக்கிரஹத்தை) கொண்டுவரச் சொல்லி, அவர் திருமுன்பில் திருத்திரையை வாங்கச் சொல்லி "சாயலொரு மண்மாமை தளர்ந்தேன் நாம் இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே" என்று நெஞ்சம் அள்ளும் வகையில் கூறினார் என்பது.

125. திருவாய்மொழி, 1:4:9

126. திருவாய்மொழி, 1:4:10

127. இ. சுந்தரமூர்த்தி, "தூது", தமிழ் இலக்கியக் கொள்கை 7, ப.320.

128. மு. சண்முகம் பிள்ளை, திருவேங்கடநாதன் வண்டுவிடுதூது, முன்னுரை, ப.4.

129. இ.எஸ். வரதராஜ அய்யர், முற்கூறிய நூல், ப.312.

130. திருவாய்மொழி, 2:2:1

131. திருவாய்மொழி, 2:2:3.

132. ஒழிவின்றித் திருமூழிக் களத்துறையும் ஒண்சுடரை
ஒழிவில்லா அணிமழலைக் கிளிமொழியாள் அலற்றியசொல்

Koviloor Digital Library

வழுவில்லா வண்குருகூர்ச் சடகோபன் வாய்ந்துரைத்த
அழிவில்லா ஆயிரத்திப் பத்தும் நோய் அறுக்குமே.

– திருவாய்மொழி, 9:8:11

எங்காத லுக்கடிமால் ஏய்ந்து வடிவழகென்று
அங்காது பற்றாசா ஆங்கவன்பால் – எங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப் போகவிடும் மாறன்றாள்
உள்ளினர்க்குத் தீங்கையறுக் கும்.

– திருவாய்மொழி, 9 : 8 நேரிசை வெண்பா 87.

133. காண்க பின்னிணைப்பு.

134. வாயுந் திரையுகளும் கானல் மடநாராய்
ஆயும் அமருலகும் துஞ்சிலும் துஞ்சாயால்
நோயும் பயலைமையும் மீதூர எம்மேபோல்
நீயும் திருமாலால் நெஞ்சம்கோட் பட்டாயே

– திருவாய்மொழி 2:2:1

135. திருவாய்மொழி, 4:8:1–10

136. உயிரினால் குறைவில்லா உலகேழ்தன் உள்ளொடுக்கி
தயிர்வெண்ணெ யுண்டானைத் தடங்குருகூர்ச் சடகோபன்
செயிரில் சொல் லிசைமாலை யாயிரத்து ளிப்பத்தால்
வயிரம்சேர் பிறப்பறுத்து வைகுந்தம் நண்ணுவரே

– திருவாய்மொழி 4:8:11

137. திருவாய்மொழி, 5:3:1–10.

138. திருவாய்மொழி, 5:4:1–10.

139. திருவாய்மொழி, 5:5:1–10.

140. திருவாய்மொழி, 7:7:1

141. திருவாய்மொழி, 7:7:1–10.

142. திருவாய்மொழி, 6:2:1–10.

ஆசிரியத் துறையில் அமைந்துள்ள இந்தத் திருவாய்மொழி நாச்சிமார் பிரணய கலகத்தில் துதிக்கப்படுவது என்பர்.

143. "சீற்றமுண்டழு கூத்த அப்பன்தன்னை"

– திருவாய்மொழி 6:2:11

144. திருவாய்மொழி, 7:3:1–10.

Koviloor Digital Library

145. திருவாய்மொழி, 6:2:1–10.

146. திருவாய்மொழி, 9:9:1–10.

147. திருவாய்மொழி, 10:3:1–10.

148. திருவாய்மொழி, 9:9:9

149. திருவாய்மொழி, 10:3:1–10

150. காண்க பின்னிணைப்பு, திருவாய்மொழி அகத்துறைப் பதிகங்கள், 'தலைவி கூற்று'.

Koviloor Digital Library

இயல் ஏழு

திருமங்கையாழ்வார் பாடல்களில் அகப்பொருள்



நெஞ்சுக் கிருள்கடி தீப மடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதம், தமிழநன் நூல்துறைகள்
அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம், பரசமயப்
பஞ்சுக் கவலின் பொறி பர காலன் பனுவல்களே.

– ஆழ்வான்

Koviloor Digital Library

திருமங்கை ஆழ்வார் பாடல்களில் அகப்பொருள்

கொங்குமலர் குழலியர்கோன், கொற்றவேல் பரகாலன், கலியன், ஆலிநாடன், அருள்மாரி என்று பல சிறப்புப் பெயர்களைப் பெற்றவர் திருமங்கையாழ்வார்.[1] இவர் 'நாலுகவிப்பெருமாள்' என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். திருமங்கையாழ்வார் செய்தருளிய பிரபந்தங்கள் ஆறு; முதலாவது பெரிய திருமொழி. "இது பெரும்பாலும் திவ்ய தேசத்துப் பெருமாள்களைப் பற்றிப் பாடியது; அகப்பொருள் துறையில் காதலர்களின் தன்மை புலப்படப் பாடிய திருமொழிகளும் இடையிடையேயுள்ளன" என்பது உணரத்தக்கது.[2] திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம் இவை இரண்டும் கடவுளைப் புகழ்ந்து பாடிய பிரபந்தங்கள், அவற்றுள் அகப்பொருள் செய்திகள் அறியக் கிடக்கின்றன.

சிறிய திருமடல் பெரிய திருமடல் ஆகிய இரண்டும் காதலனைப் பெற, காதலி மடலூர்தலைப் பற்றியன. 'மடல்' என்பது அகப்பொருள் துறைகளுள் ஒன்று. அத்துறையில், புதுப்பொலிவில் புனைந்துரைக்கும் திறனை இங்குக் காணலாம். திருமங்கையாழ்வார் 'பரகால நாயகி' என வைணவ மரபினரால் போற்றப்படுபவர், மடல் ஊர்வதாக இவ்விரண்டு பிரபந்தங்களும் நயம்பட அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு மடல்களும் தனியாகச் சிறப்பித்து ஆராயத் தக்கன. ஆதலின் அவ்வாறே ஆராயப் பெறுகின்றது.

திருவெழு கூற்றிருக்கை – திருக்குடந்தையைப் பற்றிப் பாடியது. 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங்கூறவவதரித்த' என்ற உபதேசரத்தின மாலைப் பாடலின்படி, நம்மாழ்வார் செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்கிற தமிழ்மறை நான்கிற்கும் திருமங்கையாழ்வாருடைய ஆறு பிரபந்தங்களும் ஆறு அங்கங்களாயுள்ளன. நம்மாழ்வாரைப் பின்பற்றியே திருமங்கையாழ்வாரின் படைப்புகள் அமைந்திருக்கின்றன[3] என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய 'திருவெழுகூற்றிருக்கை' திருக்குடந்தைக்கென்றே ஏற்பட்ட தனிப்பிரபந்தமாகவே அத்தை வைத்து மேற்காணும் கருத்தினைச் சான்றுகளுடன் நிறுவலாம். ஆயினும் திருவெழுகூற்றிருக்கையில் அகப்பொருள் பாடல்கள் அமையவில்லையாகவே, இவ் ஆழ்வாரது ஏனைய ஐந்து படைப்புகளில் அமைந்துள்ள முந்நூற்று எழுபத்தேழு[4] பாடல்கள் மட்டுமே ஈண்டு ஆய்விற்குரியவாம்.

Koviloor Digital Library

நாயகி பாவம்

நம்மாழ்வார் பிரேமதிசையில் நாயகி பாவமெய்தி இறைவனை நாயகனாகப் பாவித்துப் பாடல்கள் பாடியிருக்கின்றார்; காதலனின் பிரிவாற்றாமையால் செய்வதறியாது தத்தளித்து, அறிந்து பின் கொக்கினங்களையும், குருகினங் களையும் காதலனிடம் தூது விட்டிருக்கிறார். இதைப் பின்பற்றி, திருமங்கை யாழ்வாரும் நாயகி பாவத்தில் நாயகனின் பிரிவு தாங்காமல் சோலையிலிருந்த குயிலைத் தூது விடுகிறார்.

இவருடைய திருமொழிகளில் தலைவி கூற்றாகப் பெரிய திருமொழியில் மட்டும் நூற்றி இருபத்தொரு பாடல்கள் காணப்படுகின்றன.[5] திருநெடுந் தாண்டகத்தில் எட்டுப் பாடல்களும், சிறிய திருமடல், பெரிய திருமடல் முழுமையும் ஆகத் தலைவி கூற்றில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கன.[6]

பெரிய திருமொழியில் அகப்பொருள்

தலைவன் புகழைத் தலைவி வாய்விட்டுப் புலம்புதல் அவனது பல செயல் களையும் புகழ்ந்து பேச வாய்ப்பளிக்கின்றது. எனவே இதற்கு உதவும் நிலையில் தலைவி புலம்பல், அஃறிணைப் பொருள்களை விளித்துப் பேசல், தலைவியின் புலம்பலைத் தோழி, தாயர் முதலியோர் எடுத்துப் பேசுதல் முதலிய புதிய துறைகள் இவற்றுள் இடம் பெறுகின்றன.

தலைவி கூற்று

இறைவனை நாயகனாக எண்ணுவதால் அவனைப் பெறல் வேண்டும் என்ற உள்ள நிகழ்ச்சி இதற்கு அடிப்படையாகின்றது. தலைவனை இடைவிடாது நினைத்துக் கொண்டிருக்கின்றாள் தலைவி; அதன் பயனாக, தலைவனது உரு வெளிப்பாடு தோற்றம் தருகின்றது. அதைத் தலைவி தோழி, தாயர்க்குக் கூறுகின்றாள்.

> ஒருவரையொருவர் பெறல் வேண்டுமென்னும் உள்ள நிகழ்ச்சியும், இடைவிடாது நினைத்ததாலும், உண்ணாமை யாலுளதாம் உடல் மெலிவும், தனக்கு ஆக்கமாவது இவையெனத் தனக்குள்ளே சொல்லிக் கொள்ளுதலும், நாணத்தின் எல்லை கடத்தலும், காண்பனவெல்லாம் அன்புடையார் உருவாகவே தோற்றுதலும், தம்மை மறத்தலும், மனமயக்கமுறுதலும், உயிர் நீங்கினாற் போன்று உயிர்ப்படங்குதலும் ஆகிய இவையொன்பதும்

Koviloor Digital Library

> உயிரோரன்ன செயிர்தீர் நட்பாகிய காமவுணர்வினைச்
> சிறப்பிப்பனவாதலின், இவற்றைக் களவொழுக்கத்திற்குச்
> சிறந்தனவாகக் கூறுவர் முன்னையோர்[7]

என்னும் செய்திகள் ஈண்டு நினைத்தற்குரியன. இதன் அடிப்படையில் பெரிய திருமொழியில் தலைவி கூற்றுகளைக் காண முடிகின்றது. பதினான்கு பதிகங்களில் தலைவி கூற்றுகள் அமைகின்றன.[8] இவற்றுள் தலைவியிரங்கிக் கூறுவனவாக ஐந்து பதிகங்கள் நிகழ்கின்றன. இயற்கைப் பொருள்களை நோக்கிக் கூறுவனவாக ஐந்து பதிகங்கள் விளங்குகின்றன. தலைவி தோழியிடமும், தாயிடமும் கூறுவனவாக நான்கு பதிகங்கள் தோன்றுகின்றன.

இக்கூற்றுகள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணமாக விளங்குவது தலைவிக்கு உண்டான பிரிவுத் துயரமே என்பது குறிப்பிடத்தக்கது. புணர்தல் போன்று பிரிதலும் அகவாழ்க்கையில் நீக்க இயலா வகையிலே பிணைந்து வருகின்றது.[9] பிரிந்த நிலையில் அவனையே எண்ணியெண்ணி நைகின்றாள் தலைவி. சமயப் பாடல்களில் இடம்பெறும் அகப்பொருட்பாடல்களின் தலைவன் இறைவன். ஆகவே தலைவன் கூற்றாக வரும் பகுதி அரிதேயாக, தலைவி, தோழி, தாயர் ஆகியோர் கூற்றாக வரும் பகுதிகளே மிக்குள்ளன என்பது ஆய்வுரையின் முன்னிலையில் சுட்டப்பட்டது.

சமயப் பாடல்களின் குறிக்கோள் ஆன்மாக்கள் இறைவனை அடைந்தின்புறுவதேயாதலினால், தலைவனைப் பெற விரும்பும் தலைவியின் உள்ள நிலைகளும், தலைவன் பிரிவால் தவிக்கும் நிலையும், அவனை நினைந்து ஏங்கும் ஏக்கமும், அவனை அடைதற்கான முயற்சியாகத் தூதுவிடலும், தானே அவனை அடையச் சேறலும் முதலிய தலைவியின் உணர்ச்சி மிக்க மனநிலைகள் கிளவிப் பொருட்களாக அமைகின்றன[10] என்று அ.மா. பரிமணம் கூறும் கருத்துகள் உளங்கொளத் தக்கன. ஈண்டுத் திருமங்கையாழ்வார் பாடல்களில் இவ் ஆழ்வாரே தலைவியாகும் நிலை வேறுபாட்டால் அன்பின் ஐந்திணையில் காணும் தலைவியின் தன்மைகளே பெரிய திருமொழியில் புதியதோர் வனப்புடன் திகழ்வதைக் காணலாம்.

தலைவனது உரு வெளிப்பாடு கண்ட தலைவியின் கூற்று

உரு வெளிப்பாட்டில் காணும் உருவின் நிறம் தெரியவில்லை; ஆனால் வந்தவர் பெண்களின் வளைகளையும், நெஞ்சையும், நிறையையும் எல்லாவற்றையும் தம்முடையதாக்கிக் கொண்டு கொள்ளை கொள்கின்றார். எனவே தலைவி கூறுகின்றாள்:

Koviloor Digital Library

எங்ஙனும் நாமிவர் வண்ண மெண்ணில்
ஏது மறிகிலம், ஏந்திழையார்
சங்கும் மனமும் நிறைவு மெல்லாம்
தம்மன வாகப் புகுந்து தாமும்
பொங்கு கருங்கடல் பூவை காயாப்
போதவிழ் நீலம் புனைந்த மேகம்
அங்ஙனம் போன்றிவ ராரொகொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே[11]

வந்தவர் வடிவோ காயாம்பூ, நீலம், மேகம் இவற்றைப் போலக் கறுத்துள்ளது. இவருடைய திருக்கண்கள், மார்பு, தோள், பவளம் போன்ற வாய் இவற்றை ஓவியத்தில் எழுத ஒண்ணாதபடி அழகு விஞ்சியுள்ளவை.[12] இந்நிலையில் அத்தலைவனாம் இறைவன் காட்சி இவள் கண்ணுக்குத் தோற்றம் தருகின்றது.

காவி யொப் பார்கட லேயுமொப்பார்
கண்ணும் வடிவும் நெடியராய், என்
ஆவியொப் பாரிவ ரார் கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே[13]

என்று நலிகின்றாள் தலைவி. இவ்வாறு நலிந்தே இவள் திருநாகை சௌந்தர ராசனின் எழிலில் ஈடுபட்டு உரைத்த பாடல்களும் இறைவனின் தோற்றப் பொலிவினைத் துலங்கக் காட்டுகின்றன.[14]

உருவை வெளிப்படுத்திய தலைவி, தனது பாங்கியர்க்குத் தலைவனின் ஊரினைக் கூறுகின்றாள். ஊரினைக் கூறும்போது இயற்கையழகு மிளிரக் கூறும் நிலை சிறப்பாகக் கவனிக்கத்தக்கது. அந்நிலையிலிருந்தே துறைகளின் விளக்கம் ஏற்றம் பெறுவதனை நோக்கலாம்.[15]

நெல்லில் குவளை கண்காட்ட
நீரில் குமுதம் வாய்காட்ட
அல்லிக் கமலம் முகங்காட்டும்
கழனி யழுந்தூர் நின்றானை
வல்லிப் பொதும்பில் குயில்கூவும்
மங்கை வேந்தன் பரகாலன்
சொல்லில் பொலிந்த தமிழ்மாலை
சொல்லப் பாவம் நில்லாவே[16]

என்று கூறுமளவுக்கு அவை எழிலுடன் இயம்பப்படுகின்றன எனலாம்.

Koviloor Digital Library

பிரிவாற்றாது தலைவியிரங்கிக் கூறும் பாடல்களும் நெஞ்சில் நிற்கும் வண்ணம் சுவையுடன் அமைந்துள்ளன. "தென்றல் வந்துநீ வீசு மென் செய்வேன், ஈரவாடை தான் ஈரு மென்னையே, கொங்கலர்ந்த தார் கூவுமென்னையே, திங்கள் வெங்கதிர் சீறுகின்றதே, பொங்கு மாகடல் புலம்புகின்றதே, அன்றிலின் குரல் அடருமென்னையே, வீவிலைங்கணை வில்லிலம்பு கோத்து, ஆவியே யிலக்காக எய்வதே" என்றெல்லாம் தலைவி புலம்பும் புலம்பலில் பிரிந்தாரை வருத்தும் பொருள்கள் இவை இவை என்ற ஒரு பெரும் பட்டியலே காணக் கிடக்கின்றது.[17] தலைவி பிரிவினால் வருந்துதல் பின்னும் இரு திருமொழிகளில் புகலக் காணும் போது[18] கார்முகில் வண்ணரைக் கண்களால் காண அவள் துடித்த துடிப்பினை உணரும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

தலைவி விடுத்த தூது

ஒருவர் தம் கருத்தை மற்றொருவருக்குத் தெரிவிக்க இடையே பிறிதொருவரை அனுப்புவதே தூதாகும். புறப்பொருள் அகப்பொருள் ஆகிய இருவகை இலக்கியங்களிலும் தூது அனுப்புதல் உண்டு என்பதைத் தொல் காப்பியத்தின் வாயிலாகவும், சங்க இலக்கியங்கள் வாயிலாகவும் அறியலாகும். தலைவன் தலைவியரிடையே மட்டும் இருந்த அகப்பொருள் சார்பான தூது விடும் மரபுகளைத் தொல்காப்பிய 'வாயில்கள்' வழி விளக்கிக் காட்டும்.[19] உயர்திணை யேயன்றி அஃறிணையையும் தூது செல்லுமாறு வேண்டும் வழக்கம் தலைவன் தலைவியரிடை, பிரிவுத்துன்பம் மிக்க வழி உண்டு என்றறியலாம்.

திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியில் இவர் தலைவியாய் இருந்து, தலைவன் பிரிந்தவிடத்துப் பிரிவுத் துன்பம் அதிகமான நிலையில் தன் காதல் மிகுதியையும், ஆற்றாமையையும் வண்டு, குருகு, தும்பி, பறவைகள் போன்ற அஃறிணைப் பொருள்களிடம் கூற, மாயனிடம் தூது சென்று அவனை அழைத்து வருமாறும், அவனிடம் மாலை வாங்கி வருமாறும் வேண்டுகின்றார்.[20]

தொல்காப்பியம் தூது மரபுக்கு இலக்கணவிதி வகுத்துள்ளது.[21] ஒருவர் கூறுவனவற்றை அறிந்துணர்ந்து, அவற்றிற்கேற்றபடி அஃறிணைப் பொருள்கள் நடக்கும் உணர்வு பெற்றவை அல்லவேனும், அங்ஙனம் அவற்றை முன்னிலைப் படுத்தி உரைப்பது ஒரு மரபாக வழிவழியாக இலக்கியங்களில் புலவர் கொண்டிருந்தனர்.

ஆகவே பெரிய திருமொழியில் தலைவி விடுக்கும் தூது 'தூது முனிவின்மை' என்ற வகையுள் அடங்கும் எனலாம்.[22] 'புள்ளும் மேகமும் போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கென்று தூதிரந்து பன்முறையானும்

Koviloor Digital Library

சொல்லுதல்' எனப் பேராசிரியராம் உரையாசிரியர் உரைத்துள்ள விளக்கம் ஈண்டு உணர்தற் பாலதாகும்.

தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே
பூவிரிய மதுநுகரும் பொறிவரிய சிறுவண்டே
தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி
ஏவரிவெஞ் சிலையானுக் கென்னிலைமை யுரையாயே

என்றும், [23] "பணியறியேன் நீ சென்றென் பயலை நோய் உரையாயே" என்றும்,[24] "தேன் வாய வரிவண்டே! திருவாலி நகராளும் ஆனாயற்கென்னுறுநோ யறியச் சென் றுரையாயே"[25] என்றும் கூறி, வண்டைத் தூது விடுகின்றாள் தலைவி. இடையே 'கூர்வாய் சிறுகுருகே! குறிப்பறிந்து கூறாயே! என்று குருகினை நோக்கிக் கூறுகின்றாள்.[26]

மூன்றாம் பத்து 'ஆறாம் திருமொழியில் இவ்வாறு நான்கு பாடல்கள் தூது விடுவதாக அமைய, மற்றுமுள்ள ஐந்து பாடல்களும் எம்பெருமானை நோக்கித் தலைவி தனது ஆற்றாமையைத் தானே கதறிக் கூறியனவாகும்.

வாளாய சுண்பனிப்ப மென்மு லைகள் பொன்னரும்ப
நாணாளும் நின்னினைந்து நைவேற்கு, ஒ மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தை நகராளா! வரையெடுத்த
தோளாளா, என்றனக்கோர் துணையாள னாகாயே![27]

என்ற இந்தப் பாடலில் நேராகத் தலைவனையே விளித்துப் பேசியுள்ளதனை நோக்க, அவள் ஆற்றாமை மிகுதிப்பட்டு, இவ்வகைப் பேச்சில் ஒரு நெருக்கத்தை உணர்கின்றாள் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறே திருமங்கையாழ்வார் தம்மைத் தலைவியாகப் பாவித்து, திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள திருமாலுக்குத் தன் காதல் நோய் உரைத்து மீளுமாறு தூது விடுக்கின்றார்.

செங்கால மடநாராய்! இன்றே சென்று
திருக்கண்ண புரம்புக்கென் செங்கண் மாலுக்
கென்காதல் என்துணைவற் குரைத்தி யாகில்
இது வொப்பதெனக் கின்ப மில்லை; நாளும்
பைங்கானம் ஈதெல்லாம் உனதே ஆகப்
பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன் தந்தால்
இங்கேவந் தினிதிருந்துன் பெடையும் நீயும்
இருநிலத்தில் இனிதின்பம் எய்த லாமே![28]

Koviloor Digital Library

எனக் கூறி நாரையைத் தூது சென்று வருமாறு வேண்டுகின்றார். ஈண்டுத்தன் காதலை நாயகனிடம் தூதாகச் சென்றுரைத்தால் நாரை பெறும் நன்மைகளை எடுத்துக்கூறித் தலைவி வேண்டுவது பின்னும் ஒரு புதுப் பொலிவினைப் பாடலுக்கு நல்குகின்றது.

உலகத்திலே சாதாரணமாகச் சொத்துக்குடையவன், உடைமையை விட்டுப் பிரிந்தால் "ஐயோ! உடைமையை இழந்தோமே, மறுபடி எப்படிப் பெறப் போகிறோம்" என்று நினைத்திருப்பது முறைமை. இங்கே தலைவியைப் பிரிந்த தலைவனோ, அந்த முறைமையை நோக்கின்றிலன். கவலையின்றி இருக்கின்றான். தலைவி அவ்வாறு கவலையற்றிருக்க முடியாது. அவள் தன்னை அறிவுடையவள் (சைதன்யம்) என்று கூறிக் கொள்ளுகின்றாள். ஆகவே அவனைப் போல இருக்க முடியாதென்றும், தானும் நினையாமைக்கு ஒரு நெஞ்சு படைக்கப் பெற்றிலோம் என்று கருதினாள்[29] என்பது வியாக்யானம். இங்கே இத் தலைவி "நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்"[30] என்ற கருத்தை நினைக்கின்றாள் எனலாம்.

வண்டு விடுதூது நற்றிணையிலும், குறுந்தொகையிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவையும் தலைவியின் பிரிவாற்றாமையைப் பற்றியதே யாகும்.[31]

'திருத்தாய் செம்போத்தே' என்றும், 'கரையாய் காக்கைப் பிள்ளாய்' என்றும், 'கூவாய் பூங்குயிலே' என்றும், 'கொட்டாய் பல்லிக்குட்டி' என்றும், 'சொல்லாய் பைங்கிளியே' என்றும், 'கோழி கூவென்னுமால்' என்றும் தலைவி பல்லியையும், பறவைகளையும் முன்னிலைப்படுத்திக் கூறுவதாக அமைந்துள்ள பாடல்கள்[32] மிகவும் இன்புறுத்துவன. இப்பகுதியில்,

கொட்டாய் பல்லிக்குட்டி
குடமாடி யுலகளந்த
மட்டார் பூங்குழல் மாதவனைவரக்
கொட்டாய் பல்லிக்குட்டி

என்ற பாடல் மிகவும் சுவையுள்ளதொன்று என்பர் தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர் இ.எஸ்.வரதராஜ அய்யர்.[33] பல்லியின் சொற்குப் பயன்கொள்வது பழந்தமிழ் நூல்களிலேயே காணலாம்.[34] திருவாய்மொழியும் இதனை எடுத்து உரைக்கும்.[35]

எனவே சங்கப் பாடல்களிலும், பக்தி இலக்கியக் காலப் பாடல்களிலும் அமைந்துள்ள தூதுவிடும் மரபை மேற்கொண்டு திருமங்கையாழ்வார் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

அஃறிணைப் பொருட்களுள் பல்லிக்குட்டியும் தூது அனுப்பும் மரபில் இடம் பெறுவது புதிய இலக்கிய மரபாய்த் தோற்றம் பெறுகின்றது'' என்பர்.[36]

தலைவியின் பிரிவு ஆற்றாமை

காவார் மடல்பெண்ணை அன்றில் அரிகுரலும்,
ஏவாயி னூடியங்கும் எஃகில் கொடிதாலோ
பூவார் மணம்கமழும் புல்லாணி கைதொழுதேன்
பாவாய்! இது நமக்கோர் பான்மையே யாகாதே[37]

என்று தொடங்கும் திருப்புல்லாணிப் பதிகம் மிக்க சிறப்புடையதாகும். கழிக்கானல் புள்ளினங்களைத் தலைவியழைத்துப் புல்லாணியில் வீற்றிருக்கும் தன் தலைவனுக்குத் தன் துயருரைக்கக் கூறலும்[38] வினையுடைய தன் மேல் வேலையும் வெந்தழலே வீசும் என்று தலைவி செப்பலும்[39] தேம்பல் இளம் பிறையும் தனக்கு ஒரு வெந்தழலே என்று விளம்பலும்[40] பிறவும் அகப்பொருள் சுவைபடத் தலைவி தன் சிந்தை நோயினைச் சொல்லச் சொல்லும் திறன் விளங்க அமைந்துள்ளன.

இங்ஙனமே தலைவனைப் பிரிந்த தலைவி தன் ஆற்றாமை மிகுதியால் தலைவனிடம் செல்லத் துணிந்து தன் நெஞ்சையும்,[41] தோழியையும்[42] துணையாக வேண்டுமெனச் சொன்னவை கற்குந் தகைமை வாய்ந்தவையாம்.

ஈண்டுப் புல்லாணிப் பெருமானிடம் பலவகையில் தலைவியின் ஆற்றாமைக் கேற்பவும், இரங்கல் உரிப்பொருட்கேற்பவும் படம்பிடிப்பது போல் காட்டப்பட்டுள்ள திறம் சிறப்புடைத்து.

இரங்கலும் இரங்கல் நிமித்தமும் திருப்புல்லாணிப் பாசுரங்களில் வைக்கப் பட்டுள்ள அழகினை இனிக் காணலாம்.

1. என்னை நைவித்து எழில் கொண்டகன்ற பெருமானிடம் புல்லாணி
2. என்னுள்ள மெய்தப் பிரிந்தானிடம் புல்லாணி
3. 'பேதை நின்னைப் பிரியேன் இனி' என்று அகன்றானிடம் புல்லாணி
4. கொங்குண்வண்டே கரியாகக் கொடியேற்கு வந்து முன்
பளித்த மொழி செய்யாதவனிடம் புல்லாணி.
5. நாழல் நறும்போது நம்சூழ்குழல் பெய்து, பின்
''தணரில் ஆவி தளரும்'' என அன்பு தந்தானிடம் புல்லாணி.
6. எள்கி நெஞ்சே! நினைத்திங் கிருந்தென்? வள்ளல் மாயன்
மணி வண்ணன் எம்மான் மருவும் இடம் புல்லாணி.

Koviloor Digital Library

7. நம்மை இரவும் நாளும் கண்துயிலாது செய்து வைத்து,
வெண்திரை புரவியென்னப் பதம் செய்து வந்து உந்து புல்லாணி.

8. நமக்கு அன்பராய்ப் பின் சலமதாகித் தகவு ஒன்றிலர்
மருவுமிடம் புல்லாணி.

9. அது தாரான் எனினும் அன்றித் தரும் எனினும் அன்பராய்
மன்னும் புல்லாணி.

ஒன்பதாம் பத்து ஐந்தாந் திருமொழியில் தலைவி, தனது தலைமகனுள்ள விடத்தில் கொண்டு விடும்படி உற்றாரை வேண்டிக் கூறிய பாடல்களைக் காணலாம். ஈண்டு ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்" என்ற சொற்றொடர் நோக்குதற்குரியது. ஆண்டாளும் தனது நாச்சியார் திருமொழியில் "என்னை உய்த்திடுமின்" என்று வாய் வெருவியதை நினைவு கொள்ளலாம்.[43] திருக்குறுங்குடித் தலத்தை 'வைஷ்ணவ வாமன க்ஷேத்திரம்' என்பர். திருமங்கை மன்னன் தமது நூற்றைந்தாம் வயதில் மகாயோகத்தால் திருநாட்டுக்கு எழுந்தருளியதும் இந்த இடமே என்பது குறிக்கத் தக்கது.

பெரிய திருமொழியில் தலைவி கூற்றாக வரும் பாடல்களுள் பிரிவாற்றாது வருந்திக் கூறும் பாடல்களே மிகுதியாக உள்ளன. அன்றில் குரல், ஆயன்வேய்ங் குழல், எல்லியில் மாருதம், எருத்தின் கழுத்து மணியோசை, கடலோசை, கங்குல், வாடை, அன்னை முனிவு, வளைசோர்வு, களவிற் புணர்ச்சி நினைவு, காமன் தொல்லை, ஆதவன் வாராது வைகறை நீட்டிப்பு – இவை தலைவியாகிய தன்னை வருத்துவனவாகக் கூறி இரங்குகின்றாள்.[44]

இறுதியில் தோழியை விளித்து,

காமன் கணைக்கோ ரிலக்க மாய்நலத் தில்மிகு,
பூமரு கோலநம் பெண்மை சிந்தித்தி ராதுபோய்
தூமலர் நீர்கொடு தோழி! நாம்தொழு தேத்தினால்,
கார்முகில் வண்ணரைக் கண்க ளால்காண லாங்கொலோ![45]

என்று கூறி இரங்குகிறாள். 'தோழி ! நாம் நமது பெண்மைக் குணத்திற்குச் சேர வெளியிலே புறப்பட்டுப் போகாமல் இருப்பது என்பதை விட்டு, நமது பெண்மையைப் பற்றிச் சிந்திக்காமலேயே வீட்டைக் கடந்து போய்த் தூமலர் நீர் கொண்டு நாம் தொழுது ஏத்தினால் ஒருவேளை கார்முகில் வண்ணனைக் கண்களால் காணலாம் போலும்' என்றாள். இதனை, "அவன் முறைதப்பி நின்றான்; அவன்

Koviloor Digital Library

பரிகரமும் முறை தப்பி நின்றது; இனி நாமும் முறை தப்பி நின்றாகிலும் ஜீவிக்கும் அத்தனை'' என்றார் பெரியவாச்சான் பிள்ளை.

அறத்தொடு நிற்றல்

பெரிய திருமொழியில் பதினோராம்பத்து, மூன்றாந் திருமொழி தலைவி இரங்கிக் கூறிய பாடல்களைக் கொண்டு 'அறத்தொடு நிற்றல்' துறையில் அமைந்தவை. இந்தப் பதிகம் அந்தாதித் தொடையால் வந்தது. அறத்தொடு நிற்றல் துறை இலக்கணம் பற்றிப் பெரியாழ்வார் பாடல்களில் அகப்பொருள் பற்றிக் கூறும்போது விளக்கப்பட்டது. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும்; செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும்; நற்றாய் தந்தைக்கு, தன்னையர்க்கு என்று இவ்வாறு முறையமைவதைப் பண்டைய இலக்கியங்கள் பறைசாற்றும்.

துறைகளில் மரபு மீறலும், புது மரபு ஏற்றலும் அமைவதைப் போல, ஆழ்வார் பாடல்களில் ஈண்டும் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்கும் பான்மையினைக் காணலாம்.

1. தென்னிலங்கை யீடழித்த தேவர்க்கு இதுகாணீர்
   என்னிலங்கு சங்கோ டெழில் தோற்றிருந்தேனே.[46]

2. நெடுமாலைப் பேர் பாடியாட, வருந்தாது என்
   கொங்கை ஒளி மன்னும்.[47]

3. தோழி! இவரை யான் அறிவன்; முன்னே மறை நான்கும் உரைத்த முனிவர் இவர்; என் மனம் புகுந்து பொன்னேய் வளை கவர்ந்து போகாமல் இரா நின்றார். இவர் எண்ணும் வண்ணம் அறியோம்.[48] என்னும் போக்கில் தலைவியின் பேச்சு அமைகின்றது.

கண்ணன் மனத்துள்ளே நிற்கவும், கைவளைகள்
என்னோ கழன்ற? இவையென்ன மாயங்கள்?
பெண்ணானோம் பெண்மையோம் நிற்க, அவன்மேய
அண்ணல் மலையும் அரங்கமும் பாடோமே[49]

என்று தலைவி கூறுவதில் தான் பிரிந்து நின்ற நிலையில் அவனோடு மீண்டும் சேர வேண்டுமென்ற குறிப்பும் கிடைக்கின்றது. அதோடு 'திவ்ய தேசங்களைப்' பாடுதலும் நினைத்தலும் இன்றியமையாதன எனக் காட்டுதலும் பரகால நாயகியாம் ஆழ்வாரின் குறிக்கோள் என்பது தெளிவாகும். அவ்வகையில் எம்பெருமான் திருவேங்கடமலையையும் திருவரங்கத்தையும் பாடுகைக்குத் தடையில்லை என்பதும், அஃது அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகியவை பெண்பாற்குரியவை என்னும் விதிக்குத் தடையாகா என்பதும் உள்ளுறைப் பொருளாம்.

Koviloor Digital Library

தாய் கூற்று

திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியில் தாய் கூற்றாக எழுபத்திரண்டு பாடல்கள் உள்ளன. 'தாய்' என்னும் சொல் ஆழ்வார்கள் பாடல்களில் நற்றாய், செவிலி என்னும் இருவருக்கும் பொதுவாகவே குறிக்கப் படுகின்றது. ஈண்டும் தலைவியின் ஆற்றாமை 'கண்ட தாய் இரங்குதலும்,[50] உடன்போக்கிற் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் இரங்குதலும்,[51] திருமாலிடத்து ஈடுபட்ட தலைமகளது செயல் கண்டு நற்றாய் இரங்கிக் கூறுதலும்[52] என இவ்வாறு தலைமகள் படும் பிரிவுத் துன்பத்தைக் காணப் பொறாத நிலையிலேயே தாய்க் கூற்றுப் பாடல்கள் காட்டப்படுகின்றன.

இவையனைத்தும் திருமங்கையாழ்வார்க்குப் பண்டைச் சங்க நூல்களில் இருந்த ஆழ்ந்த பயிற்சியையும் காட்டும்.[53]

ஒதிலு முன்பே ரன்றிமற் றோதாள்
உருகும்நின் திருவுரு நினைந்து
காதன்மை பெரிது கையற வுடையள்
கயல்நெடுங் கண்துயில் மறந்தாள்,
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது[54]

என்னும் தாயின் கூற்றைக் காணலாம். "திருவிடவெந்தை எந்தைபிரானே! என் மகள் வாய்விட்டு எதைச் சொன்னாலும் உன் திருப்பெயர் தவிர வேறொன்றையும் ஓதாள்; உன் திருமேனியையே நினைந்து உருகுகின்றாள். உன் பக்கம் ஆசை பெருகியோட ஒன்றும் செய்யமாட்டாது நிற்கின்றாள். அவளது கண்களோ உறங்குவதில்லை, இவ்வளவு இளம் பேதைப் பெண்ணாயிருந்தும், உன்னுடைய வடிவ குணங்களிலே மட்டும் தெளிவுள்ளவளாக இருக்கிறாள்; இவளை என்ன செய்வதாகத் திருவுள்ளம் கொண்டுள்ளாய்?" என்று தண்ணளி புரியாது பிரிந்த தலைமகனது பிரிவு ஆற்றாது தலைவி வருந்திய நிலையினைத் தாய் காட்டுகின்றாள். இங்ஙனம் தாய் தலைமகனை விளித்துப் பேசுதல் புதுமரபாக அமைகின்றது. தொல்காப்பியம் தாய், தலைவனிடமோ, தலைவியிடமோ நேரில் பேசுதல் இல்லை என இலக்கணம் வகுத்திருப்பது நோக்கத்தக்கது.[55]

உளங்கனிந் திருக்கும் உன்னையே பிதற்றும்
உனக்கன்றி யெனக் கன்பொன் றிலளால்[56]

என்று கவலையோடு அவலம் சேர்ந்திருந்த இளங்கனியாம் தலைவி நிலை சொல்லும்போது 'தன்னையும் தன் மகள் மறந்தனளே' என்னும் அந்தத் தாயின் ஏக்கம் தொனிக்கின்றது.

Koviloor Digital Library

மற்றும் திருவரங்கப் பத்தில்,

பந்தோடு கழல் மருவாள் பைங்கிளியும்
பாலூட்டாள் பாவை பேணாள்
வந்தானோ திருவரங்கன் வாரானோ
வென்றென்றே வளையுஞ் சோரும்
சந்தோகன் பௌழியன்ஐந் தழலோம்பு
தைத்திரியன் சாமவேதி
அந்தோ வந்தென் மகளைச் செய்தனகள்
அம்மனைமீர் அறிகிலேனே[57]

அழகிய மணவாளனை அனுபவிப்பதில் ஆழ்வார்கு உண்டான அளவற்ற காதல் (பிரேமை) இந்தத் திருமொழியாக அவர் வாயில் அமைந்தது எனலாம். பரகால நாயகியைப் பெற்றெடுத்த திருத்தாயார், திருவரங்கன் தரத்திலே தன் மகள் காதல் கொண்டு பித்தேறிக் கிடக்கும் நிலையை ஒவ்வொரு பாட்டில் ஒவ்வொரு வகையாகப் பேசி "இப்பாடுபடுத்தினானே எம்பெருமான்; என் மகளைச் செய்தனகள் அறிகிலேனே" என்று இரங்குகின்றாள்.

மேலே கூறியது தாய் கூற்றாகும். தன்னிடம் போந்து களவு முறையிற் புணர்ந்து பிரிந்த தலைவனது பிரிவாற்றாது வருந்திய தலைவி ஒருத்தியின் நிலையைக் கூறிய பாசுரம் இது. தான் இயற்கையாக ஈடுபடும் விளையாட்டுக்களை மறந்து, திருவரங்கன் வரவையே யெதிர் நோக்கி நிற்கும் நிலையில் தலைவிக்கு நேர்ந்த மெய்ப்பாடு இங்கே குறிக்கப்படுகின்றது.

சாந்தோக்கிய உபநிஷத், பிருகதாரண்ய உபநிஷத், தைத்திரிய உபநிஷத் சாமவேதம் ஆகியவற்றால் அறியப்படுபவன் இறைவன் திருவரங்கன்.

ஆகவே, திருவரங்க நாயகன் நான்கு வேதங்களாலும் புகழப்படும் இறைவன் என்பது கருத்து. "சகல வேதச் சதுரப்பாடுடையவனாய் (பிரதிபாத்தியனாய்) இருக்குமவன், என் மகளைப் படுத்துகின்ற பாடு அறிகிலேன்" என்பதே இந்தத் தாயின் கூற்றாகும்.

இதே கருத்துடன் கூடிய ஒரு பாடலைத் திருநெடுந்தாண்டகத்து, தாய் கூற்றாகக் காணலாகும்.

பட்டுடுக்கும் அயர்ந்திரங்கும் பாவை பேணாள்
பனிநெடுங்கண் ணீர்ததும்பப் பள்ளி கொள்ளாள்
எட்டனைப்போ தென்குடங்கால் இருக்க கில்லாள்
'எம்பெருமான் திருவரங்க மெங்கே?' என்னும்

Koviloor Digital Library

மட்டுவிக்கி மணிவண்டு முரலும் கூந்தல்
மடமானை இது செய்தார் தம்மை, மெய்யே
கட்டுவிச்சி சொல்' என்னச் சொன்னாள் நங்காய்!
கடல்வண்ண ரிதுசெய்தார் காப்பா ராரே![58]

தலைவி வருந்துவதைக் கண்ட தாய்மார் கட்டுவிச்சியென்ற குறி கூறுவோளை வினவ, அவள் தலைவியின் நோய்க்குக் காரணம் கூறிய இந்தப் பாடல் பெரிய திருமொழியின் மேற்கண்ட பாடலுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

மகள் கூறியதைக் கொண்டு தாய் கூறிய கூற்று பலவற்றிலும் சொல்லுந் திறமாம்; இவற்றை அகப்பொருளில் "தாய் கொண்டு கூறுதல்" என்பதில் அடக்குவர். அவ்வாறு பெரிய திருமொழியில் நான்காம் பத்து எட்டாந் திருமொழி அமைவதை நோக்கலாம்.

பிரிவாற்றாது தலைவனை நாடிச் சென்ற தலைவியின் நிலையைக் குறித்துத் தாய் இரங்கிக் கூறிய பாடல்கள் அமைந்தது ஒன்பதாம் பத்து, ஒன்பதாந் திருமொழியாகும். இதற்கு முன்னைய எட்டாந் திருமொழியிலே "மாலிருஞ்சோலை வணங்குதும் வா மடநெஞ்சே!" என்று நெஞ்சை விளித்துப் பேசி, அழகரது வடிவழகிலே நெஞ்சு பறியுண்டு கிடந்தாள் தலைவி. இவள் ஆற்றாமை கண்ட தாய் தன் மகள் அவனோடே அணைந்தல்லது உயிர்வாழ மாட்டாள் போல் இருக்கிறது; அவனை அணைந்து மகிழும் பேற்றினை இவள் பெறுவதோ? அன்றி இங்ஙனே துன்பப்பட்டுக் கொண்டே இருப்பளோ? என்று ஐயப்பட்டுக் கடைசியில் அவனைக் கிட்டியே அநுபவிப்பாள் என்று அறுதியிட்டு அமைதி பெற்றாள் என்று இதனால் அறியப்படும்.

ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "கொலோ" என்ற ஐயப்பொருளில் வரும் இடைச்சொல் பெய்து எழுதப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. இச்சொல்லைக் கொண்டு தான், தாய் ஐயப்பட்டாள் என்று தெரிகிறது.

திருமாலிருஞ்சோலை நின்ற

கோவலர் கோவிந்தனைக் கொடியேறிடை கூடுங்கொலோ[59]
கணைகழல் காணுங்கொலோ! கயற்கண்ணி எம்காரிகையே[60]
அண்டர்தம்கோவினை இன்று அணுகுங்கொல் என் ஆயிழையே[61]
நங்கள் பிரான் இன்று நணுகுங்கொல் என் நண்ணுதலே[62]
வானவர்கோனை இன்று வணங்கித் தொழவல்லள்கொலோ[63]
கேசவ நம்பிதன்னைக் கெண்டையுண்கண்ணி காணுங்கொலோ[64]
வள்ளலை வாணுதலாள் வணங்கித் தொழவல்லள் கொலோ[65]

Koviloor Digital Library

மூர்த்தியைக் கைதொழவும் முடியுங்கொல் என்மொய் குழற்கே[66]
நலந்திகழ் நாரணனை நணுகுங்கொல் என் நன்னுதலே[67]

ஈண்டெல்லாம் காணுங்கொல், அணுகுங்கொல், நணுகுங்கொல், கைதொழவும் முடியுங்கொல் – இவை கிட்டுதலில் ஐயம் தோன்றுகிறது. 'வணங்கித் தொழ வல்லள் கொல்' என்றது கைங்கரியஞ் செய்யவிடுதலில் ஐயம்; 'கொடியேறிடை கூடுங்கொல்' என்றது கலத்தலில் ஐயம்.

ஒன்பது பாடல்களில் அழகனை நாடிச் சென்ற தலைமகள் மாட்டு ஐயப்பாடுற்று இறுதியில் அறுதியிட்டு "அவனைக் கண்டு பேறுபெற்றாள்" என்று வலியுறுத்த "அவனை அணியாயிழை காணும்"[68] என்று செய்யுமென்னும் வாய் பாட்டு உடன்பாட்டு வினைமுற்று கொடுத்துக் கூறிய நயம் நோக்கத்தக்கது.

"புள்ளூரு வாகி நள்ளிருள் வந்த" என்னும் பதிகம் கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு காட்டி, ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு பழமொழியை எடுத்துரைத்துப் பேசுகிற முகத்தாலே, தலைவியின் ஆற்றாமைக்குத் தாய் இரங்கித் தலைவனை வேண்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பதிகத்தைப் பழமொழிப் பாட்டு என்பர்.[69] இங்ஙனம் பெருவாரியாக வழங்கும் பழமொழிகளைக் கொண்டு அகப்பொருள் நுணுக்கங்களை விளக்குதல் ஒரு கவி மரபாகக் காண்கிறது எனலாம். இப்பதிகத்துள் வழங்கி வந்துள்ள பழமொழிகள் அக்காலத்து ஆழ்வார் வாழ்ந்த வட்டாரங்களில் பெரு வழக்காக இருந்திருக்கும் எனத் தோன்றுகிறது.

அப்பழமொழிகள் வருமாறு :

1. பிள்ளை தன்கையில் கிண்ணமேயொக்க.
2. முன்றிலெழுந்த முருங்கையில் தேடு
3. அங்கையில் வட்டாக
4. தொண்டர் கைத்தண்டென
5. பெருவழி நாவற்கனியினும் எளிய
6. எருக்கிலைக்காக ஏறிமழுவோச்சவோ
7. கோழி வெண்முட்டைக்கும் குறுந்தடியோ
8. கவுள் கொண்ட நீர்போல
9. ஆரழ லோம்பும் அந்தணன் தோட்டமாக.

தோட்டலர் பைந்தார்ச் சுடர்முடி யானைப்
பழமொழி யால்பணிந்துரைத்த
பாட்டிவை பாடப் பத்திமை பெருகிச்
சித்தமும் திருவொடு மிகுமே[70]

என்பது இதன் சிறப்பினை எடுத்துரைக்கும்.

Koviloor Digital Library

தலைவியைக் கூடிப் பின்னர்ப் பிரிந்து போன தலைவன் திரும்பி வருமளவும் ஆற்றியிருக்க ஒண்ணாதபடி ஆற்றாமை கரைபுரண்டு ஓடி ஆசை மிகுத்து நின்ற தலைவி பிரிவுத் துயரத்தினால் படும்பாட்டைப் பார்த்துத் தாய் பேசுகின்றாள். தாய் தலைவனை நோக்கி அவரது மிடுக்கையும், நினைத்தவற்றைச் செய்து முடிக்கும் அவன் துணிவையும், "குணவான்" என்று மார்பு தட்டிப் பேசும் அவன் தற்பெருமையையும் வடிவழகிலே எல்லாரையும் தோற்கடிக்கவல்ல அவன் திறமையையும் சுட்டிக்காட்டி, "அப்படிப்பட்ட நமக்கு இந்தப் பெண்பிள்ளை ஒரு சரக்கோ?" என்று அலட்சியமாக இவளை நினைத்திருக்கிறாயோ என்றும் கூறி இவள் இப்பாடுபட நீ ஆறியிருப்பாயோ? இது தகுவதோ?என்று அவனை வேண்டி இரங்கிக் கூறி, பழமொழிகளின் மூலம் பாடலிட்டு இவளை விரைவில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பணிந்துரைத்தாள்.

கருங்கடல் வண்ணா! கவுள்கொண்ட நீராம்
இவளெனக் கருதுகின் றாயே[71]

என்னும்போது, நின் வண்ணம் கருங்கடலாயிருக்கட்டும், ஆனால் நின் செயல் கடல் நீரின் சுவைபோல் இருக்கக் கூடாது என்ற பாவம் (அதாவது கடல் நீர்போல் கொப்பளித்து விடாதே) சிறப்பாகக் கருதத்தக்கது.

இத்தகைய அகப்பொருள் சுவைபடும் பாடல்களால் திருமங்கையாழ்வாரது சங்க நூற்பயிற்சியும், அவர்க்கு அந்நூற்கண் உள்ள பேரன்பும் புலப்படும் எனலாம்.

இவர் படைத்துள்ள அகப்பொருள் பாடல்கள் வழி இவருடைய புலமைத் திறத்தையும், குறிப்பாக இவரது சங்க நூற் புலமையையும் அறியலாம். இவர் பாடிய பாடல்கள் இசைக்கமைந்தனவென்றும், அவ்வினிய பாடல்கள் திருமால் அன்பைப் பெருக்கி நற்பேற்றினையுய்க்க வல்லன என்றும் உணரலாம்.

தாண்டகங்கள் - திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்

திருத்தாண்டகம் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. அது அறுசீரினாலேனும், எண் சீரினாலேனும் ஆடவர் கடவுளரை அளவொத்த செய்யுளினாற் புகழ்ந்து பாடுவது. அவற்றுள் அறுசீரினால் வருவது 'குறுந் தாண்டகம்' எனவும், எண்சீரினால் வருவது 'நெடுந்தாண்டகம்' எனவும் கூறப்படும்.[72]

இனி, பண்கள் இருபத்து நான்கனுள் பகற்பண் பன்னிரண்டும் இராப் பண் ஒன்பதும் போகப் பொதுப் பண் மூன்றில் தாண்டகம் என்பது ஒன்றாகும் என்பர்.[73] பொதுப் பண் மூன்றாவது செவ்வழி, செந்துருத்தி, தாண்டகம் என்பனவாம்.

Koviloor Digital Library

இக்காலத்துத் தமிழிசைச் சங்கக் குழுவினர் செவ்வழியை யதுகுலகாம்போதி என்றும், செந்துருத்தியை மத்தியமாவதி என்றும் தாண்டகத்தை அரிகாம்போதி என்றும் வரையறுத்துள்ளனர்.

எனவே இந்தத் தாண்டகச் செய்யுள்கள் அரிகாம்போதியில் பாடப்படுவன என்பது அறிய வேண்டும். திருக்குறுந்தாண்டகத்தில் அகப்பொருள் மரபு அமைந்த பாடல் ஒன்றுகூட இல்லை என்பதே ஆய்வு முடிவு.

திருநெடுந்தாண்டகத்தில் அகப்பொருள்

திருக்குறுந் தாண்டகம் அடியார் நிலையில் ஆழ்வார் பாடியதாகலின் அங்கு அகப்பொருள் மரபுகள் இடம் பெறவில்லை. ஆயின், திருநெடுந்தாண்டகத்தில் அவை இடம் பெற்றுள்ளன.

திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகம் முப்பது பாடல்கள் கொண்டது. இதனை முதற்பத்து, இரண்டாம் பத்து, மூன்றாம் பத்து என மூன்று பகுதியாகப் பிரிப்பர்.

முதற் பத்து – ஆழ்வார் தாமான தன்மையிலே பாடியவை.

இரண்டாம் பத்து – தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமையைக் கண்ட தாய் இரங்கிக் கூறியது. எனவே ஆழ்வார் ஈண்டுத் திருத்தாயார் சொற்களாகச் சொன்னவை இவை என்று கொள்ளலாம்.

மூன்றாம் பத்து – இதில் முதல் ஐந்து பாடல்கள் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல் ஆகும். ஆறாவது பாடல் – வண்டு விடுதூது; ஏழாவது – நாரை விடு தூது; எட்டாவது – பறவைகளைத் தூது விடுத்த தலைவி, தலைவன் வரக் காணாமையால் அவனைப் பற்றி ஊடல் கொண்டு தோழிக்குக் கூறிய பாடலாகும். எனவே, மூன்றாம் பத்தில் எட்டுப் பாடல்கள் தோழியோடு பேசிய தலைமகள் சொற்களாக விளங்குகின்றன. இறுதி இரண்டு பாடல்களும் ஆழ்வார் தாமான தன்மையில் அருளிச் செய்தன. ஆக, இத்திருநெடுந்தாண்டகத்து அகப்பொருள் கொண்டு திகழ்வன, பதினோராம் பாடல் முதல் இருபத்தெட்டுப் பாடல்கள் வரையுள்ள பதினெட்டுப் பாடல்கள்[74] என்று முடிவு செய்யலாம்.

தாய் கூற்றுப் பாடலொன்று முன்னமே பெரிய திருமொழிப் பாடலோடு இயைத்துக் காட்டப்பட்டது. ஈண்டுப் பொதுவாகப் பார்க்கும் போது, தன் மகளின் பிரிவாற்றாமை இந்தத் தாயைப் பெரிதும் வருத்துகின்றது என உணரக் கிடக்கின்றது. தலைமகள் – மடக்கிளியைக் கைகூப்பி வணங்குவதும்[75] மென்கிளிபோல் மிக மிழற்றுவதும் துணை முலை மேல் துளிசோரச் சோர்ந்து

Koviloor Digital Library

கிடப்பனவும்[76] தாய் சொல்லும் சொல்லைக் கேளாளாகி, 'எம்பெருமான் திருவரங்கமெங்கே?' என்றும், 'நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன்' என்றும் நிறை யழிந்து மகள் நிற்பதுவும்[77] கண்ணால் கண்டு கவலை மிக்குப் பேசுகின்றாள்.

இந்தப் பதிகத்தின் சிறப்பென்னவெனில் தாய் கூற்றிலே, தலைவி சொன்னதை – தன் மகள் அட்டவணையிட்டு இறைவனைப் புகழ்ந்து பேசிய புகழ் மொழிகளை அனுபவித்துக் கூறப்படுவது நோக்கத்தக்கது. மேலும் இராமபிரான் வில்லை முறித்துச் சீதையின் தோள் தோய்ந்த பெருமை, காஞ்சீபுரத்திலுள்ள வெஃகாவில் திருமால் பள்ளி கொண்டருளும் பான்மை, கண்ணணாய் மல்லரை அடர்த்து அவர்களின் வலிமையை அடக்கிய வல்லமை, குதிரை வடிவம் கொண்டு வந்து கேசியைக் கொன்ற வலிமை, போன்ற தொன்மைக் கூறுகள் (Myth) தாய் கூற்றுவழிக் காணப்படுகின்றன.[78]

இனி, தாய் தன்மகள் ஆற்றாமை கண்டும் அஃது அடக்கம் மீறியதைக் கண்டும் பதறுகின்றாள்.

கார்வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியிணையும் கமலவண்ணம்
பார்வண்ண மடமங்கை பத்தர் பித்தர்
பனிமலர்போல் பாவைக்குப் பாவம் செய்தேன்
ஏர்வண்ண என்பேதை என்சொல் கேளாள்
'எம்பெருமான் திருவரங்க மெங்கே' என்னும்,
'நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன்' என்னும்
இதுவன்றோநிறையழிந்தார் நிற்கு மாறே?

என்னும் சொற்களில் அந்தத் தாயின் இரங்கலைக் கணித்துப் பார்க்கலாம்.[79] ஈண்டுப் பார்மகள் "பத்தர்" என்றும் திருமகள் "பித்தர்" என்றும் கூறப்படும் நயம் உணரத்தக்கது. நம்மாழ்வாரும் "அல்லி மலர் மகள் போக மயக்குக்கள் ஆகியும் நிற்கும் அம்மான்" என்று கூறுவதை ஒப்பு நோக்கலாம்.[80]

தலைவி தலைவனைத் தேடிப் போவதாகக் கூறும் 'நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன்' என்னும் கூற்று பரகாலநாயகி படைத்துக் காட்டும் பழமையுடன் தொடர்புடைய புதிய வளர்ச்சியாகும்.

இவற்றையெல்லாம் தாய் எடுத்துக்காட்டி இப்படிப்பட்ட தலைமைசான்ற இறைவனது திருப்பெயர்களை இடைவிடாது சொல்லுகின்ற பேறு பெற்றவளே தன் மகள் என்று பேசி முடிக்கின்றாள். 'இப்படிப்பட்ட பெண்ணைப் பெற்றது

Koviloor Digital Library

என் பெருந்தவப்பேறே' என்பதும் தொனிப் பொருளாகும் என்பர் வைணவப் பெரியோர்.

தாய் கூற்று நிலையிலும் இங்குப் பொதுநிலை மாறிய ஒரு புது நிலையைக் காணலாம்.

அறத்தொடு நிற்றல்

ஐந்து பாடல்கள் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்கும் பான்மையில் வந்துள்ளன. இவை ஐந்தும் வைணவவுலகில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுவன.

மைவண்ண நறுங்குஞ்சி குழல்பின் தாழ
மகரம்சேர் குழையிருபா டிலங்கி யாட
எய்வண்ண வெஞ்சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தாரென் முன்னே நின்றார்
கைவண்ணம் தாமரைவாய் கமலம் போலும்
கண்ணிணையும் அரவிந்தம் அடியும் அஃதே,
அவ்வண்ணத் தவர்நிலைமை கண்டும் தோழீ!
அவரைநாம்தேவரென் றஞ்சி னோமே![81]

என்னும் பாடல் வைணவரால் பெரிதும் பாராட்டப்படும். பட்டர் நிர்வாகம் என்று இதன் வியாக்யானத்தைப் பெரிதும் கொண்டாடுவர் வைணவர்கள். தோழியர்க்குச் செய்தி அறிவித்தும் தோழியரது சொற்களைக் கேட்டும் உயிர் வாழ்ந்து பேசினதாகையாலே "போதயந்த; பரஸ்பரம்" என்று பகவத் கீதையில் கூறியதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுவர் பட்டர்.[82]

இராமபிரானாகிய தலைவன் தலைவியாகிய பரகால நாயகி முன் வந்து நின்றான். அவன் வந்து முன்நின்ற பான்மை முதல் இரண்டு அடிகளால் தலைவி தோழியினிடத்துத் தெரிவிக்கின்றாள்; இவ்வடிகளில் தலைவி தலைவனின் உறுப்பழகில் அகப்பட்ட நிலை சொல்லப்படுகின்றது. பின்னிரண்டடிகளில் அவன் பேசிய இனிய பேச்சுக்களை நினைந்து பேசுகின்றாள். இந்தப் பாடலில் அமைந் துள்ள இலக்கிய நயம் அறத்தொடு நிற்றல் துறைக்கே ஓர் ஏற்றந்தந்து திகழ்கின்றது.

இவ்வாறே தலைவி, "கைவளையும் மேகலையும் காணேன் கண்டேன் கன மகரக் குழையிரண்டும்" என்று பாடும் பாடலின் நயமும் மிகச் சிறப்பாகக் காண வேண்டியவொன்றாகும். இந்தப் பாடலின் உரை பேராசிரியர் சி. ஜகந்நாதாசார்யர் அவர்கள் வழி நன்கு விளக்கம் பெறுவதை நோக்கலாம்.[83] இனி,

Koviloor Digital Library

சேலுகளும் திருவரங்கம் நம்மூ ரென்னக்
கள்ளூரும் பைந்துழாய் மாலை யானைக்
கனவிடத்தில் யாங்காண்பன் கண்டபோது,
'புள்ளூரும் கள்வாநீ போகேல்' என்பன்
என்றாலு மிது நமக்கோர் புலவி தானே?

என்னும் அடிகளில் காணப்படும் 'கனவிடத்தில் யான் காண்பன்' என்ற இடத்துக் "கனவு நிலை உரைத்தல்" என்ற அக இலக்கிய மரபு காணப்படுவதை நோக்கலாம்.

"மின்னிலங்கு திருவும், பெரிய திருத்தோள்களும், குவலாய பீடமென்ற யானையைச் சீறிப் புடைத்த திருக் கைகளும் திருக்கண்களும் திரு இதழ்களும், ஒப்பற்ற செவ்வி பெற்று மணம் மிக்கதாயுள்ள திருத்துழாய் முடி மாலை வளையத்தின் கீழே தாழ்ந்து விளங்குகின்ற மகர குண்டலங்களுமாகிய இவற்றைக் காட்டிக் காட்சி தந்து, என்னுடைய அழகு முதலிய உடற் குணங்களையும், அவ் உயிர்க்குணத்திற்குக் காரணமான மானத்தையும் பறித்துக் கொண்டான்; அதோடு என் கைவளைகளையும் கொள்ளை கொண்டு, என்னை "ஆருங்" கொண்டு கலந்து பரிமாறிவிட்டுப் பிரிந்து போகும்போது தம்மூரையும் சொல்லிப் போனார்; பொன்னலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலினூடே புனலரங்க மூரென்று போயினாரே!" என்று கூறுகின்றாள் தலைவி.[84]

ஈண்டு,

என் நலனும் என்நிறையும் என்சிந்தையும்
என்வளையும் கொண்டென்னை

என்றவிடத்து அகப்பொருள் சுவை நிறைந்திருப்பதைக் காண வேண்டும். "என்" என்று ஒரு முறை சொன்னால் போதும்; ஆனால் இங்கு நான்கு முறை "என்" என்ற சொல்லை அழுத்திக் கூறியுள்ளாள் தலைவி.

"அவருடைய குணங்களையும் ஆண்மையையும் நெஞ்சினையும் ஆபரணங்களையும் கொள்ளை கொள்ள வேண்டியவள் நானாயிருக்க, என்னுடை யவற்றை அவர் கொள்ளை கொண்டது என்ன விந்தை காண் தோழி!" என்று தலைவி தோழியிடம் அறத்தொடு நிற்கும் திறம் அறிந்தின்புறத்தக்கது.

தூது

"தேமருவு பொழிலிடத்து" என்னும் பாடலில் அறுகால் சிறுவண்டைத் தூது விடுகிறாள் பரகால நாயகி. ஈண்டு "அறுகால் சிறுவண்டே! தொழுதேன் உன்னை"[85] என்ற இடத்திற்குப் பட்டர் கூறும் விளக்கம் சிறப்புடைத்தாகும்.[86]

Koviloor Digital Library

இவர் வகுத்த உரை தூது சென்று மீண்டு வர வேண்டிய இந்த நோத்திற்கு மிகவும் பொருந்தி வருகிறது. நம்மாழ்வார்,

செங்கால மடநாராய் திருமூழிக்களத்துறையும்
கொங்கார் பூந்துழாய் முடி என்குடக் கூத்தற்கு என் தூதாய்
நும் கால்கள் என்தலைமேல் கெழுமீரோ நுமரோடே[87]

என்று பாடியதையும் ஒப்பு நோக்கலாம். 'செங்கால மடநாராய்'[88] என்று திருமங்கை யாழ்வார் நம்மாழ்வார் பாணியிலேயே தொடங்கி நாரையைத் தூதுவிடும் பான்மை முன்னரே விளக்கம் பெற்றது.

இவ்வாறு பறவைகளைத் தூதுவிடுத்த தலைவி தலைவன் வரக் காணாமையால் அவனைப் பற்றி ஊடல் கொண்டு தோழிக்குக் கூறிய வகை அடுத்துக் கூறப்படுகிறது.[89]

தென்னிலங்கை யரண்சிதறி அவுணன் மாளச்
சென்றுலக மூன்றினையும் திரிந்தோர் தேரால்
மன்னிலங்கு பாரதத்தை மாள ஊர்ந்த
வரையுருவின் மாகளிற்றைத் தோழீ, என்றன்
பொன்னிலங்கு முலைக்குவட்டில் பூட்டிக் கொண்டு
போகாமை வல்லேனாய்ப் புலவியெய்தி,
என்னிலங்க மெல்லாம்வந் தின்பமெய்த
எப்பொழுதும் நினைந்துருகி யிருப்பன் நானே

என்று தலைவி கூறும் இந்தப் பாடலில், இவள் தன் தோழியை நோக்கி, தன் எல்லை கடந்த ஊடலையும் தன் ஆற்றாமையின் சுமையையும் வெளியிடுகின்றாள் என்று காணலாம்.

மடல்கள் - சிறிய திருமடல், பெரிய திருமடல்

மடற்கூற்று, மடல் ஏற்றம் என்று இஃது இருவகைப்படும். பனை மடல்களால் ஆன குதிரையின் மீதேறி, தான் விரும்பிய காதலியின் வடிவைத் தாங்கிய (உருவந் தீட்டப்பெற்ற) கிழியைக் கையில் ஏந்தி ஊரறிய வலம் வந்து, அவள் பெயரைச் சொல்லிப் புலம்பும் நிலையே மடல் ஏற்றம் எனப்படும்.

இவ்வாறு மடலேறித் துன்புறுவதைக் கூறாமல் தலைவன் மடலேற முயல்வதாகக் கூறுவது மடற்கூற்று என்று சொல்லப்படும்.

பண்டை அகப்பொருள் இலக்கிய மரபில் மடலேற்றம் ஒன்றாகும். ஆயின், தலைவன் உடலில் பனைமடல் கறுக்கு அறுப்பதால், இரத்தம் வடிய, அவ்வூரை

Koviloor Digital Library

வலம் வரப் போவதாக அவன் எச்சரிக்கை செய்வான் என்பதைக் காட்டு கின்றன.

இந்த மடலேற்றம் நிகழ்ச்சியினைப் பல படித்தாக விவரிப்பர். ஆயின் ஈண்டு அஃது ஆராய்ச்சிப்பொருள் அன்று. நெய்தற்கலிப்பாடல்கள் சிலவற்றில் மடலேறுதல் விளக்கப் பெற்றுள்ளன.[90] குறுந்தொகையில்[91] மடல் ஏறப் போவதாகக் கூறும் செய்திகள் உள.[92] மடன்மாக் கூறும் இடனுமா ருண்டே[93] என்று குறிப்பர் தொல்காப்பியர்.

அகப்பொருள் துறையான மடலேறுதல் குறித்து மிகச் சிறப்பான இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார் மாதங்கீரனார் என்னும் புலவர். 'பாவை பாடிய பாவை' என்று ஆண்டாளைக் குறிப்பிடுவது போல, மடல் பாடல்களைச் சிறப்பாகப் பாடிய காரணத்தால் இந்தச் சங்கப் புலவர் 'மடல் பாடிய மாதங்கீரனார்' என்றே வழங்கப் படுகிறார்.

டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் தம் குறுந்தொகைப் பதிப்பில் மடலேறுதலை எளிய இனிய தமிழில் விளக்குகின்றார்.[94]

திருக்குறளில் 'நாணுத்துறவுரைத்தல்' என்ற அதிகாரத்தில் இதற்கு நல்லதொரு விளக்கம் கிடைக்கின்றது.[95] தலைவன் கூற்றாகவும் திருக்குறள் அதனைச் செப்புகின்றது.

திருமங்கையாழ்வார், "குதிரியாய் மடலூர்துமே"[96] என்று நம்மாழ்வார் கூறிய குறிப்பிற்கு விரிவுரை செய்வது போலே சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய இரு மடல்களை யாத்துள்ளார். இதற்கு உரை எழுதிய பெரிய வாச்சான் பிள்ளை இந்நிகழ்ச்சி குறித்துத் தெளிவானதொரு விளக்கத்தை நல்குகின்றார்.

மடலேறுகைதான் உண்ணாதே குளியாதே
உகந்த விஷயத்தை ஒரு படத்தை விரித்து
அதனைக் கொண்டு திரிகையும்; அறவிளைத்தல்
அதன்காற் கிடையிலே விழுகையும், விழுந்தால்
அங்ஙனே செல்லரிக்கைக் கிடக்கையும் அங்ஙனே முடியுமாம்

என்று கூறுவதனோடு அமையாமல், "இத்தாற் பிரயோஜனம் என் என்னில் – அவன் (திருமால்) கேட்கும் என்கை; இல்லையாகில் இது தானே பிரயோஜனம் ஆகை" என்றும் எழுதியுள்ளார்.

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான[97]

எனத் தொல்காப்பியர் கூறியிருப்பது ஒரு காலத்து நிலையினைச் சுட்டுவதாகும். இதனால் நாணுத் துறத்தலாகிய செயல் மடலேறுதல் என்பதும், மகளிர்

Koviloor Digital Library

இச்செயலை மேற்கொள்வது சிறப்பன்று என்பதும் தொல்காப்பியர் காலத்துக் கருத்து என்பதனை உணரலாம்.

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்[98]

என்னும் திருக்குறள் கருத்தும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

ஆயினும் பக்தி இலக்கியங்களில் காணும் இந்நிகழ்ச்சி ஒரு மரபு மாற்றமாகக் காணக் கிடக்கின்றது.

பக்தி இலக்கியம் பெருகத் தொடங்கிய இடைக்காலத்தில், ஆடவர் மடலேறுவதாக அமைத்துப் பாடப்பெற்ற மடல்துறையினை மகளிர் மடலேறுவதாக மாற்றிப் பாடியதோடு நில்லாமல் – அகப்பொருளில் அமைந்த மடல் துறையை ஒரு சிற்றிலக்கியமாகவும் உருவாக்கி விட்டார் திருமங்கையாழ்வார்[99] என்பதனைக் காணலாம். இவருடைய சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய இரண்டுமே மடல் இலக்கிய வகையில் எழுந்த முதல் இலக்கியங்களாகும்.

நம்மாழ்வாரும் பெண் மடலேறுவதாகக் குறிக்கின்றார்.

நாணும் நிறையும் கவர்ந்தென்னை நன்னெஞ்சம் கூவிக் கொண்டு
சேணுயர் வானத் திருக்கும் தேவ பிரான்றன்னை
ஆணையென் தோழீ! உலகு தோறலர் தூற்றஆம்
கோணைகள் செய்து குதிரி யாய்மட லூர்துமே[100]

என்றும் அவர் குரலில் குதிரி – நாணமற்றவள் செய்யும் செயல் என்ற தயக்கமும், ஆனால் அதே நேரத்தில் அது தவிர்க்க இயலாதது (inevitable) உடனடியாகச் செய்தேயாக வேண்டியது என்பதையும் ஒலிக்கக் கேட்கலாம்.

இந்தத் தயக்கமும், மயக்கமும் திருமங்கையாழ்வாருக்கு வடபுல நெறியால் நீங்கியது என்றுணர முடிகின்றது. மடலேறத் துடிக்கும் மங்கையை இவர்தம் பாடல்களில் துணிவாக அறிமுகம் செய்கின்றார். திருமங்கையாழ்வாரின் ஆன்மாவாகிய தலைவி தானே மடலேறப் போவதாக அச்சுறுத்தும்போது, இதுவரை எல்லோருக்கும் ஏற்பட்ட ஐயமும் நீங்குகின்றது.

காரார் கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும்
வாராதே என்னை மறந்ததுதான் வல்வினையேன்
ஊரார் உகப்பதே யாயினேன், மற்றெனக்கிங்கு
ஆராய்வார் இல்லை அழல்வாய் மெழுகுபோல்
நீராய் உருகுமென் ஆவி, நெடுங்கண்கள்
ஊரார் உறங்கிலும் தாமுறங்கா, உத்தமன்றன்
பேராயினவே பிதற்றுவன் பின்னையும்

Koviloor Digital Library

காரார் கடல்போலும் காமத்த ராயினார்
ஆரே பொல் லாமை அறிவார்? ...
பேராயிரமும் பிதற்றிப் பெருந்தெருவே
ஊரார் இகழிலும் ஊரா தொழியேன் நான்
வாரார்பூம் பெண்ணை மடல்[101]

தலைவியின் இந்தக் கூற்று, கற்போர் நெஞ்சங்களை உருக்கும்படி அமைந்துள்ளது. தலைவி, தோழியை நோக்கி, "தோழியே! நான் திருமாலைக் கண்டதுவே காரணமாக உருமாறிப் பிதற்றித் திரிகின்றேன்; வாடையோ உடலை வருத்துகின்றது, ஊராரோ அலர் தூற்றுகின்றனர்; என் மட நெஞ்சை அழைத்து மணிவண்ணன்பால் சென்று அவனது திருத்துழாய் மாலையைத் தருகின்றானா! இல்லையா, என்று கேட்டுவா என்று அனுப்பின எனக்கு" என்று சொல்லத் தொடங்குவது, அவள் உலகோர் ஒவ்வொரு வரையும் விளித்துக் கூவியது போன்ற குரல் தொனிக்கின்றது.

கார்க்கடல் வண்ணன் பின் போன நெஞ்சம் இவளிடம் திரும்பி வராமல் அவனிடமே தங்கிவிட்டது; அதனால் ஊரார் சிரிக்கும்படி நிலை குலைந்தாள் தலைவி. அவளோடு இது பற்றிப் பேசுவாரில்லை; அவளுடைய ஆவி அழல் வாய் மெழுகு போல் நீராய் உருகும்; நெடுங்கண்கள் ஊரார் உறங்கினும் தாம் உறங்கா, உறக்கமில்லையாகவே பித்துப் பிடித்தவள் போலப் பிதற்றத் தொடங்கினாள். கடல் போலும் காமத்துள் ஆயினள்; எனவே, வாரார் வனமுலை வாசவதத்தை போல் தானும் தன் நாயகனைப் பெருந்தெருவே தேடிப் புறப்பட்டாள். ஊராரால் இகழ்ந்திடப்பட்டாலும் இப்போது இவளுக்குக் கவலையில்லை. 'வாரார் பூம்பெண்ணை மடல்' என்று தான் மடலேறுதலைத் துணிந்திருத்தலை அந்தத் தலைவி வாய் விட்டுச் சொல்லிவிட்டாள்.

இது மடலைப் பற்றிப் பரகால நாயகியாகிய பெண் செய்த புரட்சி எனலாம். புதியன புகுதலில் இதனை அடக்கலாம் என்பர்.[102] பெண்டிர் மடலேறுதல் கூடாது என்பது தொல்காப்பியம் காட்டும் கருத்து; பெண் மடலேறுவதாகச் சங்க இலக்கியத்தில் 'கூற்று' (மடற்கூற்று) அளவில் கூட இல்லை. ஆயின் ஈண்டு இந்தத் தலைவி இந்தக் கட்டுக்களையெல்லாம் உடைத்தெறிகின்றாள் எனத் தெரிகின்றது. பெண்டிர் மடலூர்தல் தமிழ் நெறியன்று என்று பரகால நாயகி உணர்ந்தே இருக்கின்றாள். எனினும் தான் வடநெறியே இந்நிலையில் வேண்டுவதாகக் கூறுகின்றாள்.

... ... காமத்தின்
மன்னும் வழிமுறையே நிற்றும் நாம் 'மானோக்கின்
அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்,
'மன்னும் மடலூ ரார்' என்பதோர் வாசகமும்

Koviloor Digital Library

தென்னுரையில் கேட்டறிவதுண்டு, அதனை யாம் தெளியோம்;
மன்னும் வடநெறியே வேண்டினோம், வேண்டாதார்
தென்னவன் பொதியில் செழுஞ்சந் தனக் குழம்பின்
அன்னதோர் தன்மை அறியாதார் ...[103]

என்னும் பாடற்பகுதி அவள் உணர்ந்ததைத் தெரிவிக்கின்றது. 'பெண்கள் மடலூர்தலில் தவறில்லை. தென் தமிழ் நெறிதான் அவ்வுரிமையைப் பெண்களுக்கு அளிக்க மறுக்கிறது. ஆனால், வடநெறி ஆதரவு தருகிறது. எனவே, நான் மடலூரப் போகிறேன்' என அவள் அறை கூவல் விடுக்கின்றாள்.

எனவே இம்மரபு மீறுதலைத் திருமங்கையாழ்வார் உணர்ந்தே செய்தார் என்று உறுதி கொள்ளலாம். இத்தகைய சில மரபு மீறுதல்கள் சில மரபு மாற்றங்கள் முதலியன பக்தி இலக்கியத்தில் ஆளப்படுதற்குச் சில காரணங்கள் அமையலாம் என்று நோக்கும்போது இஃது ஏற்புடைத்தாகின்றது.

> மானுடக் காதல் அளவிற்குக் கட்டுப்பட்டு நிற்கும் நிலையிலேயே பாராட்டிற்கும் சிறப்பிற்கும் உரியதாக அமைகின்றது. அளவிகக்கும்போது அது எள்ளற்குரிய தாகவும் அமைகின்றது. எனவே அது சில விதிமுறை களுக்கு உட்பட்டதாகின்றது. ஆயின் தெய்வீக அன்போ, இத்தகைய விதிகட்கு அப்பாற்பட்டது. தன்வயமிழந்த, அளவிறந்த காதல் மானுடநிலையில் ஒதுக்கப்பட்டாலும் இறைவனிடம் செலுத்தப்படும்போது இறைவனோடு கலந்த நிலையைத் தான் எனும் ஆணவ நிலை அழிந்த நிலையைக் குறிக்கப் பயன்படுகின்றது எனலாம். எனவே இவை அங்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.[104]

என்று கூறும் மொழிகள் முற்றும் பொருந்துகின்றன. மடல் இலக்கிய மரபு மாற்றம் பெறுவது இங்கே துவங்குகிறது எனலாம்.

தமிழ் இலக்கியங்களில் – பண்டைய இலக்கியங்களில் தொன்னெறியாகக் காணப்படாத ஒன்று, பிற நாட்டு – வடநெறியில் காணுவதைச் சான்றுகளுடன் காட்டுவன சிறப்புடையதாகும். வடநெறியில் காணப்படும் கருத்திற்கு ஒப்ப, தன் செயல் அமைவதை விளக்குகின்றாள் தலைவி. இதற்குச் சில வரலாறுகளும் சான்று பகர்கின்றன. அவை வருமாறு,

1. இராமன் காட்டுக்குப் புறப்பட்டபோது, அன்ன நடையுடைய அணங்கு வைதேகி அன்பின் பெருக்கினால், அவரைப் பிரிந்திருக்க ஆற்றாளாய்ப் பழியையும், பலர் தூற்றலையும் நோக்காது, கணவருடன் கால் நடையாய்த் தன் பஞ்சு போன்ற அடிகளைக் கொண்டு நடந்து சென்றாள்.

Koviloor Digital Library

2. அழகிற் சிறந்த வேகவதி தன் இன்னுயிர்க் காதலனைக் காண வொட்டாது தன் தமையன் தடுத்துத் தன்னைக் கொண்டு போக, அந்த நிலை யிலே தன் தமையனை இலட்சியம் செய்யாமல் இகழ்ந்து தான் வலுக் கட்டாயமாகப் புறப்பட்டுப் போய்ப் பெரிய போர்க்களத்திலே இருந்த தன் காதலனைப் பற்றி நகரத்திற்குக் கொணர்ந்து கலந்து இன்புற்றனள்.

3. பார்த்தனைப் பார்த்துக் காதல் கொண்ட உலூபிகை என்கிற நாக கன்னிகை அவனைத் தனது நகரத்திற்கு அழைத்துச் சென்று அவனோடு கூடிக் குலாவிக் களித்தனள்.

4. அவுணர்க்கு வாள் வேந்தன் பாகுசுரனின் மகளாய் அழகில் சிறந்தவளான உஷை என்பவள் தன்னுடைய இன்னுயிர்த் தோழியாகிய சித்திர லேகை என்பவளைக் கொண்டு கண்ணன் பேரனாகிய அநிருத்தனை மாயத்தால் கட்டி எடுத்துக் கொண்டு வரும்படி செய்து அவனோடு போின்பம் அனுபவித்தாள்.

5. பர்வத ராசனான இமவானுடைய உமை என்னும் பார்வதியானவள் தனது தலைமுடியைச் சடாபாரமாகத் தரித்து, துவண்ட இடையோடு சேர்ந்த அழகிய உடம்பு வாடவும், புலனைந்தும் வருந்தி நீங்கவும் அருமையான கடிய தவத்தைச் செய்து முடித்தாள். அதன் பயனாக, சிவபெருமானுடைய அழகிய மார்பையடையப் பெற்றாள்.[105]

இவ்வளவும் கூறிய தலைவி, 'பன்னியுரைக்குங்கால் பாரதமாம்' என்று அதோடு முடித்துவிட்டு, தான் உற்ற நோயினை – காதல் நோயினை உரைக்கத் தொடங்குகின்றாள்.[106] இதில் வரும் பகுதிகள் வரலாற்றுச் செய்திகளுடனும் தொன்மக் கூறுகளுடனும், இறைவனாம் தலைவனின் உருவ வருணனையுடனும் அமையப் பெறுவனவாம்.[107] இன்னும் கண்ணனின் இளம்பிள்ளைப் பருவச் செயல்களெல்லாம் பாங்காகப் பகரப்படுகின்றன. புராணக் கூறுகள் பல அவ்வப்போது இதன்வழி நினைவூட்டப்படுகின்றன.

மற்றிவைதான்

உன்னி யுலவா வுலகறிய வூர்வன்நான்,
முன்னி முளைத்தெழுந் தோங்கி யொளிபரந்த,
மன்னியபூம் பெண்ணை மடல்[108]

என்று முடிக்கின்றாள் பரகால நாயகி. "அப்படிப்பட்ட செயல்களை எல்லாம் உலகத்தார் அறியும்படி வெளிப்படுத்திக் கொண்டு பரகால நாயகியாகிய நான், முன்னின்று இந்த அழகிய ஒளி வீசுகின்ற பனை மடலைக் கொண்டு மடலூரக் கடவேன்" என்பது தலைவி தேர்ந்த பழைய மடல் துறை ஒரு புதுப் பொலிவுடன் ஈண்டுத் திகழ்கின்றது எனக் காணலாம்.

Koviloor Digital Library

மடல் பற்றிய இலக்கியங்களில் மடல், உலா மடல் என்று இருவகையாகக் காணப்படுகின்றன. மடல் என்பது வளமடல் எனவும், கவி மடல், இன்ப மடல் என்ற பெயர்களாலும் குறிக்கப்படுவதனைக் காணலாம்.[109]

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கில் இன்பமே சிறந்தது என வலியுறுத்திப் பாடுவது வளமடலாகும் என்பதனை இலக்கண விளக்கப் பாட்டியல் குறிக்கிறது.[110] திருமங்கையாழ்வார் இயற்றியருளிய சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய இரண்டும் வளமடல் வகைக்குச் சான்றாக நிற்கின்றன. சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய இரண்டும் பாட்டுடைத் தலைவனின் பெயரை எதுகையாக வைத்து, தனிச்சொல் இடம் பெறாத இன்னிசைக் கலி வெண்பாவினால் பாடப்படுவது வளமடல் என்னும் இலக்கண விதிக்கு இயைய அமைந்துள்ளன.[111] அவ்வமைப்பில் 'நாராயணன்' சிறிய திருமடலின் பாட்டுடைத் தலைவனாயமைகின்றான். அந்தப் பெயருக்கு எதுகை அமைய இது 155 அடிகளில் பாடப்பட்டுள்ளது. பெரிய திருமடலின் பாட்டுடைத் தலைவனாக, 'கள்வன்' அமைகின்றான். அந்தப் பெயருக்கு எதுகை அமையும் வகையில் இது 297 அடிகளில் பாடப்பட்டுள்ளது.

பெயரமைவு நோக்க, மடல் இலக்கிய வகையில் எழுந்த நூல்கள் பலவும் பாட்டுடைத் தலைவனின் பெயரைக் கொண்டதாகவே பெரும்பான்மையாக விளங்குகின்றன.[112] ஆனால் திருமங்கையாழ்வார் படைத்த இருமடல்களும் சிறிய திருமடல், பெரிய திருமடல் என பெயரமைந்திருப்பது சிந்திக்கத் தக்கது. பிற மடல் இலக்கியங்கள் இந்த இரண்டு நூல்களுக்கும் காலத்தால் பிற்பட்டன. இவையிரண்டும் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்தனவாகவே 'திரு' என்னும் சிறப்பு அடை கொண்டு 'திருமடல்' என்று பெயரிடப்பட்டிருக்கின்றன. அடியளவிலே வேற்றுமை கருதிச் சிறிய, பெரிய என்று முன்னடைவும் சேர்ந்திருக்கக் காரணமுண்டு. கி.பி.15 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் எழுந்த மடல்கள் அரசாட்சி புரிபவரையும், நிலவுடைமையாளர்களையும் (சமீன்தார்) பணம் படைத்தவர்களையும் பலபடப் பாடிப் பொருள் பெறுவதை நோக்கமாகக் கொண்டமையான் அவரவர் பெயரினாலேயே நூற் பெயர் அமைந்துள்ளன எனலாம். "சென்ற நூற்றாண்டிலும் பழமையான உலா, மடல், அந்தாதி முதலிய செய்யுட்களைப் பாடிச் செல்வர்களைப் புகழ்ந்து பொருள் பெற்று வாழ்வதில் புலவர் சிலர் காலம் கழித்தனர்" என மு. அருணாசலம் அவர்கள் கூறுவதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.[113]

மடல் இலக்கியம் வளர்ச்சி பெற்ற நிலையே ஒரு வரலாறாகக் காணக் கிடைக்கின்றது. இதனால் மடல், தனிச் சிற்றிலக்கியமாகவே வளர்ச்சியுற்ற

Koviloor Digital Library

நிலையில் அதன் அமைப்பு, பழைய மரபுகளினின்றும் மாறுபட்டு அமைகிறது என்பது தேற்றம்.

தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள் இவற்றில் வலியுறுத்தப் பட்ட பெண் மடலேறா விதி பன்னிரு பாட்டியலில் சற்று நெகிழ்ந்து கொடுக்கின்றது. இவ்வாறு இவ்விதி நெகிழ்ந்தமைக்கே ஆழ்வாரின் பெரிய, சிறிய திருமடல்களே காரணமென்பர் மு.வரதராசனார் அவர்கள்.[114] ஆயின் இம்மடல்கள் இரண்டிலும் பெண் மடலேறிய நிலை காட்டப்படவில்லை. ஏற முற்படுகிறாள்; ஏறி வந்தால் என்னவெல்லாம் மொழிவோம் என்று எண்ணிப் பார்க்கிறாள். "நாயக நாயகி பாவத்தில் திருமங்கையாழ்வார் படைத்த இம்மடல் நூல்களில், கண்ணனைக் குறித்து மடலேறத் துணிந்த தலைவி, தான் அம்முடிவுக்கு வந்ததற்கான காரணங்களை எண்ணிப் பார்க்கிறாள். அவ்வகையில் நினைவோட்டமாகச் சில செய்திகள் குறிக்கப் பெறுகின்றன" என்பார்தம் கூற்றும் எண்ணுதற் குரியதாம்.[115]

நாராயணன் குடிகொண்டுள்ள அத்துணைத் தலங்களிலும் அவன் பெயரைப் பிதற்றியவாறு மடலூரப் போவதாக அவள் கூறுவதோடு நூல் முற்றுப் பெறுகிறது என்பது கவனிக்கத்தக்கது. சிறிய திருமடல் இறுதியில் அமைந்துள்ள நேரிசை வெண்பாவும்,[116] பெரிய திருமடல் முதலில் அமைந்துள்ள தனியனும் (நேரிசை வெண்பா)[117] தலைவி மடலூரப் போவதாகக் கூறுவதையே வலியுறுத்தி நிற்கின்றன.

சங்க அக இலக்கியத்தில் இடம்பெறும் வெறியாட்டு, காமம் மிக்க கழிபடர் கிளவி முதலிய துறைகளும் ஆழ்வார் பாடல்களில் பின்பற்றப்படுவதைக் கண்ணுறலாம்; அதே போலத் தனியாக அத்துறைகளும், பின்னும் சிற்றிலக்கிய வகைகளான உலா, தூது முதலியனவும் இணைந்து திருமங்கை ஆழ்வார் மடல்களைத் தனிச் சிற்றிலக்கியமாக விரிக்கத் துணை புரிந்திருக்கின்றன என்பது இதனால் பெறப்படும் முடிவாகும்.

அடுத்து, திருமங்கையாழ்வார் இந்த மடல் என்ற சுவையான அகத்துறையினை ஓர் இலக்கியக் கலைத்திறன் (உத்தி) ஆகக் கொண்டு பாட்டுடைத் தலைவனாம் நாராயணனின் (கண்ணன்) புகழ் கிளக்கும் வகையில் படைத்துக் காட்டுகின்றார். ஏனெனில் இத்திருமடல்களில் இவர் நாயகனை அடையப் பெறாத நாயகியின் வருத்தத்தைக் கூறுவதைக் காட்டிலும், திருமால் புகழ் பாடுவதிலும், அவன் கோயில் கொண்டிருக்கும் தலங்களை வருணிப் பதிலுமே கண்ணுங் கருத்துமாக இருக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

Koviloor Digital Library

திருமங்கையாழ்வாரின் பாவனை

பாவனை என்பதற்குச் சிந்தனையின் முதிர்ச்சி என்பது பொருள் என்பர்.[118] இச்சிந்தனையின் முதிர்ச்சியே மற்றொருவர் செய்யும் செயலையும் பேசும் பேச்சையும் அவ்வாறே பின்பற்ற (அநுசரிக்க) இடந்தருகின்றது. இம்முறையில் பாவனை, அநுகாரம் என்னும் சொற்கள் ஒரே பொருளைத் தருவனவாகும்.

ஒரு வினையை ஒருவர் செயலால் செய்வதற்கும் பாவனையால் செய்வதற்கும் மிக்க வேறுபாடுண்டு. ஏனெனில் செயலால் செய்வதைக் காட்டிலும், பாவனையால் இயற்றுதற்கு ஊன்றிய திண்ணிய எண்ணமும், மனத்தின் ஒருமைப்பாடும், நிலைத்த நம்பிக்கையும், இறுதி வரை விடாது கடைப்பிடித்தொழுகும் உறுதிப் பாடும் வேண்டும்.

இவ்வாறு ஊன்றிய பாவனைதான் 'நாயக நாயகி பாவம்' என முன்னரும் அறிவிக்கப்பட்டது. ஆழ்வார்கள் இந்தப் பாவனையை மேற்கொண்டதற்குக் காரணம் அவர்களிடம் ததும்பி வழிந்த இறையன்பேயாகும் என்று துணிந்து கூறலாம். அவர்கள் எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப் பெற்று உயரிய ஞானமும், தேர்ந்த பக்தியும் வாய்ந்து திகழ்ந்தார்கள்.

பக்தி பெருகப் பெருக ஆற்றாமை மீதூர்ந்து அவர்களுக்குப் பிராட்டி நிலையைப் (பெண்நிலை) பிறப்பிக்கின்றது. அவ்வமயம் அவர்கள் தங்களை நாயகியாகவும் எம்பெருமானை நாயகனாகவும் பாவிக்கின்றார். அப்பாவனையில் நாயகன் அவர்கள் மனக்கண்ணிற்குத் தோற்றமளிக்கின்றான். உடனே அவனைத் தங்கள் புற உறுப்புகளால் தழுவிக் கொள்ள விழைகின்றார்கள். அது கூடாமையின், அவனை அடைதற் பொருட்டுப் பல்வேறு செயல்களை மேற் கொள்ளுகின்றார்கள் என்று கூறுவர்.[119]

மேற்குறித்த வண்ணம் திருமங்கையாழ்வார், தம் புறக் கரணங்களால் பெருமானைத் தழுவிக் கொள்ளக் கருதுகின்றார்; கருதிய போது அது வாய்க்கப் பெறாமையின், பெண்மையை அடைந்து ஆற்றாமை மீதூர மடலெடுக்க ஒருப்படுகின்றார். இம்முறையில் அமைந்தனவே சிறிய, பெரிய திருமடல்கள். இந்த நூல்களுள் ஆழ்வார் தம் பெண்மையை வெளிப்படுத்தும் சொற்களைக் கவனித்தால் உண்மை புலனாகும்.[120]

என்னுடைய பெண்மையும் என்நலனும் மென்முலையும்
மன்னு மலர்மங்கை மைந்தன் கணபுரத்துப்
பொன்மலைபோல் நின்றவன் றன்பொன்னகலம் தோயாவேல்
என்னிவைதான் வாளா எனக்கே பொறையாகி[121]

Koviloor Digital Library

என்னுமளவிற்குத் திருமங்கையாழ்வாருக்குத் தாம் பெண் என்னும் எண்ணம் (பரகாலநாயகி) நன்கு நெஞ்சில் குடி கொண்டிருக்கிறது. இதனால் இவருடைய பாவனையின் ஊற்றத்தை உணரும் வாய்ப்புண்டு.

பெரிய திருமொழியில் பத்தாம் பத்து – எட்டாந்திருமொழியில் (காதிற் கடிப்பிட்டு) ஆழ்வார் கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபட்ட விதத்தைக் காணலாம். இதையடுத்த திருமொழியும் இந்த ஈடுபாட்டைத் தெரிவிப்பதேயாகும்.

எட்டாந்திருமொழியில் ஆய்ச்சி ஒருத்தி கண்ணனோடு ஊடுதலை மிகவும் நயம்பட ஆழ்வார் விவரிக்கிறார். எனவே ஆழ்வாராகிய பரகால நாயகி ஆய்ச்சிகளின் பாவனை முதிர்ந்து அனுபவித்துப் பேசுகிறாள் எனலாம். பெருமாள் திருமொழியில் குலசேகர ஆழ்வாரின் "ஏர்மலர்ப் பூங்குழல்" என்னும் பதிகத்தையும், நம்மாழ்வாரின் "மின்னிடை மடவார்கள்" என்னும் பதிகத்தையும் திருமங்கையாழ்வாரின் இந்தப் பதிகத்தோடு ஒப்பிட்டுக் காணலாம்.

இந்தப் பதிகத்தில் முதல் ஒன்பது பாடல்களின் முடிவிலும் "இதுவென், இதுவென், இதுவென்னோ"[122] என்று மும்முறை வினவி இருப்பது குறிக் கொள்ளத் தக்கது. இது ஊடலின் சிறப்பைக் காட்ட வந்தது. இறுதிப் பாடலில் இதனை,

அல்லிக்கமலக் கண்ணனை அங்கு ஓராய்ச்சி
எல்லிப் பொழுதூடிய மடல்திறத்தைக்
கல்லின் மலைதோள் கலியன் சொன்னமாலை
சொல்லத் துதிப்பாரவர் துக்கமிலரே

என்று விளங்கக் கூறியிருக்கிறார் கலியன். "எல்லிப்பொழுது ஊடிய ஊடல் திறத்தை" இங்கு அகப்பொருளுக்கேற்பப் பெருந்தலைப்பிட்டுப் பேசுகிறார் என்பது உணருதல் வேண்டும்.

ஆழ்வார்களுள் திருமங்கையாழ்வார்தான் மிகுதியான திவ்விய தேசங்களைப் பாடியவர். திவ்விய தேசங்களில் அர்ச்சையாக இருக்கும் இறைவன் பால் மக்களைப் பக்தி மார்க்கத்துக்குள் கொண்டு வருவது திருமங்கையாழ்வாரின் தலையாய நோக்கமாகும். அந்த நோக்கம் நிறைவேறத் திவ்விய தேசங்களை (நாராயணன் அர்ச்சையாக உறையும் திருப்பதிகளை) மக்களுக்குச் சொல்லிக் காட்டி அழைக்கவே 'மடலை' ஒரு கருவியாக்கி அம்மடல் பிரபந்தம் மூலமாகத் திவ்விய தேசங்களின் பெயரை எல்லாம் பட்டியலிட்டுக் காட்டுகிறார் எனலாம். நாராயணன் உறையும் திருப்பதிகளைக் கூறுவதற்கு ஏற்புடைய கருவியாக மடலமைந்தமையால் அதனை அகமரபு மீறிப் பாடியுள்ளார் எனக் கொள்ளலாம்.

Koviloor Digital Library

குறிப்புகள்

1. வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் என்றார் நாதமுனிகள். அந்த வேதத்திற்கு ஆறங்கங்கூற அவதரித்தவர் திருமங்கை மன்னன். இவர் கலியன் என்றும் அருள்மாரி என்றும், ஆலிநாடன் என்றும், அரட்டமுகி, அடையார்ச்சியம் என்றும், மங்கை வேந்தன் என்றும், கொற்றவேல் பரகாலன் என்றும், நாலுகவிப் பெருமாள் என்றும், மாயோனை வாள் வலியால் மந்திரங் கொண்டவன் என்றும், "மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று கோலப்பதிலிருந்த கொற்றவன்" என்றும், வேலையணைத்தருளும் கையான் என்றும், கலிகன்றி என்றும் பலவாறு புகழ்ந்து போற்றும் பேறு பெற்றவர்.
2. ஜி.எதிராஜூலு நாயுடு, பக்திப் பூங்கா, ப.124.
3. ஜி.எதிராஜூலு நாயுடு, பக்திப் பூங்கா, ப.125.
4. காண்க பின்னிணைப்பு.
5. காண்க பின்னிணைப்பு.
6. பெரிய திருமொழி, 9:2, 8:1.
7. க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம் (வரலாறு), ப.121.
8. காண்க பின்னிணைப்பு, பெரிய திருமொழி துறைகள்.
9. மு. சண்முகம் பிள்ளை, அகப்பொருள் மரபும் திருக்குறளும், ப.8.
10. அ.மா. பரிமணம், "பக்திப் பனுவலில் அகப்பாடற் கூறுகள்" ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, பக்.328–329.
11. பெரிய திருமொழி, 2–8–6.
12. பெரிய திருமொழி, 2–8–7.
13. பெரிய திருமொழி, 2–8–8.
14. பெரிய திருமொழி ஒன்பதாம் பத்து இரண்டாவது திருமொழி முழுமையும்.
15. காண்க பின்னிணைப்பு, "இயற்கை வருணனை, அகப்பொருள் துறைக் கருத்து".
16. பெரிய திருமொழி, 7–5–10.
17. பெரிய திருமொழி, 11:1, 1–7.
18. பெரிய திருமொழி, 11:2, 3.

Koviloor Digital Library

19. 'தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப'.

– தொல். பொருள். கற்பியல், 52.

20. பெரிய திருமொழி, 8:4; 1–9, 10:10; 1–9.

21. "சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்"

– தொல். பொருளியல், 3.

22. தொல். மெய்ப்பாட்டியல், 23.

23. பெரிய திருமொழி, 3–6–1.

24. பெரிய திருமொழி, 3–6–2.

25. பெரிய திருமொழி, 3–6–4.

26. பெரிய திருமொழி, 3–6–3.

27. பெரிய திருமொழி, 3–6–5.

28. திருநெடுந்தாண்டகம், 27.

29. 'தானாக நினையாவேல் தன்னினைந்து நைவேற்கு, ஓர்
மீனாய கொடிநெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ?'

– பெரிய திருமொழி, 3–6–4.

30. சிலப்பதிகாரம், கானல்வரி, 32.

31. நற்றிணை 277; குறுந்தொகை, 392, 106.

32. பெரிய திருமொழி, 10:10; 1–6.

33. இ.எஸ். வரதராஜ அய்யர், தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 1 முதல் 1100), ப.380.

34. "பல்லியும் பாங்கொத்திசைத்தன;
நல்லெழிலுண்கணு மாடு மாலிடனே"

– பாலைக்கலி.

35. "பல்லியின் சொல் லொரு சொல்லெனக் கொள்வரிப் பாரிடத்தே"

– திருவாய்மொழி

36. ச.வே. சுப்பிரமணியன் (ப.ஆ.), தமிழ் இலக்கியக் கொள்கை, ப.320.

Koviloor Digital Library

37. பெரிய திருமொழி, 9:4:1.

"தார்மீகரா யிருப்பார் வைத்த தண்ணீர்ப் பந்தலிலே வழியடிக்காரர் ஒதுங்குமாபோல, மடலெடுத்தாகிலும் பிழைக்க நட்ட பனையிலே அன்றில் வந்து குடி புகுந்தது" என்பர் பெரிய ஆச்சான் பிள்ளை.

38. பெரிய திருமொழி, 9 : 4 : 2.

39. பெரிய திருமொழி, 9 : 4 : 1.

40. பெரிய திருமொழி, 9 : 4 : 8.

41. பெரிய திருமொழி, 9 : 3 ; 1, 2, 3, 6, 7

42. பெரிய திருமொழி, 9 : 3 ; 4, 5, 8, 8.

43. நாச்சியார் திருமொழி, 12.

44. பெரிய திருமொழி, 11 : 2; 1–8.

45. பெரிய திருமொழி, 11 : 2 : 9.

46. பெரிய திருமொழி, 11 : 3 : 1.

47. பெரிய திருமொழி, 11 : 3 : 2.

48. பெரிய திருமொழி, 11 : 3 : 3.

49. பெரிய திருமொழி, 11 : 3 : 7.

50. பெரிய திருமொழி, 2 : 7; 1–9.

51. பெரிய திருமொழி, 3 : 7; 1–9.

52. பெரிய திருமொழி, 4 : 8; 1–9.

53. இ.எஸ். வரதராஜ அய்யர், முற்கூறிய நூல், ப.352.

54. பெரிய திருமொழி, 2 : 7 : 5.

55. "கிழவன் தன்னொடுங் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது"

– தொல். செய்யுனியல் 493.

56. பெரிய திருமொழி, 2 : 7 : 7.

57. பெரிய திருமொழி, 5 : 5 : 9.

58. திருநெடுந்தாண்டகம், 11.

59. பெரிய திருமொழி, 9 : 9 : 1.

60. பெரிய திருமொழி, 9 : 9 : 2.

61. பெரிய திருமொழி, 9 : 9 : 3.

Koviloor Digital Library

62. பெரிய திருமொழி, 9 : 9 : 4.

63. பெரிய திருமொழி, 9 : 9 : 5.

64. பெரிய திருமொழி, 9 : 9 : 6.

65. பெரிய திருமொழி, 9 : 9 : 7.

66. பெரிய திருமொழி, 9 : 9 : 8.

67. பெரிய திருமொழி, 9 : 9 : 9.

68. "தேடற் கரியவனைத் திருமாலிருஞ் சோலைநின்ற
ஆடல் பறவையனை அலியாயிழை காணுமென்று
மாடக் கொடிமதிள்சூழ் மங்கையார்கலி கன்றி சொன்ன
பாடல் பனுவல் பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே!"

– பெரிய திருமொழி, 9 : 9 : 10.

69. அப்பர் அடிகளின் பழமொழித் திருத்தாண்டகம் இத்துடன் ஒப்பு நினைக்கத்தக்கது.

70. பெரிய திருமொழி, 10 : 9 : 10.

71. பெரிய திருமொழி, 10 : 9 : 8.

72. "மூவிரண்டேனும் இரு நான்கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளார்ப் புகழ்வன தாண்டக மவற்றுள்
அறுசீர் குறியது நெடிய தெண்சீராம்"

"அறுசீரெண் சீரடி நான் கொத்தங்
கிறுவது தாண்டக மிரு முச்சீரடி
குறியது நெடிய திரு நாற்சீரே"

"மங்கல மரபின் மானிடர் கடவுளார்
தம் புகழுரைப்பது தாண்டக வகையே"

என்னும் பன்னிரு பாட்டியற் சூத்திரங்களால் அறிக.

73. பகற்பண் பன்னிரண்டாவது – புறநீர்மை, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கைசிகம், இந்தளம், தக்கேசி, சாதாரி, நட்டபாடை, நட்டராகம், பழம் பஞ்சுரம், பஞ்சமம், காந்தார பஞ்சமம் என்பன.

இராப்பண் ஒன்பதாவன – தக்கராகம், பழந்தக்க ராகம், சீகாமரம், கொல்லி, கொல்லிக் கௌவானம், வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, அந்தாதிக் குறிஞ்சி, குறிஞ்சி என்பன.

Koviloor Digital Library

74. திருநெடுந்தாண்டகம். 14.
75. திருநெடுந்தாண்டகம். 15.
76. திருநெடுந்தாண்டகம். 13, 16.
77. திருநெடுந்தாண்டகம். 18.
78. திருநெடுந்தாண்டகம். 13.
79. திருநெடுந்தாண்டகம். 18.
80. திருவாய்மொழி, 3–10–8.
81. திருநெடுந்தாண்டகம், 21.
82. பகவத்கீதை, 10–9.
83. சி. ஜகந்நாதாசார்யர், "பக்திப் பாடல்கள்", ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சிறப்பு மலர் மாசி, 1966.

    காண்க பின்னிணைப்பு "இலக்கிய நயம்."
84. திருநெடுந்தாண்டகம், 25.
85. திருநெடுந்தாண்டகம், 26.
86. 'தொழுதேன் உன்னை' என்று மேலே இரு கையாலே என் தலையிலே வைப்பதற்கு ஆறு கால்கள் உண்டாகப் பெற்றதே என்று வியந்து சொல்லுகிறபடி என்றாராம்.
87. திருவாய்மொழி, 9–7–1.
88. திருநெடுந்தாண்டகம், 27.
89. திருநெடுந்தாண்டகம், 28.
90. நெய்தற்கலி 21, 22, 24 (கலித்தொகை 141:22:25, 146:57–60).
91. குறுந்தொகை, 17, 173, 182, 289.
92. காண்க பின்னிணைப்பு.
93. தொல். பொருள். கள.10.
94. குறுந்தொகைப் பதிப்பு, ப.42, காண்க பின்னிணைப்பு.
95. திருக்குறள் 1131–1133, 1135–1137.
96. திருவாய்மொழி 5–3–9.
97. தொல். பொருள். 38.
98. திருக்குறள் 1137.

Koviloor Digital Library

99. ந. கடிகாசலம், "மடல்", முற்கூறிய நூல், ப.184

100. திருவாய்மொழி, 5:3:9.

101. சிறிய திருமடல், 61–80.

102. பேராசிரியர் சி. செகந்நாதாச்சாரியார் ஆய்வாளர் விளக்கங் கேட்ட போது கூறியது.

103. பெரிய திருமடல், 35–41.

104. இந்திரா மனுவேல், "பக்தி இலக்கியத்தில் அகக் கோட்பாடு" பதினோராவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, தொகுதி 1, ப.87.

105. பெரிய திருமடல், 52–71.

106. பெரிய திருமடல், 72–73.

107. காண்க பின்னிணைப்பு "பெரிய திருமடலின் பொருட் சுருக்கம்"

108. பெரிய திருமடல், 147, 148.

109. "முள்ளிச் செழுமலரோ தாரான் முளைமதியம்,
கொள்ளிக்கென் உள்ளம் கொதியாமே – வள்ளல்
திருவாளன் சார்க்கலியண் கார்க்கலியை வெட்டி
மருவாளன் தந்தான் மடல்"

– சிறிய திருமடல் தனியன்; பிள்ளைத் திருநறையூரரையர் அருளிச் செய்தது.

110. இலக்கண விளக்கம், 484.

111. "அறம்பொருள் வீடெனும் அம்முக்கூற்றின்
திறங்கடிந்து அரிவையர் திறத்துறும் இன்பம்
பயன்எனக் கலிவெண்பாவால் தலைவனைப்
பெயர்எது கையினில் பேசுதல் வளமடல்"

– இலக்கண விளக்கம், 484.

112. நரசிங்க அபயராசன் வளமடல், செயங்கொண்ட மாமுனிவன்மடல், வருண குலாதித்தன் உலாமடல், பாப்பையா பிள்ளை உலா மடல், எட்டப்ப நாய்க்கர் பேரில் மடல், நல்லபிள்ளை பேரில் மடல், தாயுமானவர் மடல், அழகர்சாமி மடல்.

113. மு. அருணாசலம், இலக்கிய வரலாறு, 12 ஆம் நூற்றாண்டு, பாகம் 2, ப.336.

114. மு. வரதராசன், இலக்கிய மரபு.

Koviloor Digital Library

115. எம்.ஏ. சுசீலா, "மடல் இலக்கியத்தில் மரபு மாற்றம்", இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், பன்னிரண்டாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 1, ப.308.

116. "ஊரா தொழியேன் உலகறிய ஒன்னுதலீர்!
சீரார் முலைத்தடங்கள் சேரளவும் – பாரெல்லாம்
அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர்
மன்றோங்க வூர்வன் மடல்"

– இது கம்பர் பாடியது என்பர்.

117. "பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றி செய்யும்
நன்னுதலீர்! நம்பி நறையூரர், – மன்னுலகில்
என்னிலைமை கண்டு மிரங்காரே யாமாகில்,
மன்று மடலூர்வன் வந்து"

– பிள்ளை திருநறையூர் அரையர் பாடியது

118. எஸ். கிருஷ்ணவேணி, அம்மையார், வில்லிபுத்தூர் விளக்கு, ப.207.

119. எஸ். கிருஷ்ணவேணி, அம்மையார், வில்லிபுத்தூர் விளக்கு, ப.212.

120. "ஏரார் இளமுலையீர் என்றனக் குற்றதுதான்
காரார் குழலெடுத்துக் கட்டிக் கதிர்முலையை
வாரார வீக்கி மணிமே கலைதிருத்தி
ஆரா ரயில்வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து
சீரார் செழும்பந்து கொண்டடியா நின்றேன்"

– சிறிய திருமடல், 7–11.

121. பெரிய திருமடல், 167 – 172.

122. 1. "காதில் கடிப்பிட்டுக் கலிங்க முடுத்துத்
தாதுநல் லதண்ணந் துழாய்கொ டணிந்து
போது மறுத்துப் புறமேவந் துநின்றீர்
ஏதுக்கிது என்னிது என்னிது என்னோ!"

2. துவரா டையுடுத் தொருசெண்டு சிலுப்பிக்
கவராக முடித்துக் கலிக்கச்சுக் கட்டி
சுவரார் கதவின் புறமேவந்து நின்றீர்
இவரா ரிதுவென் னிதுவென் னிதுவென்னோ!

3. கருளக் கொடி பொன் றுடையீர்! தனிப்பாகீர்
உருளச் சகடம துறக்கில் நிமிர்த்தீர்
மருளைக் கொடு பாடி வந்தில்லம் புகுந்தீர்

Koviloor Digital Library

இருளத் திதுவென் னிதுவென் னிதுவென்னோ!

4. நாமம் பலவு முடைநா ரண நம்பீ
தாமத் துளவம் மிகநா றிடுகின்றீர்
காமனெனப்பாடி வந்தில்லம் புகுந்தீர்,
ஏமத் திதுவென் இதுவென் இதுவென்னோ!

5. சுற்றும் குழல்தாழச் சுரிகை யணைத்து
மற்றும் பலமாமணி பொன்கொ டணிந்து
முற்றம் புகுந்து முறுவல்செய்து நின்றீர்
எற்றுக் கிதுவென் னிதுவென் னிதுவென்னோ!

6. ஆனா யரும் ஆ னிரையுமங் கொழியக்
கூனாய தோர்கொற்ற வில்லொன்று கையேந்திப்
போனா ரிருந்தா ரையும் பார்த்துப் புகுதீர்
ஏனோர்கள் முன்னென் னிதுவென் னிதுவென்னோ!

7. மல்லே பொருத திரள்தோள் மணவாளீர்
அல்லே யறிந்தோம்நும் மனத்தின் கருத்தை
சொல்லா தொழியீர் சொன்னபோ தினால்வாரீர்
எல்லே லிதுவென் விதுவென் விதுவென்னோ!

8. புக்கா டரவம் பிடித்தாட்டும் புனிதீர்
இக்காலங்கள் யாமுமக் கேதொன்று மல்லோம்
தக்கார் பலர்தேவி மார்சால வுடையீர்
எக்கே! இதுவென் னிதுவென் னிதுவென்னோ!

9. ஆடி யசைந்தாய் மடவா ரொடு நீ போய்க்
கூடிக் குரவை பிணைகோ மளப் பிள்ளாய்
தேடித் திருமா மகள்மண் மகள்நிற்ப
ஏடி! இதுவென் னிதுவென் னிதுவென்னோ!

– பெரிய திருமொழி, 10:8:1–8.

Koviloor Digital Library

இயல் எட்டு

குலசேகராழ்வார், பெரியாழ்வார் பாடல்களில் அகப்பொருள்

இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் – பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் எங்கள்
குலசே கரனென்றே கூறு.

– உடையவர்

Koviloor Digital Library

குலசேகராழ்வார் பாடல்களில் அகப்பொருள்

ஆரங் கெடப் பரனன்பர் கொள்ளா ரென்றவர்களுக்கே
வாரங் கொடு குடப் பாம்பிற் கையிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்த செங்கோற் கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே

என்று நாதமுனிகளின் சீடரான மணக்கால் நம்பிகள் குலசேகராழ்வாரைப் புகழ்கின்றார். இந்தப் புகழுரையால் இவரைப் பற்றிய சிறந்ததோர் அறிமுகம் கிடைக்கின்றது. இவர் சேரர் வழித்தோன்றல்; முடியுடைமன்னன்; குலசேகரன் என்னும் இயற்பெயர் பூண்டவர்; திருமாலிடத்து மெய்யன்பு கொண்டவர். இவ்வளவு செய்திகளும், இன்னும் இவ் ஆழ்வார் வாழ்க்கையில் நிகழ்ந்த வியத்தகு நிகழ்ச்சியும் இப்பாடலால் கிடைக்கும் செய்திகளாகும்.

கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மீதிருந்து
இன்ப மருஞ் செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்
எம்பெருமா னீசன் எழில் வேங்கட மலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே[1]

என்னும் இவருடைய கூற்று இவர் துறந்த வாழ்க்கையை எடுத்துக்காட்டுகிறது; அதே நேரத்து, மானிடம் கொண்ட மயக்கத்தைத் துறக்கவியலாத் தூய்மையைத் துவக்குகின்றது. இவர் ஈசனுறையும் எழில் வேங்கடமலைமேல் தம்பகமாய் நிற்கும் தவத்தை மேற்கொள்ளுகின்றாரென்றறியலாம். குருபரம்பரைப்படி குலசேக ராழ்வார் திருமாலின் மார்பிலுள்ள கௌத்துப மணியின் அம்சமாகத் தோன்றியவர் ஆவர்; இவர் திருவரங்கம் சென்று, இறைவனை வழிபட்டு, முகுந்த மாலையும், பெருமாள் திருமொழியும் இயற்றியவர்.

"குலசேகராழ்வாரின் 'பகவத் பாகவத பக்தி அனுபவம்' கரை புரண்டோடி வழிந்ததுதான் இவர் வடமொழியிலியற்றிய 'முகுந்தமாலை'யும், தமிழில் பாடியருளிய 'பெருமாள் திருமொழி'யும்" என்பர்.[2]

குலசேகரனின் "ஏர்மலர்ப் பூங்குழல்" என்னும் ஆறாம் திருமொழி அகப் பொருள் மரபுகளுக்கேற்ப அமைந்துள்ளதைக் காணலாம். இந்தத் திருமொழிப் பாடல்களின் உட்கிடை 'ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கி உரைத்தல்' என்பதாகும். இதனை,

Koviloor Digital Library

அல்லி மலர்த் திருமங்கை கேள்வன் தன்னை
நயந்து இள வாய்ச்சி மார்கள்
எல்லிப் பொழுதினில் ஏமத் தூடி
எள்கி யுரைத்த உரை

என்னும் இதன் இறுதிப் பாடலால் அறியலாம்.[3]

ஆய்ச்சியர் நிலையில் இவ் வாழ்வார் தம்மை ஏறிட்டுக் கொண்டு ஊடலுக்கு ஏதேனும் ஒரு காரணத்தை இட்டுக்கட்டி எடுத்தியம்புகின்றார்; அழியும் உலகில் இடையிடையே இறைவனோடு கூடப்பெறும் பேரின்பநிலை களவு நிலையாகிறது. அழியாத பேருலகில் இடைவிடாது இறைவனோடு கூடி வாழும் வாழ்க்கை பேரின்ப நிலையாகிய கற்பு நிலையாகிறது என்பது மீண்டும் நினைவு கூரத்தக்கது. இது மானிடக் காதலுக்கு வரையறை கண்ட பழந்தமிழ் இலக்கியங் காட்டும் பண்பு நிலையாகும்; இந்த அகக் கோட்பாடு ஈண்டு இறைமைக் காதலை அடைதற்கான அடிப்படை ஆயிற்று.

பண்டைய அகப்பொருள் நெறிமுறையில் கற்பு வாழ்க்கையில் மலிவு, புல்வி, ஊடல், உணர்வு, பிரிவு என ஐந்து வாழ்க்கைப் போக்குகள் புலவரால் சிறப்பித்து உரைக்கப்படும்.[4]

இவற்றுள் ஊடல் என்பது மனம் மாறுபட்டது போலப் பிணங்கிக் கூறுவதாம். இது உள்ளத்தாலன்றி உரையாலும் வெளிப்படுத்தப்படும். 'உள்ளத்து நிகழ்ந்ததனைக் குறிப்பு மொழியானன்றிக் கூற்றுமொழியான் உரைப்பது' என்கிறார் உரையாசிரியராகிய பேராசிரியர்.

எனவே ஊடல் என்பது பண்டைய அகமரபே என்பதும், இவ் ஆழ்வார் அதை ஒரு தலைவியின் வாயிலாகப் புலப்படுத்தாமல் தம்மைப் பல ஆய்ச்சியராகப் பாவித்துக் கொண்டு கூற்று மொழியான் உரைக்கின்றார் என்பதும் உணரப்படும்.

'வருகின்றேன்' என்று சொன்ன வாசுதேவன் வாராமையால், காத்திருந்து கண்கள் பூத்துப் போன தலைவி அவன் வந்தபோது, "உன்தன் பொய்யைக் கேட்டு நம்பி உன் வரவை எதிர்நோக்கி யமுனை ஆற்றின் நீண்ட மணற்குன்றில் இரவு முழுவதும் குளிரொடுக்கக் கூசி நடுங்கிக் காத்து நின்றேன். அப்போது வாராது போனாய் நீ" என்று ஊடி நிற்கின்றாள் ஓர் ஆய்மகள்.[5]

"இப்போது வருகின்றாயோ போகுநீ" என்பது மடலில் ஒளிந்த மறை பொருளாகின்றது.

Koviloor Digital Library

சங்க இலக்கிய மரபுகளில் 'ஊடல்' பரத்தையிடம் சென்றுவந்த தலைவனிடம் ஊடல் கொள்ளும் தலைவியரைக் காணலாம். இந்த மரபைப் பின்பற்றுவது போல, அடைவு கொடுத்து,

கெண்டையொண் கண்மட வாளொருத்தி
கீழை யகத்துத் தயிர்கடையக்
கண்டு, ஒல்லைநானும் கடைவ னென்று
கள்ள விழியைவிழித் துப்புக்கு,
வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ
வாண்முகம் வேர்ப்பச்செவ் வாய்துடிப்ப,
தண்டயிர் நீகடைந் திட்ட வண்ணம்
தாமோத ரா! மெய் யறிவன்நானே[6]

என்ற பாடல் அமைகின்றது. 'நானே உன்செயலை அறிவேன்' என்று கூறுகின்றாள் தலைவி. ஆகவே 'இன்னமும் அங்கே போ; இங்கே உனக்கு என்ன பணி?' என்ற ஊடல் உள்ளுறை உறைந்து நிற்கின்றது.

மாயவனின் மகளிரோடு ஆடும் ஆட்டங்களையெல்லாம் கூறிப் பலருடன் பழகினாலும் அவன் யாருக்கும் மெய்யனல்லன் என்ற கருத்தை எடுத்துக் காட்டுகின்றாள்.[7] திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் இறைவன் பாட்டுடைத் தலைவனாவது – நாயகனாவது 'சமய இயற்கை' என்று கொள்ள வேண்டும். ஆகவேதான் ஊடல் கொள்ளும் இந்தத் தலைவி,

மருதிறுத்தாய்! உன் வளர்த்தியூடே
வளர்கின்ற தாலுன்றன் மாயைதானே

என்று பிள்ளைமை விளையாட்டோடு பிணைத்துப் பேசுகின்றாள்; மாயவனின் மாயை வளர்ந்து கொண்டே போகிறது என்று குத்திக் காட்டி ஊடினாள்.

மேலும் அந்த ஆய்ச்சி, 'யான்விட வந்தவென் தூதியோடே நீ மிகுபோகத்தை நன்றுகந்தாய்' 'கண்ணுற் றவளைநீ கண்ணாலிட்டுக் கை விளிக்கின்றது'[8] 'நீ அகன்றுபோய் அரிவைய ரோடும் அணைந்து வந்தாய்'[10] என்றெல்லாம் கூற்று முறையில் வெளிப்படையாகக் கூறி ஊடுகின்றாள். இங்கெல்லாம்,

எற்றுக் கவளைவிட் டிங்கு வந்தாய்
இன்னமங் கேநட நம்பி!
எற்றுக்கு நீயென் மருங்கில் வந்தாய்?

Koviloor Digital Library

என்றும் கடுமையாகக் கூறித் தெருட்டுகின்றாள். இம்முறை சங்க இலக்கியத்தில் காணும் ஊடல் முறையினின்றும் பெரிதும் மாறுபட வில்லை; எனினும் சொற்களில் வெளிப்படை, பேச்சில் குத்திக்காட்டல், உலகியலில் நிகழும் நடப்பினைக் கற்பித்துக் கூறல் ஆகியவற்றில் ஒரு புதுமரபினை ஈண்டுக் காணலாம்.

தொடர்ந்து வரும் பாடல்களில் கண்ணனின் பருவ காலக் களியாட்டங்கள் விளக்கமாகக் கூறப்படுகின்றன.[11]

மக்கள் நுதலிய அகனைந்திணையும்
சுட்டியொருவர் பெயர் கொளப் பெறாஅர்

என்னும் நூற்பாவின்படி தலைமக்களின் இயற்பெயர் அகப்பாடலில் சுட்டிக் கூறப் படாது என்பது தேற்றம்.[12] ஆனால் பக்திக்கால அகச்சுவைப் பாடல்களில் தலைவன் பெயர் சுட்டிப்பாடும் மரபுமீறல் நிகழ்ந்துள்ளது.

சமயப் பாடல்களாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் இடம் பெறும் அகச்சுவைப் பாடல்களின் தலைவன் இறைவன். பெண் சுட்டிப் பாடும் புதுமையைக் காண்கிறோம்.

ஆண்டாளும், "மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக் கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன்" என்றே பெயரோடு நிகழ்ச்சியை விவரிக்கின்றார். இது தவிர, பெண்டிரேயன்றி ஆடவரும் தலைவியராகும் நிலை வேறுபாட்டால், அன்பின் ஐந்திணையில் காணும் தலைவியின் தன்மைகள் பக்தி நெறிப் பாடல்களில் புதியதொரு வனப்புடன் திகழ்கின்றன என்று நவிலலாம். பல மரபு மாற்றங்களுள் இதுவும் ஒன்று என்று உணருதல் வேண்டும்.

பெருமாள் திருமொழியில் காணப்படும் அகச்சுவைச் செய்திகளுள் சில வருமாறு:

1. கருமலர்க் கூந்தல் ஒருத்தி தன்னைக்
கடைக்கணித்து ஆங்கே யொருத்திதன்பால்
மருவி மனம் வைத்து, மற்றொருத்திக்
குரைத் தொரு பேதைக்குப் பொய்குறித்துப்
புரிகுழல் மங்கை யொருத்தி தன்னைப்
புணர்தி[13]

என்பதில் தலைவன் பலருடன் கூடி மகிழ்கின்றான் எனத் தலைவி சினம் கொண்டு பேசுதலைக் காணலாம்.

Koviloor Digital Library

2. தலைவி காதலுடன் காத்திருக்க, அவள் விடுத்த தூதியுடன் தலைவன் போகம் நுகர்ந்தான் எனத் தலைவி முனிதல்[14] புதிய மரபாகும்.

3. வேறொருத்தியுடன் மையல் கொண்டு நின்றமை, தான் கண்டதாகக் கூறித் தலைவி ஊடி 'அவளிடமே செல்வாய்' எனத் தலைவனை நோக்கிக் கழறுதல்.[15]

4. பிற அரிவையரை அணைந்தவன், தன்னிடம் வருவானேன் எனத் தலைவி முனிதல்.[16]

5. தலைவன் அழகில் மயங்கியது போதும், அவன் திறமான பேச்சினைக் கேட்டு அழிதல் வேண்டா எனக் கூறித் தலைவனைப் போகுமாறு கூறித் தலைவி ஊடுதல்.[17]

6. குறியிடத்திற்குத் தலைவியை வரச் சொல்லி அங்கு வேறொருத்தியிடம் காதல் கொண்டமை கண்டு முனிந்த தலைவி, தலைவன் உளறல் கண்டு வெகுண்டு பேசுதல்.[18]

பெருமாள் திருமொழியில் அமையும் இந்தத் திருமொழி குலசேகராழ்வார், கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபட்டு ஆய்ச்சியர்கள் கண்ணனுடன் ஊடல் கொண்டு உரைத்த பாவனையில் பாடியிருப்பதாகவே அமைந்துள்ளது.

அகனைந்திணை ஒழுக்கத்தின் உயிர்நாடியான தலைவன் தலைவி சந்தித்துக் காதல் கொள்ளுதலோ, இல்லற வாழ்வோ இப்பாடல்களில் இடம் பெறவில்லை. இறைவனைத் தலைவனாகக் கொண்ட இவை உயிர்கட்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை உணர்த்தி, சிற்றின்பத்தின் வழி பேரின்பத்திற்குப் படியாய் அமைத்துக் காட்டுகின்றன எனலாம்.

இம்மண்ணகக் காதலை விண்ணகக் காதலாக – மெய்யுணர்வுக் காதலாக மாற்றிய பெருமை வைணவ அடியார்களையே சாரும் என்பதற்குப் பெருமாள் திருமொழியிலமையும் ஆறாம் திருமொழி ஏற்றதொரு சான்றாகின்றது.

குலசேகரர் இராமனை 'எங்கள் குலத்து இன்னமுதே' யென்று சிந்தை மகிழ்ந்து அழைப்பர். குலசேகரரின் இந்த ஆறாம் திருமொழி வைணவ சமயத்தைப் பரப்பல் செய்த இராமாநுசரைச் சிந்தை மகிழச் செய்தது. அதனால் அவர் குலசேகரர் கூறிய வழியே 'எங்கள் குலசேகரன்' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகின்றார். அவ்வாறு சொல்லும்போது அவரும் தலைவியாகத் தம்மைக் கருதிக் கொண்டு பாடுகின்றார்.

Koviloor Digital Library

இன்னமுத மூட்டுகே னிங்கே வா பைங்கிளியே!
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர் கோன் எங்கள்
குலசேகர னென்றே கூறு[19]

என்று அந்தப் பாணியிலேயே கூறுவதை நோக்கலாம்.

ஈண்டுத் தன் காதலனை நினைந்துருகும் காதலி, பக்குவமாய்க் காய்ச்சிய பசும்பாலைக் கையில் வைத்துக் கொண்டு தான் செல்லமாய் வளர்த்து வந்த பச்சைக் கிளியைப் பார்த்துக் கெஞ்சிக் கொஞ்சிக் கேட்கின்றாள். "இந்த இன்னமுதத்தை என் கையால் உனக்கு ஊட்டுகிறேன். நீ உன் வாயைத் திறந்து என் செவிகள் குளிர ஒரு தரமாகிலும் என் காதலனின் பெயரைச் சொல்ல வேண்டும். அவர் அரங்கனடியிணைத் தங்கு சிந்தைத் தனிப்பெரும் பித்தன் அல்லவா?" என்று கூறுகின்றாள். இந்தக் காதலி இராமாநுசர் ஆவார்; காதலன் குலசேகரப் பெருமாள் ஆவார்.

இதனால் இவரின் பாவனை 'தாக்கம்' (Impact) எந்த அளவுக்கு இராமாநுசரின் சிந்தையைக் கௌவி, செஞ்சொற்கவியாய் மலர்ந்தது என்பது தெரிய வருகின்றது.

பெரியாழ்வார் திருமொழியின் அகப்பொருள்

பெரியாழ்வார் பெரிய திருவடியின் (கருடன்) அம்சமாகத் தோன்றியவர் என்று குரு பரம்பரை கூறுகின்றது. "பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் புதுவை"[20] என்றும், "பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த புதுவை"[21] என்றும், "வேதவாய்த் தொழிலாளர்கள் வாழ்வில்லிபுத்தூர்"[22] என்றும் போற்றப்படும் திருவில்லிபுத்தூரே பெரியாழ்வார் பிறந்த சீரூராகும். இவர் வேதியர் குலத்தில் பாகவத சம்பிரதாயத்தைத் தழுவியிருந்த குடும்பத்தில் தோன்றியவர்; 'விஷ்ணு சித்தர்' என்னும் பிள்ளைப் பெயர் பெற்றவர். 'பட்டர் பிரான்' என்னும் பட்டத்தை எய்தியவர். திருமாலின் இறைநிலையைப் பலரும் ஏற்கும் வண்ணம் எடுத்துரைத்து வாது போரில் வென்றமையால் எய்திய பட்டம் இது.

சூடிக் கொடுத்த நாச்சியாரை வளர்த்தவர் இவர். ஆண்டாள் தொடர்பினைக் கூறும்போது, "யாரால் ஆழ்வார்கள் குடிக்கு 'அஞ்சுகுடி' என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்ததோ, யாரால் வைணவ சித்தாந்தம் மிக உயர்ந்தது என்று நிலை நாட்டப்பட்டதோ, யாரால் பகவான் பல்லாண்டுகள் தீங்கின்றி வாழும் வரம் பெற்றனனோ, அத்தகைய பெரியாழ்வாரிடம் வளர்ந்தவர்" என்று கூறுகின்றார்

Koviloor Digital Library

எஸ்.கிருஷ்ணவேனியம்மையார்.[23] இக்கூற்று ஒன்றே பெரியாழ்வாரின் புலமைத் திறத்தையும், ஈன்ற குழவியை எடுத்து வளர்க்கும் தகைமையையும் விளக்கிக் காட்டப் போதுமானதாகும்.

இவர் இயற்றிய பிரபந்தங்கள் திருப்பல்லாண்டு பதினோரு பாடல்களும், பெரியாழ்வார் திருமொழி நானூற்று அறுபத்தொரு பாடல்களுமான இரண்டு ஆகும். திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தமாகக் கொள்ளப்படாமல் பெரியாழ்வார் திருமொழியிலேயே அதை அடக்கிக் காட்டுவோரும் உளர்.24

பெரியாழ்வார் திருமொழியில் அமைந்துள்ள அகப்பாடல்களைக் காணுவதே இவ் ஆராய்ச்சியின் நோக்கமாதலாலும், திருப்பல்லாண்டில் அகப்பாடல்கள் இல்லையாதலாலும் அதனைத் தனிப் பிரபந்தமாகக் கொள்ளுவதா, சேர்த்துக் கணக்கிடுவதா என்பது பற்றி ஈண்டு ஆராயப்படவில்லை.

சோராத காதல் பெருஞ்சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும்
பாராது அவனைப் பல்லாண்டு என்று காப்பிடும் பான்மையன்[25]

என்ற அமுதனாரின் பாடலடிகள் பெரியாழ்வார் பெருமானுடைய வாழ்வையே தமது வாழ்வாக நினைத்து எல்லாம் வல்ல இறைவனையும் காத்தருள வழி தேடித் தருவது போல் 'திருப்பல்லாண்டு' பாடியுள்ளார் என்பது உணரும் செய்தியாகும். இறைவனுக்கே பல்லாண்டு பாடிய பெருமைக்குரியவர்.

பெரியாழ்வார் திருமொழியில் மூன்றாம் பத்து நான்காம் திருமொழி, ஏழாம் திருமொழி, எட்டாம் திருமொழி ஆகியனவே அகப்பொருள் கருத்துக்கள் பயின்று வரும் திருமொழிகளாகும்.

திருமால் அவதாரங்களில் கண்ணன் அவதாரம் பெரியாழ்வார் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஒன்றாகும். கண்ணன் மாட்டுத் தாம் கொண்ட ஈடுபாட்டைப் பிள்ளையை இன்பமாக வைத்துப் பிள்ளைத் தமிழுக்கு வித்திட்டவர் இவர். ஆகவே கண்ணனின் தோற்றம் முதல் அவன் நிகழ்த்திய சிறு குறும்பு களையும் வீரச் செயல்களையும், வெற்றிக் களியாட்டங்களையும் கண்ணனை வளர்த்தெடுத்த யசோதையின் பேச்சுக்களாகவும், ஆய்ச்சியரின் பேச்சுக்களாகவும் பாடிப் பாடிப் பரவசமுற்றவர் இவர். "பாசுரங்களில் குழந்தையைத் தாலாட்டுதல், அம்புலியை அழைத்தல், செங்கீரையாடுதல், சப்பாணி கொட்டுதல், தளர்நடை நடத்தல், அப்பூச்சி காட்டுதல், காக்கையை விளித்தல், சிற்றில் சிதைத்தல் முதலிய செயல்கள் கொஞ்சு தமிழில் மிஞ்சு சுவையுடன் கூறப் பெற்றுள்ளன" என்னும் ந.சுப்புரெட்டியார் கருத்து ஈண்டுக் காணுதற்குரியதாகும்.[26]

Koviloor Digital Library

இவ்வாறெல்லாம் கண்ணனின் காட்சிகளை உளமாரத் தோய்ந்து அனுபவித்தாராயினும், மேற்சொல்லிய மூன்று திருமொழிகளிலும் பெரியாழ்வார் தம்மைப் பெண்ணாகப் பாவித்துப் பேசி அனுபவிக்கின்றார்.

1. மூன்றாம் பத்து நான்காம் திருமொழி

"தழைகளும் தொங்கலும்" என்று தொடங்கும் இத்திருமொழி 'காலிப் பின்வரும் கண்ணனைக் கண்டு கன்னியர் காமுறல்' என்னும் துறைப் பொருளில் அமைகின்றது.

கண்ணன் தன்னைப் பலபட அலங்கரித்துக் கொண்டு, குழலூதுவது, இசை பாடுவது போல் மேற்கொண்டு தன் தோழருடன் பெரிய ஓலக்கமாகச் சூழ்ந்து வரத் திருவாய்ப்பாடி ஏற மீண்டு வரும் அழகைக் கண்ட இடைப்பெண்கள் அக் கண்ணபிரான் திறத்தில் ஆழ்ந்து ஈடுபட்ட காட்சியைக் கூறுகின்றார் ஆழ்வார்.

நானிலத்தில் ஒரு நிலமாகக் கருதப்படுவது முல்லை நிலம். இம்முல்லை நிலத்திற்கு உரியவர் ஆயர். இது முல்லைக் கொடிகளுக்கும் மரங்களுக்கும் இருப்பிடம்; இது பசுக்கூட்டங்களை வளர்த்து வந்த செவிலித்தாய்; மகிழ்ச்சியை ஊட்டும் இன்பக்களம். செல்வம் செறிந்தது ஆயர்பாடி. அந்நிலத்திற்குரிய மாயோனாகிய கண்ணன் இந்த ஆயர்பாடியில் தோன்றுகின்றான். ஒருபுறம் ஆடல்; ஒரு சார் பாடல்; ஓரிடம் ஆடவர் ஆண்மை விளையாட்டு; ஒரு பக்கம் கன்னியர் களியாட்டம்.

பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடு வார்களும் ஆயிற்றாய்ப் பாடியே![27]

என்ற பெரியாழ்வார் மொழிகள் ஆயர்பாடியின் மகிழ்வினை எடுத்துக் காட்டும்.

இத்தகு மகிழ்ச்சி வெள்ளத்தினூடே, எளிமையுடையவன் என்னும் பொருள் தரும் 'கண்ணன்' என்னும் பெயருக்கேற்ப, அவன் யாவரிடமும் எளிமை தோன்றப் பழகி வருகின்றான். ஆயினும், கன்னியரிடமே அவன் கருணை பெரிதும் காலூன்றுகிறது. கண்ணனது கருநிறம் ஆய்ச்சியர் கண்களைக் கவருகின்றது. அவன் புன்முறுவல் அவர்கள் நெஞ்சங்களை அள்ளிக் கொள்ளுகிறது; அவன் சொற்களும், விளையாடல்களும் அவர்கள் உயிரை ஊசலாடச் செய்கின்றன; அவன் கூட்டுறவு அவர்கள் ஆன்மாவை அலைக்கழிக்கிறது. ஒருவரையொருவர் ஓரிமை நேரமும் அகல ஒருப்படார். ஆயினும் 'வினையே ஆடவர்க்குயிரே' என்னும் மொழியை நிலைநிறுத்துவான் போலே அவன் கன்றுகாலிகளை மேய்க்கச் செல்லுகின்றான்; மேய்த்த பின் மனை மீள்கின்றான். காலிப் பின்னே வரும் கண்ணனைக் கண்டு இடைக்கன்னியர் காமுறுகின்ற பாங்கினை ஆழ்வார் இத்திருமொழியில் கண்ணெதிரில் நிறுத்துகின்றார்.[28]

Koviloor Digital Library

தழைகளும் தொங்கலும் ததும்பி யெங்கும்
தண்ணுமை யெக்கம்மத் தளி தாழ்பீலி
குழல்களும் கீதமு மாகி யெங்கும்
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு
மழைகொலோ வருகின்ற தென்று சொல்லி
மங்கைமார் சாலக வாசல் பற்றி
நுழைவனர் நிற்பன ராகி எங்கும்
உள்ளம் விட்டுண்மறந் தொழிந்தனரே[29]

என்பது பெரியாழ்வார் காட்டும் முதற் காட்சியாகும்.

கண்ணனின் சேர்க்கையால் ஆயர் மங்கையர் அடைவது ஈறிலின்பம். அவர்கள் கூட்டுறவால் அவன் அடைவது இன்பம். இங்ஙனம் ஒருதலைக் காமமன்றி, இருதலையும் ஒரே இன்ப வெள்ளம் பெருகிற்று. ஆயர் மகளிருக்கும் மாயோனுக்கும் இத்துணைத் தொடர்பு எக்காலத்தும் உண்டு என்பர்.[30] எனவே தான் பெரியாழ்வார் அந்த ஈறில் இன்பக் காட்சியை எடுத்துக் காட்டு கின்றார்.

குன்றெடுத் தாநிரை காத்தபிரான்
கோவல னாய்க்குழ லூதி யூதிக்
கன்றுகள் மேய்த்துத்தன் தோழரோடு
கலந்துடன் வருவானைத் தெருவிற் கண்டு
என்றும் இவனையொப் பாரை நங்காய்!
கண்டறி யேன்ஏடி! வந்து காணாய்
ஒன்றும்நில் லாவளை கழன்றுதுகில்
ஏந்திள முலையுமென் வசமல்லவே.

என்பது ஒரு காட்சிப் படமாகும்.[31]

இவ்வாறு பெரியாழ்வார் மகளிர் கூற்றில் வைத்துப் பாடியிருப்பது அக இலக்கியப் போக்கில் ஒரு புதுமை எனலாம். இப்புதுமையைப் பிற்கால உலா இலக்கியங்கள் ஒரு நெறியாகப் பின்பற்றின எனக் கொளலாம்.

தாய் கூறும் பாடல்களாக நான்கு பாடல்கள் வருகின்றன.[32] ஆழ்வார் தாமே முன்னின்று பலவகைப்பட்ட மயிற்பீலிக்குடைகள் நாற்புறங்களிலும் நிறைந்து, மத்தளங்களும் பெரிய விசிறிகளும் வேய்ங்குழல்களும் இசையும் எங்கும் நிறைய, கண்ணன் கன்று மேய்த்து மீண்டு வருங்காட்சியை வருணித்தார். ஈண்டு மீண்டும் ஒருதாய் வழியாக அக்காட்சியைக் காட்டுகின்றார்.

Koviloor Digital Library

வருகையில் வாடிய பிள்ளை கண்ணன்
மஞ்சளும் மேனியும் வடிவும் கண்டாள்
அருகேநின் றாள்என்பெண் நோக்கிக் கண்டாள்;
அதுகண்டிவ் வூர்ஒன்று புணர்க் கின்றதே[33]

என்று கூறும்போது எல்லோரும் பார்த்தார்கள்; ஆனால் தன் பெண் சற்று உற்று நோக்கினாள் என்னும் நயத்தைக் காட்டுகின்றார். காணுதல், நோக்குதல் என்ற இரு சொற்களுக்குமிடையே ஒரு குறிப்புளது. 'நோக்கு' என்னும் சொல் இலக்கியங்களில் பயின்று வரும்போதெல்லாம் கவிச்சொல்லாக ஆழ் பொருளைத் தந்து நிற்பதையுணரலாம்.

யான் நோக்குங்காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

என்றார் வள்ளுவப் பெருமானார்.

புணர்துணையோ டாடும் பொறியலவன் நோக்கி
இணர்ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி

என்று செப்பும் சிலப்பதிகாரம்.

... கோட்டெருத்தம் செய்த நோக்கம்
எங்கெங்கே நோக்கினும் அங்கங்கே தோன்றுமே

என்பார் சீவக சிந்தாமணி ஆசிரியர்.

ஈண்டு, பெரியாழ்வார் தாயாக நின்று தம் மகள் நோக்கினைக் காட்டும்போது அதில் ஒரு நோக்கம் இருப்பதனைப் புலப்படுத்துகின்றார். அகப் பொருள் மரபில் கண்ணிணைகள் நோக்குதற்குக் 'கோடி பொருள்கள்' கூறப்படும். வாட்ட முற்றிருந்த அஞ்சன வண்ணனின் திருமேனியை முதலில் இந்தப் பெண் பொதுவாகக் கண்டாள்; பின் கொஞ்சம் உற்று நோக்கிக் கண்டாள்; அதாவது குறிப்பாக நோக்கினாள். அதனையே நிமித்தமாகக் கொண்டு ஆயர் சேரியில் உள்ளவர்கள் இருவரிடையும் ஒரு தொடர்பினை ஏறிட்டு அலர் தூற்றப் புணர்க்கின்றனர் என்பது தாயின் உரை. குறிப்புணர்தல் என்னும் அகக் கண்ணோட்டம் இங்குத் தெளிவுறுத்துவதோடு, அந்தத் தாய்வழி 'ஊர் ஒன்று புணர்த்தல்' (அலர்) என்னும் ஒரு புதிய அகமரபும் படைத்துக் காட்டப்படுவது நோக்கற்பாலதாம்.

இவ்வாறே, பசுத்திரளின் பின்னே, தன் அழகிய செந்தாமரைக் கண் மிளிர வேய்ங்குழலை ஊதிக் கொண்டும், பாடிக் கொண்டும், ஆடிக்கொண்டும் மகிழ்ந்து

Koviloor Digital Library

வருகின்ற கண்ணனின் வடிவழகைத் தன் மகள் பார்த்து அறிவிழந்தாளென்று ஒரு தாய் கூறுகின்றதை ஆழ்வார் காட்டுகின்றார்.[34] தலைவனைக் கண்டு கருத்தழியும் போது கைவளை கழலப் பெறுவது ஈண்டுக் காட்டப் பெறும் புது விரகாகத் தோன்றுகின்றது.[35]

வலக்காதில் செங்காந்தள் பூவையும் மார்பில் காட்டு மல்லிகை, முல்லை மாலைகளையும் அணிந்து கொண்டு அலங்காரமாகத் திருக்குழல்களை முதுகிலே தொங்கவிட்டுக் கொண்டும், இனிய வேய்ங்குழலை வாய் வைத்துப் பலப்பல வகைகளாக ஊதிக் கொண்டும் வருகின்றான் இடைப்பிள்ளையான கண்ணன். அவனுடைய வடிவழகை ஒரு பெண் கண்டு விருப்புற்று அவன் வரும் வழி விலங்கி நில்லாமல் அவனுக்கு எதிர்முகமாக நின்று தனது சங்கு வளைகள் கழலப் பெற்று உடலும் இளைக்கப் பெற்றாள். இதுவும் ஒருத்தியின் தாய் இரங்கும் பாடலாகக் கூறப்படுகின்றது.[36]

தாயரைத் தவிர, தலைவியரும் கண்ணன் மீது காதல் கொண்டு கூறுவதாக இத்திருமொழியில் மூன்று பாடல்கள் சுவைபட அகப்பொருள் நயம்படக் காண வாய்ப்புண்டு.[37] ஈண்டெல்லாம் 'என்னை அவற்கே கொடுமின்' என்னும் தலைவியின் உறுதிப்பாடும், 'தலைவனைப் பிடித்து வைத்து முறுவல் காண்பம்' என்னும் அவளின் குறும்பு செய்யும் குணமும் புது மர்புகளாகக் குறிக்கப்படு கின்றது.

ஏழாம் திருமொழி

இத்திருமொழி முழுவதும் தாய்ப் பாசுரமாக அமைந்துள்ளது குறிக்கத் தக்கது. மாயன் மணிவண்ணன்மேல் மாலுற்ற தன் பெண் மிக இளம் பருவத்தாள் என்னும் எண்ணம் மீதூரப் பெற்றுத் தாய் புலம்புவதாக இப்பகுதி அமைகின்றது. தோழியரே தன் பெண்ணை ஆழியானிடம் கொண்டுபோய் அகப்படுத்தி விட்டனர் என்று எண்ணுகின்றாள் இத்தாய். "மூழை உப்பு அறியாது" (அகப்பைக்குக் கறியின் சுவை தெரியாது) என்ற மூதுரைக்கேற்பச் சுவை ஒன்றும் (இன்பச் சுவை) அறிய வல்லமையில்லாதவள் தன் பெண், ஆகவே இவளது தோழிகள் ஏழையும் பேதையும் இளையளும் ஆகிய தன் மகளைப் பல சூழ்ச்சிகள் செய்து "விளையாட வா" என்று அழைத்துப் போயினர்; அழைத்துப் போய் "ஆழியான்" என்று சிறப்புற்ற, ஒருவராலும் ஆழநிலை காணவொண்ணாத கீழாற்றில் தள்ளி அதிலே அகப்படுத்தி விட்டனர். இந்தக் கபடத்தைத் தாய் முறையிட்டு வருந்துகின்றாள்.[38]

ஐய புழுதி யுடம்ப ளைந்திவள்
பேச்சு மலந்தலையாய்

Koviloor Digital Library

செய்ய நூலின் சிற்றாடை செப்பி
னுடுக்கவும் வல்லளல்லள்
கையி னில்சிறு தூதை யோடிவள்
முற்றில் பிரிந்துமிலள்
பைய ரவணைப் பள்ளி யானொடு
கைவைத் திவள்வருமே[39]

என்ற பாடல் தலைவியின் இளமையை எடுத்துக்காட்டுவதாகும். இதுபோன்றே அடுத்தும் தொடுத்து அமைக்கப்படுகின்றது.[40] இவ்வாறு மாயன்மேல் மகள் மாலுறு கோலம் தாயவள் கூறும் திறத்தில் தாய், தோழி, தலைவி ஆகிய அகமாந்தரின் பங்கும், பாங்கும் ஒரு சேர உணரக் கிடக்கின்றன.

நாடும் ஊரும் அறியும்படி வெளிப்படையாக வீட்டை விட்டுப் புறம்பே போய், நல்ல துழாய் அலங்கல் சூடி நாரணன் போகுமிடமெல்லாம் தேடித் திரிகின்றாள் தலைவி. இவள் நற்குடிக்குக் கேடு சூழ வேண்டுகின்றவர் பலர் உளர். இவளுக்கு வேண்டியவராயிருக்கின்றவரும் சிலர் உளர். அவர்கள்,

கேசவ னோடிவளைப்
பாடி காவலிடுமி னென்றென்று
பார்தடு மாறினதே[41]

என்று கூறும் வகையில் இவளைக் கொண்டுபோய்க் காவலிடுங்கள் என்று கூறுகின்றனர்.

ஈண்டு 'இற்செறியுங்கள் என்று யானும் கூறவில்லையே' என்று தாய் நினைவுற்றாள். 'பாடு காவலிடுமின்' என்ற பழம் பாடம் "பாடி காவலிடுமின்" என இருத்தல் வேண்டும் என்பது மு. இராகவையங்கார் அவர்களின் கருத்தாகும். 'இற்செறித்தல்' என்னும் பண்டைய வழக்க முறைமையை இயைத்து நோக்குவான் வேண்டி 'பாடி காவல்' என்னுந் தொடர் சிறப்புற அமைக்கப்படுகின்றது. அதனால் சிறைகாக்கும் காப்பும் பயனில்லை என்பதும் அடுத்து அறிவிக்கப்படு கின்றது.[42]

ஈண்டு இந்தத் தாய் தன் மகளுக்கு நெற்றிக்கு அணியாகப் பட்டத்தைக் கட்டியும், காதுக்குப் பொற்றோடு இட்டும், காலுக்குப் பாடகமும் சிலம்பும் அணிவித்தும் இவள்தன் விழைவிற்கேற்ப வளர்த்தெடுத்தாள். "ஆயினும், என்னோடு இவள் இருக்கமாட்டாமல், பூவை வண்ணா! என்று கண்ணபிரானை வாய்விட்டு அழைக்கின்றாள்" என்று மாயவன்மேல் தன் மகள் மாலுற்ற நிலையைக் காட்டுகின்றாள்.

Koviloor Digital Library

கேசவா! என்றும் கேடிலி! என்றும்
கிஞ்சுக வாய்மொழியாள்
வாச வார்குழல் மங்கைமீர்! இவள்
மாலுறு கின்றாளே[43]

இம்மொழிகளில் அந்தத் தாயின் பரிவும் பிரிவும் பாங்குறச் சித்திரிக்கப்படு கின்றன.

சங்க அக இலக்கியங்களிலும், இடைக்காலப் பிற அகவிலக்கியங்களிலும் காணாத அளவிற்கு இந்தப் பக்தி இயக்கக் கால இலக்கியத்தில் – ஆழ்வார் பாடல் களில் தலைவன்பால் பித்தேறிய பெண்ணின் இயல்புகள் ஏற்றமுறக் காட்சியளிக் கின்றன.

காறை பூணும் கண்ணாடி காணும் தன்
கையில் வளை குலுக்கும்
கூறை யுடுக்கும், அயர்க்கும் தன்
கொவ்வைச் செவ்வாய் திருத்தும்;
தேறித் தேறிநின் றாயிரம்பேர்த்
தேவன் திறம்பி தற்றும்
மாறில் மாமணி வண்ணன் மேலிவள்
மாலுறு கின்றாளே[44]

என்று பெரியாழ்வார் கூறுவது அவர்தம் பெண்கொடியாம் ஆண்டாளின் திருச் செயல்களை மனக்கண்முன் கொண்டு நிறுத்திப் பாடுவதைப் போன்று தோன்றுகின்றது. நற்றாய் இரங்கலாக அமைந்த இந்தப் பாடல் ஆழ்வார் தம் மன நிலையையே வெளியிடுவதாகக் கொள்ளலாம். பகற்குறி, இரவுக்குறி ஆகியவை குறித்து, குறியிடத்து வந்து காத்து நின்ற தலைவனின் நிலையைச் சங்க அக இலக்கியப் பாடல்கள் சுவைபடக் காட்டி நிற்கும். ஈண்டுத் தலைவன் இறைவனாகவே அந்த மாமணிவண்ணன் மேல் மாலுற்ற மங்கையின் செயல்கள் சீர்ப்படக் காட்டப்படுகின்றன.

அறத்தொடு நிற்றல் என்னும் துறை களவின் எல்லைக்கண் நிகழ்வதைக் குறிக்கும் ஒரு செயலாகும். களவின்கண் கூடிய தலைவனும் தலைவியும் அறத்திற்கு மாறுபடாத முறைக்கண் நிற்றலே அறத்தொடு நிற்றலாகும்.

தொல்காப்பியப் பொருளியலில் இரண்டே நூற்பாக்களில் அறத்தொடு நிற்றல் இடம் பெறுகின்றது.[45] இவற்றுள் ஒன்று (203) தோழி அறத்தொடு நிற்கும் மரபு உரைப்பது. மற்றொன்று (204) அறத்தொடு நிற்றல் எழுவகைப் படுமென எடுத்துரைப்பது.

Koviloor Digital Library

தலைவன் தலைவி என்னும் இருவரும் இயற்கைப் புணர்ச்சியாகிய முதற்காட்சியில் ஒருவரையொருவர் சந்தித்த முறையை தூய அன்பொடு பொருந்திய அறத்தின் வழிப்பட்ட நற்செயலேயென்பதனை அறிவுறுத்துதல் களவு வெளிப்படுத்தலின் கருத்தாகும். ஆதலால் அங்ஙனம் வெளிப்படுத்தும் முறையினை 'அறத்தொடு நிற்றல்' என்பர் தொல்காப்பியர்.

ஈண்டு இத்திருமொழியில் அறத்தொடு நிற்றல் ஒரு புதுமெருகுடன் அமைந்துள்ளது.

கைத்தலத் துள்ள மாடழியக்
கண்ணா லங்கள் செய்து இவளை
வைத்து வைத்துக் கொண்டென்ன வாணிபம்
நம்மை வடுப்படுத்தும்
செய்த் தலையெழு நாற்றுப் போலவன்
செய்வன செய்துகொள்ள
மைத்த டமுகில் வண்ணன் பக்கல்
வளர விடுமின்களே[46]

இது தாயை நோக்கி உறவினர் கூறியது போல் கொண்டு தாய் தானே சொல்லுகிற கூற்றாகும். கையில் உள்ள பணத்தைச் செலவழித்து இவளுக்கு (தலைவி) திருமணத்தைச் செய்து இவளைக் காவலிட்டு வைத்துக் கொண்டிருப்பதனால் ஒரு பயனும் இல்லை; அதற்கு மாறாகத் தனக்குத் தன் மகள் வடுவை உண்டாக்குவாள் என்று கூறுகின்றாள் தாய். அதனைக் கேட்ட சுற்றத்தார் "வயலிலே வளர்ந்த நாற்றை (செய்த்தலை எழு நாற்றுப்போல்) அவ்வயலுக்கு உடையவன் தன் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்வது போல, இவளையும் தலைவனாகிய அவன், தான் செய்ய நினைத்தவற்றைத் தடையறச் செய்து கொள்ளும்படி கருமேகம் போன்ற அக்கண்ணனிடத்தில் வாழும்படி இவனைக் கொண்டு போய் விட்டு விடுங்கள்" என்றார்கள். தாயும் அவர்கள் கூறியதை ஏற்றுக் கொணடாள்.

இது புது மரபு ஆகாமல் உள்ள மரபு புதுப் பொலிவோடு கூடி ஈண்டு அமைகின்றது. உலகியலுக்கு ஒப்ப முடிந்த அளவில் இக்கூற்று அமைந்திருப்பது சிறப்பாகும். ஒருவன் தன் நிலத்தில் விட்ட நாற்றைத் தன் கருத்துக்கு ஒத்தபடி தான் பயன்படுத்திக் கொள்வது போல, கண்ணனும், தனது உடைமையான இவளைத் தன் எண்ணப்படி பயன்படுத்திக் கொள்ளுமாறு இவளை அவனிடத்தில் கொண்டு சேர்த்து விடுங்கள் என்று செய்ய வேண்டிய செயலை வரையறை செய்தனர் என்பது குறிப்பாகும்.

Koviloor Digital Library

இதுபோலவே அவர்கள் பின்னும்,

மருத்து வப்பதம் நீங்கினா ளென்னும்
வார்த்தை படுவதன்முன்
ஒருப்ப டுத்திடு மின்இவளை
உலகளந் தான் இடைக்கே

என்று கூறுகின்றார்கள்.[47] அதாவது "மருத்துவன் ஒருவன் தான் செய்யும் மருந்தில் பதம் பார்த்துச் செய்யாவிடில் அது முறுகிக் கெட்டுக் கை தவறிப் போவது போல, இவள் பதம் (பக்குவம்) பார்த்து நாம் செய்யாமையாலே இவள் கைகழிந்து போயினாள் என்ற பழிச்சொல் பிறப்பதற்கு முன் இவளை வரைவுபடுத்த வேண்டும்" என்பது ஈண்டு வலியுறுத்தப்படுகின்றது.

அலருக்கு அஞ்சி வரைவு முனைதல் இவ்விடத்தில் அகத்துறைக் குறிப்பாக அமைந்திருக்கின்றது என்பது நோக்கத்தக்கது.

எட்டாம் திருமொழி

தன் மகள் இளமையிலேயே கண்ணன்மாட்டு மாலுற்றிருக்கும் திறத்தை நற்றாய் கூறி, அவனோடு சேர்த்து வைக்கும்படி இரங்கி வேண்டுவதாக அமைந் துள்ளது ஏழாந் திருமொழி; எட்டாந் திருமொழியோவெனின், தலைமகனுடன் சென்ற தலைவியைக் குறித்துத் தாய் பல படி வருந்திக் கூறுவதாக உள்ளது.

'உடன்போக்கு'ப் பகுதியினைச் சேர்ந்தது இது. களவு மணம் கொண்டார் நிலையைத் தோழி அறத்தொடு நிற்பதால் தமர் அறிந்து அவர்தம் மணத்திற்கு உடன்பட்டுக் கற்பு வாழ்க்கையில் புகச் செய்வர். சில சமயம் தலைவியின் தமர் அவளை இற்செறித்து, அவளுடைய களவு ஒழுக்கினைத் தடை செய்வாராயின், தலைவி தலைவனுடன் அவன் ஊருக்குப் பிறர் அறியாவகை தனித்துச் செல்லுதலும் உண்டு; இதனை 'உடன்போக்கு' என்பர்.

இத்திருமொழியில்,

வேடர் மறக்குலம் போலே
வேண்டிற்றுச் செய்தென் மகளை,
கூடிய கூட்டமே யாகக்
கொண்டு குடிவாழும் கொ(ல்)லோ?[48]

என்பதனால் களவு மணம் (கந்தர்வ மணம்) பேசப்பட்டிருத்தலின், உடன்போக்குக் குறிப்பு வலியுறுகின்றது. ஆகவே, உடன்போக்கிற் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் வருந்தி, மேலும் அவன் மனையிலேயே தன் மகளை வரைந்து

Koviloor Digital Library

கொண்டு இல்வாழ்க்கைப் படுத்தினானே! (பிறந்தவிடத்தே நாம் மணம் செய்து கொடுக்கப் பெற்றிலமே) என்பதற்கும் இரங்கிப் பலபடி துயருற்ற வகையை இந்தப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. 'மாயவன் பின்சென்ற மகளை உன்னித் தாய் இரங்குதல்' என்று துறைப்பொருள் அமைந்திருக்கின்றது. தாய் ஒருத்தி அரற்றும் அரற்றலை இத்திருமொழி சிறப்பாகக் காட்டியுள்ளது.

இல்லம் வெறியோடிற் றாலோ
என்மக ளையெங்கும் காணேன்[49]

என்று தாய் தன் வீடானது வெறிச்சென்றிருக்கின்ற நிலையைக் காட்டுகின்றாள். உடன் போக்கிற் கொண்டு சென்ற தன் மகளைத் தேடியும் ஓரிடத்திலும் காணாளாகி, 'மல்லரையட்ட கண்ணன் பின் போய் வடமதுரைக்கருகிலுள்ள திருவாய்ப் பாடியில் புகுந்தனளோ, அறியேன்' என்று தாய் விம்முகின்றாள். பிற அக இலக்கியத் தாயருக்கும், இத்திருமொழித் தாய்க்கும் ஒரு வேறுபாடு என்னவெனில், இத்தாய்க்குத் தன் மகள் போனவிடம் தெரியவில்லையே தவிர, அவளைக் கொண்டு போனவன் இன்னான் – கண்ணனே என்பதில் தெளிவுண்டு. அவன் மல்லரையட்டவன்,[50] நாராயணன்,[51] தாமோதரன்,[52] செங்கண்மால்,[53] அண்டத்தமரர் பெருமான் ஆழியான்,[54] நந்தகோபன் மகன் கண்ணன்,[55] ஒண்ணிறத் தாமரைச் செங்கண் உலகளந்தான்[56] என்றெல்லாம் பேர் சொல்லி அந்த மாயவன் பின்வழி சென்றாள் என்று தெளிந்தவள் இத்தாய்.

கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே

எனக் கற்பு நெறி மணமுறைக்கு இலக்கணம் வகுக்கிறார் தொல்காப்பியர்.[57] இந்நெறியினை,

குமரி மணஞ்செய்து கொண்டு
கோலஞ்செய் தில்லத் திருத்தி
தமரும் பிறரு மறியத்
தாமோ தரற்கென்று சாற்றி
அமரர் பதியுடைத் தேவி
அரசாணியை வழி பட்டுத்
துமிலம் எழப் பறை கொட்டித்
தோரணம் நாட்டிடும் கொ(ல்)லோ?

என்னும் பெரியாழ்வார் திருமொழியால் தாய்க்கூற்று வழி நினைவு கூறலாம்.

Koviloor Digital Library

உடன் செல்லும் தலைவியைத் தமர் இடைவழியிற் கண்டு மறித்துப் பின், அவர்தம் அன்பின் முதிர்ச்சி கண்டு மீள்வர்; தலைவன் உலகறியத் திருமணம் செய்து கொள்வன். தமர் முன் வாரா நிலையில் தலைவனே தம் ஊரில் தலைவியை உலகறிய மணம் புரிந்து கொள்வதும் உண்டு.[58] இந்த முறைப்படியெல்லாம் பெரியாழ்வார் திருமொழி ஈண்டு எடுத்துக் காட்டுகின்றது.

ஒருமகள் தன்னை யுடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
செங்கண்மால் தான்கொண்டு போனான்
பெருமக ளாய்க்குடி வாழ்ந்து
பெரும்பிள்ளை பெற்ற அசோதை
மருமகளைக் கண் டுகந்து
மணாட்டுப் புறம்செய்யும் கொ(ல்)லோ?

என்னும் திருப்பாட்டு ஏற்றமிகு எழில் பாட்டாகும். இதில் புதைந்துள்ள செழுமணிகள் பலவாம். இப்பாடலுள் தேர்ந்த வைரமணியாகக் கொள்ளத்தக்கது. பெரியாழ்வார் தான் வளர்த்த ஆண்டாளைத் திருவரங்கன் ஆட்கொண்ட பின் பாடியது இது என்பதாம். இதனைத் தொடர்ந்த சில பாடல்களும் பெரியாழ்வாரைத் தாய் நிலையில் நின்று கதறச் செய்தலைக் காணலாம்.[59] "ஒரு மகளுடையேன்; அவளும் காளையொருவனுடன் அருஞ்சுரம் நெருநல் சென்றாள்" என்று வருந்தும் நற்றிணைத் தாய் ஈண்டு நினைவுக்கு வருகின்றாள்.[60]

இக்கருத்தினை மெய்ப்பிப்பார் போல, "இவர் தாய் நிலையிலிருந்து கொண்டு தன் மகளைக் குறித்துப் பலபடி உன்னி ஏங்குவதாக அமைந்த பாசுரங்கள் மிகமிக அற்புதமானவை"[61] என்று கூறுகின்றார் ந. சுப்புரெட்டியார். இங்கு இப்பகுதியுள் ஆழ்வார் தம் மனநிலையைத் தாய் நிலையிலிருந்து பேசுகின்றார் என்பது தெளிவு.

உடன்போகியவழித் தலைவியின் தாய்க்குப் பெருந்துயரம் உண்டாகிறது; அவளது உள்ளத்தில் தலைமகளுடைய குணஞ்செயல்கள் புலனாகின்றன; நெஞ்சக் கிழியில் தலைவியது குழவிப் பருவம் முதல் தவழ்ந்து மொழி பயின்று தளர் நடைகொண்டு வளர்ந்ததும் பிற்வும் தோன்றுகின்றன. தலைவியின் உணவும் உடையும் உரையும் விளையாட்டும் உருக்கொண்டு நிற்கின்றன. மனக்கண்ணில் காணும் தாயின் சிறந்த அறிவு இத்திருமொழியில் அவற்றைச் செவ்வையாக உருப் படுத்தி வெளியிடுகிறது.

Koviloor Digital Library

அவள் பிரிவை நினைக்கும்போது தலைமகன் நினைவும் உடன் தோன்றுகிறது. மகள்பாற் செல்லும் அன்பு அவன்பால் சினமாகிறது.

குடியிற் பிறந்தவர் செய்யும்
குணமொன்றும் செய்திலன் அந்தோ!
நடையொன்றும் செய்திலன், நங்காய்!
நந்தகோ பன்மகன் கண்ணன்
இடையிரு பாலும் விளங்க
இளைத்திளைத் தென்மக ளேங்கி
கடைகயி றேபற்றி வாங்கிக்
கைதழும் பேறிடுங் கொ(ல்) லோ?[62]

எனத் தாய், தன் மனவருத்தத்தைப் பக்கத்து வீட்டிலுள்ள ஒருத்தியிடம் சொல்லுகிறாள். இதில், "கண்ணன் உயர் குடியில் பிறந்தவர் செய்யும் குல நிலைக்குத் தக்கபடி ஒருவகைக் குணத்தையும் செய்தானில்லை" (வரைந்து கொண்ட பெண்ணோடு வெளியில் வருவதென்பது அரிதாகக் காணக் கிடக்கிற ஒரு வழக்கம்; இவனோ அதன்படி செய்கிலன்) என்று கூறுகின்றாள்.

"இவ் உலகத்துக்குப் பொதுவான நடத்தை முறை சில உண்டே, அவையும் செய்திலன்; அதற்குப் பதிலாக வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனவுடனே என் மகளைத் தயிர்கடைய வைத்தானே! அவள் கைகள் காய்ப்புக் காய்த்து விடுமே!" என்றும் வருந்துகின்றாள்.

ஈண்டு, "தணிந்த பருவத்திற் செல்லாது வெதிர்நெல் விளையும் வேனில் வெங்காலத்தில் கொண்டு தலைக்கழிந்தானே"[63] எனக் கொதிக்கின்ற அகநானூற்றுத் தாய் கண்முன் நிற்கின்றாள்.

"என் மகள் கிழக்கு வெளுப்பதற்கு முன் எழுந்து கண் விழித்துப், பின் வெண்ணிறத் தோய் தயிர்தன்னைக் கடையும்படியான சக்தியைத் தான் உடையளோ? செந்தாமரைக் கண்ணையுடைய உலகளந்த பெருமாள் என் மகளை முறைகேடான இழிதொழில்களில் ஏவிச் செய்வித்துக் கொண்டு, அவளுடைய பெருமை குலையும்படி ஆளுவனோ; அன்றி, அவன் பெருமைக்குத் தக்கவாறு திருவுள்ளம் பற்றுவனோ? அறியேன்" என்கிறாள் தாய்.[64]

மாயவன் பின்வழி சென்று
வழியிடை மாற்றங்கள் கேட்டு
ஆயர்கள் சேரியி லும்புக்கு
அங்குத்தை மாற்றமு மெல்லாம்

Koviloor Digital Library

தாயவள் சொல்லிய சொல்லைத்
தண்புது வைப்பட்டன் சொன்ன
தூய தமிழ்பத்தும் வல்லார்
தூமணி வண்ணற் காளாரே[65]

என்ற பாடலால் ஆயர்பாடியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், பேச்சுக்கள், செயல்கள் எல்லாவற்றையும் தாயானவள் பேச, அவற்றைப் பெரியாழ்வார் தாமே அத்தாயாகித் தூய தமிழில் அமைத்துள்ளார் என்று அறியலாம்.

மற்ற ஆழ்வார்களிலும் மதிப்பு மிக்கவர் பெரியாழ்வார் என்பது அவர்தம் பெயராலேயே விளங்கும். இறைவனிடம் ஏற்பட்ட பிரேம மிகுதியினால் பல்லாண்டு பாடியவர்; மற்ற ஆழ்வார்கள் பக்தி அணுவளவிலும் தம் பக்தி மலையளவிலும் நிற்குமாறு பக்தியில் விஞ்சியவர்; கண்ணனை நெஞ்சினாலும், கோதையாரைக் கரத்தினாலும் வளர்த்தவர்; பெரிய பெருமாளைக் கனவில் காணும் பேறு பெற்றவர்; இத்தகைய பல சிறப்பியல்புகள் வாய்க்கப் பெற்ற பெரியாழ்வார் 'பாவனை' நிலையில் தாயாகிப் பாடும் பாடல்களே விஞ்சி நிற்கின்றன. சங்க இலக்கிய – அக இலக்கியத் தாயர் பலரை நினைவூட்டும் வகையில் இவர் ஒருவரேயாகி ஊனுருக, உளமுருகப் பாடுவதைப் பலகாலும் நோக்கலாம்.

அகப்பொருள் மரபு அடிப்படையிலமைந்த இந்த மூன்று திருமொழிகளும் இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழின் கூட்டுறவே போலச் செம்மையும் சீர்மையும் பெற்றுப் பொருளிலக்கண நெறிகளைப் பொலியச் செய்கின்றன எனலாம்.

★

Koviloor Digital Library

குறிப்புகள்

1. பெருமாள் திருமொழி, 4:5.
2. பி. எதிராஜுலு நாயுடு, பக்திப் பூங்கா, ப.63.
3. பெருமாள் திருமொழி, 6 : 10.
4. "மறை வெளிப்படுதலும் தமரிற் பெறுதலும்
இவை முதலாகிய இயனெறி பிழையாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பு எனப்படுமே"
– தொல். பொருள். செய்யுள்.186
5. பெருமாள் திருமொழி, 6 : 1.
6. பெருமாள் திருமொழி, 6 : 2.
7. பெருமாள் திருமொழி, 6 : 3.
8. பெருமாள் திருமொழி, 6 : 4.
9. பெருமாள் திருமொழி, 6 : 5
10. பெருமாள் திருமொழி, 6 : 6
11. பெருமாள் திருமொழி, 6 : 7, 8, 9.
12. தொல். பொருள். அகத். 84.
13. பெருமாள் திருமொழி, 6 : 3.
14. பெருமாள் திருமொழி, 6 : 4.
15. பெருமாள் திருமொழி, 6 : 5.
16. பெருமாள் திருமொழி, 6 : 6.
17. பெருமாள் திருமொழி, 6 : 7.
18. பெருமாள் திருமொழி, 6 : 8.
19. உடையவர் அருளிச்செய்தது, பெருமாள் திருமொழித் தனியன்,
20. நாச்சியார் திருமொழி, 1:10.
21. நாச்சியார் திருமொழி. 2:10.
22. எஸ். கிருஷ்ணவேணியம்மையார், வில்லிபுத்தூர் விளக்கு, ப. 185.
23. வேதாந்த தேசிகன் பிரபந்த சாரம் – 1, 9. பெரியவாச்சான் பிள்ளையும் இக்கொள்கையினர்.

Koviloor Digital Library

25. இராமானுச நூற்றந்நதாதி, 15.
26. ந. சுப்பு ரெட்டியார், "வைணவ சமய நூல்கள்", தெய்வத்தமிழ், ப.445.
27. பெ. திரு., 1–2–2.
28. பெ. திரு., 3–1–10.
29. பெ. திரு., 3:4:1.
30. எஸ். கிருஷ்ணவேணி அம்மையார், பெரியாழ்வார் பெண்கொடி, ப.123.
31. பெ. திரு., 3:4:4.
32. பெ. திரு., 3:4:3, 7, 8, 9.
33. பெ. திரு., 3:4:5.
34. பெ. திரு., 3:4:7.
35. பெ. திரு., 3:4:8.
36. பெ. திரு., 3:4:9.
37. பெ. திரு., 3:4:4, 5, 6.
38. பெ. திரு., 3:7:4.
39. பெ. திரு., 3:4:1.
40. "வாயிற் பல்லும் எழுந்தில
மயிரும் முடி கூடிற்றில
சாய்விலாத குறுந்தலைச் சில
பிள்ளைகளோ டிணங்கி
தீயி ணக்கிணங் காடி வந்திலள்
தன்னன்ன செம்மை சொல்லி
மாயன் மாமணி வண்ணன் மேல்இவள்
மாலுறு கின்றாளே."

– பெ. திரு., 3:7:2.

41. பெ. திரு., 3:7:5; 3–4
42. பெ. திரு., 3:7–6.
43. பெ. திரு., 3:7–7.
44. பெ. திரு., 3:7–8.
45. தொல். பொருள். 203, 204.
46. பெ. திரு., 3:7–9.

Koviloor Digital Library

47. பெ. திரு., 3:7–10.

48. பெ. திரு., 3:8–6.

49. பெ. திரு., 3:8–1.

50. பெ. திரு., 3:8–1.

51. பெ. திரு., 3:8–2.

52. பெ. திரு., 3:8–3.

53. பெ. திரு., 3:8–4.

54. பெ. திரு., 3:8–7.

55. பெ. திரு., 3:8–8.

56. பெ. திரு., 3:8–9.

57. தொல். பொருள். கற்பு.1.

58. 'மறை வெளிப்படுதலும் தமரிற் பெறுதலும்' (தொல். பொருள். செய். 187 உரை) என்று ஆசிரியர் தொல்காப்பியர் குறிப்பிடுதலின் களவு வெளிப்பட்ட பின் தலைவியின் தமர் உடன்பட்டுக் கொடுத்தலே பெரும்பான்மை என்பர் மு. சண்முகம் பிள்ளை, அகப்பொருள் மரபும் திருக்குறளும், ப.11.

59. (அ) தன் மாமன் நந்தகோ பாலன்
தழீஇக் கொண் டென் மகள்தன்னைச்
செம்மாந்தி ரேயென்று சொல்லிச்
செழுங்கயற் கண்ணும்செவ் வாயும்
கொம்மை முலையு மிடையும்
கொழும்பணைத் தோள்களும் கண்டிட்டு
இம்மக ளைப்பெற்ற தாயர்
இனித்தரி யாரென்னுங் கொல்லோ!
– பெ. திரு., 3:8–5.

(ஆ) நாடும் நகரு மறிய
நல்லதோர் கண்ணாலஞ் செய்து
சாடிறப் பாய்ந்த பெருமான்
தக்கவா கைப்பற்றுங் கொல்லோ?
– பெ. திரு., 3:8–6.

(இ) இடையிரு பாலும் வணங்க
இளைத்திளைத் தென்மக ளேங்கி
கடைகயி றேபற்றி வாங்கிக்
கைதழும் பேறிடுங் கொல்லோ?
– பெ. திரு., 3:8–8.

Koviloor Digital Library

(ஈ) வெண்ணிறத் தோய் தயிர் தன்னை
வெள்வரைப் பின்முன் னெழுந்து
கண்ணுறங் காதே யிருந்து
கடையவும் தான்வல்லள் கொல்லோ?
ஒண்ணிறத் தாமரைச் செங்கண்
உலகளந் தான்என் மகளைப்
பண்ணறை யாப்பணி கொண்டு
பரிசற ஆண்டிடுங் கொல்லோ!

– பெ. திரு., 3:8–9.

60. நற்றிணை, 179.
61. ந. சுப்பு ரெட்டியார், "வைணவ சமய நூல்கள்", தெய்வத்தமிழ், ப.446.
62. பெரு. திரு. 3:8–8.
63. அகம். 145
64. பெரி. திரு. 3:8–9.
65. பெரி. திரு. 3:8–10.

Koviloor Digital Library

இயல் ஒன்பது

ஆண்டாள் பாடல்களில் அகப் பொருள்

சூடிக் கொடுத்தசுடர்க் கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய் – நாடிநீ
'வேங்கடவற் கென்னை விதி' என்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

– உய்யக்கொண்டார்

Koviloor Digital Library

ஆண்டாள் பாடல்களில் அக இலக்கிய மரபுகள்

ஆண்டாள் வில்லிபுத்தூர் விளக்கு ஆவாள்.

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன்றுணைவி
மல்லிநா டாண்ட மடமயில் – மெல்லியலாள்
ஆயர் குலவேந்தன் ஆகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு[1]

மெய்யுணர்வினை மக்கட்கு உணர்த்தி, அவர்களுக்கு ஆன்ம உய்வை உண்டாக்கத் தோன்றிய ஆண்டாளை 'விளக்கு' எனத் திருக்கண்ண மங்கையாண்டான் உருவகப்படுத்தினார்.

கோலச் சுரிசங்கை மாயன்செவி வாயின் குணம்வினவும்
சீலத் தவள்தென் திருமல்லி நாடி செழுங்குழல்மேல்
மாலைத் தொடைதென் னரங்கருக் கீயும் மதிப்புடைய
சோலைக் கினியவள்[2]

என்று இவர் கூறுவது ஆண்டாளின் வாழ்க்கை வரலாற்றினையே தெற்றெனத் தெரிவிக்கின்றது. இறைவன்பால் கொண்ட அன்பினால் (பிரேமத்தால்) 'பெரியாழ்வார்' எனப் பெயர் வாய்ந்தவரால் பேணி வளர்க்கப்பட்டவள் ஆண்டாள். ஆகவே இவரைப் 'பெரியாழ்வார் பெண்கொடி' என வைணவ உலகம் போற்றும்.

கோதையார் தோற்றம், குழவிப்பருவம், சிற்றில் இழைத்தல், மங்கைப் பருவம், நோன்பு – ஆர்வப் பெருக்கு, காதற் பெருக்கான நாச்சியார் திருமொழி பாடியது, ஆண்டாளைத் திருவரங்கன் ஆட்கொள்ளல் ஆகிய செய்திகளைக் காணுதல், பேருவகையும் பெரும்பயனும் பயப்பனவாயினும் இவரது அகப் பொருள் பாடற்சிறப்பே ஈண்டு ஆய்வுக்கு வேண்டுவது.

ஆண்டாளின் உயர்வு

திருமொழிகளின் சிறப்பியல்புகளைக் காணும் முன்னர் ஆழ்வார்களிலும் ஆண்டாள் உயர்ந்தவர் என்பது நிறுவ வேண்டியதொன்றாகும்.

உலகில் ஞான பக்தி வைராக்கியங்களுடன் திகழ்ந்தவர் பலராவர். அவருள் உயர்நிலையில் நிற்பவர்கள் இருடிகளும் ஆழ்வார்களுமே எனலாம்.

Koviloor Digital Library

இவர்களுள்ளும் இறை அன்பில் ஒருவரோடொருவரிடையே ஏற்றத் தாழ்வுண்டு என்பதைப் பின்வரும் விளக்கம் தெரிவிக்கும்.

> ரிஷிகளையும் ஆழ்வார்களையும் ஒப்ப நோக்குங்கால்,
> ரிஷிகள் பக்தி அணுவளவிலும் ஆழ்வார்கள் பத்தி மலை
> யளவிலும் காணப்படும். மற்ற ஆழ்வார்கள் பத்தியையும்
> பெரியாழ்வார் பத்தியையும் நோக்கின் மற்றையோர்
> பத்தி அணுவளவிலும், பெரியாழ்வார் பத்தி மலையளவிலும்
> தோன்றா நிற்கும். பெரியாழ்வார் பத்தியையும்
> ஆண்டாள் பத்தியையும் ஒப்பிடுங்கால், பெரியாழ்வார்
> பத்தி அணுவளவிலும் ஆண்டாள் பத்தி மலையளவிலும் நிற்கும்.[3]

ஆகவே பத்திக் கடலில் ஆழ்ந்து நின்ற ஆழ்வார்களைக் காட்டிலும் ஆண்டாள் மிக உயர்ந்தவர் என்பது தெளிவாகும்.

மற்ற ஆழ்வார்கள் பத்திக் கடலில் மூழ்கினாலும், அவர்கள் பத்தி வேறு தாங்கள் வேறாய் நின்றார்கள். ஆனால் ஆண்டாளோ, பத்தியையும் தன்னையும் பிரித்தற்கு இயலா நிலையில் தாமே அதுவாய் நிலைபெற்றார்.

> அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
> தஞ்செய்லை விஞ்சிநிற்கும் தன்மையளாய்[4]

இவள் நின்றவள் என்பது உணரப்படும்.

ஆண்டாள் பிறரினும் உயர்ந்தவர் என்பதனைப் பிறிதொரு விளக்கத்தாலும் அறியலாம்.

உலகப் பெபாருள்களில் ஆண்மை, பெண்மை என இரு கூறுகள் உண்டு. பெண்மையில் தன்னலங் கருதாமை, விட்டுக் கொடுத்தல், பொறுமை முதலிய நற்பண்புகள் இயற்கையாய் அமைந்துள்ளன. சாத்திரங்களாலும், சான்றோராகிய வள்ளுவப் பெருந்தகையார் போன்றோராலும், அறிஞர்களாலும், இறைவனாலும் போற்றப்படுவது இந்தப் பெண்மையேயாம். இப்பெண்மைக் குணங்களைப் பெற்றாலொழிய ஓர் ஆன்மா இறையருளை அடைய முடியாதென்பது ஒரு நம்பிக்கை. இதனாற்றான், ஞான நிலையுள் ஆடவராய் நின்ற ஏனைய ஆழ்வார், வரம்புகடந்த பத்தி நிலையை அடையுங்கால் பெண்டிராய் மாறுகின்றார்கள். இதையே, ஆழ்வார்கள் தங்களைப் பெண்ணாகப் பாவிக்கின்றார்கள் என்பர் சிலர். ஆனால் வைணவ மெய்யுணர்வை நன்கு அறியப் பெற்ற பண்டிதை எஸ். கிருஷ்ணவேணி அம்மையாரோ, "இது பொருத்தமன்று. பெரியோர்க்கு இறையன்பில் தோயத் தோய நெருப்பிலிட்ட அரக்கென உள்ளம் உருகி மென்மை

Koviloor Digital Library

அடைகிறது. அம்மென்மைக்கேற்ற பொறுமை முதலிய நற்பண்புகள் அவர்களுக்கு உண்டாகி, பெண்மையை அளிக்கின்றன. இப்பெண்மைக் குணங்களால் அவர்கள் பெண்ணே ஆகிவிடுகிறார்கள்" என்று விளக்கந் தருகின்றார்.[5]

இவ்வாறு அவர்கள் ஆகும்போது இறைவன் தலைவனாய் நிற்கிறான்; இவர்கள் தலைவியராய் நிற்கின்றார்கள்; அன்பு, ஆற்றாமை, ஊடல் ஆகியன பொதிந்த அகப்பொருள் பாடல்கள் அப்போது அவர்கள் நெஞ்சிலிருந்து தலைவியாகி, தாயாகி, தோழிச் செயல்களாகி யாவும் கவி வடிவில் வெளி வருகின்றன. இந்நிலை ஆழ்வார்களுக்கு உயர்நிலை; ஆயினும் இவ்வுயர்நிலை எப்போதும் நிலை நின்று பலனளித்திலது. சிலபோது அவர்கள் இந்நிலையி லிருந்து வேறுபட்டு ஆண்மையடைகின்றார்கள். அந்நிலையில் அவர்கள் பேச்சும் போக்கும் பெண்மைக்கு மாறுபட்டனவே. இங்ஙனமே இவர்கள் வாழ்க்கையும் மாறி மாறி நிகழ்வதனை இவர்களுடைய திருமொழிகள் காட்டாகக் காட்டி நிற்கும்.

ஆனால் ஆண்டாள் வாழ்க்கை மாறுபடும் நிலையை உடையதன்று. இவருக்குப் பெண்மைக் குணங்கள் நாளுக்கு நாள் பண்பட்டுத் தம் பெண்மையும், இறையின் ஆண்மையுமே எங்கும் தோற்றமளிக்கின்றன.

இந்நிலையில் இவர் இறைவனைத் தந்தையாகவும், மகவாகவும், நண்பனாகவும், வழிபடுதல் செய்யவில்லை; இவர் தாமே தோழியராகவும், தாயாகவும் மாறி நிற்கும் நிலையும் கொள்ளவில்லை. இறைவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் கொள்ளும் முறையே இவரிடம் முழுவதுமாக அமைகிறது.

ஆண்டாளுக்கு இயற்கையில் அமைந்த பெண்மையும், அதற்கேற்ற உயர் குணங்களும் உறுதுணையாயமைகின்றன. இவ்வாறிருக்க, ஆண் உடலைத் தாங்கிய ஆழ்வார்கள் தாமான தன்மை இழந்து பெண் போர்வையைப் போர்த்துத் தம்மைப் பெண்ணெனவே கருதிப் பெருமாளைக் குறித்துப் பேச்சுப் பேசு கின்றனர்.[6] இப்பேச்சுகளைக் காட்டிலும், பெண் உடலையே இயல்பாகப் பெற்றுள்ள கோதையாராகிய இயற்கைப் பெண் நாயகி, பெருமாளைக் கூவியழைக்கும் சொற்கள் சிறப்புடையன என்று தெளியலாம்.

ஆண்டாள் திருமால் ஒருவனையே நோக்குகின்றார், வேறு காட்சி இல்லை. இவர் கண் ஒன்றையே நோக்குகிறது; இவர் மனம் ஒன்றையே பற்றுகிறது. இவர் வாய் ஒன்றையே பேசுகிறது. ஒன்றிலேயே யன்றி, அதில் இவர் கலந்து நிற்கின்றார். ஏனைய ஆழ்வார்கள் நாயகி பாவத்தை ஏற்று நடித்தனர். அது மேட்டு மடையை யொக்கும். ஆனால் ஆண்டாளோ பெண்ணாய்ப் பிறந்து அவன் அன்பை நாடினாள். அவள் காதல் பள்ள மடையாகும்.[7]

Koviloor Digital Library

மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் இவர் தவமுடையவர்; தனியழகு வாய்ந்தவர் எனச் செப்பலாம். எனவே, 'ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சும் தன்மையள்' என்று இவரைப் பெரியோர் போற்றினர்.

வைணவ ஆழ்வார் வரிசையில் விளக்கமுற்றொளிரும் இந்நல்லிசைப் புலமை மெல்லியலார் வரலாறு தெய்வத் தன்மை வாய்ந்ததொன்று என்பர்.[8] பெரியாழ்வார் திருமகளாய் வளர்ந்து சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாய் விளங்கிய ஆண்டாள் 'மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று இறைவனையே மணக்க விழைவு கொண்டிருந்தவர்.

இறைவன் சிந்தனையில் ஊறித் திளைத்து, அவன் நினைவிலேயே மூழ்கித் தம் காலத்தைக் கழித்தவர் இவர். 'உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்று இறைவனுக்குத் தொண்டு செய்வதே பிறவியின் பயன் என்று முனைந்து நின்று அரங்கன் அருள்பெற்றுத் திருவரங்கம் சேர்ந்து அவனுடன் ஒன்றாய்க் கலந்து போனார் என்பது வழிவழியாக வழங்கி வரும் செய்தியாகும்.

பிறவிப் பயனின் பெரும் பேற்றை (சித்தாந்தம்) நன்கு அறிந்த இவர் கிருஷ்ணப் பிரபந்தமான 'திருப்பாவையும்' காதற்பெரு வெள்ளமான 'நாச்சியார் திருமொழியும்' பாடியருளினார்[9] என்பர்.

திருப்பாவை

கோதையார் உலகம் உய்தற்பொருட்டுத் திருப்பாவை இயற்றித் தந்தமையின் இவருக்குத் "திருப்பாவைச் செல்வியார்" என்ற பெயரும் வழங்கலாயிற்று. 'மார்கழி நீராட்டம்' என்னும் ஒரு தூய நோன்பையே இந்நூல் குறிக்கின்றது. 'திருப்பாவை' கோதையாரின் உள்ளச்சுனையிலிருந்து பெருகிச் சித்திரிக்கப்பட்ட உயிரோவியமாய்த் திகழ்கின்றது எனலாம். "இந்நூல் ஆன்ம அணியாகிய சேஷத்துவச் செல்வத்தையும், எம்பெருமான் முன் பதுமை போன்று கிடக்கும் பாரதந்திரியப் பெட்பையும் குறிக்கின்றமையின், திருப்பாவை எனப் பெயர் பெற்றது" என்பர் வைணவப் பெரியோர்.

திருப்பாவையில் பாயிரம், தோழியரைத் துயிலுணர்த்தல், பெருமாளை அடைந்த பயன் பெறுதல் ஆகிய மூன்று பகுதிகள் உள்ளன. முதல் ஐந்து பாடல்கள் பாயிரம். அதுவே நூற்பொருளைத் தெளித்துக் காட்டும் ஆடி; செல்வம், செயல், குணங்களில் பத்துவகைப்பட்ட ஆயர்பாடிப் பெண்களை அஞ்ஞானத் துயிலிலிருந்து ஞான விழிப்பிற்குக் கொணர்வது இரண்டாம் பகுதி. அம்மகளிரை இறை கைங்கரியத்திற்குத் தகுதியுடையவராகச் செய்வது மூன்றாம் பகுதி. இப்பகுதி ஆழ்வார் பதின்மருக்கும் ஊக்கமூட்டித் திருமாலின் அருளைக் குறிக்கிறதென்றும் அறிஞர் கூறுவர்.

Koviloor Digital Library

ஆக, இந்நூல் அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் உயிர்களுக்கு அறிவு புகட்டி இறையோடு கலந்து இன்பந் துய்க்கச் செய்தலை விளக்குகிறது[10] என்பதில் எல்லாருக்கும் ஒருமித்த கருத்துண்டு.

இயற்கைப் பொருள்களில் ஆண்மையும் பெண்மையும் கலந்துள்ளன. இவ்வியற்கையின் உள்ளுறையும் இறையினிடத்தும் இவ்விரு கூறுகளும் உண்டு என்பதைத் தெள்ளிதின் உணர்ந்தவர் ஆண்டாள். இவரே அப்பெண்மையைப் போற்றும் வகை அறிபவர்; பெண்மையிலிருந்து அடையும் பயனை உணர்பவர்; அப்பெண்மையைக் கொண்டே ஆண்மையை வசப்படுத்தும் வகை இவருக்குத் தெரிகின்றது. ஆகவே அதைத் துணை பற்றியே ஆண்மையின் அருளைப் பெற்று இன்பந்துய்க்கின்றார்.

நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தங் கமழும் குழலீ! கடை திறவாய்[11]
நப்பிள்ளை நங்காய்! திருவே! துயிலெழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டு[12]

என்னும் மொழிகளால் இறையை அடைய அடிகோலுங்கால் ஆண்டாள் பற்றுவதும் பெண்மையே என உணரலாம்.

ஆழ்வார்களும் வேறு எவரும் நோன்பிழைத்தல் செயலைச் செய்யவில்லை. நம்மாழ்வார் இறைவனை நோக்கி, "நோன்பு நோற்றல் முதலியவற்றை மேற் கொள்ளாமல் உன் அருளையே நோக்கி நிற்கும் என்னை நீ கைவிடுதல் தகுதி யாமோ?" என்று கூடக் கேட்கின்றார். இதனால் இச்செயல் வைணவச் சித்தாந் தத்திற்குச் சற்று முரணாகத் தோன்றுகிறது. அங்ஙனமாயின், பிரபன்னர்களுள் தலைநின்ற கோதையார் மட்டும் இந்நோன்பை மேற்கொண்ட செயல் பின்னும் இவரை மற்ற ஆழ்வார்களிலும் உயரிய நிலையில் நிறுத்துதற்குக் கருவியா யிருந்தது. ஆண்டாள் கொணர்ந்த சீர்திருத்தங்களுள்[13] இது தலை சிறந்தது எனலாம். இல்லையெனில்,

பாதகங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும் – கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு

என வேதபிரான் பட்டர் என்பவர் அருளிச் செய்த சிறப்புரை எழுந்திருக்க வாய்ப்பில்லை; இதற்குப் பெரிய வாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள்

Koviloor Digital Library

நாயனார், ஆய் முதலிய அறிஞர் பொருளுரைத்துள்ளனர். மார்கழி நோன்பு வைணவ சமயத்திற்கே ஓர் உயரிய நிலையை உண்டாக்குகிறது எனப் புகலலாம்.

இராமாநுசர் திருப்பாவையில் மிகுந்த ஈடுபாடுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. திருப்பாவை ஜீயர் என்பது இராமாநுசருக்கு வழங்கும் மற்றொரு பெயராகும்.

இந்நோன்பு மீமாம்சையில் 'வசர்தோற்சவம்' எனச் சொல்லப்படுகின்றது. இதனால் இஃது அகத்துறையைச் சார்ந்ததென்பதற்குச் சான்று கிடைக்கின்றது. ஐங்குறு நூறு, பரிபாடலாகிய சங்க கால நூல்களில் காணப்பெறும் தைந்நீராடலே மார்கழி நோன்பாக மாறியுள்ளது எனலாம்.

கோதை கண்ணனிடம் கொண்ட காதல் கரை கடந்தோடுகிறது. தம் அன்பிற்குரிய பொருளை அப்போதே அடைய வேண்டுமென்னும் ஆற்றாமை பொங்கி வழிகிறது; தாம் காதலித்த பொருளைக் காட்டுபவரோ, கொணர்ந்து கொடுப்பவரோ, அப்பொருளோடு கொண்டு போய்ச் சேர்ப்பவரோ ஒருவருமிலர்; முயன்று பார்த்தார்; முடியவில்லை. இறுதியில் கண்ணன்பால் அளவு கடந்த அன்பு வாய்ந்த ஆயர் மகளிர் மழை பெய்தற்கென நோன்பிழைப்பதாய்ப் போக்குக் காட்டி, அதன் வாயிலாக அவனை அடைந்து இன்புற்ற செய்தி இவர் நினைவிற்கு வருகிறது. அதையே தமக்குப் பற்றுக் கோடெனப் பற்றுகிறார். ஆயர்மகளிர் உடல் உழைப்பினால் செய்த அந்நோன்பை இவர்தம் பாவனையினால் இயற்றுகிறார். இறுதியில் கண்ணனை நண்ணி இன்புறுகின்றார். இவ்வளவுக்கும் திருப்பாவையில் அடங்கிய பாக்களிலேயே விளக்கங்கள் கிடைக்கின்றன.

அன்றியும் இந்நூலை ஒரு விதைக்கு ஒப்பிடலாம். வேர், இலை, பூ, காய், கனிகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு சிறு உருவத்தில் காணப்படும் விதையைப் போன்று இதுவும் பல பொருள்களைப் பொதிய வைத்துக் கொண்டு சிறுவடிவில் காட்சியளிக்கின்றது. 'ஓம்' என்னும் பிரணவம், எங்ஙனம் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகிய மூன்று மந்திரங்களின் பொருள்களையும் தன்னுள் கொண்டுள்ளதோ அங்ஙனமே, இந்நூலின் 'மார்கழித் திங்கள்' எனத் தொடங்கும் முதல் பாடல் மற்ற முப்பது பாடல்களின் பொருளையும் தன்னகத்துக் கொண்டுள்ளது. இவ்வொரு பாடலைக் கொண்டே எல்லாப் பொருளையும் அறியலாம்.

ஆண்மை வாய்ந்த இறைவன் பெண்மை வாய்ந்த ஆண்டாளின் கருத்தின்படியே வினைகளை நடத்துகின்றான். ஆண்டாள் தம் அருளினால்,

> சேதனனை அருளாலே திருத்தும்;
> ஈஸ்வரனை அழகாலே திருத்தும்[14]

Koviloor Digital Library

என்ற முறையில் இறைவனிடம் கொண்டு செல்லும் உயிர்களை இன்பப் பெரும் பேற்றினையடையச் செய்கின்றார்.

நாச்சியார் திருமொழி

இயற்றியவர் பெயரையே பெற்றுலவும் நூல்கள் மிகச் சிலவே. ஆழ்வார்களுள்ளும் பெரியாழ்வார் ஒருவருக்கே இப்பேறு வாய்த்தது. அவர் நூலைப் 'பெரியாழ்வார் திருமொழி' எனக் கூறுதல் காணலாம். பெரும்பான்மையும் தம் தந்தையார் போக்கையே பின்பற்றிய செந்தமிழ் நாச்சியாருக்கும் இம்முறையே அமைந்ததெனலாம்.

'நாச்சியார் திருமொழி' ஓர் அழகிய ஓவியம்; உலகளந்த உயர்ந்தோனை எளிமை வாய்ந்த கண்ணனாக ஒரு மானிடப் பெண்ணானவள் வரைந்து காட்டும் காதல் ஓவியம்.

"இறைவன் அன்பு மயமாக இருக்கிறான். இறைவனுடைய அன்புதான் மன்பதையுலகம் முழுவதையும் உண்டாக்கியது. அவ்வன்பே உயிர்களிடத்திலும் நிறைந்து நிற்கிறது. அவ் அன்பைப் பாழாக்கி விடாமல் பேணி வளர்ப்பவர்கள் அன்பு மயமாய், தெய்வ மயமாய் ஆகி விடுவார்கள்" என்னும் உண்மையைத் தம் படைப்பின் மூலம் உலகிற்கு உணர்த்தியவர் நாச்சியார்.

ஆண்களுள் தலைமையானவன் இறைவனே; அன்றி, மற்றவரெல்லாம் ஆண்கள் என அழைக்கப்படுவது உபசார வழக்காகும். இறைவனிடத்தில் மக்களுக்கு உண்டாகும் காதலே மெய்யான காதலாகும். ஆண் பெண்களுக் கிடையே உண்டாவது போலிக் காதலாகும். நாடக மேடையில் நடிக்கும் ஆண் வேடம் பூண்ட பெண்ணின் மீது, மற்றொரு பெண்ணிற்கு உண்டாகும் காதல் போன்றதே, இம்மண்ணுலக மக்களின் காதல் என்று உணர்ந்து மெய்யுணர்வுக் காதல் நெறியினை முறையாக விளக்கியவர் ஆண்டாள்.

இம்மண்ணகக் காதலை விண்ணகக் காதலாக மாற்றிய பெருமை சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாரைச் சாரும். இம்மெய்புணர்வுக் காதல் நெறியின் கரு தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது.

காமப்பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்[15]

இப்பாடாண்திணை நூற்பாவில், தொல்காப்பியர் தெய்வீகக் காதலைக் குறிப்பிடு கிறார் என்று கொள்ள இடமுண்டு என்பர் பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு அவர்கள்.[16]

Koviloor Digital Library

இந்நூற்பாவிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், "பக்குநின்ற (பிரிந்து நின்ற) புணர்ச்சி வேட்கை, கட்புலனாகிய கடவுளிடத்தும் நீக்கார்" என்று கூறுகின்றார். அதோடு நில்லாமல், "காமப்பகுதி" என்பதனை 'அது' கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பனவும், அவர் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பன வும், கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம், என்று தெளிவான தொரு விளக்கத்தினைத் தந்துள்ளார்.

ஈண்டு, 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும்' என்னும் பகுதியே நாச்சியாருக்கு உகந்ததாகும். ஆராய்ச்சிக்குரியதும் அதுவேயாகும்.

பக்திநெறியில் ஆன்மாக்கள் எல்லாம் பெண்களாகவே கருதப்படுகின்றன என்பது முன்னரே விளக்கப்பட்டது. இக்கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு இத்தொடருக்கு, 'கடவுளிடத்து மானிட வடிவிலேயுள்ள ஆன்மாக் களாகிய பெண்கள் கொள்ளும் காதல்' எனவும், 'கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பன' என்பதற்கு, இறைவன் மானிட வடிவிலுள்ள, ஆன்மாக்களாகிய பெண்டிரைக் காதலிப்பது' எனவும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு இந்நூற்பாவுக்குப் பொருள் கொள்ளுவதைப் 'பேரின்பக் காதல் நெறியின்' அடிப்படைக் கருத்தினை அறிந்தவர்கள் தவறாகக் கருதார்[17] என்பதும் குறிக்கத் தக்கது.

சங்க இலக்கியத்துள் இக்காதல் நெறிக்குச் சான்றுகள் ஒன்றும் காணப்படவில்லை. தேவார காலத்திலே இந்நெறி போற்றி வளர்க்கப்பட்டுள்ளது.[18] நாயக நாயகி பாவனையில் பாடிய ஆழ்வார்கள் இக்கூற்றுக்கு ஏற்றதோர் எடுத்துக் காட்டாகத் துலங்குகின்றனர். வைணவ சமய அருளாளர்களான திருமங்கை யாழ்வார் பாடியருளிய சிறிய திருமடலும், பெரிய திருமடலும், நம்மாழ்வார் இயற்றியருளிய திருவாய் மொழியும், திருவிருத்தமும் மெய்யுணர்வுக் காதல் நெறியை வளர்த்த பேரின்ப இலக்கியங்களாகும்.

காண்பவை எல்லாம் காதலன் திருவடிவே என்னும் மெய்யுணர்வுக் காதல் நெறியினை நாச்சியார் திருமொழி நவில்கின்றது. இத்திருமொழி நாச்சியார் இயற்றிய இரண்டாவது நூல். இறைக்காதல் இன்பத்தில் தோய்ந்து பாடப் பெற்றது இது. தலைவனோடு கலந்த காதலைச் சொல்லாமல் தீட்டிக் காட்டுவதே இத்திரு மொழி. "இந்நூலிற்குத் திருமொழி எனப் பெயரமைந்ததைக் காட்டிலும் காதல் மொழி எனப் பெயரமைந்திருப்பின் மிகப் பொருத்தமாகும்"[19] என்பது முற்றிலும் உண்மை.

Koviloor Digital Library

திருமொழியின் திரண்ட பொருள்

ஆண்டாள், திருப்பாவையில் திருமாலை அடைய வழிகோலினார்; அவனுக்கே தொண்டாற்றுவதாக முடிவு செய்தார். ஆயினும், அதில் அவனை அடைந்து அனுபவிக்கும் பேறு நிலையாய்க் கிடைத்திலது. ஆகவே இத்திருமொழியில், மாயபிரானை அடையக் கருதிய இவர், மன்மதனைப் பற்றுகிறார்.[20] இச்செயலைப் பொறாத பெருமாள், காட்சி அளிக்கிறான். ஆயினும், காலந்தாழ்த்து வந்த அவனோடு சொல்லாட இவர் மனம் இசைந்திலது. அதனால், அவனை நோக்காதவர் போலச் சிற்றில் இழைக்கிறார்.[21] அச்சிற்றிலைக் கலைக்க முற்படுகின்றான் அம்மாயக் கண்ணன். அவ்வமயம் இருதிறத்தினர் நெஞ்சும் கலந்து உறவாடுகின்றது. சிறுபோதில் அவ் இறைவனது உருவெளித் தோற்றம் மறையவே, ஆண்டாள் நெஞ்சம் நெகிழ்கிறது. நல்ல கணவனை அடைதற் பொருட்டுப் 'பனி நீராடல்' நாட்டு வழக்கம். அதன்படியே இவர் பல பெண்களோடு வைகறையில் பொய்கையில் நீராடச் செல்லுகிறார். இவர்கள் நிழலைப் பற்றிச் சென்றான் கண்ணன். இவர்கள் கரையில் வைத்த அணிகளையும் ஆடைகளையும் வாரிக் கொண்டு குருந்த மரத்தேறி இருக்கிறான். கவர்ந்த கூறைகளை இரந்து பெற்றாள் கோதை.[22] பெற்ற பின் வீடு திரும்பு கின்றனர் மகளிர்.

அவன் பிரிவை ஆற்றாது கோதை கூடலிழைத்துப் பார்க்கிறார்.[23] அக்கூடல் இவருக்கு ஒரு வழியையும் காட்டிலது. ஆதலின், அங்கிருந்து குயில்களை நோக்கி "எம்பெருமான் என்னைக் கடைக்கணிக்குமாறு கூவுவாய்" என வேண்டுகிறார்.[24] வேண்டிப் பெற்றது யாதுமில்லை. ஆகவே அல்லும் பகலும் அவன் நினைவிலேயே ஆழ்ந்திருக்கும் கோதையார், கண்ணன் வந்து தம்மை மணப்பதாகக் கனவு காண்கிறார்.[25] அது கனவு ஆகவே இவர் மனம் தொடர்ந்து கொதிப்புற்றது. தோழிக்குக் கனவு நிலை உரைத்தும் பயனில்லையாகவே, தலைவ னோடு தொடர்பு பட்ட பொருள்களெல்லாம் இவரை வருத்துகின்றன. அவன் திருவவதாரத்தின் இனிமையைப் பாஞ்சசந்நியத்தினிடம் வினவி வினவிப் பொழுது போக்குகின்றார்.[26]

மரங்கள், கனிகள், மழை முதலிய இயற்கைப் பொருள்களில் இறையைக் கண்டு களிக்கிறார். மேகத்தைத் தூது விடுகிறார். பெருமானை வழிபடுகிறார்; 'கார்க்கோடல் பூக்காள்' என விளித்துக் காமம் மிக்கு இரங்கிப் பேசுகின்றாள்.[27] ஆயினும் அவனைச் சேர இயலாமையின் வருத்தம் வாட்டுகிறது. தம் நிலையைக் கண்டு தம்மிலும் துன்புறும் தோழியர், தாயரை நோக்கித் தலைவன் விரைவில் வந்து தண்ணளி செய்வானென்று அவர்களைத் தேற்றுகிறார்; தாமும் சிறிது ஆறி இருக்கிறார்.[28]

Koviloor Digital Library

சிறிதுபோது கழிந்ததும் தம்மை, ஆற்றாமை மிக வாட்ட, தம்மைச் சுற்றி உள்ளவரை நோக்கி, அவன் அர்ச்சையாய் எழுந்தருளி இருக்கும் ஏதேனும் ஓரிடத்தில் கொண்டு போய்த் தம்மை விடுமாறு இறைஞ்சுகிறார்.[29] அவர்கள் அங்ஙனம் செய்ய ஒருப்பட்டார்களல்லர்; ஆகவே அவன் தொடர்பு வாய்ந்த ஆடை முதலான எப்பொருளையேனும் கொணர்ந்து தம் வாட்டம் தணிக்க வேண்டுகிறார்.[30] இறுதியில் தாம் கருதிய வண்ணமே தலைவனிடம் சேர்ந்து அவனைக் கண்ணுற்றுக் கலந்து இன்பந் துய்க்கிறார்.[31]

இஃதே நாச்சியார் திருமொழியில் அமைந்த பொருள்; இதுவே இவரது வாழ்க்கைச் சித்திரமாகும், காதல் கதையாகும்.

வ.வெ.சு. ஐயர் அவர்கள் 'நாச்சியார் திருமொழி நாயகி பாவத்தின் உச்சி எல்லையைத் தட்டிப் பிடிக்கிறது' என்பர்.

திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய இவ்விரு நூல்களுமே கோதையார் பாவனையிலேயே உருக்கொண்டெழுந்தன என்பதனை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இவை கவிஞருக்குக் காவியம்; புலமை நலத்தினையுடை யோருக்குப் பொற்புடை ஓவியம்; தத்துவருக்கு மெய்யுணர்வுக் காதல் நிதி; அக இலக்கிய மரபினையொட்டிய ஊற்றுக்களம்; அக இலக்கண மரபுகளுக்கு இருப்பிடம். சமயச் சான்றோர்க்குப் பத்திப் பரவசம் ஊட்டும் புதையல் என்றெல்லாம் துணியலாம்.

திருப்பாவை, நாச்சியார் திருமொழி இவ்விரு நூல்களையும் இரு நிலை மாடங்கள் அமைந்த ஒரு மாளிகை என்று கூறலாம். முதல்நிலை மாடம் திருப்பாவை – இதில் இறைவனுக்கும், இவர் தமக்கும் உள்ள தொடர்பு பத்தியாக உருக்கொண்டெழுவது. இரண்டாம் நிலை மாடத்தில் (நாச்சியார் திருமொழியில்) ஏற்பட்ட தொடர்பு 'பிரேம'மாக உருக்கொண்டு, வரம்பு கடந்த செயல்களையும் இயற்றித் தலைவன் தாள்களைத் தலைப்படுமாறு தூண்டுகிறது. இதற்குள் நாச்சியார் திருமொழிக்குக் காதற்பெருக்கு என்னும் பெயரினையும் இட வேண்டிய தாகின்றது.

நாச்சியார் காதல்

மானிட வர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே[32]

என்னும் நாச்சியார் கூற்று இவர் யாரிடம் காதல் கொண்டார் என்பதைக் காட்டுகிறது. இவருடைய காதல் தெய்வக் காதல், ஒருவர் பாலே காதலைச்

Koviloor Digital Library

செலுத்தும் உயர்குடி மகளின் சிறந்த பண்பு இஃதாகும். தமிழ் மண்ணிற்கேயுரிய பண்பு இது.

ஆண்டாளின் தூது

'வானாடும் மண்ணாடும் மற்றுள்ள பல்லுயிரும் தானாய எம்பெருமானை, நாயகனாகவே கொண்டு வழிபட்ட நாச்சியார் மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து தன் கைத்தலம் பற்றியதாகக் கனவு கண்டு மகிழ்ந்தவர். கண்ணனிடம் தான் கொண்ட பேரன்பாகிய பக்திப் பெருக்கைத் தெரிவிக்க மேகத்தைத் தூதாகச் சென்று வருமாறு வேண்டிப் பாடுகின்றாள்.

'வான் கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்' என்று மேகத்தை விளிக்கின்றாள். விளித்து,

உலங்குண்ட விளங்கனி போல்
உள்மெலியப் புகுந்து, என்னை
நலங்கொண்ட நாரணற்கென்
நடலைநோய் செப்புமினே[33]

என்று வேண்டுகின்றாள். இங்ஙனம் மேகத்தை விளித்துப் பாடியதோடமையாது,

பொங்கியபாற் கடல்பள்ளி கொள்வானைப்
புணர்வதோ ராசையி னாலென்
கொங்கைகிளர்ந்து குமைத்துக் குதுகலித்
தாவியை யாகுலம் செய்யும்
அங்குயிலே! உனக்கென்ன மறைந்துறைவு
ஆழியும் சங்குமொண் தண்டும்
தங்கியகை யவனைவரக் கூவில்நீ
சாலத் தருமம் பெறுதி[34]

எனக் குயிலையும் தூது விடுக்கின்றாள். ஆகவே மேகமும், குயிலும் நாச்சியார் தூது விட்டதனால் மிகு ஏற்றம் பெறும் பொருள்களாகின்றன எனலாம்.

இக்கடவுட் காதலில் இவருக்கு, அத்திருமால் தம்மைக் கைப்பற்றுவனோ என்னும் ஐயந்தோன்றவேதான் கூடல் இழைத்துப் பார்க்கிறார்.

ஆய்ச்சி மார்களும் ஆயரும் அ ஞ்சிடப்
பூத்த நீள்கடம் பேறிப் புகப் பாய்ந்து
வாய்த்த காளியன் மேல்நட மாடிய
கூத்த னார்வரிற் கூடிடு கூடலே![35]

Koviloor Digital Library

என்று பாடுகின்றார்.

இவரின் ஊன்றிய காதல் ஊற்றத்தினை,

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்தி ருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப் புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே![36]

எனச் சங்கை அன்புடன் வினவுகின்றமை எடுத்துக்காட்டும்.

ஒரு தலைவியைத் தலைவன் விட்டுப் பிரியுங்கால் அவள் கைவளை, உறக்கம், சிந்தை யாவும் அவளை விட்டு நீங்கி வருந்துதல் இயல்பு. கோதைக்கும் இந்நிலை வாய்க்கிறது. ஆகவே இவர்,

ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோ டிவையெல்லாம்
எளிமையா லிட்டென்னை யீடழியப் போயினவால்
குளிரருவி வேங்கடத் தென் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள் ஆவிகாத் திருப்பேனே?[37]

என்று அரற்றுகின்றார். கரைகடந்த உண்மைக் காதல் நிலையை ஈண்டு உணரலாம். அதே நேரத்து உயரிய நாணமும் காதல் கரைபுரண்டோடுவார் மாட்டு நிலை பெற்றிருத்தல் இல்லையென்பதும் உணரப்படும். இதனைத் திருவள்ளுவரும்

காமக் கணிச்சி உடைக்கும் நிறை என்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு![38]

என்ற குறளில் காட்டுவார்.

சேணும் அகலா துடன்என்னோ டாடித் திரிந்துவந்த
நாணும் அழியத் தகுகற்பு மேம்பட நைகின்றதே![39]

என்று இறையனாரகப் பொருளுரையும் இதைச் சுட்டுகின்றது.

'அளிதோ தானே நாணே;' என்று தொடங்கி, 'தாங்கும் அளவைத் தாங்கிக் காம நெரிதரக் கைந்நில் லாதே' என்று முடித்து வைக்கும் குறுந்தொகைப் பாடல்.[40]

இத்துணைத் தமிழ் நூல்கள் நேரிதாக விரிக்கும் அக இலக்கிய இலக்கண மரபின்வழி நாச்சியாரும் இயற்றுகின்றார்.[41]

இனி, இந்தக் காதற்பெருக்கே இவரை அக்கண்ணன் தொடர்புற்ற பொருளும் தம் காதலைத் தணிக்கும் எனக் கருதச் செய்தது.

Koviloor Digital Library

கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சிப் பழகிக் கிடப்பேனைப்
புண்ணிற் புளிப்பெய் தாற்போலப் புறநின் றழகு பேசாதே
பெண்ணின் வருத்த மறியாத பெருமா னரையிற் பீதக
வண்ண வாடை கொண்டென்னை வாட்டம் தணிய வீசீரே[42]

இந்தப் பாடல் கோதையாரின் ஆழ்ந்த அன்பினை அடையாளங் காட்டுகின்றது. ஆகவே திருமால் மாட்டு இவர் செலுத்திய உயர்காதல் இவருடைய தூய ஆன்மாவை உய்யச் செய்தது என்பதனை, 'விருந்தா வனத்தே கண்டோமே' என்னும் இறுதி திருமொழி காட்டுகின்றது. ஈண்டு, இவரின் காதல் வெள்ளம் பெருமாளின் உயர்கரையைத் தொட்டு ஆர்ப்பரித்ததை நன்கு உணரலாம்.

ஆண்டாள் பாடல்களில் அகப்பொருள் கிளவிகள்

சங்க நூல்களிற் கூறப்படும் தெய்வங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது உ.வே.சாமிநாதையர் 'காமனையும்' குறிப்பிடுகின்றார். முன்னாளில் மன்மதன் கோயில் பற்பல இடங்களில் இருந்தது. காமன்கோட்டம் என்று அக்கோயில் சொல்லப்படும்.

"திருமாலைப் பெறவேண்டுமென்று சூடிக்கொடுத்த நாச்சியார் மன்மதனைத் துதித்த ஒரு பதிகம் நாச்சியார் திருமொழியிற் காணப்படுகிறது. கன்னிப் பெண்கள் நல்ல கணவனைப் பெறக் காமனை வழிபட்டுத் துதிப்பர். காமன் கோட்டத்தில் விவாகம் செய்வதும் வழக்கம்"[43] என்பார் உ.வே.சா.

தலைவி தெய்வம் போற்றல் (அனங்கனை வேண்டல்) நாச்சியார் திருமொழியில் காணுமாறு முல்லைக்கலி இலக்கியமும்,[44] தஞ்சைவாணன் கோவை இலக்கணமும் காட்டும்.[45] தலைவி தன் பொருட்டு வேறு தெய்வத்தைப் பரவி நிற்றலைப் பின் வந்த நூல்களான தஞ்சைவாணன் கோவை,[46] மாறன் கோவை,[47] அகப்பொருள் விளக்கம்[48] ஆகியவற்றில் காணலாம்.

தலைவி ஊடுதல் நாச்சியார் திருமொழியில் இடம் பெற்றுள்ளது.[49] தலைவி தன் தலைவனோடு கலந்து இன்பந்துய்த்த போது, தான் தோழிக்குச் சுனையாடி வந்ததாய் மறைத்துச் சொல்வதும், தோழி அதை வியந்துரைத்தலும் பண்டைய வழக்கு. அங்ஙனமே ஆண்டாள் சுனையாடச் சென்ற இடத்தில் கண்ணன் போந்தான். இருவருக்கும் சேர்க்கையுண்டாயிருப்பது

... ... எம்மைப்
பற்றி மெய்ப்பிணக் கிட்டக் கால் இந்தப்
பக்கம் நின்றவர் என்சொல்லார்?[50]

என்பதுரைக்கும். இதனால் மெய்தொட்டுப் பயிறல் மெய்ப்பிக்கப்படுகின்றது.

Koviloor Digital Library

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்[51]

என்னும் வள்ளுவர் வாக்கு நாச்சியார் திருமொழியிலும் நயம்படச் சித்திரிக்கப் பட்டுள்ளது.

தலைவி தலைவனிடம் பறவைகளைத் தூதுவிடல் பண்டைய அக மரபு. நாச்சியாரின் ஐந்தாம் திருமொழி அவ்வாறு அமைகின்றது.

தலைவி தன் கவின் அழிவை உரைத்தல் குறுந்தொகையில்[52] காணப்படு மாறு நாச்சியார் திருமொழியிலும் உள்ளது.

காமம் மிக்க கழிபடர் கிளவி இறையனார் அகப்பொருளுரைக்குப் பொருந்த ஈண்டு அமைகிறது.[53]

வாரண மாயிரம் சூழ வலம் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்[54]

என்று தொடங்கும் ஆறாம் திருமொழி முழுமையும் 'தலைவி கனவு நிலையுரைத்தல்' என்பதற்குக் துறைக் களமாகின்றது. இன்றும் வைணவர் மண வினைகளில் இத்திருமொழி ஓதாமல் மண நிகழ்ச்சி முற்றுப் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்திருமொழியில் ஒரு பாதி தமிழர் திருமணச் சடங்குகளையும், மறுபாதி வைதிக மணச் சாயலையும் பெற்றிருப்பது உன்னுதற் குரியதாம்.

பருவங்கண்டு புலம்பல் நற்றிணை[55] குறுந்தொகை[56] ஆகியவற்றுள் காணுமாறு நாச்சியார் திருமொழியில் பாடப்பெற்றுள்ளன.[57] அதிலும் கார்ப்பருவம் கண்டு புலம்பல் சங்க இலக்கியங்களில் மிகுதி. கார்முகில் வண்ணனின் பிரிவிலும் அவை மிகுதியும் அமைகின்றன.

நாணிழந்து வருந்துதலும், காம மிகவுரைத்தலும் திருமொழியில் அமைகின்றன. இவை பிற்கால இலக்கண நூல்களில் அகத்துறைகளாக இடம் பெற்று விட்டன.[58]

அகத்துறையுள் அடங்காத துறைகள் பல ஆண்டாள் பாடல்களுள் உள்ளன. அவற்றிற்கு ஒருவராலும் திணையும் துறையும் வகுத்தற்கு இயலாது. ஆயினும் புது மரபுகள் என அவற்றைச் சுட்டலாம்.[59]

Koviloor Digital Library

கருங்கக் கூறின் ஆண்டாள் அரங்கன்பால் கொண்ட காதல் தமிழ்நாட்டுப் பண்டைய அகமரபுக் காதலாம். பெரியாழ்வார் நூற்றெட்டுத்தலங்களில் உறையும் திருமாலின் தோற்றத்தைக் கூறி, அவர் யாரை வரிக்கிறாரென்று கேட்ட போது, மூன்று தலங்களில் உறையும் மாலிடம் மயக்கந் தோன்றியதென்றும், இறுதியில் அவர் தேர்ந்தது திருவரங்கத் தலமே; அணைந்தது திருவரங்கப் பெருமானேயாம் எனக் காண்கிறோம்.

'கார்க் கோடல் பூக்காள்' என்னும் பத்தாம் திருமொழி தலைவி தலைவனைப் பிரிந்த நிலையில் மனம் றாது வருந்திக் கூறுதலாகும். இந்தப் பதிகம் மிகவும் அகப் பொருட்சுவையுடைத்து. இதில் காமம் மிக்க கழிபடர் கிளவி, போலி கண்டு இரங்கல், கடலோடு இரங்கல் போன்ற பல அகப்பொருட் கிளவித் துறைகளின் அனுபவத்தைக் காண்கிறோம்.

காந்தள் பூக்களை விளித்துத் தலைவி, கரிய கடல் வண்ணன் போனவிடத்தைக் கேட்கின்றாள்; அவனுடைய திருத்துழாய் மாலைக்கு இவள் நெஞ்சம் ஆசைப்பட்டு ஒடுகின்றது. இதனைக் கண்டு மேலே பூத்து நின்ற தோன்றிப் பூக்கள் சிரிக்கின்றன. கோவைக் கொடியைக் காண்கின்றாள் தலைவி; "நீ உன் கொழுங்கனி கொண்டு என் தலைவனுடைய வாயழகை நினைப் பூட்டாதே" என்று இவள் கெஞ்சுகின்றாள். அடுத்து, "ஏ முல்லைப் பிராட்டி! நீ உன் முறுவல்களைக் (வெண்மையான பூக்களை) கொண்டு எனக்கு அல்லலை விளைவிக்காதே" என்று அடைக்கலம் வேண்டுகின்றாள் தலைவி.

இவ்வாறே பாடும் குயில்கள், கூட்டமாக உள்ள மயில்கள், மாமழை மேகம், கரிய கடல் முதலானவற்றைக் காணுந்தோறும், இவளுக்குப் பெருமானைக் கண்டாலொத்த உணர்வு மீதூருகின்றது. ஆகவே, "நோக்குவ எல்லாம் அவையே போறல்" என்னும் தொல்காப்பியர் துறையை ஈண்டுச் சிறக்கக் காணலாம்.

அகப்பொருள் மரபுகளை விரித்துரைக்கும் போக்கில் இந்த ஒன்பதாம், பத்தாம் திருமொழிகள் சிறந்து நிற்கின்றன என்றும் துணியலாம்.

கோதை தமிழ் அது கோதில் தமிழ். அது பாவை தமிழ் பழகு தமிழ் ஆகின்றது; திருமொழித் தமிழ் உலகக் காதலை விடுத்து, உயிர்க் காதலை எடுத்துரைக்கின்றது. உயிர்க்காதலும் இறைக் காதலும் ஒன்றே. இத்திருமொழி அதைச் செவ்வனே விளக்கி நிற்கின்றது. இதனால், காதலைக் கழறும் இலக்கிய இலக்கணங்களிலும், சமய நூல்களிலும் சூடிக் கொடுத்த நாச்சியார் மலர்ந்தருளிய காதல் நூலாகிய இத்திருமொழியே சீரியதென்று துணியலாம். தமிழும் தம் பண்ணார் பாடல்களும் வேறல்ல என்பது இவர் கருத்து. இதற்கு,

Koviloor Digital Library

"கோதை வாய்த் தமிழ் வல்லவர்"

"கோதை சொல் தூய தமிழ் மாலை"

"கோதை தமிழ் ஈரைந்தும்"

என்னும் சொற்றொடர்களே தக்க சான்றுகளாகும். இவர் பாடல்கள் இயற்றமிழிற்கு இருப்பிடம்; நாடக அமைப்புகள் அமைந்தவை; இசையால் ஆக்கப் பட்டுள்ளன. இவ்வகையில் கோதை தமிழ் பழைய மரபுகள் புது உருவங்கள் பெற்று, முத்தமிழும் கலந்துள்ள வித்தகம் நிரம்பியது என விளம்பலாம்.

★

Koviloor Digital Library

குறிப்புகள்

1. திருக்கண்ண மங்கையாண்டான், தனியன்.
2. திருக்கண்ண மங்கையாண்டான், தனியன்.
3. பெரியவாச்சான் பிள்ளை.
4. உபதேச ரத்தினமாலை, 24.
5. எஸ். கிருஷ்ணவேணி அம்மையார், பெரியாழ்வார் பெண்கொடி, ப.110.
6. ஜீவான்மாக்கள் யாவும் பெண் தத்துவங்களே, பரமான்மா ஒருவனே ஆண் தத்துவமாய் உள்ளான். சில ஆன்மாக்கள் ஆண் உடலையும், சில பெண் உடலையும் தாங்கி உள்ளன. ஒவ்வொருவரும் பெண் இயல்பை அடைந்தா லன்றி, இறைவன் இன்னருளைப் பெற இயலாது என்பது சாத்திரங் கண்ட உண்மை. ஆகவேதான் ஆண் உடலைத் தாங்கி நின்ற ஆழ்வார்கள் திருமாலை அடைதற்குத் தம்மைப் பெண்ணெனக் கருதினர். இதனால், இறைவனை எய்த உன்னும் ஒவ்வோர் ஆன்மாவும் பெண்மையை அடைந்தே தீர வேண்டும் என்பது பொருளாகின்றது.
7. எம். ராதாகிருஷ்ண பிள்ளை, தமிழும் வைணவமும், பக்.62–63.
8. இ.எஸ். வரதராஜ அய்யர், முற்கூறிய நூல், ப.280.
9. ஜி.எதிராஜுலு நாயுடு, பக்திப் பூங்கா, ப.12.
10. எஸ். கிருஷ்ணவேணி அம்மையார், முற்கூறிய நூல், ப. 97.
12. திருப்பாவை, 21.
13. குலத்தை நோக்காத உயர்குலம், ஆயர் மகளிரிடம் அன்பு கொண்ட காரணம் (குடியை நோக்காதது). நோன்பு என்னும் போக்கினாலே, எம்பெருமான் பக்கலிலே சென்று, "உனக்குச் சேஷமாயிருந்து தொண்டு செய்து வாழ வேண்டிய இந்த ஆன்மா வேறு வகையில் சென்றழியாத வண்ணம் காத்து, இதற்கேற்ற கைங்கரியங்களைக் கொடுத்து, இதை உய்யச் செய்ய வேண்டும்" என இறைஞ்சுவதைத் தன்னுள் கொண்டுள்ளது.
14. பிள்ளை லோகாசாரியார், ஸ்ரீவசன பூஷணம்.
15. தொல். பொருள். 83.
16. டாக்டர். க.த. திருநாவுக்கரசு, தமிழ் நிலவு, ப.59.
17. டாக்டர். க.த. திருநாவுக்கரசு, தமிழ் நிலவு, ப.60.
18. அ) அருள்வயிற் சிறந்த அகத்திணை மருங்கின்

Koviloor Digital Library

இருளறு நிகழ்ச்சி இவையென

ஆ) திருவாசகம் 10:15, திருவாசகம், 18:1, 4.

19. எஸ். கிருஷ்ணவேணி அம்மையார், முற்கூறிய நூல், ப.101.
20. திருமொழி, 1.
21. திருமொழி, 2.
22. திருமொழி, 3.
23. திருமொழி, 4.
24. திருமொழி, 5.
25. திருமொழி, 6.
26. திருமொழி, 7.
27. திருமொழி, 8, 9, 10.
28. திருமொழி, 11.
29. திருமொழி, 12.
30. திருமொழி, 13.
31. திருமொழி, 14.
32. நா. திரு., 1–5.
33. நா. திரு. 8:6:4:8.
34. நா. திரு. 5:7.
35. நா. திரு. 4:4.
36. நா. திரு. 7:1.
37. நா. திரு. 8:3.
38. திருக்குறள், 126–1.
39. இறையனாரகப் பொருள், 178.
40. குறுந்தொகை, 149.
41. நா. திரு. 12:6.
42. நா. திரு. 13:1.

Koviloor Digital Library

43. உ.வே. சாமிநாதையர், சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும், ப.85.
44. முல்லைக்கலி, 109:17–20.
45. தஞ்.வா.கோ., 286.
46. தஞ்.வா.கோ., 287.
47. மாறன் கோவை, 459.
48. அகப்பொருள் விளக்கம், 206.
49. நா. திரு. 2:8: 2:9
50. நா. திரு. 2:9
51. திருக்குறள்
52. "உரஞ்செத்து முளனே தோழியென்
நலம் புதி துண்ட புலம்பி னானே"
53. இறை. கள. 214; நா.திரு.5:9; 5:10.
54. நா. திரு. 6:1.
55. நற்றிணை 243, 302, 381, 387
56. குறுந். 220, 391.
57. நா. திரு., 9:2; 10:1, 3, 4, 5, 6, 8.
58. நா. திரு., 12–2; 13–7.
59. காண்க பின்னிணைப்பு.

Koviloor Digital Library

இயல் பத்து

ஆழ்வார்கள் சிலர் பாடல்களில் அகப்பொருள் நுஞ்சுக்கம்

(முதல் மூவர், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார்
மேலும் திருவரங்கத்தமுதனார்)

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன்சொன் மாலை
இடராழி நீங்குகவே என்று

– பேயாழ்வார்

Koviloor Digital Library

ஆழ்வார்கள் சிலர் பாடல்களில் அகப்பொருள் நுணுக்கம்

ஆழ்வார்களை வரிசைப்படுத்துமிடத்து முதலாழ்வார்கள், திருமழிசை யாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடிகள், திருப்பாணாழ்வார், திருமங்கை மன்னன், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் என்பதே காலவரையறை பற்றிய முறை எனக் கொள்வர் ஒரு சாரார்.[1]

ஆழ்வார்கள் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திருமால் வழிபாடு தமிழகத்தில் இருந்து வந்தது. ஆனால் அது தனிச் சமயமாக இயங்கி வளர்ந்தது ஆழ்வார்கள் காலத்திலேதான் என்று கூறலாம்.

பொய்கையார், பூதத்தார், பேயார் என்ற முதலாழ்வார்கள் மூவரும் மற்றுமுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே தோன்றி நற்றமிழ்ப் பாடல்கள் புனைந்து சமயத்தைச் செழிக்கச் செய்தவர்கள் ஆவார்கள். இவர்கள் காலத்தாலே பழமைப் பட்டவர்களாகவே, இவர்கள் காலத்தை உறுதி செய்ய முடியாதென்கிறார் உரைகாரர். ஆயின் அமுதனார், இராமானுசர் பொய்கையார் ஏற்றிய ஞான விளக்கைத் தமக்கு வழிகாட்டியாகக் கொண்டார் என்று கூறுகின்றார். பொய்கையாரை வைணவ சமயத்தின் விடிவெள்ளி என்றும், முதலாழ்வார்கள் மூவரையும் வைணவ சமயத்தின் ஆதிகவிகள் என்றும் கூறலாம் என்பர்.[2]

முதலாழ்வார் மூவரே அம் மூவருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன்

என்னும் பொய்கையார் கூற்றினால்[3] மும்மூர்த்திகளுள் முதல்வர் தாம் வணங்கும் திருமாலே என்று கூறுவதை அறியலாம்.

புலனடக்கம் இறைவனை அடையும் வழிகளில் மிகச் சிறந்தது என்பது இவருடைய கருத்து.

நெறிவாசல் தானேயாய் நின்றானை ஐந்து
பொறிவாசல் போர்க்கதவம் சாத்தி[4]
அமையாப் பொறி புலன்கள் ஐந்தும் நமையாமல்
ஆகத்து அணைப்பார் அணைவரே ஆயிரவாய்
நாகத்து அணையான் நகர்[5]

என்றும் இவ்வாழ்வார் புலன்களை அடக்கி வழிபாடு செய்யும் இன்றியமை யாமையைப் பன்முறை தமது அந்தாதியில் வலியுறுத்துகின்றார். மேலும் இவர்

Koviloor Digital Library

வேள்விகளையும் சடங்குகளையும் விடப் பக்தி சிறந்தது என்று கூறு கின்றார்.[6]

இவரைப் போலவே பேயாழ்வாரும்,

இன்றே கழல் கண்டேன்
ஏழ்பிறப்பும் யானறுத்தேன்

என்கிறார்.[7]

பேர் ஒதி ஏத்தும் பெருந் தவத்தோர் காண்பரே
கார் ஒத வண்ணன் கழல்[8]

என்கிறார் பூதத்தாழ்வார். இந்தப் பெருந்தவத்தோர் 'அறிந்து ஐந்தும் உள்ளடக்கி ஆய்மலர் கொண்டு ஆர்வம் செறிந்த மனத்தர்' என்றும் கூறுகின்றார்.

எனவே, இவர்கள் மூவருமே புலனடக்கத்தைப் பெரிதும் வற்புறுத்தக் காணலாம். மேலும் இவர்களுடைய மனமோ அழகிய கொழு கொம்பைத் தேடிப் படரும் கொடியை ஒத்து மால் தேடி ஓடும் மனமாக அமைவதையும், ஆய்வில் முன்னரே சுட்டப் பெற்றிருக்கின்றது. இதனால், தலைவனையன்றித் தலைவி வேறறியாள் என்னும் அகப்பொருள் நுணுக்கமே இவர்கள் பாடல்களில் காணப் படுகின்றனவேயன்றி அகத்துறைப் பாடல்களைப் பலவகையில் காட்டுதற்கில்லை.

காணக் கழிகாதல் கைமிக்குக் காட்டினால்
நாணப்படு மென்றால் நாணுமே[9]

என்னும் பூதத்தாழ்வாரின் இரண்டாந்திருவந்தாதி அடிகளும் காதல் விஞ்சிக் காட்டினால் "நீ சேஷி நான் சேஷ பூதன்" என்ற முறையிலே என்று இறைவனுக் கும் ஆன்மாவுக்குமிடையே உள்ள ஆராக் காதலையே காட்டுகிற தெனலாம்.[10]

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இளமூங்கில் வாங்கி – அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங் கடம்கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை[11]

என்னும் பாடலால் சங்ககால அகப்பொருள் இடம் பெறுமாறு பாடல் புனையுந் திறத்தை ஒரோ வழிக் காணலாம். தொடும் இன்பத்துக்கே எஞ்ஞான்றும் பிச்சேறித் திரியும் ஆண் யானையை எடுத்துக்காட்டி அது பெண் யானைக்கு முன்னே தனது அன்பு தோன்ற நிற்கும் நிலைகளையும் எடுத்துச் சொல்லுதல் அகப்பொருள் நூல்களிலேயே ஆங்காங்குக் காணலாம். இம்மரபு ஈண்டு ஏற்றமுற எடுத்து

Koviloor Digital Library

மொழியப் பெறுகின்றது.[12] 'இருகண் இளமூங்கில்' முதலான தொடர்களில் அமையும் உள்ளுறைப் பொருளும் உள்ளுதற்குரியது. சங்ககால இறைச்சிப் பொருள் ஆழ்வார் பாடலிலும் இடம் பெற்று அழகுறுத்துவதைக் காண்கிறோம்.

மூன்றாந் திருவந்தாதியிலும் இரண்டிடங்களில் இத்தகு அகப்பொருள் தரும் செய்திகள் வழி இறை செயல்களும் அவன் உறை இடங்களும் விளக்கம் பெறுகின்றன.

புரிந்து மதவேழம் மாப்பிடியோடு ஊடித்
திரிந்து சினத்தால் பொருது – விரிந்தசீர்
வெண் கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே[13]

இப்பாடலில் வரும் 'புரிந்து' 'ஊடி' என்ற சொற்களை நோக்கி மதங்கொண்ட யானை தன் பிடியுடன் களித்திருந்து பின் ஊடி அங்கும் இங்கும் திரிந்தது என்று காட்டுவர். கூடிய பின் ஊடிய களிறு கலவியால் வந்த செருக்குக்குப் போக்கு வீடாக அங்குமிங்கும் திரிந்து அங்குள்ள பளிங்குப் பாறைகளிலே தன் நிழலைக் கண்டு தன்னோடு பொரவந்த மற்றொரு யானையாக நினைத்துப் பெரிய சினத்தோடு அதனோடு சண்டை செய்தது என்றும் விரித்துரைப்பர் அப்பிள்ளை.

இதே போன்று பின்னொரு பாடலும் ஒரு மந்தியின் செயலாகக் காட்டுதல் நோக்குதற்குரியது.[14] "அன்பே வடிவாய்க் கொண்டிருக்கும் ஆண் குரங்கை நிலா ஒளியாலே ஊடல் தீர்ந்து அன்புடனே குளிரப் பார்த்து முகம் பார்ப்பதற்குக் காதலனைக் கண்ணாடி கேட்கும் காதலியைப் போலே களங்கமற்று வெளுத்து விளங்கும் சந்திரனைப் "பிடித்துத்தா" என்று கேட்டு நிற்கும் திருவேங்கடம்" என்பதில் ஊடுதலும், உறவாடுதலும் அகப்பொருள் சுவையின் அங்கங்கள் என்பதனைத் தெளிய வைக்கின்றன.

இவ்வாறு முதலாழ்வார்கள் மூவரும் ஆங்காங்கே சிறுசிறு அகப்பொருள் நுணுக்கங்களைக் காட்டி நிற்பினும். "... பேர் ஒதிப் பேதைகாள் தீர்த்தகரர் ஆமின் திரிந்து" என்று கூறித் திருமாலை வழிபடுபவர்களே உண்மையான தீர்த்தகரர் என்பதிலேயே இவர்கள் மனம் ஊன்றிக் கிடந்ததை நோக்கலாம்.

ஆழ்வார்களில் நான்காவதாக உள்ளவர் திருமழிசை பிரான். இவர் பேயாழ்வாரை ஞான குருவாகக் கொண்டாரென்று கூறுவர். இவரிடம் முதலாழ்வார்களிடம் காணப்படும் சமரசப் பொது நோக்கைக் காண இயலாது. இவர் வாழ்ந்த காலம் தமிழகத்தில் சமயப் பூசல் தோன்றிய காலம். அப்பர் முதலான நாயன்மார்கள் தோன்றிச் சைவ சமயத்தைப் போற்றியும், வைணவத்தை குறைப்படுத்தியும் கூறிய காலம் அது. எனவே இவர்,

Koviloor Digital Library

அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்
சிறியார் சினப் பட்டார்[15]

என்று நாவீறு கொண்டு பாடுகிறார். 'மாதவனை யேத்தாதார் ஈனவரேயாதலால் இன்று' என்று அழுத்தமாகப் பேசுகிறார். ஆகவே, இவர் காலத்தின் கண்ணாடி யாகவும் கருவியாகவும் விளங்கினார். மகாலட்சுமியுடன் கூடிய தேவனே சிறந்த தெய்வம் என்று இவர் கூறுகிறார்.[16]

அகப்பொருள் துறையில் இவர் பாடல்களில் 'கூடலிழைத்தல்' குறிப்பொன்றே காணக் கிடக்கின்றது.

அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட – மழைப்போர்
அருவி மணிவரன்றி வந்திழிய யானை
வெருவி அரவொடுங்கும் வெற்பு[17]

திருவேங்கடத்தானைக் கூடுவதற்காகத் திருக்கூடல் இழைப்பேன் என்கிறார். கூடல் இழைத்தலானது, வட்டமாகக் கோட்டைக் கீறி, அதற்குள்ளே சுழி சுழியாகச் சுற்றும் சுழித்து இரண்டிரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப் பட்டால் கூடுகையென்றும், ஒற்றைப் பட்டால் கூடாமை என்றும் கொள்ளப்படும்.[18]

திருமழிசையாழ்வாரின் மற்றொரு படைப்பான திருச்சந்த விருத்தத்திலும் அகப்பொருள் கருத்துகள் பரவலாக அறியக் கிடக்கின்றன.

நின்றியங்கும் ஒன்றலா உருக்கள்தோறும் ஆவியாய்
ஒன்றிஉள் கலந்துநின்ற நின்னதன்மை இன்னதென்று
என்றும் யார்க்கும் எண்ணிறந்த ஆதியாய்![19]

என்னும் பகுதி 'தத்துவ நிலை பரந்தாமனே எனல்' என்று துறை வகுத்துச் சொல்லப்படினும், தலைவன் தலைவியருக்குள்ள இணைபிரியாது ஒன்றா யிருக்கும் தன்மை – இரண்டற்ற நிலை (ஜகரஸ்யம்) "நின்னிற் பிரியேன், பிரியில் தரியேன்" என்றதன் ஆழ்ந்த கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கது. இவ்வாறே பிறிதோரிடத்தும் இப்பாடலுள் தலைவன் தலைவியரின் இணைபிரியாத நிலை (நித்யயோகம்) பேசப்படுகின்றது.[20]

இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியர் என்கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே

என்னும் சங்க இலக்கியத் தலைவி நிலை மாறி, இனி ஆழ்வார் பாடலில் இம்மையிலும் மறுமையிலுமேயன்றி விண்ணுலகு சென்றாலும் தலைவன்

Koviloor Digital Library

தலைவியருக்கு இடைப்பட்ட பிணைப்பு என்பது என்றும் இயக்க அறாத இன்ப வீடு பயக்கும் என்பது காட்டப்படுகின்றது.

மட்டுலாவு தண்துழா யலங்கலாய்! பொலன்கழல்
விட்டுவீழ்வி லாதபோகம் விண்ணில்நண்ணி யேறினும்
எட்டினோ டிரண்டெனும் கயிற்றினால் மனந்தனைக்
கட்டி வீடி லாதுவைத்த காதலின்ப மாகுமே[21]

என்னும் பாடல் இதற்குச் சான்றாகின்றது.

இது போன்றே, தலைவிக்குத் தலைவன் மேல் கொள்கின்ற ஆசையல்லது வேறொரு குறிப்பும் அவனது நெஞ்சில் புகலாகாது. எத்தனை விதமான கவர்ச்சி களும், தூண்டுதல்களும் ஏற்பட்ட போதிலும், மனம் மறுகக் கூடாது என்பது.

கேடில்சீர் வரத்தனாய்க் கெடும்வரத் தயனரன்
நாடினோடு நாட்டமாயி ரத்தன்நாடு நண்ணிலும்
வீடதான போகமெய்தி வீற்றிருந்த போதிலும்
கூடுமாசை யல்லதொன்று கொள்வனோ? குறிப்பிலே

என்னும் மொழியான் அறிய வருகின்றது.[22] ஆழ்வார் ஈண்டுத் தம் குறிக்கோள் – இலக்கு முழுவதும் தலைவனாகிய இறைவனோடு கூடியிருக்கின்ற ஆசையல்லது வேறில்லை என்கிறார். இதனால் தலைவிக்குத் தலைவன்மேல் கொள்ளுகின்ற ஆசையல்லாது வேறொரு குறிப்பும் அவளது நெஞ்சில் புகலாகாது என்பது நன்கு வற்புறுத்தப்படும் அகப்பொருள் நுணுக்கமாக அமைக்கப்படுகின்றது.

திருப்பாணாழ்வார் அழகிய மணவாளனாகிய திருவரங்கநாதனின் மெய்யழகில் ஈடுபட்டு அடி முதல் முடிவரை (பாதாதிகேசாந்தமான) தம் மனத்தைப் பறிகொடுத்துப் பேசுகின்ற வகையில் 'அமலனாதிபிரான்' பாடல்களை அமைத்திருக்கின்றார். இதன் ஈடுபாடு நோக்க, ஒரு தலைவி தன் தலைவனின் உடலழகில் ஈடுபட்டு அவன் ஒவ்வோர் உறுப்பின் எழிலிலும் மனம் ஒன்றிக் கிடக்கும் தன்மையை இவ்விடத்தில் அகப் பொருளுக்கு ஏற்பக் கருதலாம். நலம் புனைந்துரைத்தல், அகப் பொருள் துறைகளுள் ஒன்றாகும். இங்கு தலைவி கூற்றுப் போல் உள்ளது. ஒரு மரபுநிலை மாற்றம் எனலாம். உலகியலில் மானுடக் காதலில் தலைவனே இவ்வாறு தலைவியின் உறுப்பழகில் ஒன்றித் திளைத்துப் பாராட்டல் மரபு. வழிவழியாக இலக்கியங்காட்டும் காதற் காட்சிகளிலும் தலைவனின் நுகர்வாகவே இஃது உரைக்கப்படும். ஆயின் ஆழ்வார்கள் பாடல்களில் தலைவனின் செயல்கள், சிந்தனைகள், யாவும் தலைவிக்கே வைத்துப் பேசப்படுகின்றன. காரணம் என்னவெனில் இது கடவுள் காமம், மேலும்

Koviloor Digital Library

நுகர்வோன் ஒரு மானுடன், நுகரப்படுவோன் தலைவன், ஆகவே பாவனை நிலை மறுதலையாகக் கொள்ளப்படுவது துணிபு.

திருப்பாணாழ்வார் தாமான தன்மையிலிருந்து ஞானப் பேச்சுப் பேசினாலும் அது கருத்து முறையாலும், கருதும் நெறியாலும் இன்பத்துள் பேசும் இனிய பெண் பேச்சாகவே ஒலிப்பதை உணரலாம்.

கரிய வாகிப் புடைபரந்து மிளிர்ந்து
செவ்வரி யோடி நீண்டஅப்
பெரிய வாய கண்கள் ஏன்னைப் பேதைமை செய்தனவே![23]

என்னும் ஒலிப்பில், 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்' என்பது பழமொழி யன்றோ! அந்த அணிகலத்தை மேலும் மெருகேற்றச் செய்தாள் என்பது தெள்ளிதின் உணரப்படும். ஆகவே 'தலைவன் எழிலில் ஈடுபட்டுத் தலைவி பாசுரம் இடுதல் என்பது அடிக்கழஞ்சு பெறும்' என்பர் வைணவப் பெரியோர். அதனால் தான் இந்த 'அமலனாதிபிரானுக்கு' வைணவ சம்பிரதாயத்தில் உச்சநிலை கொடுத்திருக்கிறார்கள். இஃது அன்றாடம் படித்துப் பயில வேண்டிய ஒரு பிரபந்த மாகும். இப்பிரபந்தம் முழுவதிலுமே தலைவனின் கோலவழகு கொலு வீற்றிருப்பதைக் காணலாம்.

திருப்பாணாழ்வார் இறைவனை அமலன், விமலன், நிமலன், நின்மலன், நீதிவாணன் என்றெல்லாம் பெயரிட்டுப் பாடுகிறார். இச்சொற்களுக்குப் பொருள் சுத்தன், பரிசுத்தன் என்பதே. இவற்றிற்குப் பொருள் கண்ட பெரியார், 'இவன் சுத்தனாகையாவது தான் ஒருவன் சுத்தனாகையன்று; தன்னோடு சம்பந்தித்த வரையும் சுத்தராக்கவல்ல அடி 'அருள் உடைமை' என்று கூறுகிறார்.[24] பிறரோடு கலவாமல் தான் மட்டும் தூய்மையானாக யிருப்பவன் தன்னலம் படைத்தவன். தன்னோடு தொடர்புடைய அனைவரையும் தூய்மையராக்கக் கூடிய இரக்கமே உண்மையான தூய்மையாம். இந்தக் கொள்கையை நடைமுறையில் திருப்பாணாழ்வார் வாழ்வில் அரங்கநாதரே காட்டினாரென்பர்.

சைவம் நந்தனாரைத் தீயிலிட்டு வதக்கி ஆலய நுழைவு செய்வித்தது. ஆனால் வைணவமோ திருப்பாணாழ்வாரைச் சிறந்த வைதிகரான லோக சாரங்க முனியின் தோள்மேல் ஏற்றி அரங்கநாதன் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றது. இவர் திருக்கோயிலுக்குள் சென்றதும் அரங்கநாதனுடைய திருவடிவைப் பார்த்து, 'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று ஈடுபட்டார்; இந்நிலையில்தான் இவர் தலைவி நிலையை அவாவிப் பாடியதாகக் கற்பிக்கின்ற நிலையுளது.

Koviloor Digital Library

கண்ணனிடம் கடியகாதல் கொண்டவர் இவராகவே இந்த உருவ வருணனை இவருடைய உள்ளத்தினின்றும் ஒளியுடன் கூடி வெளி வருகின்றது.

காண்பனவும் உரைப் பனவும்
மற்றொன்றின்றிக்
கண்ணனையே கண்டுரைத்த
கடிய காதல்
பாண்பெருமாள் ...

என்று இவரை வைணவ உலகம் இன்றளவும் போற்றுகிறது. இதற்கு இவர் பாடிய பாடல்கள் அருளுகின்றன எனலாம்.

"நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அகப்பொருள் மரபுகள்" எனும் இவ்வாய்வேட்டுள் ஆழ்வார்களின் அருளிச் செயல்களுள் இடம் பெறாத இராமாநுச நூற்றந்தாதியைச் சேர்த்துக் கொண்டமைக்கான காரணத்தைச் சொல்ல வேண்டியுளது. ஆழ்வார் அருளிச் செயல்களோடு திருவரங்கத்தமுதனாரின் இராமாநுச நூற்றந்தாதியையும் சேர்த்து நாலாயிரமாகக் கொள்ளும் மரபுகருதியே இவ்வாய்வேட்டுள் இராமாநுச நூற்றாந்தாதி ஆய்வுக்கு உட்படுத்தப் பெற்றுள்ளது. மேலும் ஆழ்வார்கள் பாடல்களோடு இராமாநுச நூற்றந்தாதியைச் சேர்த்துக் கணக்கிடும் நெறி வடகலையாரின் மரபாகவும் உள்ளது. இவற்றோடு ஆழ்வார்களின் பாடல்களை உலகறியச் செய்த மாபெரும் பணியில் ஈடுபட்ட ஆச்சாரியர் இராமாநுசராவார். அவர் புகழ்பாடும் திருவரங்கத்தமுதனாரின் 'இராமாநுச நூற்றந்தாதியாகிய' பிரபந்த காயத்திரியை ஈண்டு ஆய்வுரையுள் அடக்கிக் காட்டுவது சாலவும் பொருந்தும் என்று கருதியே ஈண்டு ஆய்வுக்கு உட்படுத்தப் பெற்றுள்ளது எனலாம்.

இராமானுச நூற்றந்தாதி

மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து – எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா – உலகோர்களெல்லாம்
அண்ணல் இராமானுசர்வந்து தோன்றிய அப்போதே
நண்ணரு ஞானம் தலைக் கொண்டு நாரணற்கு ஆயினரே.

என்று கூறுகின்றார் திருவரங்கத்து அமுதனார்.[25] இவர் தம் பெயருக்கேற்ப அமுதமான சொல்லுடையவர் ஆயினும் சாத்திரங்களைக் கற்ற செருக்கு முதலில் இவருக்கு இருந்தது. கூரத்தாழ்வார் இவருக்கு ஆசாரியனாகி அவரால் திருத்திப்

Koviloor Digital Library

பணி கொள்ளப்பட்டார். இராமாநுசருடைய குணச் சிறப்புக்களில் ஈடுபட்டு இவர் பாடியது இராமாநுச நூற்றந்தாதி. நூற்றெட்டுப் பாடல்கள் கொண்ட அந்தாதி முறையில் பாடப்பட்ட இந்த நூல் ஆழ்வார்களைக் குறிப்பிட்டு இராமாநுசர் புகழாகப் பாடப்பட்டுள்ளது.

வைணவம் எப்படிப் பரவியது என்ற வினாவுக்கு வழிவழியாகச் சொல்லப் பட்டு வருகின்ற விடை ஈண்டுச் சிந்தனைக்குத் தெளிவாகும்.

> ஸ்ரீமந் நாராயணன் ஒரு கருங்கல். சுவாதந்திரியம் என்ற உப்பு கலந்தது. நம்மாழ்வார் என்ற மேகம் கிரகித்து அதன் சம்பந்தத்தால் உப்பு அகன்று காருண்யமாகிய நீரை நாதமுனி என்ற மலையில் பெய்விக்க உப்யக் கொண்டார், மணக்கால் நம்பி என்கிற இரு அருவிகள் மூலம் அந்த நீர் ஆள வந்தார் என்ற நதியில் கலக்கிறது. அதிலிருந்து இராமாநுசர் என்ற ஏரிக்கு வந்து அவரால் ஏற்படுத்தப்பட்ட 74 சிம்மாசனாதிபதிகள் ஆகிற மதகுகள் மூலம் சேதனப் பயிருக்கு வைணவம் என்ற நீர் பாய்ச்சப்படுகிறது.[26]

இந்தக் கூற்று தரும் கருத்தின்படி, உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள உறவை ஆழ்வார்களும் ஆசாரியர்களும் விளக்கியுள்ளனர்; இராமாநுசர் தெளிவுபடுத்தி வழி வகுத்திருக்கிறார் என்பதை உணரலாம்.

வீடு பேறு என்பது வைகுந்தத்தில் அவனோடு இருப்பு; அங்கும் அவனுக்குத் தொண்டு செய்தல்; அவனை அடையும் வழிகளில் 'சரணாகதி' எளிதாகப் பின்பற்றக் கூடியது; இதற்குத் திருமாலுக்கே உரியதாக இருக்க வேண்டும். அவன் இறைவன் தலைவன்; உயிர்கள் அவனுடைய சொத்து; அவன் இட்ட வழக்காய்த்தான் இருக்க வேண்டும்; இருக்க முடியும்; அவன்தான் எல்லா வற்றையும் இயக்குகிறான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது; அவன் இட்ட வழக்காய் இருப்பதை அடைய முயல்வதே உயிரின் குறிக்கோளாக இருக்க வேண்டும். பக்தியால் அவனை அடையலாம். பாவனையால் அவனை அனுபவிக்கலாம். ஏனெனில் அவன் அடியவர்க்கெளியவன். அவன் விழைந்த வினைகளை – செயல்களைச் செய்ய வேண்டியது உயிர்களின் கடமை. அவன் காரணமின்றிச் செய்யும் கருணை (நிர்ஹேதுக கருணை) உள்ளவன்.

இராமாநுசருடைய விசிட்டாத்வைதம் இதை நன்கு விளக்குகிறது. சித் அசித் – இவற்றோடு கூடிய பிரம்மம் ஒன்றுதான். சித் – உயிருள்ள எல்லாம்,

Koviloor Digital Library

அசித் – உயிரற்றவை எல்லாம் கூடிய ஈசுவரன் ஒன்றுதான் என்கிறது. அதாவது ஈசுவரன் சித் அசித்துடன் கூடி அவற்றை உடலாகக் கொண்டு தான் உயிராக இருக்கிறான். சித்அசித் அவன் சரீரம். ஈசுவரன் சரீரி. ஈசுவரனைப் போலச் சித்தும் அசித்தும் அழிவில்லாதவை, அவனை விட்டு எப்போதும் பிரியாதவை. ஈசுவரன் தீக்குணனல்லன்; சதுரப் பாடுடையவன், அறிவு (ஞானம்) வலிமை (சக்தி) இறை தன்மை (சுவாமித்வம்) அன்பு – தாயன்பு (வாத்சல்யம்) தனக்குக் கீழ்ப்பட்டோரிடத்தும் ஒக்கக் கலந்து பரிமாறும் தன்மை (சௌசீல்யம்) கைச்சரக் காயிருக்கும் எளிமை (சௌலப்பியம்) ஆகியவை உடையவன். அத்தகைய இறைவனைத் தமக்குத் தலைவனாந்தன்மையில் தாமே தலைவியராய் எண்ணமிட்டுப் பாடினர் ஆழ்வார்கள். அவர்கள் பாடல்களின் வகைகளில் தலைவி, தாய், தோழி, தலைவன் முதலானோர் பாடுவனவாக அமையும் கூற்று வகையும் உள. அவையேயன்றி ஆங்காங்கு இட்டு வைத்தாற்போன்ற அகப் பொருள் குறிப்புடன் கூடிய பாடல்களும் பொலிகின்றன.

இராமாநுசர் நூற்றந்தாதியில் அகப்பொருள்

உறுபெருஞ்செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும்
வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கியசீர்
செறிதரும் செந்தமிழ் ஆரண மேயென்றிந் நீள்நிலத்தோர்
அறிதர நின்ற இராமா னுசன்எனக் காரமுதே[27]

இப்பாடலின் பொருள் நோக்கின்படி அமுதனாருக்கு மிக்க பெருஞ் செல்வமும், தந்தையும், தாயும், ஆசிரியனும், இறைவனும் எல்லாம் இராமானுசரே என்பதாகும். இதிலிருந்து பெறவேண்டிய அகப்பொருள் குறிப்பாவது, எங்ஙனம் அமுதனாருக்கு எல்லாம் இராமானுசரோ, அது போலவே ஒரு தலைவிக்கு மேற்கூறிய அனைத்தும் தலைவனேயாகக் கொண்டு, அவனைத் தனக்கு ஆரமுதாகக் கொள்ள வேண்டும் என்பது என்பர்.[28] இப்பொருள் வலிந்து கொள்ளப்படுவதாகக் கருதுதற்கில்லை. என்னெனில் ஆரமுது – உயிர் ஈயும் மருந்து, ஒரு தலைவி தன் தலைவனை – அல்லது ஒரு தலைவன் தன் தலைவியை இவ்வாறு உணர்ந்து வருவது பண்டு தொட்டுப் பயின்றுவருவதேயாகும்.

நயவேன் ஒருதெய்வம்; நானிலத் தேசில மானிடத்தைப்
'புயலே' எனக்கவி போற்றிசெய் யேன் பொன் னரங்கம் என்னில்
மயலே பெருகும் இராமா நுசன்மன்னு மாமலர்த்தாள்
அயரேன் அருவினை என்னைஎவ் வாறின் றடர்ப்பதுவே?

Koviloor Digital Library

என்னும் கூற்றிலும் இந்த அகப்பொருள் தொனி அரண் செய்வதையும் நோக்கலாம்.[29]

இதனால் பெறப்படுவது "தலைவனையன்றி வேறொரு தெய்வமில்லை; அவன் திருவடியன்றி வேறொன்றும் நினையேன்; அவன் திருவடியையே மறவாதிருப்பேன்; என்னை எந்த இடரும் அருகே நெருங்காது, அவன் அருளும், வீரமும், அன்பும் எனக்கு அரணாகும்" என்பதாம்.

சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீரியநல்
காமமும் என்றிவை நான்கென்பர் நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம் அறம்பொருள் வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன் சீலன் இராமா நுசன்இந்த மண்மிசையே[30]

இங்குக் 'கண்ணனுக்கே ஆமது காமம்' என்பதிலுள்ள ஏகாரம் பிறரிடத்துக் காமம் கொள்ளல் கூடாது என்பதைக் காட்டுகின்றது என்பர் வைணவப் பெரியோர். அத்தகைய ஒன்றுபட்ட காமத்துக்கு உறுதுணையாயிருப்பது அறம், பொருள், வீடு; இது மிகவும் கூர்ந்து நோக்கத் தக்கது. ஆக, தலைவன் தலைவியோடு கொள்ளுகின்ற காமம் என்பது அறத்தின் வழிப்பட்டதாய், அறத்தின்வழி ஈட்டிய பொருள்வயின் பட்டதாய் முடிவில் அறமாகிய வீட்டினை அடையும்படியாகவும் நடைபெறுதல் வேண்டும் என்பது பெறப்பட்டது. எனவே கடவுட் காமத்திற்கான படிக்கட்டாக ஐந்திணைக் காமத்தைக் கொள்ளலாம்.

அமுதனார் இராமாநுசரை அக இலக்கியங்களில் தலைவன் தலைவியரை ஒன்று சேர்க்க அமையும் வாயில்கள் போலக் கருதுகின்றார்.

ஆயிழையார் கொங்கைதங்கும் அக்காதல் அளற்றழுந்தி
மாயுமென் ஆவியை வந்தெடுத்தானின்று[31]

என்று கூறும் கூற்றில் இங்குப் பெண் இன்பத்தில் மூழ்கிக் கிடந்த அமுதனாரை, அந்தச் சேற்றிலிருந்து எடுத்துக் காப்பாற்றித் தலைவனான இறைவனிடம் சேரப் பண்ணியவர் இராமாநுசர் என்றறிய முடிகின்றது. இந்தக் கருத்து ஆழ்ந்து சிந்தித்தற்கும், ஆராய்ச்சி செய்தற்கும் உரிய ஒன்றாகும்; தொல்காப்பியர் கூறிய துறைகளனைத்தும் ஆழ்வார்கள் ஏற்று அமைக்கவில்லை. தொல்காப்பியர் பன்னிரண்டு வாயில்கள் குறிப்பிடுகின்றார்.[32]

தொல்காப்பியம் அளவில் இன்பத்து ஐந்திணைக் காமம் என்று சிறப்பிக்கப்படும் தமிழர்தம் காம வாழ்வினைப் பலநெறியாலும் ஆராய்ந்து

Koviloor Digital Library

கூறுகிறது என்பர்.[33] தொல்காப்பியர் கூறிய பன்னிருவருள் விருந்தினர், கண்டோர் என்னும் இருவரை விலக்கி ஏனைய பதின்மரும் தலைவன் தலைவி என்னும் இருவருடன் தொடர்புடையவராவார். மேற்கூறிய வாயில்களுள் செவிலித் தாய், அறிவர் என்பவர் உயர்ந்த வாயில்கள். இவ்விருவருக்கும் அறிவர் என்போர் இயற்றமிழ் வல்ல சான்றோராவர். ஈண்டு அமுதனார் கருதும் வாயில் இராமாநுசர், அவர் அறிவர் – இயற்றமிழ் வல்ல சான்றோராவார் எனலாம். சொல்லளவில் 'வாயில்'; அறிவர் நிலையில் இராமாநுசர் அமைகின்றார் எனலாமேயன்றி, செயலளவில் தொல்காப்பியர் காட்டும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு நிற்கவில்லை; அதற்கும் அப்பாலே மிக்கப் பொறுப்புடன் தொல்காப்பியர் வாயில்களுக்குக் கூறிய இலக்கணத்திலிருந்து மாறுபட்டும் நடக்கின்றார் என்று துணியலாம். அமுதனார் ஆயிழையார் காதல் அவற்றில் அழுந்திக் கிடக்கும்போது, அவ்வொழுக்கம் கூடாது என்று இடித்துக் கூறித் தடுத்து நிறுத்தி, வாழ்க்கையில் கரையேற்றினார் என்பது உணரற்பாற்று.

★

Koviloor Digital Library

குறிப்புகள்

1. இ.எஸ். வரதராச அப்பர், தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.1 முதல் 1100 வரை) ப.305.
2. எம். ராதாகிருஷ்ணபிள்ளை, பிற்கால வைணவம், ப.14.
3. முதல் திரு. 15.
4. முதல் திரு. 14.
5. முதல் திரு. 32.
6. "புந்தியால் சிந்தியாது, ஒதிஉரு எண்ணும்
அந்தியால் ஆம்பயன் அங்குஎன்?"
– முதல்திரு. 33.
7. மூன். திரு. 2.
8. இரண். திரு. 6.
9. இரண். திரு. 56.
10. "ஏறின் – பெருத் தெருத்தங் கோடு ஒசியப் பெண்நசையின்
பின் போய், எருத்திருத்த நல்லாயர் ஏறு"
– இரண். திரு.62
11. இரண். திரு.73.
12. கலித், பாலை.11; இராமா. நூற். அத்.63, கம்ப. ராமா. பால., எழுச்சிப், 18., கம்பராமா. அயோ. கங்கைப்பட.
13. மூன். திரு. 45.
14. "தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி
அளிந்த கடுவனையே நோக்கி – விளங்கிய
வெண்மதியம் தா என்னும் வேங்கடமே"
– மூன். திரு.58
15. நான்முகன் திருவந்தாதி, 8.
16. எம். ராதாகிருஷ்ணபிள்ளை, முற்கூறிய நூல், ப.10.
17. நான். திரு. 39.
18. நாச்சியார் திருமொழி. 4
19. திருச்சந்த விருத்தம். 5.

Koviloor Digital Library

20. திருச்சந்த விருத்தம். 57.
21. திருச்சந்த விருத்தம். 83.
22. திருச்சந்த விருத்தம். 108.
23. அமலனாதிபிரான், 8.
24. எம். ராதாகிருஷ்ண பிள்ளை, முற்கூறிய நூல். ப.72.
25. திருவரங்கத்தமுதனார், இராமாநுச நூற்றந்தாதி, பாடல் 41.
26. காழியூர் சேஷாத்ரி மணவாளன், இராமாநுசர், ப.119.
27. இராமாநுச நூற்றந்தாதி, பாடல் 19.
28. சி. ஜெகந்நாதச்சாரியார், ஆய்வாளரிடம் கருத்து விளக்கத்தின்போது கூறிய கருத்து.
29. இராமாநுச நூற்றந்தாதி, பாடல் 35.
30. இராமா. நூற். அந். 40.
31. "காமம் சான்ற கடைக் கோட்காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"
– தொல்.
32. இராமா. நூற். 42–1–2.
33. தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையவர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப
– தொல். பொருள். கற்பியல். 52.

Koviloor Digital Library

இயல் பதினொன்று

நிறைவுரை

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்குமப் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

– பெரியாழ்வார் திருமொழி

Koviloor Digital Library

நிறைவுரை

இறைப்பற்று இலக்கியங்களில் கருத்துப் பொருண்மையினைத் தத்துவக் கண்கொண்டு காண்பதும், பண்பு – பயன்பாட்டு – நோக்கில் ஆராய்வதும், பொதுவாக அவற்றில் உறைந்து கிடக்கும் ஞானப் பொருண்மைகளை அறிதற்கு வழிகோலுவதாகும். ஆயின், இவ்விலக்கியங்களின் பாடுபொருளை வெளிப் படுத்துதற்கு, அடியார்கள் மேற்கொண்ட பாடுநெறி முறைமைகளை ஆராய்வது என்பது, இலக்கிய வெளியீட்டுப் பாங்குநெறி காண்பதற்கான வாயிலாகின்றது. எனவே, இவ்வகையில், இங்கு மேற்கொள்ளப் பெற்ற ஆய்வானது, ஆழ்வார்கள் தம் திருமொழிகளில் வெளிப்படையாகப் பேசப் பெறும் அகப்பொருள் வெளியீட்டுப் பாங்கிற்குரிய மரபுகளைப் பற்றியதாக அமைவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய நெறி முறையில் ஆய்வினை மேற்கொள்ளுவதும் முதன்முறையாக அமைகின்ற முயற்சியாகின்றது. இங்கு மரபுகள் என்னும்போது, இலக்கியக் காலங்களில் ஏற்கெனவே வழக்கில் உள்ளவை, உருவாக்கம் பெறுகின்றவை என்ற இருநிலைகளிலும் அவற்றைக் காண்பதற்காக வாய்ப்பு ஏற்படுகின்றது. அவ்வகையில் ஆழ்வார் திருமொழிகளில் காணப்படும் அகப்பாடல்கள் பற்றி இவ் ஆய்வில் பண்டைத் தமிழ் அக மரபுகளைக் போற்றிய பான்மை, மரபுகள் மாற்றம் பெற்றுள்ள திறம், புது மரபுகள் உருவாக்கம் பெற்ற புதுமை என முப்பெரும் போக்குகளைக் கண்டு அவற்றினை வகைப்படுத்திப் பொருள் விளக்கம் எடுத்துரைக்கப்படுகின்ற போக்கினைக் காண்கிறோம். இம்முயற்சிகளில் கீழ்வரும் முடிவுகள் சில ஆய்வுலகின் பார்வைக்கு அளிக்கப் படுகின்றன. இவற்றின் வன்மை, மென்மை, ஏற்புடைமை ஆகியன தொடர்ந்து இவ் ஆய்வு வளர்வதற்கான படிநிலைகள் என்பதும் மனங்கொள்ளத் தக்கதே. அவ்வகையில் முடிவுகளைக் காண்பதே ஆய்வு நாகரிகமும் ஆகின்றது.

1. தொல்காப்பியம், இறையனார் களவியல், நம்பியகப் பொருள் ஆகிய முப்பெரும் இலக்கணங்களை ஒப்பீட்டு நோக்கில் கண்டு, அவற்றில் அமைந்துள்ள அக மரபுகள் ஒன்றும் இடங்களும், வேறுபடும் இடங்களும் வரையறை செய்யப் பட்டுள்ளன. இதன்வழி நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இம்மரபுகள் போற்றப்பட்டும், மாற்றப்பட்டும், மரபுகள் ஆக்கம் பெற்றும் அமைந்துள்ளமை எடுத்துரைக்கப்படுகின்றன.

2. பக்தி இலக்கியங்களில் காணப்பெறும் அகப்பொருள் அமைப்பு, கைக்கிளை, பெருந்திணைப் போக்குகளைக் கொண்டனவாகக் கொள்ள இடமுண்டு என்ற ஆய்வு முடிவின் வன்மை, மென்மை ஆராயப் பெற்று, அவை அகனைந்திணை நெறி அளாவியது என்ற முடிவு பெறப்படுகிறது.

Koviloor Digital Library

3. ஆழ்வார் திருமொழிகளில் காணப்படும் அகப்பாடல்களின் மையப் பொருளாகிய நாயகன் நாயகி பாவம் விரிவாக ஆராயப் பெற்றுள்ளது. இந்நெறி உலகளாவிய பொதுமை கொண்டது என்பது வடவர் கோட்பாடு, கிறித்துவர் கோட்பாடு, இஸ்லாமியர் கோட்பாடு என்ற பன்முக நோக்கில் கண்டு நிறுவப் பெற்றுள்ளது.

4. நாயகன் – நாயகி பாவம் என்ற மரபானது தமிழ் இலக்கிய வரலாற்றில் மூன்று பெரும் படிநிலைகளில் வளர்ச்சி பெற்று வந்தது என்று புதுவிளக்கம் காட்டப் பெறுகிறது. சங்க அகப் பாக்களில் இதற்கான பொருண்மைக் கூறுகள் அமையப் பெற்றுள்ளமை முதல்படி நிலையாகச் சுட்டப்படுகின்றது. இரண்டாம் படி நிலையில் திருக்குறளில் காணப்பெறும் காமத்துப் பால் காதற்பாக்கள் அமைகின்றன எனவும், மூன்றாம்படி நிலையே இறைப் பற்று இலக்கியங்களில் காணலாகும் இப்பாவனை நெறி என்பதும் விளக்கப் பெற்றுள்ளது. எனவே, இவ் ஆய்வினால் உடல் உயர்வு பற்றியன சங்க அகப்பாக்கள் எனவும், உள்ள உயர்வு பற்றியது குறள் காமத்துப்பால் எனவும், உயிர் ஆக்கம் பற்றிக் கடவுட் காமம் பற்றியன இறைப்பற்று இலக்கிய அகப் பாக்கள் எனவும் புது விளக்கம் ஆக்கமாகக் காணக் கிடைக்கின்றது.

5. நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களை அகப்பொருள் நுணுக்கம் கூறும் பாடல்கள், முழுமையாக அகப் பொருண்மை கொண்டவை என்ற இரு வகைப் பாகுபாட்டின் நோக்கில், அவ்வகையில் பெறுகின்ற அக நுணுக்கங்களும், அகப்பொருள் விரிவு விளக்கங்களும் ஆய்வேட்டின் பல இடங்களிலும் எடுத்துரைக்கப்படுகின்றன.

6. முதன்முறையாக ஆழ்வார் திருமொழிகளில் உள்ள அகப்பாடல்களை வகைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதன்வழி, மிகுதியும் அகப்பாடல்கள் பாடியவர் நம்மாழ்வார், அடுத்துத் திருமங்கையாழ்வார், குலசேகரர் – பெரியாழ்வார் என்ற வரிசை முறையாக்கம் பெறுகின்றது. ஆண்டாள் திருமொழிகள் தனிநிலையில் ஆய்வு பெறுகின்றது.

7. அகப்பாடல்களில் காணப்படும் வெளிப்பாடு அகப்பொருண்மை விரிவாக விளக்கம் பெறும் போக்கில் ஆங்காங்கே, உள்துறையாக (சுவாபதேசம்) அமைந்து கிடக்கும் காதற்பொருள் நுணுக்கமும் எடுத்துக் காட்டப் பெறுவது குறிப்பிடத்தக்கதாம்.

8. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் காணப் பெறுகின்ற அகப் பாக்களுக்கான விளக்கங்கள் விரிவான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

ஒப்பீட்டு நோக்கிலும் அகப்பாக்களைப் பாடியுள்ள திறனில் நம்மாழ்வார் தனிநிலையும், திருமங்கையாழ்வார் தம் சிறப்பு நிலையும், ஏனைய ஆழ்வார்கள் தம் பொது நிலையும் எடுத்துரைக்கப்படுவதுடன், பிராட்டி நிலை அவாவுதல் இன்றிப் பிராட்டியாராகவே பாடிய ஆண்டாளின் தனிச்சிறப்பும் காட்டப் பெறுவது குறிப்பிடத்தக்க ஆய்வாக அமைகிறது.

9. பின் இணைப்பில் பன்முக நோக்கில் உருவாக்கப் பெற்றுள்ள அட்ட வணைகள் இவ்வாய்வை அறிவியல் கண்ணோட்டம் கொண்டவை என்பதற்கான சான்றுகளாகின்றன.

அ. தொல்காப்பியம் தொடங்கி பிரபந்தம் வரை உள்ள அகத்துறைகள் ஒப்பீட்டு அட்டவனை

ஆ. இயற்கை வர்ணனைக்கான துறைப் பொருள் விளக்க அட்டவணை.

இ. புது அகமரபுகள் பற்றிய பட்டியல்

ஈ. மெய்ப்பாடுகள் பற்றிய பட்டியல்

உ. அகத்துறைகள் கூற்றுவழி முறைமை செய்யப்பட்டுள்ள அட்டவணை.

10. அகப்பாடல்களுள் உறைந்து கிடக்கும் தத்துவப் பொருண்மைகளைச் சுட்டும் பட்டியல் ஒன்றும் 'ஆசார்ய ஹிருதயம்' வழி விளக்கம் பெற்றுச் சேர்க்கப்பட்டுள்ளது. பக்தி இலக்கிய அகப்பாடல்களின் உள்ளுறைப் பொருளை அறிவதற்கான வழியினைக் காட்டுகின்றது.

11. இங்கு, அகமரபுகளைத் தனித்தெடுத்து முறைப்படுத்த வேண்டும் என்ற தனிநிலை நோக்கிலேயே பகுப்பாய்வு முறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது என்பது மனம்கொள்ளத் தக்கதாம்.

இதனைத் தொடர்ந்து சிறப்புநிலை ஆய்வுகள் பல மேற்கொள்வதற்கான பொருண்மைப் பரப்பும், பிரிவும், உண்மைப் போக்கும் கொண்டனவாக இவ்வகப் பாக்கள் அமைந்துள்ளன என்ற உண்மையினை ஈண்டு எடுத்துரைத்தல் தக்கதே. இவ்வழி, ஆழ்வார்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு அவர்தம் பாக்கள்வழி அகப்பொருள் ஆராய்ச்சி செய்தல் கூடும். நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் பாக்களை ஒப்பீட்டு நோக்கில் காண்பதற்கான வாய்ப்பும் உண்டு.

Koviloor Digital Library

கூற்று நோக்கில் ஆழ்வார்கள் திருமொழிகள் அனைத்திலும் காணப் பெறும் தாய், மகள், தோழி ஆகியோர் கூற்றுக்களை ஆழ்வார்கள் வழி ஒப்பீட்டுப் பார்வையில் கண்டு ஆய்வது பயனுடைய முயற்சியாக அமையும். ஆண்டாள் திருமொழிகளை அகப்பாடல்கள் பாடிய ஏனைய ஆழ்வார்கள் திருமொழிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தல் பொருட் சிறப்பிற்குரிய ஆய்வாக அமையும். பண் சுமந்த திருமொழிகளால் பரமன் அருள் வேண்டிப் பாடிய ஆழ்வார்கள் பாசுரங்களை அறிவு நோக்கில் ஆராய்வது என்பது, தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர்கள் தனிப்பெரும் உணர்வுகளை எடுத்துரைக்க வேண்டும் என்ற அவாவினால் மேற்கொள்ளப் பெறும் முயற்சியேயாம். ஆயின் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற பேரருளாளர்கள் திருவாக்குகளை உள்ளார்ந்த பக்தியுணர்வுடன் அணுகி அவற்றுள் பொதுளித் ததும்பிக் கிடக்கும் இறையன்புப் பெருவெள்ளத்தில் திளைத்தாடுவது உள்ள மாசுகளைக் களைந்து, இறையருள் பெறும் முயற்சியில் ஈடுபடுதல் ஆய்வு நிலைக்கு அப்பாற்பட்ட அருள்பெறு வழியாக அமைகிறது. இவ் ஆய்வு அந்த அருள் அடைய வேண்டும் என்ற வேட்கையினால் உந்தப்பட்டு மேற்கொண்ட முதற்படி நிலையாக, முன் முயற்சியாக அமைகிறது.

★

Koviloor Digital Library

பின்னிணைப்புகள்

Koviloor Digital Library

நாலாயிர திவ்வியப் பிரபந்த வகைமைகள்

(அ) இசைப்பாத் தொகுதிகள்

1. இதில் அடங்கிய பிரபந்தங்களும் அவற்றிலடங்கிய பாடல்களின் தொகையும்.

1.	பெரியாழ்வார் திருமொழி	473
2.	திருப்பாவை	30
3.	நாச்சியார் திருமொழி	143
4.	பெருமாள் திருமொழி	105
5.	திருச்சந்த விருத்தம்	120
6.	திருமாலை	45
7.	திருப்பள்ளி எழுச்சி	10
8.	அமலனாதிபிரான்	10
9.	கண்ணிநுண் சிறுத்தாம்பு	11
	ஆக ஒன்பது பிரபந்தங்களின் பாடல்கள்	947

2. பெரிய திருமொழி : இதில் அடங்கியவை :

10	பெரிய திருமொழி	1084
11.	திருக்குறுந்தாண்டகம்	20
12.	திருநெடுந்தாண்டகம்	30
	ஆக மூன்று பிரபந்தங்களின் பாடல்கள்	1134

3. திருவாய் மொழி: இதில் அடங்கிய பிரபந்தமும் பாடல் தொகையும்

13.	திருவாய் மொழி	1102

Koviloor Digital Library

(ஆ) இயற்பாத் தொகுதிகள்

4. இயற்பா : இதில் அடங்கியவை

14.	முதல் திருவந்தாதி	100
15.	இரண்டாம் திருவந்தாதி	100
16.	மூன்றாம் திருவந்தாதி	100
17.	நான்காம் திருவந்தாதி	96
18.	திருவிருத்தம்	100
19.	திருவாசிரியம்	7
20.	பெரிய திருவந்தாதி	87
21.	திருவெழுகூற்றிருக்கை	1
22.	சிறிய திருமடல்	1
23.	பெரிய திருமடல்	1
	ஆக பிரபந்தங்கள் பத்துக்குப் பாடல்கள்	593
	இசைப்பாக்கள்	947
		1134
		1102
	இயற் பாக்கள்	593
	மொத்தம்	3776

Koviloor Digital Library

அடுத்து நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் மொத்த எண்ணிக்கை மூன்று விதமாகக் கணிக்கப்படுகின்றது.

முதலாவது கொள்கை

முதலாயிரம் 10 பிரபந்தம்	பாடல் எண்ணிக்கை	இரண்டாமாயிரம் 3 பிரபந்தம்	பாடல் எண்ணிக்கை	மூன்றாமாயிரம் 10 பிரபந்தம்	பாடல் எண்ணிக்கை	நான்காம் ஆயிரம் ஒரே பிரபந்தம்
1. திருப் பல்லாண்டு	12	பெரிய திருமொழி	1084	முதல் திருவந்தாதி	100	திருவாய் மொழி 1102
2. பெரியாழ்வார் திருமொழி	461	திருக்குறுந் தாண்டகம்	20	2ஆம் திருவந்தாதி	100	
3. திருப்பாவை	30	திருநெடுந்தாண்டகம்	30	3ஆம் திருவந்தாதி	100	
4. நாச்சியார் திருமொழி	143			நான்முகன் திருவந்தாதி	96	
5. பெருமாள் திருமொழி	105			திருவிருத்தம்	100	
6. திருச்சந்த விருத்தம்	120			திருவாசிரியம்	7	
7. திருமாலை	45			பெரிய திருவந்தாதி	87	
8. திருப்பள்ளியெழுச்சி	10			திருவெழு கூற்றிருக்கை	1	
9. அமலனாதி பிரான்	10			சிறிய திருமடல்	1	
10. கண்ணி நுண் சிறுத்தாம்பு	11			பெரிய திருமடல்	1	
பாசுரங்கள்	947		1134		593	1102

மொத்தம் 947 1134 593 1102 3776

இரண்டாவது கொள்கை

முதலாயிரம்	947
இரண்டாமாயிரம்	1134
மூன்றாமாயிரம்	591
திருமடல்கள் 77½ – 148½ கண்ணிகள்	226
நான்காமாயிரம்	1102
மொத்தம்	4000

Koviloor Digital Library

பாடல் தொகை வேறுபாடு

திருமடல்கள் இரண்டைத் தவிர மற்ற நூல்களில் உள்ள பாசுரங்களின் மொத்த எண்ணிக்கை – 3774. இக்கூட்டுத் தொகையில் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது என்பர்.[1]

தமிழ் யாப்பிலக்கணத்தின்படி, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய இரண்டினையும் ஒவ்வொரு கலிவெண்பாவாகக் கொண்டு பாசுர மொத்தம் 3776 என்று சில பதிப்பாசிரியர்கள் கொண்டுள்ளனர்.

மயிலை மாதவ தாசன் பதிப்பிலும் இம்முறையே பின்பற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.[2]

சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய இவ்விரண்டு மடல்களில் வரும் ஒவ்வொரு கண்ணியையும் ஒவ்வொரு பாசுரமாகக் கொண்டு இரண்டிலும் 226 பாசுரங்கள் (77½ – 148½) உள்ளன எனக் கொள்வாருளர் எனக் குறிக்கப்பட்டது. இதற்குச் சான்று 'இலங்கெழு கூற்றிருக்கை இருமடல்தான் வாழியே; இம்மூன்றில் இருநூற்றிருபத் தேழ்தான் வாழியே!' என்ற அப்பிள்ளையவர்களின் வாழித் திருநாமச் செய்யுட் பகுதியேயாகும்.

மூன்றாவது கொள்கை

மற்றைய பிரபந்தங்களின் பாடல் தொகை	3774
சிறிய திருமடல்	40
பெரிய திருமடல்	78
இராமாநுச நூற்றந்தாதி	108
	4000

இராமாநுச நூற்றந்தாதியையும் சேர்த்து 4000 என்பது இந்த மூன்றாவது கொள்கை. இதற்குச் சான்று,

சிறிய மடற்பாட்டு முப்பத் தெட்டிரண்டும், சீர் பெரிய மடலிற்
பாட் டெழுபத் தெட்டும்.

என்றும்

---

1. தி.கி. நாராயணசாமி நாயுடு, ஆழ்வார்கள் தமிழில் அக்காரக் கனிகள், ப.11.
2. மயிலை மாதவதாசன் பதிப்பு, வெளியிடுவோர் மணலி லஷ்மண முதலியார் ஸ்பெசிபிக் எண்டோமெண்ட்ஸ், சென்னை–1.

Koviloor Digital Library

முத்திதரும் எதிராசர் பொன்னடிக்கே மொழிந்த அமுதனற்
பாடல் நூறுமெட்டும்

என்றும் வேதாந்த தேசிகன் அருளியதாமென்பர்.[3]

"947 பாசுரங்களேயுள்ளதை முதலாயிரம் என்றும், 1134 பாசுரங்கள் உள்ளதை இரண்டாம் ஆயிரம் என்றும் சொல்வது போலவே 3776 பாசுரங்கள் அடங்கியதை 4000 என்பதில் தவறில்லை; கலிவெண்பாவின் கண்ணிகளைப் பாசுரங்களாக எண்ணி 4000 என்று கணக்குக் காட்ட வேண்டிய அவசியமில்லை" என்று கருதுகின்றார்கள் மயிலை மாதவதாசன் போன்ற பதிப்பு ஆசிரியர்கள்.

3. இந்த ஆய்வேடு இந்தக் கொள்கையை ஏற்று அதன்படியே அமைக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

பின்னிணைப்பு

நாலாயிரத்தில் அமைந்துள்ள அகப்பொருள் பாடல்கள் - விவரம்

வரிசை எண்	ஆழ்வார்	நூல்	எண்ணிக்கை	மொத்தம் எண்ணிக்கை
1	2	3	4	5
1.	நம்மாழ்வார்	திருவிருத்தம்	98	
		திருவாய்மொழி	280	
		திருவாசிரியம்	3	383
		பெரிய திருவந்தாதி	2	
2.	திருமங்கையாழ்வார்	பெரிய திருமொழி	240	
		திருநெடுந்தாண்டகம்	19	
		சிறிய திருமடல்	40	376
		பெரிய திருமடல்	78	
3.	பெரியாழ்வார்	பெரியாழ்வார் திருமொழி	30	30
4.	குலசேகராழ்வார்	பெருமாள் திருமொழி	10	10
5.	ஆண்டாள்	திருப்பாவை	30	
		நாச்சியார் திருமொழி	143	173
6.	திருப்பாணாழ்வார்	அமலனாதிபிரான்	10	10
7.	திருமழிசையாழ்வார்	திருச்சந்தவிருத்தம்	4	
		நான்முகன் திருவந்தாதி	1	7
	தொண்டரடிப்பொடியாழ்வார்	திருமாலை	2	
8.	பூதத்தாழ்வார்	இரண்டாம் திருவந்தாதி	5	5
9.	பேயாழ்வார்	மூன்றாம் திருவந்தாதி	2	2
10.	பொய்கையாழ்வார்	முதல் திருவந்தாதி	2	2
11.	திருவரங்கத்து அமுதனார்	இராமானுச நூற்றந்தாதி	5	5
		மொத்தம்	1003	1003

* தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சியிலும், மதுரகவியாழ்வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பு நூலிலும் அகப்பொருள் அமைந்த பாடல் இல்லை.

Koviloor Digital Library

நம்மாழ்வார் - திருவிருத்தம்

கூற்றுகள்

வரிசை எண்	கூறுவோர்	பாடல்கள்	மொத்த எண்ணிக்கை
1.	தலைவி	3, 4, 8, 12, 13, 16, 17, 25, 27, 28, 29, 30, 31 32, 35, 38, 39, 40, 41 42, 43, 44, 45, 46, 48 49, 51, 54, 56, 63, 64, 70, 71, 72, 74, 76, 77, 78, 79, 80, 82, 84, 85, 86, 88, 89, 90, 91, 92, 93, 95, 96, 97, 99.	54
2.	தோழி	2, 5, 7, 15, 18, 20, 21, 23, 33, 34, 36, 52, 58, 61, 62, 68, 69, 73, 81, 83, 87, 98	22
3.	தலைவன்	6, 9, 10, 11, 14, 23, 26, 50, 55, 57, 65, 66, 67, 75.	14
4.	செவிலி	19, 24, 47, 59, 60.	5
5.	நற்றாய்	37	1
6.	பாங்கன்	94	1
7.	கட்டுவிச்சி	53	1
			98

Koviloor Digital Library

நம்மாழ்வார் - திருவாய்மொழி - 1. கூற்றுகள் 2. துறைகள்

வ.எண்	கூற்று	வருமிடம்	துறைகள்
1.	2.	3.	4.
1.	தலைவி	திருவாய் 1:4ம் பதிகம்	தலைமகன் தூதுவிடல்
2.		திருவாய் 2:1ம் பதிகம்	பிரிவாற்றாமைக்கு வருந்தல்.
3.		திருவாய் 4:8ம் பதிகம்	எம்பிரான் விரும்பாதவை களால் தமக்குப் பயன் இல்லை என்று தலைவி கூற்றாகப் பேசுதல்
4.		திருவாய் 5:3ம் பதிகம்	தலைமகள் காதல் கைமிக்கு மடலூரத் துணிதல்.
5.		திருவாய் 5:4ம் பதிகம்	தலைவி இரவு நீட்டிப்புக்கு வருந்திக் கூறல்.
6.		திருவாய் 5:5ம் பதிகம்	உருவெளிப்பாடு கண்ட தலைவி தாயரை மறுத்துரைத்தல்.
7.		திருவாய் 5:9ம் பதிகம்	திருவல்லவாழ் செல்லுதலைத் தடுக்கும் தோழியர்க்குத் தலைவி கூறுதல்.
8.		திருவாய் 6:1ம் பதிகம்	பறவைகளைத் தூதுவிடல்.
9.		திருவாய் 6:2ம் பதிகம்	தலைவன் தாழ்த்து வரக் கண்ட தலைவி ஊடல் கொண்டுரைத்தல்.
10.		திருவாய் 6:8ம் பதிகம்	திருநாடு முதலியவற்றில் தலை மகள் பறவைகளைத் தூதுவிடல்.
11.		திருவாய் 7:3ம் பதிகம்	தாய்மாரும் தோழிமாரும் உற்றாரும் தடுக்கவும் தலைவி திருப்பேரெயில் சேரத் துணிதல்.
12.		திருவாய் 7:7ம் பதிகம்	எம்பெருமானது பேரழகை உரு வெளித் தோற்றத்தில் கண்ட தலைவி வருந்தி உரைத்தல்.
13.		திருவாய் 8:2ம் பதிகம்	தலைவனை நோக்கிச் செல்லக் கருதிய தலைவி கூற்று.
14.		திருவாய் 9:5ம் பதிகம்	எம்பெருமானை நினைவூட்டும் பொருள்களால் தலைவி தளர்ந் –தமை கூறுதல்.
15.		திருவாய் 9:7ம் பதிகம்	எம்பெருமானது வடிவழகேபற்றுக் கோடாகத் தலைவி திருமூழிக் களத்தே பறவைகளைத் தூதுவிடல்.

Koviloor Digital Library

1.	2.	3.	4.
16.		திருவாய் 9:8ம் பதிகம்	தூதர் மீளும் அளவும் தனிமை பொறாத தலைவி தலைவன் நகரான திருநாவாய் செல்ல நினைத்தல்.
17.		திருவாய் 9:9ம் பதிகம்	மாலைப் பொழுது கண்டு தலைவி இரங்கிக் கூறுதல்.
18.		திருவாய் 10:3ம் பதிகம்	ஆநிரை மேய்க்கச் சென்றால் பிரிவாற்ற இயலாநிலையை ஆய்ச்சியர் வேண்டல்.
1.	தாய்	திருவாய் 2:4ம் பதிகம்	தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் தலைவனை நோக்கிக் கூறல்.
2		திருவாய் 1:2ம் பதிகம்	தலைமகள் நிலை கண்டு தாய் இரங்கல்
3.		திருவாய் 4:4ம் பதிகம்	பிரிவாற்றாது போலிப் பொருள் களைக் கண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் தாய் உரைத்தல்.
4.		திருவாய் 5:6ம் பதிகம்	தலைவன் தன்மைகளைத் தன்னதாகக் கொண்டு பேசும் தலைவியின் நிலை கண்ட தாய் 'ஆவேசமோ' என்று நொந்து கூறல்.
5.	தாய்	திருவாய் 6:6ம் பதிகம்	தலைமகளைக் குறித்துத் தாய் இரங்குதல்.
6.		திருவாய் 6:7ம் பதிகம்	தலைவனது நகர் நோக்கிச் சென்ற மகளைக் குறித்துத் தாய் இரங்குதல்.
7.		திருவாய் 7:2ம் பதிகம்	தலைவியின் நிலைகண்ட தாய் அரங்கரைப் பார்த்து வினாதல்.
1.	தோழி	திருவாய் 4:6ம் பதிகம்	வெறி விலக்கு.
2.		திருவாய் 6:5ம் பதிகம்	தோழி தாயரை நோக்கிக் கூறுதல்.
3.		திருவாய் 8:9ம் பதிகம்	தலைவியின் உண்மைக் காதலைத் தாய்மாருக்குத் தோழி எடுத்துரைத்து அயல் மணம் விலக்கல்.

Koviloor Digital Library

திருமங்கையாழ்வார்

பெரிய திருமொழி - கூற்று, துறைப்பொருள்

வ.எண்	கூற்று	வருமிடம்	பாடல்கள்	துறைகள்
1.	2.	3.	4.	5.
1.	தலைவி	2 : 8	6, 7, 8, 9	தலைவனது உருவெளிப்பாடு கண்ட தலைவி, தோழி தாயர்க்குக் கூறல்.
2.	தலைவி	3 : 6	1, 2, 4 – வண்டுவிடு தூது 3–குருகு 5–9–ஆற்றாமை	தலைவனைப் பிரிந்த தலைவி வண்டு முதலியவற்றை நோக்கி இரங்கிக் கூறுதல்.
3.	தலைவி	7 : 5	1 – 9 ஆற்றாமை	தலைவனைப் புணர்ந்து பிரிந்த தலைவி தனது பாங்கியர்க்குத் தலைவன் பதி உரைத்தல்.
4.	தலைவி	8 : 3	1 – 9	தலைமகனைப் பிரிந்த தலைமகள் இரங்கிக் கூறுதல்.
5.	தலைவி	8 : 4	1 – 9	தலைமகனிடத்து ஈடுபட்ட தலைவி ஆற்றாது தும்பியை நோக்கிக் கூறியது.
6.	தலைவி	8 : 5	1 – 9	தலைவனைப் பிரிந்த தலைவி அந்திப் பொழுதில் தலைவன் வாராது நீட்டிக்க, தென்றல், வேய்ங்குழல், இளம்பிறை, விடைமணி, தனிமை அன்றில் குரல் முதலியவற்றால் வருந்திக் கூறுதல்.
7.	தலைவி	9 : 2	1 – 9	தலைவனது உருவெளிப்பாட்டில் நலியும் தலைவி தோழியிடம் கூறுதல்.
8.	தலைவி	9 : 3	1, 2, 3, 6, 7, நெஞ்சை நோக்கியன 4, 5, 8, 9 தோழியை நோக்கியன	தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாமை மிகுதியால் தலைவனிடம் செல்லத் துணிந்து தன் நெஞ்சையும் துணையாக வேண்டுமெனச் சொன்னவை.
9.	தலைவி	9 : 4	1 – 9	பிரிவு ஆற்றாத தலைவி பறவைகளைத் தூது விட்டும் பிறை, தென்றல் முதலியவற்றால் வருந்தியும் கூறுதல்.

Koviloor Digital Library

1.	2.	3.	4.	5.
10.	தலைவி	9 : 5	1 – 9	பிரிவு ஆற்றாத தலைவி தலைவன் இருக்கும் இடத்தில் தன்னைக் கொண்டு சேர்க்குமாறு தோழியரை வேண்டுதல்.
11.	தலைவி	10:10	1 – 9	தலமகனைப் பிரிந்த தலைமகள் ஆற்றாது கூறியது பறவைகளை நோக்கி, மாய்னை அழைக்க எனல்.
12.	தலைவி	11 : 1	1 – 9	தலைவியிரங்கல் 1 பிரிவாற்றாத தலைவி இரங்கிக் கூறுவது.
13.	தலைவி	11 : 2	1 – 9	தலைவியிரங்கல் 2 பிரிவாற்றாத தலைவி வருந்திக் கூறுவது.
14.	தலைவி	11 : 3	1 – 9	தலைவியிரங்கல் 3 – தலைவியிரங்கிக் கூறிய பாடல்களைக் கொண்டு "அறத்தொடு நிற்றல்" துறையில் அமைந்துள்ளது.

* தலைவி கூற்றுப் பாடல்கள் 121.

Koviloor Digital Library

வ.எண்	கூற்று	வருமிடம்	பாடல்கள்	துறைகள்
1.	தாய்	2 : 7	1 – 9	தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் இரங்கல்.
2.	தாய்	3 : 7	1 – 9	உடன்போக்கிற்சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் இரங்குதல்.
3.	தாய்	4 : 8	1 – 9	திருமாலிடத்து ஈடுபட்ட தலைமகளது செயல் கண்டு நற்றாய் இரங்கிக் கூறுதல்.
	* மகள் கூறியதைக் கொண்டு தாய் கூறிய இவற்றை அகப்பொருளில் ''தாய் கொண்டு கூறுதல்'' என்பதில் அடக்குவர்.			
4.	தாய்	5 : 5	1 – 9	பிரிவாற்றாத தலைவியைக் குறித்துத் தாய் இரங்கிக் கூறுதல்.
5.	தாய்	8 : 1	1 – 9	தலைமகன்பால் ஈடுபட்ட தலைமகளது செயல்களை வினவ வந்தார்க்குத் தாய் கூறுதல்.
6.	தாய்	8 : 2	1 – 9	தலைவியின் நிலை கண்ட தாய் தலை–மகனை இயற்பழித்தும், தலைமகளது இளமைக்கு இரங்கியும் கூறுதல்.
7.	தாய்	9 : 9	1 – 9	பிரிவாற்றாது தலைவனை நாடிச் சென்ற தலைவியின் நிலையைக் குறித்துத் தாய் இரங்கியது.
8.	தாய்	10 : 9	1 – 9	கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு காட்டி ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு பழ–மொழியை எடுத்துரைத்துப் பேசுகிற முகத்தாலே தலைவியின் ஆற்றா–மைக்குத் தாய் இரங்கித் தலைவனை வேண்டுவது இந்தப் பதிகம் 'பழமொழிப் பாட்டு' என்று குறிக்கப் பெறும்.

* தாய் கூற்றுப் பாடல்கள் 72.

Koviloor Digital Library

பெரியாழ்வார் திருமொழி

ஈண்டு அகப்பொருள் கருத்துக்கள் பயின்று வருவன மூன்றாகும்.

அவை : மூன்றாம் பத்து – 1. நான்காம் திருமொழி
2. ஏழாம் திருமொழி
3. எட்டாம் திருமொழி

திருமொழி	கூற்று	பாடல்	துறைப் பொருள்
நான்காம்	ஆழ்வார்	1	காலிப் பின்னே வரும் கண்ணனைக் கண்டு இடைக்கன்னியர் காமுறுகின்ற பாங்கினை ஈண்டு ஆழ்வார் கண்ணெதிரில் நிறுத்துகின்றார். "மேகப் படலம்தான் தலை மேலே நடந்து வருகின்றதோ" என்று ஐயப்படல்.
	ஆழ்வார்	2	கண்ணன் மாலைப் பொழுதிலே ஆயர்சேரியிலே வரும் வழியில் எதிர்நின்று கை வளைகளை இழக்காது பார்த்துக் கொள்ளப் பெண்களை எச்சரித்தல்.
	தாய்	3	தன் பெண் சங்கேந்தி வரும் கண்ணனின் மேனியைக் குறிப்போடு நோக்கியதைக் கூறல்.
	தலைவி	4.	கண்ணனைக் கண்டு காமுற்ற ஒருத்தி, தன் தோழியை நோக்கிக் கூறல். அவனைக் கண்ட அவ்வளவே தன் நிலை இழந்ததைக் கூறுகின்றாள்.
	தலைவி	5.	கண்ணன் மீது காதல் கொண்ட ஒருத்தி தாயாரை நோக்கிக் கூறியது. அவனுக்குரிய என்னை வேறொருவனுக்கு மணம் பேச வொட்டேன் என்று கூறல்.
	தலைவி	6.	கண்ணன் மாட்டுப் பெருங்காதல் கொண்டு அவனால் புறக்கணிக்கப் பெற்ற ஒருத்தியின் பாசுரம்.

Koviloor Digital Library

திருமொழி	கூற்று	பாடல்	துறைப் பொருள்
	தாய்	7.	கண்ணனின் வடிவழகில் ஈடுபட்டுத் தன் நிறையும் இழந்து தூண் போலத் திகைத்து நிற்கும் பெண்ணின் தாய் சொல்லுவது இது.
	தாய்	8	கண்ணன் வரும்வழியில் நின்று தன் துகிலும் கை வளைகளும் கழன்றொழியப் பெற்ற பெண்ணின் நிலை கூறல்.
	தாய்	9	கண்ணனுடைய வடிவழகைத் தன் மகள் பார்த்து ஆசைப்பட்டு, தனது சங்க வளைகள் கழலப் பெற்று உடல் இளைக்கப் பெற்றதைக் கூறல்.
ஏழாம் திருமொழி	தாய்ப் பாசுரம்	1–10	தன்மகள் உலகமுற்றும் உண்டு ஆலிலை யில் துயின்ற கண்ணன் மேல் காதல் கொண்டு மகிழ்ந்தவள் என்று தாயுரைத் தது இப்பதிகம். அலருக்கு அஞ்சி வரைவு முனைதல் கண்டு அகத்துறைக் குறிப்பாகக் காட்டப் படுகின்றது.
எட்டாம் திருமொழி	தாய்ப் பாசுரம்	1–10	'பிறந்தகத்தே நாம் மணம் செய்து கொடுக்கப் பெற்றிலமே' என்பதற்கு இரங்கிப் பல படியாகத் துயருற்ற வகையை வெளிப்படுத்துகின்றன இப்பாசுரங்கள். பெற்றதாய் ஒருத்தி கதறும் படியை இத் திருமொழி மிகச் சிறப்பாகக் காட்டியுள்ளன. "உடன்போக்கு"ப் பகுதியினைச் சேர்ந்த தாகக் கொள்ள இடமுண்டு.

Koviloor Digital Library

குலசேகர ஆழ்வார்

பெருமாள் திருமொழி

தலைவி கூற்று – 9 பாடல்கள்

பெருமாள் திருமொழி	6.	1 – 9	ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்ளி உரைத்தல்.

ஆண்டாள் - நாச்சியார் திருமொழி - கூறைகள்

நாச்சியார் திருமொழி

1. 'கண்ணனை இணக்கு' எனக் காமனைத் தொழுதல்.
2. சிறுமியர் மாயனைத்தம் 'சிற்றில் சிதையேல்' எனல்.
3. கன்னியரோடு கண்ணன் விளையாடல்.
4. கூடல் குறிப்பு (கூடல் இழைத்தல்).
5. குயிற்பத்து (குயிலுக்குக் கூறுதல்)
6. மாயவன் தன்னை மிணஞ்செயக் கண்ட தூய நற்கனவைத் தோழிக்குரைத்தல்.
7. பாஞ்ச சன்னியத்தைப் பதுமநாபனோடுஞ் சார்த்தாபாக்கல்.
8. மேக விடுதூது.
9. திருமாலிருஞ்சோலை எம்பெருமானை வழிபடல்.
10. மாற்செய் வகையொடு மாற்றம் இயம்பல் (காமமிக்க கழிபடர் கிளவி)
11. திருவரங்கத்துச் செல்வனைக் காமுறல் (தலைவன் செய்கைக்கு மனம்பொறாது தாய்மாரை நோக்கி வருந்திக் கூறுதல்)
12. 'சீதரனிருந்துழிச் செலுத்துவீர் எனை' தலைவனுள்ள இடத்தில் தன்னைக் கொண்டுபோய் விடும்படி உற்றாரை வேண்டுதல்.
13. 'அச்சுதன் அணி பொருட்கொண்டு அவலந் தணிமின்' எனல் தலைவனாகிய கண்ணபிரானின் ஆடை முதலியவற்றால் வாட்டம் தணிக்க வேண்டுதல். கண்ணன் உகந்த பொருள் கொண்டு காதல்நோய் தணிமின் எனல்.

Koviloor Digital Library

பின்னிணைப்பு

ஆழ்வார்கள் பாடல்களில் காணலாகும் புதிய அகப்பொருள் மரபுகள்

நம்மாழ்வார்

திருவாய்மொழி

1. பெண் மடற்கூற்று 5–3–9, 10.
2. 'நெஞ்சும் நிறைவும் எனக்கு இங்கில்லை' 7–3–9.
   எனத் தலைவி கையறுதல்.
3. 'நான் எனக்கில்லை' என்ற தலைவியின் தன்னிழப்பு நிலை. 7–3–10.
4. 'இனி நாணித் தான் என்' என நிறையழிதல் 8–2–3.
5. 'தோழிமாரும் எம்மின்முன் அவனுக்கு மாய்வராலோ'
   எனத் தலைவி வியத்தல். 9–9–5.

திருவிருத்தம்

1. 'தலைவி காதலை'த் தாய் வாழ்த்தல், 2.
2. தலைவனைத் தாய் கூற்றம் எனல் 6.
3. தோழி வெறி விலக்கி, அவன்மாலை சூட்டு என்னல் 20.
4. 'முலை முற்றும் போந்தில, மொய்பூங்குழல் குறிய'
   எனத் தலைவியின் இளமை தாய் செப்பல். 60.

திருமங்கையாழ்வார்

திருநெடுந்தாண்டகம்

1. அடங்காப் பெண்ணைப் பெற்று
   உலகோர் பழிக்கு ஆளாவேன் எனத் தாய் வருந்துதல் – 12.
2. தன் மகள் தன் சொல் கேளாள் என வருந்தல். – 18.

சிறிய திருமடல்

ஊரார் இகழிலும் ஊரா தொழியே னான்
வாரார் பூம் பெண்ணை மடல். 154–155

பெண் மடன்மாக் கூறல்.

பெரிய திருமடல்

உலகறிய ஊர்வன் நான்
மன்னிய பூம் பெண்ணை மடல். 296 – 297
பெண் மடன்மாக் கூறல்.

Koviloor Digital Library

பெரிய திருமொழி

1. தலைவி, தன்னை ஆளவேண்டுமெனத்
   தலைவனை வாய்விட்டு வேண்டுதல் – 3–6–9.
2. தலைவி பார்த்தன் பள்ளி பாடுவதால் பலர்
   ஏசுவர் எனத் தாய் அலர் தூற்றல் கேட்டு வருந்தல். – 5–5–8.
3. பெண்மையும் நிறைந்திலாப் பருவம் காதல் – 8–2–4
   கொண்டாள் எனல். – 8–2–9
4. தலைவி, தலைவன் தன்னை நோக்குதல் கண்டு
   அன்னை என் செய்யுமோ என அஞ்சுதல் – 9–2–1.
5. பேதை 4நின்னைப் பிரியேன் என்றகன்றான்
   எனத் தலைவி சொல்லி அரற்றுதல். – 9–3–3.
6. வண்டு கரியாக வந்தான் எனச்
   சான்று காட்டுதல் – தலைவி – 9–3–3, 4.
7. தலைவனிடம் சென்ற நெஞ்சம் செவிலி
   அறியாது நிற்குமோ எனத் தலைவி ஐயுறுதல். – 9–4–3.
8. நாண் மடம் அச்சம் நமக்கிங்கில்லை
   எனத் தலைவி பேசுதல். – 9–5–6

பெரியாழ்வார் திருமொழி

1. ஒருவனைப் பலர் காமுறல் –
   கற்பு நிலையிலும் (காந்த பாவம்) – 3–4–1, 3–4–2.
2. தாயர் வளை இழவேன்மின் எனல். – 3–4–2.
3. ஊர் ஒன்று புணர்த்தல் (அலர்) – 3–4–3
4. 'இவனை வந்து காணாய்' எனத் தலைவி தோழியை அழைத்தல் – 3–4–4.
5. தலைவி 'என்னை அவற்கே கொடுமின்' எனல். – 3–4–5.
6. தலைவி, தலைவனைப் பிடித்துவைத்து முறுவல் காண்பம் எனல். – 3–4–6.
7. தலைவி, தலைவனின் அழகு காணலும், அயர்த்தலும் – 3–4–7.
8. சிற்றாடை உடுக்க வல்லவளல்லள் என்றும், முற்றில் பிரிந்துமிலாள்
   என்றும் செவிலி, தலைவியின் இளமை கூறல். – 3–7–1.
9. வாயில் பல்லும் எழுந்தில, மயிரும் முடிகூடிற்றில எனச்
   செவிலி கூறல். – 3–7–2.

Koviloor Digital Library

10. கொங்கை இன்னும் குவிந்து எழுந்தில எனச் செவிலி செப்பல் – 3–7–3.

11. தோழியர் பலர் தலைவியைத் தலைவன்பால் உய்த்தல். – 3–7–4.

12. நாடும் ஊரும் அறியக் கிழவோற் சேர்தல். – 3–7–5.

13. தலைவனோடு தலைவியைக் காவலிடுமாறு பாரோர் கூறுதல். – 3–7–5.

14. கன்னியிருந்தாளைக் கொண்டு, நன்றும் கிறி செய்து
பொருள் நாராயணன் செய்த தீமை எனச் செவிலி கூறல். – 3–8–2.

15. 'திருமகள் போல வளர்த்தேன்; திருமால் கொண்டு
போனான்' எனத் தந்தை வருந்துதல். – 3–8–4.

16. 'வேடர் மறக்குலம் போல வேண்டிய செய்து என்
மகளைக் கூடியவன் குடிகொண்டு வாழுமோ'
எனத் தந்தை புலம்பல். – 3–8–6.

குலசேகராழ்வார்

பெருமாள் திருமொழி

1. தலைவன் பலருடன் கூடி மகிழ்கின்றான் எனத்
தலைவி சினம் கொண்டு பேசல். – 6–3

2. தலைவி காதலுடன் காத்திருக்க, அவள் விடுத்த தூதியுடன்
தலைவன் போகம் நுகர்ந்தான் எனத் தலைவி முனிதல். – 6–4

3. வேறொருத்தியுடன் மையல் கொண்டு நின்றமை தான்
கண்டதாகக் கூறித் தலைவி ஊடி 'அவனிடமே செல்வாய்'
எனத் தலைவனை நோக்கிக் கழறுதல். – 6–5

4. அரிவையரை அணைந்தவன், தன்னிடம்
வருவானேன் எனத் தலைவி முனிதல். – 6–6

5. தலைவன் அழகில் மயங்கியது போதும். அவள் திறமான
பேச்சினைக் கேட்டு அழிதல் வேண்டா எனக் கூறித்
தலைவனைப் போகுமாறு கூறித் தலைவி விடுதல். – 6–7

6. குறியிடத்திற்குத் தலைவியை வரச்சொல்லி அங்கு
வேறொருத்தியிடம் காதல் கொண்டமை கண்டு முனிந்த
தலைவி, தலைவன் உளறல் கண்டு வெகுண்டு பேசுதல். – 6–8.

Koviloor Digital Library

ஆண்டாள்

திருப்பாவை

1. 'உறவு நமக்கிங்கு ஒழியாது – அன்பினால் பெயரிட்டு அழைத்தமைக்குச் சீறாதே' எனத் தலைவி வேண்டல். 28

2. 'ஏழேழ் பிறவிக்கும் உற்றோமே ஆவோம் உமக்கே ஆட் செய்வோம்' பிறவிதொறும் தொடர்தல். 29

நாச்சியார் திருமொழி

1. 'அவற்கென்றே ஆதரித்து எழுந்த என் முலைகள்' எனத் தலைவி சாற்றல். 1–4–5.

2. 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' எனும் தலைவியின் உறுதிப்பாடு. 1–5.

3. கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள் என்னும் பேறு ஒன்றே வேண்டல் – தலைவி மனம் 1–8.

4. 'எம்மைப் பற்றி மெய்ப் பிணக்கிட்டக்கா லிந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்' தலைவியின் பெருமித நிலை. 2–9

5. 'ஆர்வம் உனக்கே உடையோம் அம்ம னைமார் காணில் ஒட்டார்' – தாயினைப் பழித்தல் 3–7

6. 'நாங்கள் எம் இல்லிருந்து ஒட்டிய கச்சங்கம் நானும் அவனும் அறிதும்' – தலைவி பேச்சு 5–8

7. குயிலே கூகிற்றியாகில் 'அவனை நான் செய்வன காணே'' தலைவியின் துணிவுரை 5–8

8. மணச்சடங்கு 6–1 முதல் 10

9. மேகத்திடம் தலைவன் பொய்ச்சூளைத் தலைவி உரைத்தல் 8–2–9

10. 'அவன் தார் செய்த பூசலையே' 9–2

11. 'நாணிலியேன்' – தலைவி பேசல் 10–3

12. தலைவன் அழகைத் தலைவி தாயிடம் புகழ்தல் 11–2

13. 'நாணி இனியோர் கருமமில்லை; நால யலாரும் அறிந்தொழிந்தார்' – தலைவி பேசல் 12–2

Koviloor Digital Library

14. 'தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் தனிவழியே
போயினள் என்னும் சொல் வந்த பின்னைப் பழி
காப்பரிது–தலைவி நிலை. 12–3

15. 'கோவிந்தனுக்கல்லால் வாயில் போகார்' – தலைவி.
உறுப்புநலன் பேசல். 12–4

16. மாலை வேண்டத் தமரிடை மொழிதல். 12–7

17. 'முலைதனை அவன் தோளோடு அணைய
அமுக்கிக் கட்டுக எனல்' 13–7

18. கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்ட வன் மார்பில் எறிந்தென்
அழலை தீர்வேனே–தலைவி பேச்சு. 13–8

Koviloor Digital Library

திருமொழிகளில் உறைந்து கிடக்கும் உள்ளுறைப் (சுவாபதேசம்) பொருண்மை - ஒரு குறிப்பு விளக்கம்

சங்க இலக்கியங்களில் தலைவன் பெறுமிடம், பக்தி இலக்கியங்களில் இறைவனுக்குரியதாகின்றது. தலைவனின் அன்பினை நோக்கி நிற்கும் தலைவியின் இடத்தினை, பாடும் புலவரும் உள்ளுறை வகையில் உலக ஆன்மாக்களும் பெற்று விடுகின்றனர். பக்தி இலக்கியங்களில் தலைவனாகிய இறைவன் கூற்று அதிகம் கிடையாது. தலைவி, தோழி, தாயர் ஆகியோர் கூற்றாக வரும் பகுதிகளே மிகுதியாக உள்ளன.

பக்தி இலக்கியங்களின் குறிக்கோள் ஆன்மா இறைவனோடு ஒன்ற வேண்டும். ஒன்றிய பின்னர், இன்பத்தை அடைய வேண்டும். அதுவும் இடையறாது பெறுதல் வேண்டும். அதனால் இறைவனை விரும்பும் ஆன்மாவின் நிலைகள், தலைவன் பிரிவால் தலைவி தவிக்கும் நிலையும் அவனை நினைந்து வருந்துவதும், அவனை அடைவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சியான தூது அனுப்புவதும், தூதிற்குப் பல பொருட்களைப் பயன்படுத்தலும், தானே விரைவில் அவனை அடைய வேண்டும் என்று விரும்புதலும் முதலிய தலைவியின் உணர்ச்சி மிகுந்த மன நிலைகள். இவையே கிளவிப் பொருட்களாக அமைகின்றன.

நம்மாழ்வார் ஹிருதயம் – உள்ளம் என்ற பொருளுள்ள ஆச்சாரிய ஹிருதயம் என்னும் நூலைத் தந்த அழகிய மணவாளர் நம்மாழ்வார் பாடல்களிற் காணும் அகப்பாடற் குறிப்பு ஒவ்வொன்றின் உள்ளுறைப் பொருளையும் விளக்கியுள்ளார். நம்மாழ்வார் பாசுரத்தில் காணும் காதல் தூதினை விளக்கும்பொழுது, தூதுப் பொருட்களாகக் கூறப்பெறும் பறவைகள் ஆன்மாக்களைப் பகவானிடத்தில் சேர்க்கின்றவர்களாகக் கூறப்படுகின்றது.

வண்டு, தும்பி இவைகளைச் சாதாரணமாக இலக்கியங்களில் தூதாகப் பயன்படுத்துவர். ஆனால் இந்தப் பிரபந்தத்தில் வருபவை அப்படிப் போய்ச் சொல்ல வேண்டிய நிலையில் இல்லை. தேன் தவிர மற்றைய பொருள்களை உண்ணாது அறுகால் வரி வண்டுகள் ஆயிரநாமஞ் சொல்லிச் சிறுகாலைப் பாடும். "எல்லியம் போது இருஞ்சிறை வண்டு எம்பெருமான் குணம்பாடி கந்தாரமந் தேனிசை பாட என்னும் வரிகளால் பெறப்படும் உள்ளுறை, எம் பெருமான் உச்சி மேல் வைத்துக் கொண்டாடும்படியிருப்பவர்களாயுள்ளவர்களுடன் கூடும் தன்மையுடையவர் என்பதாகும்."

Koviloor Digital Library

கிளி, பூவை, குயில், மயில்களுக்கு உள்ளுறை

கிளி

வலையில் அகப்படுமா போலே எம்பெருமான் கண்ணழகில் அகப்படுவது கற்பிப்பதைச் சொல்லுவது போலே 'முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப் பேசுமவர்களாயும் உள்ளவர்கள்.

குயில்

இது பிறரால் வளர்க்கப்படும் பறவை. குயில் காகத்தின் கூட்டில் முட்டை வைத்து விடும். அது அடைகாத்துக் குஞ்சு வெளிவரும் வரையில் காத்திருந்து தாய்ப் பறவை அழைத்துப் போய்விடும். அது போலவே அடியார்களும் ஆசார்யர் களுடைய விருப்பத்தில் ஒதுங்கி அவர்களால் வளர்க்கப்படுவார்கள் என்பது வெளிப்படை. மற்றும் குயில் வசந்த காலத்திலே கூவும். அது போல ஆசார்யர் களும் காலமறிந்து சமய காலங்களில் கம்பீரமாக வாய்விட்டு விளக்கு வார்கள்.

பூவை

ஞானம் பெருத்து வடிவு சிறுத்திருக்கும் மகான்கள்.

மயில்

மகிழ்ச்சியான காலத்தில் சிறகை விரித்துக் கூத்தாடும். அதுபோல மகிழ்ச்சியான காலத்தில் அறிவு நிலையைக் காட்டும் தன்மை. மயில் மேகத்தைக் கண்டு கூத்தாடும். இவர்கள் இறைவனைக் கண்டு கூத்தாடுவர். மயில் நிழல் பட்ட அளவிலேயே விஷப் பூச்சிகள் இறக்கும். அதுபோல ஆசார்யர்களின் அருள் பட்டபோதே தீய எண்ணங்கள் நசிக்கும்.

ஆக, மதுரகவிகள் (கிளி) தொண்டரடிப் பொடிகள் (குயில்) ஆழ்வார் (பூவை) முதலியாண்டான், எம்பார், அருளாளப் பெருமானெம் பெருமானார் (மயில்) போல்வாரை இவ்வகையில் கூறியுள்ளனர். ஆழ்வார் தலைமகள். எம் பெருமானே தலைமகன். ஆசார்யர்களே தூதுவர். பழந்தமிழர் மரபுக்கேற்பத் தலை மகளின் அனுபவங்கள் இம்மோக காலத்தில் ஏற்படுகின்றன. இவ்வனுபவங்கள் யாவும் எம்பெருமானையே தலைமகன் என்னும் முறையில் அனுபவிப்பதுடன், இதன் உட்பொருள் உயர்ந்த வேதாந்த கருத்துக்களாக இருக்கும். பக்திப் பாடல்களின் அகப்பொருள் அமைதியில் குறியீடுகளாகத் துலங்கும் குறிப்புப் பொருள் சிறப்பினை இவ்விளக்கம் தெளிவாக்குகின்றன.

Koviloor Digital Library

நாரை, கொக்கு, குருகு இவைகளுக்கு உள்ளுறை.

நாரை

அலைகள் கிட்டி வந்து மேலே தாவிப் போகா நிற்கிற கடற்கரையிலே அசையாமலிருக்கும். அதுபோல சம்சாரக் கடலலைகளாக ஆசையலைகள் மேன் மேல் வந்து நெருக்கா நின்றாலும் அவற்றுக்கு வருந்தாத நெஞ்சுரம் உள்ளவர்.

கொக்கு

தாய்ப் பறவை தன் குஞ்சின் வாய்க்கு அடங்குகின்ற இரையைத் தேடி யிடும். அதுபோலத் தங்கள் வாக்கால் சொல்லி இன்புறும் இறையருள் திறத்தைச் சீடர்கள் தகுதிக்கேற்ப உய்த்துணரக் கூடிய பொருத்தமான பொருள் நுணுக்கங் களைச் சாத்திரங்களிலே ஆராய்ந்து உதவும் தன்மையுடைய ஆசாரியர்கள்.

குருகு

ஆசறு தூவி வெள்ளைக் குருகு. ஆதலால் உள்ளும் புறமும் ஒரு படியாக நிர்மலமாயிருக்கும். அதுபோல மன மொழி மெய்கள் தூய்மையாக ஒத்திருக்கப் பெற்றவர்கள்.

முதல் திருவாய்மொழி – ஆறாம் பத்து – வைகல் பூங்கழிவாய் என்னும் முதல் பாடலில், பூங்கழியிலே மேய்கின்ற கொக்கின் கூட்டங்களே; செந்நெற் பயிர்கள் நிரம்பிய திருவண் வண்டூரில் உறையும் எம்பிரானைக் கண்டு கைகள் கூப்பி அவனை விட்டுப் பிரிந்திருக்கும் பாவமுடையளான என்னுடைய ஆவலை (காதன்மையை)ச் சொல்லுங்கள். அவன் கையில் சக்கரமுடையவன், கனி போன்ற திரு அதரத்தையுடையவன். நீங்கள் சிறகொடுக்கிக் கை கூப்பினால் அவன் காது கொடுத்துக் கேட்பன் என்பது நயம். அவன் என் மேல் வைத்தது – காதல்; நான் அவன் மேல் வைத்தது காதன்மை (காதல் மை). எனவே, என் காதல் அவன்தனினும் விஞ்சியது. இவ்வாறு இத்திருவாய் மொழியில் தலைவி திருவண் வண்டூரில் இராமபிரானுக்காகப் பறவைகளைத் தூது விடுகிறாள்.

காதல் மென் பெடையோடு கூடி இரை தேடுகின்ற கருநாரையே; வேத ஒலி முழங்கும் திருவண்வண்டூரில் இருக்கும் நாதனும், ஞால முண்ட பெருமானு மாகியவனை நேராகக் கண்டு அவன் பாதத்தில் கை தொழுது என் தொடர்பாக ஒரு செய்தியை – வார்த்தையைச் சொல்லுங்கள் என்று அவற்றை இரக்கிறாள்.

தங்களை விட்டுப் பிரிய இயலாத அன்புடைய சீடர்களுடனே கூடி தங்கள் மனத்திற்கினிய இறைவன் பற்றிய அருளுரைகள் நடக்குமிடங்களிற் சென்று இறையனுபவத்தைப் பெறுவர். இவ்வாறு நாரை முதலியவற்றிற்கு உள்ளுறை பல விடங்களில் வந்துள்ளது அதன் தத்துவம்.

Koviloor Digital Library

உள்ளும் புறமும் தூய்மையுடையராய்ப் பெருமான் பக்கலிலே நெஞ்சை யூன்ற வைத்தவராம். இல்லற இன்பத்திலே தடுமாறாதவர்களாக, சீடர்களின் தகுதிக்கேற்றவாறு தக்க கருத்துகளைக் கற்பிப்பவராய், தங்களைப் பிரியாமல் பேரன்பு செலுத்தும் சீடர்களுடனே கூடியிருந்து, இறைவன் திருநாமத்தைக் கூறுகின்றவர்களாய், நன்றி மறவாத சீடர்களுடன் இருந்து அவர்கள் ஆதரவோடிருக்கின்ற உடல், பொருள், உயிர் முதலானவற்றை ஏற்றுக் கொள்பவரான மகான்கள் நாரை முதலியனவாகக் கொள்ளத் தக்கவர்கள்.

மேகம்

செய்தற்குரிய காலங்களில் கடலில் புக்கு அதில் நீரைப் பருகிக் கொண்டிருக்கும் மேகம். அதுபோல திருமால் கண் வளர்ந்தருளுகின்ற திருப்பாற் கடலிலே மனத்திற்குள்ளே ஆவலுடன் அவனுடைய திருக்குணங்களை உள்ளேயடக்கிக் கொண்டிருப்பார்கள் ஆசாரியர்கள். இவர்களில் பெரும்பாலோர் கார்வண்ண மேனியராய்த் தான் இருப்பர். ஏனெனில், அவன் திருமேனி நிறம் நிழலாடும் இவர்களிடத்திலும் மேகம் எங்கும் சஞ்சரிக்கும். அதுபோல ஆசாரியர்களும், தீர்த்தகராமின் திரிந்து என்றும் தீதில் நன்னெறி காட்டி எங்கும் திரிந்து என்றும் உலகத்தைத் தூய்மைப்படுத்துபவர்களாய் எங்கும் பரவியிருப்பர். மேகம் பெய்து தடாகம், குளம் இவற்றை நிரப்பும். அப்படியே இவர்களும் ஞானமாகிற தடாகத்தைத் தாங்கள் எண்ணுகின்ற இறைவன் திருக் குணமாகிய புனித நீரால் நிறைப்பார்கள். 'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து' என்றும் 'வாழ உலகினிற் பெய்திடாய்' என்றும் சொல்லுகிறபடியே தீங்கு அடங்கவும், வாழ்வு மிகவும் பெய்யும். அதுபோல இவர்களும் நாட்டாருடைய தீமைகள் தொலையவும், வாழ்வு ஓங்கவும் வேண்டி நிற்பார்கள். மேகம் பெய்யாத காலங்களில் உடம்பு வெளுத்திருக்கும். இவர்களும் சீடர்களுக்கு ஞானத்தை அருளுகின்ற பெருவாய்ப்புப் பெறாத காலங்களில் வருந்திக் கிடப்பார்கள். மேகம் ஏனைய காலங்களில் இருக்குமிடம் தெரியாமலேயிருக்கும். அதுபோல இவர்களும் ஏகாந்த சீலர்களாய் இருப்பார்கள். மேகம் கைம்மாறு வேண்டாது பிறரை வாழ்விப்பதிலேயே நோக்கமாக இருக்கும். அதுபோல இவர்களும் பிறர் வாழ்வதற்கே உதவுவார்கள். உதாரணமாக முதலாழ்வார்கள் திருமழிசைப் பிரான், திருமங்கையாழ்வார், எம்பெருமானார் (குணந்திகழ் கொண்டல்) – இவர்கள் போல்வார் மேகம் என்று கூறலாம்.

திருவாய் மொழி தூது விடும் பகுதியில், முதற்பத்து – நான்காந் திருவாய் மொழி – 'அஞ்சிறைய மடநாராய்' . . . என்னும் பகுதியில் நாரை, கிளி, குருகு, வண்டு, அன்னம், நெஞ்சைப் பார்த்துத் தூது விடுகின்றாள். தூதின் வாயிலாக இறைவனின் பக்தி வளத்தைத் தெரிவிக்கின்றாள். 'வைகல் பூங்கழிவாய்' என்னும்

Koviloor Digital Library

ஆறாம் பத்தில் குருகினங்கள், கரு நாரை, புள்ளினம் மடவன்னம், பூங்குயில், ஒண்கிளி, ஒண் சிறுபூவை, பொறி வண்டினம் இவற்றை விளித்துத் தூது விடுகிறாள். எம்பெருமானுக்கு இனியராவார்கள் என்று பலரைக் கூறுகின்றாள். 'பொன்னுலகாளிரோ' என்னும் திருவாய் மொழிப் பாடலில், எங்கும் நிறைந்திருக்கும் நிலையிலும் கட்புலனாகாது கடந்து நிற்கும் நிலையிலும் உள்ள பெருமானிடத்துத் தூதாகப் பறவைகளை விடுகின்ற நிலையைக் காட்டுகின்றாள். 'எங்கானல் அகங் கழிவாய்' என்னும் திருவாய் மொழியில் இறைவனது வடிவழகே பற்றாகக் கொண்டு தலைவி, பறவைகளைத் தூது விடுவதாக அமைந்துள்ளது.

இங்கே கூறப்பட்ட நான்கு தூதுகளும் அகவிலக்கிய மரபுபடி காமம் மிக்க கழிபடர் கிளவி என்ற துறையினைச் சாரும். இக்கிளவி வேட்கை மிக்குச் சிறப்புச் சிந்தித்துச் சொல்லும் சொல்லாகும். இக்கிளவிச் செய்யுட்களுக்குக் கருத்து – கடல், கானல், பொழில், விலங்கு, புள் இவற்றை நோக்கித் தலைவி இரங்கிக் கூறுதலாகும்.

நம்மாழ்வார், இருக்கு, யஜுர், அதர்வணம் என்ற மூன்று வேதங்களின் கருத்தைத் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற மூன்று பிரபந்தங்களின் மூலமாக வெளியிட்டார். இனி வேதங்களுள் சிறந்ததும் இறைவனது வடிவமாகவே உள்ளதுமான சாம வேதத்தின் தத்துவப் பொருளை இந்தத் திருவாய் மொழிமூலம் அருளிச் செய்து அவற்றை மதுரகவிகளுக்கு உபதேசித்தருளினார்.

இத்தகைய திருவாய் மொழியில் அக இலக்கிய மரபுகளைக் கொண்டு, சம்பந்த ஞானத்தை உணர்த்த (மூன்று நிலைகளின் வாயிலாக) உணர்த்துகின்றார். அவை தோழி பேச்சாகவும், தாய் பேச்சாகவும், தலைவி பேச்சாகவும் காணப்படுகின்றன. இறைவனிடத்தில் பக்தி அதிகரித்த நிலையில், தம் நிலை மாறிப் பெண்நிலை பெற்று பேசுகின்றார். அவ்வாறு பாடுகையில், தோழி பாசுரமென்றும், தாய்ப் பாசுரமென்றும், மகள் பாசுரமென்றும் வகுத்துக் கூறுவதற்கு உட்கருத்து உண்டு.

தோழியாகப் பேசுவதன் கருத்து

நாயகனையும் நாயகியையும் இணைக்க வைத்துச் சேர்ப்பவள் தோழி. திருமந்திரத்தில் வைணவத்தினால் (ஓம்) எம் பெருமானோடு இந்த ஆத்மாவுக்குச் சொல்லப்பட்ட அந்நியார்ஹசேஷத்வம் (பிறனொருவர்க்கு உரிமையாகாமை) முதலிய சம்பந்தங்களை உணர்தலே, அப்பெருமானோடு இவ்வாத்மா சேருவதற்குக் காரணமாகின்ற, அந்தச் சம்பந்த ஞானமாகிற பிரஜ்ஞாவஸ்தையைத் தோழி என்பதாகக் கூறுவர்.

Koviloor Digital Library

பெற்று வளர்த்த பெண்பிள்ளை தம் இளமைப் பருவத்தில் நாயகனிடத் துள்ள அன்பு மிகுதியால் அவ்விருப்பிடத்திற்குச் செல்ல வேண்டுமென்று பதறு கின்றபொழுது, படிகடந்து புறப்படுதல் குல மரியாதைக்குப் பொருந்தாது என்று தடுப்பவள் உலகில் தாய் எனப்படுவாள். அதுபோல சித்தோபாயமான எம் பெருமானைப் பற்றினவர்கள் விரைவிலே அவனைப் பெற வேண்டுமென்று எண்ணி அத்து (எல்லை) மீறி நடக்க வேண்டி வந்த அளவிலே, இது பிரபந்தர் குடிக் கட்டுப்பாட்டுக்குச் சேராதது என்று விலக்கி, 'எம்பெருமான் தானே வந்து ஏற்றுக் கொள்ளும்படி கண்டிருக்க வேணும் என்று சொல்லி துடிப்பையடக்கிப் பார்க்கிற நம: பதத்தில் கூறப்பட்ட உபாய அத்யவஸாயமாகிற பிரஜ்ஞாவஸ்தையைத் தாய் என்பதாகக் கூறுவர்.

உறவினர் உதவியின்றே தானாகவே புணர்ந்து நாயகனுடைய மேம் பாட்டிலே ஈடுபட்டுக் குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல், "அவனைக் கிட்டியல்லது நான் உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன்" என்ற பதற்றத்தையுடையவளாயிருப்பவள் உலகில் மகள் என்பர்.

இம்மூன்று நிலைகளுள் முதல் நிலை நடக்கும்படி தோழி பாசுரத்தாலும், இரண்டாவது நிலை நடக்கும்படியாகத் தாய்ப் பாசுரத்தாலும் மூன்றாவது நிலை நடக்கும்படியாக மகள் பாசுரத்தாலும் வெளியிடப்பட்டுள்ளன. தோழி பேச்சாக மூன்று திருவாய் மொழிகளும், தாய் பேச்சாக ஏழு திருவாய் மொழிகளும், தலைமகள் பேச்சாகப் பதினேழு திருமொழிகளும் மொத்தம் காணப்படுகின்ற. இந்த இருபத்தேழு திருவாய்மொழிப் பாசுரங்களையும் ஒவ்வொன்றாக ஆய்ந்து பார்க்கும்பொழுது பலவித அகப்பொருள் உண்மைகளும் நுணுக்கங்களும் புலப்படும். அவற்றின் உள்ளுறைப் பொருள் கொண்டு பல வைணவ சமயக் கருத்துக்கள் பொலிய வைக்கப்பட்டுள்ளன.

தோழி பாசுரமாக அமைந்துள்ள திருவாய் மொழிகள் மூன்று.

1. தீர்ப்பாரை யாமினி
2. துவளில் மாமணி மாடம்
3. கருமாணிக்க மாலை

இம்மூன்றிலும் வெறிவிலக்கல், ஆசையறுத்தல், அறத்தொடு நிற்றல் என்ற (அந்நியார்ஹசேஷத்வம்) தெரிகின்றது. உயிரானது பிற உயிர்களுக்கு அடிமைப் பட்டதன்று. தனக்குத்தானே உரிமையுடையதுமன்று. இறைவன் ஒருவனுக்கே உயிர் அடிமை என்பது தோழி கூற்றாக வரும் பாடல்களில் சிறப்பாகத் தெரிகின்றது.

தாய்பேச்சு மொத்தம் ஏழு திருவாய் மொழிகளில் அமைந்துள்ளன.

Koviloor Digital Library

1. குடியாடி 4

அடியார்கள் குழாங்களை உடன்கூடப் பெறாமையாலே வந்த துக்கத்தால் கொழு கொம்பிழந்த தளிர் போல வாடுகிறபடியைக் கூறுவது.

2. பாலனாய் ஏழுலகும்

கிடைக்காததற்கு விருப்பப்பட்டு மெலிந்தபடியே கூறுவது.

3. மண்ணையிருந்து குழாவி

கண்ணுக்குத் தெரியும் பொருட்களையெல்லாம் அவனாக நினைத்துக் கிடைக்கும்படி பிச்சேறினபடி கூறுவது.

4. கடல் ஞானம்

ஆற்றாமையால் அநுகரிக்கும் வழி அறியாமல் இறைவன் ஆவேசித் தானோ என்னும்விதம் அவள் தானாகப் பேசுகின்ற நிலை.

5. மாலுக்குலையம்

எம்பெருமானைப் பெறாத இழவாலே சகலத்தையும் இழந்தமையைக் கூறுவது.

6. உண்ணுஞ்சோறு

என் மகள் எனக்கு உதவாமல் போகிறாள் என்னும்படி தன்னைவிட்டுப் பிரிந்து போனமை சொன்னபடி.

7. கங்குலும் பகலும்

அவனைக் கிட்டி அவன் சந்நிதியிலே முடிய வேணும் என்று நினைத்த செய்தி என்று மாதாவானவள் பயப்பட்டு அவனைக் குறித்தும், வினவ வந்தவர் களைக் குறித்தும் 'எம் பெண் வாடா நின்றாள், மெலியா நின்றாள்' என்றாற் போல முறைப்பட்டு கூப்பிடுவதைக் கூறுவது.

இந்த ஏழு திருவாய் மொழிகளிலும் உபாயாத் யவசாயம் எனப்படுகிற உபாய உறுதிவழி தோன்றுகிறது. இந்த ஏழு நிலைகளிலும் தாயார் பேசுகின்ற பேச்சுகளில் இவளுக்கு அருள் புரியாது இவ்வாறு துடிக்க விடுதல், தலைவன் அருளுக்கும் பாதுகாக்கும் தன்மைக்கும் பொருத்தமாகுமோ என்று சொல்லுதல் வாயிலாக உபாயத்திலே உறுதியைத் தோன்றும்படியாகச் செய்தல் புலனாகின்றது.

தலைவியின் பேச்சு பதினேழு நிலைகளில் காட்டப்படுகிறது. அவளது பாடல்களில் பதற்றம் மேலாகத் தெரிகின்றது. இப்பதினேழு நிலைகளில், தலைமகள் தூதுவிடும் திருவாய் மொழிகள் நான்காகும். எஞ்சிய திருவாய் மொழிகள் பதின் மூன்றும் தலைமகள் பேச்சாக உள்ளன.

Koviloor Digital Library

தூது விடும் திருவாய் மொழிகள் 4

1. அஞ்சிறைய மட நாராய்
2. வைகல் பூங்கழிவாய்
3. பொன்னுலகாளிரோ
4. எங்கானலகங் கழிவாய்

தலைமகள் பேச்சாக உள்ள உள்ளுறைப் பொருள் (சுவாபதேசம்) திருவாய் மொழிகள் : 13

1.	வாயுந் திரையுகளும்	1.	தன் ஆற்றாமையைச் சொன்னது
2.	ஏறாகும் இறையோனும்	8.	அவன் விரும்பாதவற்றை வெறுத்தல்
3.	மாசறு சோதி	3.	மடல். உலகினர் கோபம் பிறக்கும்படி மடல் எடுத்தது.
4.	ஊரெல்லாம் துஞ்சி	4.	பிரேம வியாதியும் இருண்ட இரவும் கண்ணை மூடுகையிலே வேறு புகலில் லாமையைச் சொன்னது.
5.	எங்ஙனேயோ அன்னையீர்	5.	உருவெளிப்பாடு – நெஞ்சிலுள்ளே பிரகாசிக்கும்படியைச் சொன்னது.
6.	மானேய் நோக்கு நல்லீர்	9	அவனோடு கூடி வாழும் நாளைத் தேடினமை
7.	மின்னிடை மடவார்	2	அவன் தாமதித்து வந்ததற்கு ஊடினமை.
8.	வெள்ளைச்சுரி சங்கு	3	உசாத்துணையற்று வருந்தினமை.
9.	ஏழைய ராவி	7	அவனுடைய உருவெளித் தோற்றத்தில் வாதைப்படுவதைப் பேசினமை.
10.	நங்கள் வரிவளை	2	தாய்மாரையும் தோழிமாரையும் சினந்து மொழிதல்
11.	இன்னுயிர்ச் சேவல்	5	”
12.	மல்லிகை கமழ்	9	மாலைப் பசல் என்று பிரசித்தமானது.
13.	வேய்மருதோளிணை	3	காலைப் பசல் என்று பிரசித்தமானது.

இந்தப் பதினேழிலும் பிராப்யத்வரை தெரியும். பிராப்யத்வரை என்பது – பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்கிற பருவமேழும் குறிக்கும்.

Koviloor Digital Library

அகப்பாடல்களில் தலைமகளை வருணிக்கும் பொழுது உடல் உறுப்பு களுக்குக் கூறப்படும் உள்ளுறைப் பொருள்கள்

1. தோகை மயில் – கூந்தலின் பரப்பு – இவ்வாத்மாவினுடைய அறிவு நிலையைச் சொல்லுதல்.
2. பிறையுடை வாணுதல் : ஸ்வா தந்திரியம் (உரிமை கொளல்).
3. விற்புருவக் கொடி : புருவத்தை வில்லாகச் சொல்லுகிறது. கரணங்களை அடக்குதல்.
4. அம்பன்ன கண்ணாள் : கண்தான் பார்க்கும் குறிப்பில் விழுகிற அம்பாக உள்ளதால், ஒருவனையே நோக்கும் உணர்வு என்று ஞானத்தைச் சொல்லுகிறது.
5. முத்தன்ன வெண் முறுவல் : முறுவலை முத்தாகக் கூறுதல் – ஆனந்தத்தைக் கூறுதல்
6. பவள வாயாள் : அதரத்திற்குப் பவளம் உவமை அனுராகத்தைக் (காதலை) கூறுதல்
7. செப்பன்ன மென்முலை : முதிர்ந்த பக்தியைச் சொல்லுகிறது.
8. மின்னனைய நுண் மருங்குல் : (சூட் சமத்துவம்) அண்மை பற்றிச் சொல்லுகிறது.
9. தேரணங்கல்குல் : ஆத்ம வஸ்துவின் போக்யதையை (அனுபவித்தல்) சொல்லுகிறது.
10. அன்னமன்ன நடையாள் : நடையழகிற்குரிய ஸ்வரூபாநு ரூபமாக நடத்தல்.

எனவே இவ்வாறு மயில், பிறை, முறுவல் என்று கூறுகின்ற வர்ணனைகள் அறிவு நிலை, சுத்தி முதலியவற்றிற்கு விளக்கமாக அமைந்துள்ளன. இவ்வவயவ விசேடங்கள் ஞான விகாசம், சுத்தி முதலியவற்றிற்கு ஆச்ரயமாய் ஆந்தரமா யிருக்கிற ஆத்ம ஸ்வரூபத்தின் வகுப்பு என்றதாயிற்று.

ஸ்வாபதேசங்கள்

தலைமகள்	: பக்தி ரூபமான ப்ராப்யத்வதை அடைய வேண்டிய குறிக்கோளை அடைதலில் விரைவு
தோகை மயில்	: ஞான விகாசம்
பிறையுடை வாணுதல்	: சுத்தி

Koviloor Digital Library

விற்புருவக் கொடி : சாந்தி
கண் : ஞானம்
முறுவல் : ஆனந்தம்
பவளவாய் : அநுராகம்
முலை : முதிர்ந்த பக்தி
இடை : ஆத்மஸ்வரூபத்தின் அணுத்வம், வைராக்யமுமாம்.
அல்குல் : ஆத்ம வஸ்துவின் அனுபவம்
நடை : ஸ்வரூபாநு ரூபமான நடக்கை
சத்ருக்கள் : சித்தோபாய நிஷ்டைக்குப் பிரதிகூலரான ஸாத்யோபாய நிஷ்டர்.
பந்துக்கள் : அநுகூலமான சித்தோபாய நிஷ்டர்
நாலயலார் : கர்ம, ஞான பக்திப் பிரபத்திகளாகிற நான்கு உபாயங்களிலும் ஊன்றியிருப்பவர்கள்
அயற்சேரியார் : அர்ச்சாவதாராதிகளில் ஊற்றமற்றுத் தேவ தாந்தர்யாமித்வத்திலே ஊன்றியிருப்பவர்கள்
ஊரார் : ஆப்தப்ராப்திகாமரான கேவலர்
நாட்டார் : இஹலோக ஐச்வரிய காமர்
உலகர் : பரலோக ஐச்வரியகாமரான ஸ்வதந்திரர்
சிறுசுவரு : தேஹாத்ம விவேகத்துக்குப் பரிகாரமான பிரமாணம்
சீரார் சுளகு : ஆத்ம பரமாத்ம விவேகத்துக்குப் பரிகாரமான பிரமாணம்
மாலை : ராஜஸ ஞானம்
கங்குல் : தாமஸ ஞானம்
காலை : ஸாத்விக ஞானம்
பகல் : எம்பெருமானை நன்றாக நிதர்சனமாகக் காணுகின்ற ஞானம்
நிலாமுற்றம் : புருஷார்த்த ஞானம்
கலை : அஹங்காரம்
வளை : மமகாரம்

பகவதனுபவத்திற்கு விரோதிகள்

Koviloor Digital Library

பந்து	:	போதத்திற்கு இடமான தேகம்
கழல்	:	(அம்மானை) போக உபகரணமான பஞ்சேந்திரியங்கள்
பாவை, குழமணல் (மரப்பாச்சி)	:	திருவிளையாட்டிற்குரிய விசேடங்கள்
யாழ் முதலிய ஏழும்	:	போக்யங்களான சப்தாதி விஷயங்கள்
சிற்றில்	:	போக ஸ்தானம்
பட்சி	:	பகவத் விஷயத்திலே கொண்டு சேர்க்குமவர்கள்
சிறை, சிறகு அன்னம்	:	அன்னமாய் நூல் பயந்தான் என்றபடி வேத சாத்திரங்களை வெளியிட்டது பகவதவதாரமான அம்சம்.

இவ்வாறு பல நிலைகளில் தத்துவார்த்தப் பொருள் விளக்கப்படுகிறது. தலைவியின் உறுப்பு நலன்களின் வாயிலாக அகமேனிப் பகுப்பு முறையைக் காட்டுகின்றார். ஊரார், நாட்டார், உலகர் என்று கூறுவதன் வாயிலாகவும் அதன் தத்துவத்தை விளக்குகின்றார். ஊரார் என்பது ஆன்ம இன்பத்தை விரும்புகின்ற கேவலர். நாட்டார் என்பது பெண்டு, பிள்ளைகள், ஆடு மாடு என்று உலக இன்பங்களை விரும்புகின்றவர். உலகர் என்பது மேலுலகப் பேற்றை விரும்புகின்றவர்.

சிறுசுளகு மணலும் கொண்டு
சீரார் சுளகில் சில நெல் பிடித்தறிய

என்னும் சிறிய திருமடலில் வரும் சுளகு என்னும் சொல்,பெருமணலையும் சிறு மணலையும் பிரிக்கக் குறிக்கப்படுவது. அதுபோல தேகம் வேறு, ஆன்மா வேறு என்று பகுத்தறிவதற்கான பிரமாணம்.

மாலை, கங்குல், காலை, பகல் என்னும் சொற்கள் இராசஸம், தாமசம், சத்துவ ஞானம், சுத்த தத்துவம் இவற்றை விளக்குகின்றன. மாலை நேரம் மயக்கமாக – விளக்கமில் உணர்வாகவும், கங்குல் நேரம் அறியாமையாக – திரிபுணாவாகவும் காலை நேரம் வெளிச்சம் தருவதாக – உண்மை உணர்வாகவும், பகல் நேரம் தெளிவாக – அதாவது நேரே தெளிய அறிகின்ற காண்டலாகின்ற அறிவாக உள்ளது என்று இந்நான்கு நிலைகளைச் சுட்டுகின்றார். இங்ஙனம் அக உறுப்புக்களையும் மரபுகளையும் பின்பற்றிப் பாடப் பெற்ற திருமொழிகளில் உள்ளுறைந்து பொதிந்து அமைந்துள்ள உள்ளுறைப் பொருட்களை எடுத்துரைத்தல் வாயிலாக இறைமைப் பாடல்களின் தத்துவப் போக்கினை விளக்குவர் உரைகாரர்கள்.

Koviloor Digital Library

பின்னிணைப்பு

ஆழ்வார் (பராங்குச நாயகி) விடுத்த தூது நான்குக்கும் செய்தியடைவு (விஷய நிரூபணம்)

பதிகத்தின் பெயர்	எந்த நிலை தூதுக்கு விஷயம்	எந்தத் திருக்குணத்தைப் பற்றுகிறார்	அதனைப் பற்றாகக் கொண்ட தற்குக் காரணம் மேற்கோள்	ஆக, அறிய வேண்டிய விஷயச் சுருக்கம்
1. அஞ்சிறைய மட நாராய்–முதற் பத்து 4–ஆவது	வியூகம் (திருப்பாற் கடலில்பள்ளி கொள்ளும் நிலை) "கடலாழி நீர் தோற்றி அதனுள்ளேகண்வளரும் அடலாழி அம்மான் (செ.10)	க்ஷமா குணம் (க்ஷமா – பொறுமை), அபராத–ஸகத்வம் (குற்றம் பொறுத்தல்)	"என் பிழையே நினைந்தருள் அருளாத திருமாலார்க்கு, என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" (செ.7)	தம்பிழை மறப்பித்த க்ஷமா குணத்தையுணர்த்தப் பெற்ற வியூகம் முதல் தூதுக்கு விஷயம்.
2. வைகல் பூங்கழி ஆறாம் பத்து – முதலாவது.	விபவம் – (இராமக்ருஷ்ணாதி அவதாரங்கள். இங்கே இராமபிரான் பேசப்படுகிறார்). "மாநில் போர் அரக்கன் மதில் நீறெழச் செற்று கந்த ஏறு சேவகனார்க்கு (செ.10)	ஆர்த்த ரட்சணம், ரட்ச ணைக்குத் தீட்சித்துவம் (ஆர்த்தனைக் காப்பதற் கென்றே தனிமாலை யிட்டிருப்பவன்).	புணர்ந்த பூந்தண் துழாய்முடி நம்பெருமானைக் கண்டு. (செ. 5)	சிறந்த செல்வம் மறப்பித்த ரட்சண தீட்ச குணத்தை மறக்கையாலே, அக்குணத்தை யுணர்த்தப் பெற்ற விபவா–தாரம் இரண்டாம் தூதுக்கு விஷயம்.
3. பொன்னுல காளீரோ – ஆறாம் பத்து–எட்டாவது.	பரத்துவம் (அ) பரவாசு – தேவனை நோக்கியது. (சான்று:"வானவர் கோனைக் கண்டு, யாம் இதுவோ தக்க வாறு என்ன வேண்டும்"(செ.4) (ஆ) அந்தர்யாமித்வம் (சான்று: "எங்குச் சென்றாகிலும் கண்டு இதுவோதக்கவாறு என்மினே" (செ.5)	ஐகரஸ்யம் (இரண்டற ஒன்றாகக் கலந்திருப்பது போன்ற உணர்ச்சி)	"தன்மன்னு நீள் கழல்மேல் தண்துழாய் நமக்கன்றி நல் கான் (செ.6) – ஆனால் உலகை ரட்சிக்கிற பராக்காலே அந்த ஐகரஸ்யத்தை மறந்தான். (ஆகவே தூது விடல்)	தாம் படைத்த உலகப் பரப்பு மறப்பித்த ஐகரஸ்ய குணத்தை யுணர்த்தப் பெற்ற பரத்துவமும், தத்துல்யமான (அதனினும் சிறந்த) அந்தர்யாமித்துவமும் மூன்றாம் தூதுக்கு விஷயம்
4. எங்கானல் அகங்கழிவாய் ஒன்பதாம் பத்து – ஏழாவது.	அர்ச்சை (திவ்யதேசத்தில் கொண்ட நிலை – அதற்குச் சான்று "திருமூழிக்களத்தார்க்கு" (செ–10)	திவ்ய மங்கள விக்கிரக சௌந்தர்யம்(எம்பெருமான் மேனியழகு) (உ.ம்.) "செங்க மலத்தவர் போலுங்கண்கை கால் செங்கனி வாய். அக்க மலத்திலை போலும் திருமேனி அடிகளுக்கே. (செ.3)	"தமரோடு அங்கு உறைவார்க்கு" (செ.2) பராங்குச நாயகியை மறந்துவிட்டாள். ஆகவே தமரோடு கூடியிருந்ததால் தான் மறந்த சௌந்தர்யத்தை அவனுக்கு நினைப்பூட்டி இதில் தூது விடுகிறாள்.	தமரோட்டை வாஸம் மறப்பித்த சௌந்தர்யத்தையுணர்த்தப் பெற்று அர்ச்சாவதாரம் நான்காம் ~~அர்ச்சாவதாரம் நான்காம்~~ தூதுக்கு விஷயம்.

Koviloor Digital Library

துணைநூற் பட்டியல்

தமிழ்

அண்ணங்கராசாரியர், தி.பி.ப., திவ்யார்த்த தீபிகை, காஞ்சி, 1953.

அப்பர் சுவாமிகள், தேவாரம்.

அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, பத்தாம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், 1972.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். ஆசார்ய ஹ்ருதயம்.

அனந்தராமையர் (பதி.) கலித்தொகை, 1931.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் (வெளியீடு) மூன்றவாது கருத்தரங்கு மலர், 1971

----------, ஐந்தாவது கருத்தரங்கு மலர், 1972.

----------, பதினோராவது கருத்தரங்கு மலர், 1979.

----------, பன்னிரண்டாவது கருத்தரங்கு மலர், 1980.

இராகவையங்கார், மு., இலக்கிய சாசன வழக்காறுகள், தமிழ்நாடு அரசு வெளியீடு, 1973.

----------, ஆழ்வார்கள் கால நிலை முதற்பாகம்.

இராதாகிருஷ்ண பிள்ளை, எம்., பிற்கால வைணவம் முதற்பதிப்பு, சென்னை. 1963.

----------, தமிழும் வைணவமும், முதற்பதிப்பு, சென்னை. 1956.

இராமஸ்வாமி நாயுடு, ஸ்ரீமான். அகப்பொருளும் அருளிச் செயல்களும், சீரங்க விலாசத்தில் அச்சிட்டது, 1938.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரம், டாக்டர் சாமிநாதையர், பதிப்பு, 1950.

இராஜாஜி, தோழமை யோகம், கல்கி இதழுக்கு அனுபந்தம், சென்னை, 1969.

Koviloor Digital Library

எதிராஜூலு நாயுடு, பி., பக்திப் பூங்கா, சென்னை, முதற்பதிப்பு, 1959.

கம்பர், கம்பராமாயணம், பால காண்டம், மர்ரே, ராஜம் வெளியீடு, சென்னை, 1958.

கலியாணசுந்தரனார், திரு.வி. பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, சாது அச்சுக்கூடம், 9ஆம் பதிப்பு, சென்னை, 1955.

கிருஷ்ணவேணியம்மையார் எஸ். வில்லிபுத்தூர் விளக்கு, ஸ்ரீவில்லிபுத்தூர் தேவஸ்தான வெளியீடு, முதற்பதிப்பு, 1959.

----------, பெரியாழ்வார் பெண்கொடி, ஸ்ரீ வைஷ்ணவ மஹா சங்க வெளியீடு, இரண்டாம் பதிப்பு, சென்னை,1947.

கிருஷ்ணமாசாரியர், சே. (பதி.) நாலாயிர திவ்வியப் பிரபந்தம், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பரதாய புஸ்தக சாலை, சென்னை, 1924.

குருசாமி, ம.ரா.போ., சங்க காலம், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, முதற்பதிப்பு, கோயம்புத்தூர், 1967.

கோபாலகிருஷ்ணமாச் சாரியர், வை.மு. (பதி.) திருக்குறள், பரிமேலழகருரைக்கு விளக்கக் குறிப்புரை, சென்னை, 1965.

----------, ஆழ்வார்கள் சரித்திரம், பட்டர் வைபவம், சென்னை, 1966.

----------, பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அஷ்ட பிரபந்தம்.

----------, வில்லி பாரதம் உரை.

சஞ்சீவி, ந. (பதி.). தெய்வத்தமிழ், சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, 1975.

சண்முகம் பிள்ளை, மு., அகப்பொருள் மரபும், திருக்குறளும், சென்னைப் பல்கலைக் கழகம், திருக்குறள் ஆராய்ச்சி (6), 1980.

சாமிநாதையர், உ.வே. சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும், ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1962.

சாமிநாதையர், உ.வே. (பதி.), ஐங்குறுநூறு, 1949.

----------, குறுந்தொகை, 1937.

----------, பத்துப்பாட்டு, 1931.

----------, புறநானூறு, 1935.

Koviloor Digital Library

சிங்காரவேலன், சொ., திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், கழக வெளியீடு, முதற்பதிப்பு, 1969.

சுப்பிரமணிய பிள்ளை,கா., ஆண்டாள் வரலாறும் நூலாராய்ச்சியும், இலக்கிய மாலை வெளியீடு, பாளையங்கோட்டை,1934.

சுப்பிரமணியன், ச.வே. வீராசாமி, தா.வே.(பதி.) தமிழ் இலக்கியக் கொள்கை 1, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

சுப்பிரமணியன்,ச.வே. விசயலட்சுமி, ஏ.(பதி.) தமிழ் இலக்கியக் கொள்கை 7, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

செயராமன், ந.வீ., தூது இலக்கியங்கள், சிதம்பரம், முதற்பதிப்பு, 1965.

செல்வநாயகம், வி., தமிழ் இலக்கிய வரலாறு, ஸ்ரீலங்கா வெளியீடு, இலங்கை, 5வது பதிப்பு, 1973.

செவ்வைச் சூடுவார், பாகவதம், திருமலை திருப்பதி தேவஸ்தான அச்சகம், 1949

சேஷாத்ரி மணவாளன் காழியூர் – இராமாநுசர், முதற்பதிப்பு, சென்னை, 1978.

திருமலை அய்யங்கார், ரெ. (பதி.) திருப்பாவை மாலை, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1957.

திருத்தக்க தேவர், சீவக சிந்தாமணி.

திருவள்ளுவர் திருக்குறள், பரிமேலழகர் உரை, சைவ சித்தாந்தக் கழகம், 1941.

திருஞான சம்பந்தசுவாமி தேவாரம், சைவ சித்தாந்த சமாஜம், 1931.

துரையரங்கசாமி, மொ.அ., இலக்கியக் கட்டுரைகள், பிரிவிரிதாகிய தண்டாக் காமம். ஸ்டார் பிரசுரம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1959.

தொல்காப்பியர், தொல்காப்பியம், இளம்பூரணம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1963.

----------, தொல்காப்பியம், நச்சினார்க்கினியம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

----------, தொல்காப்பியம், சேனாவரையர் உரை, சி.கணேசையர் (பதி.) 1938.

Koviloor Digital Library

திருநாவுக்கரசு, க.த., திருக்குறளும் இந்திய அற நூல்களும், மணியகம் வெளியீடு, சென்னை, 1978.

----------, தமிழ் நிலவு, சென்னை, முதற்பதிப்பு, 1981.

நக்கீரர் இறையனார் அகப்பொருள்.

நாகராஜன், கரு., திவ்வியப் பிரபந்தத்தில் மனம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதறப்திப்பு 1982.

நாராயணசாமி நாயுடு, தி.சி., ஆழ்வார்கள் தமிழில் அக்காரக் கனிகள், கடலூர். முதற்பதிப்பு,. 1975.

நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், சென்னை, 1963.

நாராயணசாமி ஐயர், அ. பின்னத்தூர். நற்றிணை, சென்னை, கழகப் பதிப்பு, 1967.

பவணந்தி முனிவர். நன்னூல், மயிலைநாதர் உரை, ஐயரவர்கள் பதிப்பு, 1918.

பரமசிவானந்தம், இடைக்கால இலக்கிய வளர்ச்சி, வையைத் தமிழ், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை, 1967.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அஷ்டப்பிரபந்தம் (உரை), முர்ரே கம்பெனி, சென்னை, 1957.

பிள்ளை லோகா சார்யர், ஸ்ரீமத் அர்த்த பஞ்சசம், திவாதசர ஹஸ்யம், ஸ்ரீவைஷ்ணவ நூற்பதிப்புக் கழகம், சென்னை.

புருஷோத்தம நாயுடு, பு.ரா., திருவாய்மொழி பகுதி 1. சென்னைப் பல்கலைக் கழகம், மூன்றாம் பதிப்பு. 1971.

பொய்யாமொழிப்புலவர் தஞ்சைவாணன் கோவை, சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம், 1936.

மணவாள மாமுனிகள், உபதேச ரத்தின மாலை, பிரதிவாதி பயங்கரம், அண்ணங்கராச்சாரியர் (பதி.)

மாணிக்கவாசக சுவாமிகள் திருக்கோவையார், பேராசிரியர் உரை, காசி மடம் திருப்பனந்தாள், 1960.

மயிலை மாதவதாசன்(பதிப்) நாலாயிர திவ்வியப் பிரபந்தம், மணலி லஷ்மண முதலியார் வெளியீடு, சென்னை, 1962.

Koviloor Digital Library

மீனாட்சிசுந்தரம், தெ.பொ. வள்ளுவர் கண்ட நாடும் காமமும், பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, இரண்டாம் பதிப்பு, 1957.

மெய்கண்டார் சிவஞான போதம்.

வரதராஜன், மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அக்காதெமி, புதுடில்லி, 1972.

----------, இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை, 1968.

வரதராஜ அய்யர், இ.எல். தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.1 முதல் 1100), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1957.

வெள்ளைவாரணன், க., தொல்காப்பியம் (வரலாறு), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மூன்றாம் பதிப்பு, 1978.

வேங்கடசாமி ரெட்டியார் கி. (பதி.). நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் மன்றப் பதிப்பு, சென்னை, 1973.

வேங்கடசாமி நாட்டார், ந.மு., அகநானூறு, சென்னை, கழகப் பதிபபு, 1962

வேதாந்த தேசிகர், தேசிகப் பிரபந்தம், இராமதேசிகன், (பதி.) கும்பகோணம், 1958.

வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் இலக்கித்தில் காலமும் கருத்தும், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1978.

வையாபுரிப்பிள்ளை, என். 'தமிழர் பண்பாடு', சென்னை, எட்டாம் பதிப்பு, 1974.

ஜான் சாமுவேல், ஜி., இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள், சென்னை, முதற்பதிப்பு, 1978.

..... பழைய ஏற்பாடு, பரிசுத்த வேதாகமம், தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி.

தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, சென்னைப் பல்கலைக் கழகம்.

மலர்கள்

ஸ்ரீராமகிருஷ்ண விசயம், சிறப்பு மலர், சென்னை, 1960.

மகாவித்துவான் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை, அவர்கள் மணிவிழா மலர், வெளியிடுவோர் எம்.ஆர். அப்பாதுரை, சென்னை, 1956.

Indian Express. Aazhwaars and Daasas. Feb. 24, 1983.

Koviloor Digital Library

Barnett. L.D.,	Hindu Gods and Heroesl London, 1922.
Bhandarkar, R.G.,	Vaisnavism, Saivism and Minor Religious System, 1928.
Das Gupta. S.	History of Indian Philosophy, Vol. II. Cambridge University Press, 1961.
Dikshitar, V.R.R.	Studies in Tamil Literature & History.
Dorai Rangaswamy,MA	The Religion and Philosophy of Tevaram, Book II, University of Madras, 1959, 57.
Gopinatha Rao.T.A.	History of Vaisnava, Madras University 1923.
Hari Rao. V.N.,	Koil Olugu (Eng. Trans.), Rechouse Madras, 1961.
Hariyana, A.,	The Essentials of Indian Philosophy. London, 1956.
Hill, Doughes, P.,	The Bhagavat Gita An English Translation and Commentary, Second Edn., Oxford University Press, 1968.
Heeper. J.S.M.,	Hymns of Alwars, Association Press, Calcutta, 1921.
James Bissett Prethi	The religious consciousness, New York The Macmillon Co., 1959
Kirshnaswamy Iyanger	History of Early Vaisnavism in South India, Madras University, 1920.
Meenakshisundaram T.M.	The Tamil Literary Theory of Bhakti Period, Journal of the Madras Unviersity, Vol.II, No.2 1970.
Subbu Reddiar, N.	Religion & Philosophy of Nalayira Divya Prabandham with Special reference to Nammalvar.
Subramanian. S.V. & R. vijayalakshmi (Editors).	Philosophical Heritage of the Tamils, Madras, I. 1983.
Sunil Kumar Chatterji Jayadeva	Profane Love and Sacred Love, Sahitya Akadami, New Delhi, Reprinted, 1981.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பேராசிரியர் டாக்டர் பு.பா. இராஜஇராஜேஸ்வரி அவர்கள் நீதிக்கட்சி தலைவர்களுள் ஒருவரான 'சண்டே அப்சர்வர்' பி.பாலசுப்பிரமணியம்-பட்டம்மாள் ஆகிய அன்புடைப் பெற்றோர்க்கு இரண்டாவது மகளாக 28.07.1929இல் பிறந்தார்

பச்சையப்பன் கல்லூரியில் 1954 ஆம் ஆண்டு முதுகலைப் பட்டப்படிப்பை முடித்தார். அது முதல், தமிழ்நாடு அரசினர் கலைக் கல்லூரிகளில் பேராசிரியராகவும் இராணிமேரி கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். நாமக்கல், தஞ்சாவூர், வாலாஜாப் பேட்டை ஆகிய ஊர்களில் அரசினர் மகளிர் கலைக்கல்லூரிகளில் முதல்வராகப் பணியாற்றினார். பின்னர், மீண்டும் (1981-1988இல்) இராணி மேரி கல்லூரியிலேயே முதுநிலைத் தமிழ்ப் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணி புரிந்தார். முப்பத்து முன்று ஆண்டுகள் அரசுப் பணிபுரிந்த இவர், 1988-இல் ஓய்வு பெற்றார்.

1970-இல் "சங்க கால மகளிர்" (Woman in Cankam Age) என்ற ஆங்கில ஆய்வு நூலுக்காக எம்.லிட் பட்டமும், 1985இல் "நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அகப் பொருள் மரபுகள்" என்ற ஆய்வு நூலுக்காக டாக்டர் பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெற்றார்.

1975-இல் பறம்பு மலை பாரி விழாவில் குன்றக்குடி அடிகளார் இவருக்கு "செந்தமிழ் விறலி" என்னும் பட்டத்தை அளித்தார். 1984-இல் தமிழக அரசு "சிறந்த கல்லூரி முதல்வர்க்கான விருதை" அளித்துப் பாராட்டியது. 1996-இல் காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ச் செம்மல்கள் பேரவை இவருக்குத் "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்னும் பட்டத்தையும் பொற்பதக்கத்தையும், பொற் கிழியையும் நல்கிச் சிறப்புச் செய்தது.

மாணவப் பருவ முதல் சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்த இவர், தமிழ்க் கட்டுரை எனும் இலக்கிய வகைக்கு ஆற்றியுள்ள பணி சிறப்பானது.

பல்வேறு பொருள்களில் அமைந்த இவருடைய வானொலி உரைகள் சுவை மிக்கன.

தமிழகப் பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும், திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பாடத் திட்டக்குழு உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து அவர் ஆற்றிய தொண்டுகள் பலவாகும்.

மேலும் இவரது சீரிய வழிகாட்டுதலில் ஆய்வு மாணவியர் அறுவர் ஆய்வுப் பட்டங்கள் பெற்றுள்ளனர். தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு தொடர்பான கருத்தரங்குகளிலும் பணிமனைகளிலும், விழாக்களிலும், உலகத் தமிழ் மாநாடுகளிலும், இலக்கிய மன்றங்களிலும் அறக்கட்டளைச் சொற் பொழிவுகளிலும் கலந்து கொண்டு இவர் ஆற்றியுள்ள உரைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறத் தக்கவையாகும்.